

# உங்களை எதிர்பார்த்திருக்கிறது சமூகம்!

''நமது ஈழநாடு'' நாளிதழில் வரைந்த ஆசிரியர் தலையங்கங்கள்

01.10.2002 முதல் 10.07.2003 வரை

# உங்களை எதிர்பார்த்திருக்கிறது சமூகம்!

**''நமது ஈழநாடு'' நாளிதழில் வரைந்த ஆசிரியர் தலையங்கங்கள்**
**01. 10. 2002 முதல் 10. 07. 2003 வரை**

*தலைப்பு:* **உங்களை எதிர்பார்த்திருக்கிறது சமூகம்**

*ஆசிரியர்:* **கலாநிதி சி. ரகுராம்**

*அச்சு:*

*அட்டைப்படம்/பக்க வடிவமைப்பு:* **முஹம்மது அஸ்வர்**

**ISBN: 978-955-7765-13-6**

## பலநோக்குப் பயன்பாட்டுத் தன்மை கொண்ட தொகுப்பு

*ரகுராம் இருபது வயதின் ஆரம்பத்திலுள்ள இளைஞனாக, கடந்த நூற்றாண்டின் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் எம்முடன் பத்திரிகைத்துறையில் இணைந்தார்.*

*துடிப்புமிக்கவராக, புத்திசாலித்தனம் கொண்டவராக, அதற்கும் மேலாக ஒரு பொறுப்பை நிறைவு செய்வார் என்ற நம்பிக்கை அளிக்கத்தக்கவராகவும் ஆரம்பம் முதல் இருந்தார். இதற்கு அவரது குடும்பப் பின்புலமும் காரணமாக இருந்திருக்க வேண்டும். எம்முடன் இணைந்த சிறிதுகாலப் பகுதியிலேயே எமது பத்திரிகையின் சிறுவருக்கான பகுதியைப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன் அதனைச் சிறப்பாக வெளிக்கொணரவும் செய்தார். இதன் மூலம் பலரது பாராட்டுக்களையும் பெற்றார். அவரின் சிறப்பியல்பு, ஏனையோர் கூறுவதை விரைவாகவும், சரியாகவும் புரிந்து கொள்ளுதலும் அதனைத் தெளிவாக எடுத்துரைப்பதும் ஆகும்.*

*யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் எம்முடன் பணியாற்றிய ரகுராம் தொண்ணூறுகளின் பிற்பகுதியில் தமிழகம் சென்று ஊடகத்துறையில் உயர்கல்வி கற்றார். இருப்பினும், தனது மக்கள் மீதும், மண்ணின் மீதும் கொண்டிருந்த பற்றுதல் காரணமாக யுத்தம் முடிவுற்றதாக உறுதி செய்யப்படாத போதும் இலங்கை திரும்பினார். அவர் சிந்தனை வேறுபட்டதாக இருந்திருப்பின் தனது கல்வித்தகைமையைக் கொண்டோ அன்றி வேறுவழியிலோ வெளிநாடு ஒன்றைச் சென்று அடைந்திருக்கலாம்.*

யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தாலும் யுத்தம் நிறைவுற்றதாகவோ அன்றி அமைதி திரும்பி விட்டதாகவோ நம்பமுடியாத நிலையிலும் "நமது ஈழநாடு" பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். அப்பொறுப்பை சுமார் ஓராண்டு காலம் வகித்திருந்தாலும் அக்காலப்பகுதிக்குள் தனது திறமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்தி இருந்தார். ஒரு நேர்மையான பத்திரிகையாளனுக்குரிய துணிவும், சமரசமற்ற நிலையும் ரகுராமிடம் நிரம்பவே இருந்தது. இதனால் பணியில் நீடிப்பது கடினமான ஒன்றாகியது.

இக் காலப்பகுதிக்குள் அவர் எழுதிய ஆசிரியர் தலையங்கங் களில் இருந்து ஒரு பகுதி தொகுப்பு நூலாக வெளிவருவது மிக்க மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

ஏனெனில், இவ் ஆசிரியர் தலையங்கங்கள் பலநோக்குப் பயன்பாட்டுத் தன்மை கொண்டவையாகும். ஒருபுறம், இன்றைய வரலாறு ஆகிவிட்ட அன்றைய அரசியல், சமூக, பொருளாதாரச் சூழலை அறியத்தருபவையாகும். இன்னொரு புறம், ஊடகத்துறை சார்ந்த மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் அமையத்தக்கதாகும். இவற்றுக்கும் மேலாக, அன்றைய காலப் பகுதியிலும் சரி இன்று யுத்தம் முடிந்த காலப்பகுதியிலும் சரி தமிழ்மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள், பிரச்சினைகள் மாறாது தீர்வற்றவையாக நீடித்து நிற்பதை அவை வெளிச்சம் போட்டுக் காட்டுபவையாகவும் உள்ளன.

ரகுராம், அக்குறுகிய காலப்பகுதிக்குள் அரசியல் இராஜதந்திர விடயங்கள், சர்வதேச விவகாரங்கள் மற்றும் சமூக, பொருளாதார விடயங்களிலும் தனது பார்வையைச் செலுத்தியுள்ளார். அத்தோடு சமூகத்தில் மாணவர் பங்கு குறித்தும், இயற்கை வளங்களும் அவற்றின் பாதுகாப்புக் குறித்தும் எச்சரிக்கைகள் செய்துள்ளார். இவற்றில் தமிழ் மக்களின் உரிமைகள், தமிழர் தாயகத்தின் பாதுகாப்பு போன்றவை அவற்றின் அடிநாதமாக இருப்பது உணரத்தக்கதாய் இருக்கும். மாணவர் சமுதாயத்தின் உயர்வே எமது எதிர்காலம் என்பதையும் தாயக மண்ணினதும், இயற்கை வளங்களினதும் பாதுகாப்பை எமது இனத்தின் இருப்பிற்கான அடிப்படை என்பதையும் தெளிவுபடுத்தி

*வந்துள்ளார். அதேவேளை, எமது சமூகத்தின் மோசமான பக்கங்களையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார். தர்க்கரீதியில் நியாயப்பாடுகளை வலியுறுத்தும் அவர், பெரும்பாலும் அநீதிக்கு எதிரான குரலாகவே ஒலித்துள்ளார். இவற்றோடு ஊடகச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கவும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகி இருந்தமை குறித்துப் பேசவும் அவர் தயங்கவில்லை.*

*மக்கள் எதையும் இலகுவில் மறந்து விடக்கூடியவர்கள். இது அவர்களின் தவறு அல்ல. வாழ்க்கைப் போராட்டம் அவர்களை இந்நிலைக்குத் தள்ளிவிடுகின்றது. இதனால் வரலாற்றுப் பதிவுகள் மிகவும் அவசியமானவையாகும். ஆகையினால் ஞாபகமூட்டல்களுக்கு இவ்வாறான பதிவுகள் தேவைப்படுகின்றன. அதிலும், ஈழத்தமிழர் தொடர்பானவை மிக முக்கியமானவை. ஏனெனில், இன்றைய தமிழர் பிரச்சினைகள் இன்றோ நேற்றோ உருவானவை அல்ல. காலம் கடந்தும் நீடிக்கும் இவை காலத்துக்குக் காலம் பெற்றிருந்த வடிவங்களினை வெளிப்படுத்துதல் அவசியமானதாகும்.*

*இதற்கு ரகுராமின் தொகுப்பும் பங்காற்றத்தக்கதாகும். இந்நிலையில் இத்தொகுப்பு இன்றைய தேவையின் பாற்பட்டதே.*

**பொ. ஜெயராஜ்**
**பிரதம ஆசிரியர்**
**"ஈழநாதம்"**

## வரலாற்று நிகழ்வுகளின் ஆவணப் பதிவுகள்

ஒரு பத்திரிகையின் ஆத்மாவின் குரலாக ஒலிப்பது அதன் ஆசிரியர் தலையங்கம் என்பதே உண்மை. ஆழமும் தீர்க்கமான சமூகச்சிந்தனையும், மானுடநேயமும் எல்லாவற்றிலும் மேலாக பாரதி சொல்வாரே அந்தச் சிறுமை கண்டு பொங்கும் நியாயமான கோபமும் கொண்ட பன்முக ஆளுமைத்திறன்மிகு பத்திரிகை யாளன் ஒருவனாலேயே மானுட சிந்தனையை நியாயத்தின் பக்கம் இயங்க வைக்கும் அர்த்தமிகு ஆசிரியர் தலையங்கங்களை எழுத முடியும்.

அத்தகைய ஆசிரியர் தலையங்கங்களை வெறுமனே கருத்தாய்வுத் தளமாக மட்டும் பார்த்துவிட முடியாது.

ஒரு பத்திரிகையின் ஆன்மக் குரலானது உலகளாவிய மானுட உணர்வுகளை மகத்துவப்படுத்தும் வகையில் நியாயக்குரலாக இருக்க வேண்டுமேயன்றி, அரசியல், இன, மத, மொழி உணர்ச்சிகளுக்குத் தீனிபோடும் பிரசாரக் குரலாக இருப்பது என்பது ஆபத்தானது.

பத்திரிகையாளன் தன் சுய கருத்தியல் வாதப் புலமையை வெளிப்படுத்தும் வகையில் மட்டும் தலையங்கங்களை எழுதுவது இன்று ஒரு மரபாகவே மாறிவரும் தற்காலத் தமிழ்ப்பத்திரிகைச் சூழலில் மக்கள் - அதாவது பத்திரிகை வாசகர்கள் அப்பகுதியை ஒரு மேலோட்டமான பார்வையுடன் “தட்டிவிட்டுச்” செல்லும் நிலையானது பத்திரிகை ஆசிரியருக்கும், வாசகருக்குமிடையே ஆக்கபூர்வமான கருத்தியல் உடன்பாட்டுத் தளமொன்று

உருவாகும் வாய்ப்புக்களை அந்நியமாக்கி வருவதை மிக அண்மைக் காலத்தில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இது பத்திரிகைத்துறைக்கே அச்சமூட்டும் நிலையாகும். அதுவும் மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிக வேகமாகக் குறைந்து வருவதாக மதிப்பிடப்படும் காலத்தில் இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் - குறிப்பாக, பத்திரிகைத் துறைசார்ந்த ஆளுமைகள் அனைவரும் தொலைநோக்குப் பார்வையுடன் சிந்திக்க வேண்டிய நெருக்கடியான காலகட்டத்தில் உள்ளனர் என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

1960 - 1970 களில் ஒரு பத்திரிகையை அதன் ஆசிரியர் தலையங்கத்தைப் படிப்பதற்காகவே வாசகர்கள் வாங்கிய நிகழ்வும் இங்கே நடந்துள்ளமையைக் குறிப்பிடுதல் அவசியமாக உள்ளது. அக்காலகட்டத்தில் கொழும்பில் இருந்து வெளிவந்த ஆங்கிலத் தினசரியான "டெய்லி மிரர்" (Daily Mirror) பத்திரிகையின் புகழ்பெற்ற பத்திரிகையாசிரியரான "ரெஜி மைக்கேல்" என்பவர் எழுதிய ஆசிரியர் தலையங்கங்கள் மிகவும் பிரசித்தி வாய்ந்தவையாகும். அவரது ஆற்றல்மிகு மொழியாளுமை, கருத்தியல் தெளிவு, பரந்த சிந்தனையுடன் கூடிய தொலைநோக்குப் பார்வை, சர்ச்சைக்குரிய விடயங்களில் மானுட நேயத்துடன் அரசியல் அழுத்தங்களைப் புறந்தள்ளி கருத்துக்களை முன்வைக்கும் நெஞ்சுரம் ஆகியவை ஆங்கிலம் தெரிந்த தமிழ்மக்களிடம் கூட பெரும் வரவேற்பினைப் பெற்று விளங்கியது உண்மையே: இங்கு குறிப்பிடவேண்டிய மற்றொரு விடயம் 'OPINION' என்ற தலைப்பிலான அந்த ஆசிரியர் தலையங்கங்கள் டெய்லி மிரர் பத்திரிகையின் முதற் பக்கத்தில் வெளிவந்தன என்பதாகும்.

பிரதான தலைப்புச் செய்தியை விடவும் அந்த தலையங்கப் பகுதியே மிக முக்கியத்துவம் கொண்டதாக அப்போது கருதப்பட்டது.

ஒரு பத்திரிகை என்பது பல்வேறு கருத்துக்கள், செய்திகள், தகவல்கள் மற்றும் இன்னோரன்ன பிறவிடயங்களின் தளமாக இருந்தாலும் ஆசிரியர் தலையங்கமே இவையனைத்தையும்

மக்கள் தளத்திலிருந்து விமர்சித்தும், விளக்கியும், விபரித்தும் அவைகுறித்த மக்கள் சிந்தனைப்போக்கை நெறிப்படுத்த உதவுபவையாகும்.

ஆனால், இன்றைய ஊடகங்கள் - குறிப்பாகப் பத்திரிகைகள் அரசியல்வாதிகளுக்கான - பக்கச்சார்புடன் கூடிய மூன்றாந்தரப் பிரசார வளங்களாக மாறிவிட்டுள்ள நிலையில் பத்திரிகை ஆசிரியர்களின் சுயாதீனக் கருத்தியற் சிந்தனை வெளிப்பாட்டுக்குப் பெருமளவில் வரையறைகள் இடப்பட்டுள்ள நிலையே வளர்ந்து வருகிறது.

பத்திரிகையாளர்களின் மக்கள் நலன்சார் சிந்தனைச் சுதந்திரத்திற்கும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும் பத்திரிகை நிறுவனங்களைப் பின்நின்று இயக்கும் அரசியல் அமைப்புக்களின் சுயநல அபிலாஷையுடன் கூடிய இலக்குகளே இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிக்கும் மறைகரமாகச் செயற்பட்டு வருகின்றன என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

இதுவே, ஊடக சுதந்திரத்திரம் அற்றுப்போவதற்கும் பத்திரிகையின் வளர்ச்சியின்மைக்கும் மூலகாரணமாகும்.

எழுதுகோலின் பின்னால் அதனை பின்தொடர்ந்து வரும் ஆயுததாரிகளின் அச்சுறுத்தல் "நிழல்" என்பது, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் குரலை மௌனிக்க வைக்கும் இன்றைய அரசியல் சூழலில், ஒன்றரை தசாப்தத்திற்கு முன்னர் இப்போதைய நிலையை விடவும் ஆயுத ரீதியிலான, ஊடகங்களுக்கும், ஊடகவியலாளருக்கும் எதிரான பரவலாக எங்கும் நிறைந்திருந்த அச்சுறுத்தல் சூழலில் யாழ். நகரில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த "நமது ஈழநாடு" நாளிதழில் அதன் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றிய கலாநிதி. சி. ரகுராம் அவர்கள் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களில் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு தலையங்கங்கள் ஒரு தொகுப்பாக வெளிவருகின்றன.

இது ஒரு காலத்தேவைகருதிய முக்கியமான தொகுப்பு என நான் நம்புகிறேன். எமது மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பான வரலாற்று நூலொன்று இன்னமும் முழுமையாக - ஒரு ஆவணப் பதிவாக வெளிவராத நிலையில், ஆயுதப்போர் முடிந்து ஒரு தசாப்தம் கடந்துவிட்ட இன்றைய காலகட்டம் கடந்த கால நிகழ்வுகளை, பொய்யாய் பழங்கதையாய்ப் போகவைக்கும் செயற்பாடுகள் பல்வேறுபட்ட வகையிலும் (ஊடகங்கள் ஊடாகவும் கூட) மேற்கொள்ளப்படும் தீவிரமான காலத்தில், நமது வரலாற்றுப் பதிவுகளை 2002 - 2003 இற்கு இடைப்பட்ட கால நிகழ்வுகள் குறித்த கருத்துக்களை அதே சமகாலப் பார்வையில் உண்மையின் தரிசனமாகவும், தொலைநோக்குடனும், அச்சுறுத்தலுக்குள்ளாகிய நிலையில் இயங்கிவந்த ஒரு நாளிதழின் ஆசிரியர் பொறுப்பினை துறைசார் நெஞ்சுரத்துடனும் நேர்மையுடனும் ஏற்று ரகுராம் எழுதிய ஆசிரியர் தலையங்கங்கள் நூலாக வெளிவருவது காலத்தேவையையும், அதனை வெளியிடுவது அவரது சமூகப் பொறுப்பையும் உணர்த்துவதாக உள்ளது.

“நமது ஈழநாடு” பத்திரிகையின் முதல் இதழிலேயே “புதிய பொலிவுடன் தளராத பாரம்பரியம்” என்ற நம்பிக்கையூட்டும் வகையிலான தலையங்கத்தை “ஈழநாடு” பத்திரிகையின் வரலாற்றுத் தடத்தினை விபரிப்பதாகவும், அதன் மீள்வரவிற்கான சமகால அவசியத்தையும் குறிப்பிடும் ஆசிரியரின் எழுதுகோல் அவரது சிந்தனை விரிவுக்கும் ஆழத்திற்கும் அர்த்தம் கொடுக் குமாற் போன்று அடுத்துவரும் 107 தலையங்கங்களிலும் 01-10-2002 முதல் 10-07-2003 வரை நிகழ்ந்தேறிய பல்வேறு சம்பவங்கள், பிரச்சினைகள், மாற்றங்கள் என தேசிய மற்றும் சர்வதேச அரங்கில் நடைபெற்ற பலவற்றையும் தனது கருத்தியல்சார் சிந்தனைப் பார்வைக்கும் உட்படுத்துகிறது.

இந்த 108 தலையங்கங்களும் கூறும் விடயங்கள் அனைத்துடனும் எமது மக்கள் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு பக்கத்தை புரட்டும்போதும் ஏற்படும் “பெருமூச்சு”க்களும், தொடர்ந்து படிப்பதைத் தடுத்து படித்த இடத்திலிருந்து ஏதோ

ஓர் எல்லையற்று விரியும் அத்துவான வெளியை வெறித்து நோக்க வைத்துக் கரையும் கணங்களும் நமது கடந்த கால இருப்பை மீளவும் நெஞ்சுக்குழிக்குள் கொண்டுவந்து மௌனத்துள் திணற வைக்கின்றதைத் தடுக்க முடியவில்லை என்பதே ரகுராமின் எழுத்தின் யதார்த்த நோக்கு உணர்த்தும் உண்மையாகும்.

நமக்கான வாழ்வியல், அரசியல், சமூகவியல் மற்றும் போராட்டத் தளங்களிலும் நாம் சிந்தித்தும், கடந்தும் வந்த நெருக்கடிகள், ஏமாற்றங்கள், ஆபத்துக்கள், அழுத்தங்கள் என்பன மட்டுமல்லாது ஏனைய விடயங்களில் நாம் எங்கு நிற்கிறோம், எப்படி இயங்குகிறோம், என்ன செய்யப்போகிறோம் என்பவை கூட அவரது ஆசிரியர் தலையங்கங்களின் பேசுபொருளாக உள்ளன. இதுவே, இத்தொகுப்பின் காத்திரத்தை உணர்த்துவதாக உள்ளது.

ஒருபோதும் ஒரு பத்திரிகையின் இயங்குதளமும் அந்தப் பத்திரிகை ஆசிரியரின் இயங்கு நிலையும் முரண்நிலை கொண்டதாக இருக்க முடியாது - கூடாது.

ரகுராம் அவர்களின் இயங்கு தளமும் - இயங்கு நிலையும் எப்படி இருந்தன என்பது அவர் தனது முதல் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ள கருத்தின் மூலம் உணரக்கூடியதாக உள்ளது.

தான் ஆசிரியப் பொறுப்பினை ஏற்றிருந்த ஊடகமானது சமூகத் தொடர்புப்பணியின் பொறுப்புணர்வுடன், ஆக்க இயக்கங்களுடன் இணைந்து மனித மேம்பாட்டுக்கானதாகவும், உண்மை, நன்மை, அழகு ஆகிய மூன்று நிலைகளின் ஊடாக உண்மைகளை மக்களுக்கான நன்மையுடன் முதன்மைப் படுத்தி அவற்றை அழகுணர்வுடன் தருவதாகவும், தனியே ஒருவழித் தொடர்பாடலாக அமையாது மக்கள் பங்கேற்கும் பொதுமன்றமாகவும் இயங்கும் என அதன் முதல் இதழ் தலையங்கத்தில் குறிப்பிட்டதை இங்கு பதிவு செய்வது அவசியமாகின்றது.

இதுவே அவரது இந்தத் தொகுப்பில் விரிந்துள்ள, பரவியுள்ள எழுத்தெங்கும் பிரதிபலிக்கின்றது.

*அவர் ஆசிரியராக இருந்த அந்த நாளேடு ஜனநாயக விரோத நடவடிக்கையாளரின் அச்சுறுத்தலால் நிறுத்தப்பட்டுவிட்டது. எனினும், அதில் அவர் பதிவு செய்த எமது மக்கள் சார்ந்த பன்முக விடயங்கள் தொடர்பான கருத்துக்கள் எதிர்கால வரலாற்றின் ஆவண ஆதாரமாக அடையாளப்படுத்தப்படும், பேணப்படும்.*

*இந்த எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும்தான் ரகுராம் அவர்கள் இத்தொகுப்பினை வெளிக்கொணர்ந்துள்ளார் என்பதே எனது நம்பிக்கை.*

*இந்தத் தொகுப்பில் அவர் கையாண்டுள்ள வித்துவத்தன்மை காட்டாத எளிமையான மொழிநடை, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விடயங்களின் சமூக - மானுடப் பெறுமதி, தேடல் மற்றும் ஆய்வு நிலை உத்திகள், ஆதார ஆவணக் குறிப்புகள் எல்லாவற்றையும் இணைக்கும் தன்மையை உள்ளாக்கிய மொழி மற்றும் இனப் பற்றுடன் கூடிய மனிதநேயச் சிந்தனை அத்தனையும் அவரது ஊடகத்துறைசார் ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.*

*அத்தகைய ஆற்றல் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.*

**அன்புடன்**
**ச. ராதேயன்**

## என்னுள்ளிருந்து...

*நீண்ட காலமாக எண்ணிவந்த ஒரு காரியம் இப்போது கைவரப் பெற்றிருக்கிறது. ஊடகத்துறையில் இயங்கிய காலங்களில் படைத்த ஆக்கங்கள் - காலத்தேவை கருதி நூலாக்கம் பெறவேண்டும் என்ற ஆவலின் ஒருபகுதி இங்கு நிறைவேறியிருக்கிறது.*

*ஊடகத்துறையில் பணியாற்றுவது வாழ்வில் இலட்சியமாக இருந்த காலத்தில், அதற்கான முதற் களத்தை "ஈழநாதம்" தந்தது. ஊடகத்துறை என்பது கொள்கையின், அறநெறிகளின் பாற்பட்டது என்ற சிந்தனைப்புலத்தில் ஓர் ஊடகவியலாளனாக வலுமிகுந்த அடித்தளம் அங்குதான் இடப்பட்டது என்பதில் இன்றைக்கும் பெருமைகொள்ளும் நாட்கள் அவை.*

*பின்வந்த பொழுதில், அச்சு ஊடகத்துறையில் ஒரு நாளிதழை அதன் ஆரம்பப் புள்ளியிலிருந்து ஆரம்பித்து, ஒரு புதிய நாளிதழுக்குரிய அத்தனை சவால்களையும் சந்திக்கும் அனுப வத்தைத் தந்தது "நமது ஈழநாடு". போரும் அமைதியுமற்ற ஒரு காலப்பகுதியில் எதிர்பார்ப்புக்களை, எச்சரிக்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு பொறுப்பைச் சுமந்த ஊடகவியலாளனாகப் பணியாற்றியதும் கருத்துக்களை மக்களுடன் பகிர்ந்துகொண்டதும் நான் பெற்றுக் கொண்ட மிக வேறுபட்ட அனுபவக் களமாக இருந்தது.*

*அக்காலப்பகுதியில், "நமது ஈழநாடு" பெற்ற மக்கள் அபிமானத்தின் மத்தியில், உரிய காலப்பகுதிக்குரிய*

ஊடகப் பொறுப்புடமையின் பேரில் வரைந்த ஆசிரியர் தலையங்கங்கள் எனது ஊடகப் பணிக் காலத்தில் மனத் திருப்தியையும், வரலாற்றுக் கடமையின் ஒரு சிறு பகுதியையேனும் நிறைவேற்றிய பூரிப்பையும் தந்தன என்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

அதேவேளை, எமது மக்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைகள் எதுவுமே அன்றிலிருந்து இன்றுவரை நிறைவேற்றப்பட்டிராத சூழலில், அன்றெழுதிய ஆசிரியர் தலையங்கங்களில் பகிர்ந்துகொண்ட விடயங்கள் பலவும் ஏறத் தாழ பதினேழு வருடங்களின் பின்னரும் எமது மக்கள் இன்றும் போராடும் கோரிக்கைகளாக இருந்து வருவதைப் பார்க்கையில், நாம் இன்றும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒரு ஊடகவியலாளனாக ஆவணவழிப் பதிவின் மூலம் எடுத்துச்சொல்லும் வாய்ப்புக் கிடைத்திருப்பதாகவே நான் எண்ணுகின்றேன்.

ஒரு ஊடகவியலாளனாக மாத்திரமின்றி - இந்த மண்ணை, மக்களை நேசிப்பவன் என்ற வகையில் எனது ஆதங்கமாய் இருந்த விடயங்களும் இந்தத் தொகுப்பில் இணைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றே - இந்தத் தொகுப்பின் தலைப்பாக அமைந்த ஆசிரியர் தலையங்கமாகவும் இடம்பெற்றிருக்கிறது.

நீங்கள் வாசிக்கவும், விவாதிக்கவும் மாத்திரமின்றி ஒரு காலத் தின் பதிவாகவும் இத்தொகுப்பு எண்ணப்படுமானால், அது இந்த நூலாக்கத்தின் வெற்றியாகவும் அமையும் என்பதில் மிகுந்த எதிர்பார்ப்பு எனக்குண்டு.

இந்தப் பதிவின் நிறைவாக...

எனது இந்தத் தொகுப்பு நூல் வெளிவரும் இவ்வேளையில், என்னை ஊடகத்துறையில் ஓர் தொழில்சார் ஊடகவியலாளனாக, பின்னர் தொடர்பாடல் ஆலோசகராக, இற்றைப் பொழுதுகளில் ஊடகக் கல்வியாளனாக வளர்த்த, ஊக்குவித்த, வழிநடத்திய நிறைமனிதர்களை நான் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

Journalist என்ற சொல்லின் அர்த்தமே முழுமையாகத் தெரிந்திராத சிறுவயதில் நான் எதிர்காலத்தில் ஒரு Journalist ஆக வரவேண்டும் என என் உள்ளக்கிடக்கையைச் சொன்னபோது, அதற்கு அர்த்தம்சொல்லி, பின்னாளிலும் எனது இளம்பராய எதிர்பார்ப்பை அலட்சியப்படுத்தாது எப்போதும் என்னை ஊக்குவித்த அம்மா,

"ஊடகத்துறையில் பட்டதாரியாக வந்துவிடு, நான் உனக்காக எதையும் செய்வேன்" என்று எனக்கு உறுதிதந்தது, என் ஆசிரியத்துவம் முழுவதும் எனக்கான முன்மாதிரியாக என்னை வழிநடத்தும் அப்பா,

தொழில்சார் ஊடகவியலாளனாக சவால் நிறைந்த உலகினுள் ஒவ்வொரு புதிய அனுபவத்தையும் ஊடகத்துறை சார்ந்து பெற எனக்கு வாய்ப்பளித்து, வழிகாட்டிய ஜெயராஜ் அண்ணா,

ஊடகக்கல்வி என்ற புதிய ஜன்னலை எனக்குத் திறந்துவிட்ட பேராசான் சபா. ஜெயராசா அவர்கள்,

அன்பும் நேசமும் மிக்கவராயிருந்து, ஊடகத்துறை சார்ந்து அடுத்த படிநிலைகளை நான் எட்டுவதற்கு உறுதுணையாயிருந்த ராதேயன் அண்ணா,

திக்குத் தெரியாத புதிய இடத்தில், தன் ஆகர்ஷிக்கும் மனித நேயத்தால் எனக்கு மானுட ஊடகவியலைக் கற்றுத்தந்த அருட் தந்தை பேராசிரியர் ச. ராஜநாயகம் அவர்கள்,

ஊடகக் கல்வியாளனாக பல்கலைக்கழகத்தில் நுழைந்தபோது, எனக்கு முழுமையான சுதந்திரத்தைத் தந்து, நான் விரும்பியவாறு எனது கற்பித்தல் நுட்பங்களை முன்னெடுக்க உதவிய என் மதிப்பிற்குரிய அருட்தந்தை கலாநிதி C.P. இராஜேந்திரம் அவர்கள்,

ஒரு ஆய்வு மேற்பார்வையாளர் இப்படித்தான் இருக்க வேண்டும் எனச் சொல்லாமல் செய்துகாட்டி, கலாநிதிப்பட்ட ஆய்வின் மூலம் பல புதிய தரிசனங்களை நான் தேடிக்கொள்ள வாய்ப்பளித்த பேராசிரியர். அ. பிச்சை அவர்கள்,

*நான் எந்த முடிவை மேற்கொண்டாலும் அது சரியாகத்தான் இருக்கும் என என்னைவிட என் மீது நம்பிக்கை வைத்திருக்கும் மனைவி ஜானகி,*

*இந்த நூலாக்கத்திற்காக ஆரம்பத்திலிருந்தே என்னை ஊக்குவித்து வெளியீடுவரை பாரம் சுமந்த நண்பன் எம். சி. ரஸ்மின் ஆகியோருக்கு எனது நெஞ்சம்நிறை நன்றிகள் என்றுமே உரித்தாகுக.*

**கலாநிதி சி. ரகுராம்**

**'சாந்திநிகேதன்'**
**கெருடாவில் கிழக்கு, தொண்டைமானாறு,**
**யாழ்ப்பாணம்.**

# 01

# புதிய பொலிவுடன் தளராத பாரம்பரியம்!

*இன்று தமிழர் தம் வாழ்விலே ஒரு நன்நாள். தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழாக "நமது ஈழநாடு" இன்று முதல் எம் மக்கள் கரங்களில் உவகையுடன் தவழப்போகின்றது. ஈழத்தமிழர்களின் உரிமைக்குரலாகவும், நடுநிலை நின்று நியாயத்தின் வழியில் பத்திரிகாதர்மத்தின் சத்தியத்தைத் தளராத துணிவுடன் அறைகூவும் மக்களுக்கான ஊடகமாகவும் தன்னை வரித்துக்கொண்டு "நமது ஈழநாடு" இன்று முதல் எம் மக்களைச் சென்றடையத் தொடங்குகின்றது.*

*"ஈழநாடு" என்ற பெயர் எமது மக்களுக்குப் புதியதல்ல. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த, தமிழர் தாயகத்தின் முதலாவது தினசரியாகவும், தமிழ்த் தேசியத்தின் குரலாகவும் ஒலித்திட்ட "ஈழநாடு" எமது மக்களின் இதயங்களில் தனக்கெனத் தன்னிகரில்லாத இடத்தைப் பிடித்துக்கொண்ட மக்கள் தினசரி என்பதை யாரும் மறந்துவிட முடியாது.*

*வெகுஜன ஊடகங்களுக்கு அவசியம் இருக்க வேண்டிய சமுதாய நலன் பேணும் நோக்கினை தனது உயர் இலட்சியமாகக் கொண்டு, ஈழத்தமிழர்களின் விடுதலைக்காகத் தன்னையும் முழுமையாக இணைத்து "ஈழநாடு" ஆற்றிய பணிக்கு வரலாற்றில் தனி இடமுண்டு.*

காலத்துக்குக் காலம் இன அடக்குமுறைகளையும், அடாவடித்தனங்களையும் நேரடியாகவே எதிர்கொண்டு - அந்தச் சவால்களையெல்லாம் கடந்து, தொடர்ந்தும் வெற்றிகரமாக வெளிவந்து, அயராத முயற்சியின் ஒரு சின்னமாக "ஈழநாடு" திகழ்ந்தது என்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

வணிக நோக்கையே மையமாகக் கொண்டதாக இயங்கும் ஊடகங்கள் மத்தியில் "ஈழநாடு" மக்களின் தேவைகளை அறிந்து அத்தேவைகளை நிவர்த்தி செய்யும் பாரிய பொறுப்பையும் செவ்வனே செய்து வந்தது.

இன்றும் எம் மக்களால் நினைவு கூரப்படும் சபாரட்ணம், கே. பி. ஹரன், எஸ்.எம். கோபாலரட்ணம் போன்ற ஈழப்பத்திரிகையுலக ஜாம்பவான்களின் வழிநடத்தலில் தனக்கென ஒரு பாரம்பரியத்தையும் உருவாக்கிக் கொண்டது "ஈழநாடு".

இத்தகைய சிறப்புக்கள் கொண்ட ஈழநாட்டின் பாதையில் இன்று "நமது ஈழநாடு" தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழாக உலாவரத் தொடங்குகின்றது.

சமூகத் தொடர்புப் பணியின் பொறுப்புணர்வுடனும் ஆக்க இயக்கங்களுடனும் மனித மேம்பாட்டுக்கான ஊடகமாக "நமது ஈழநாடு" தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்.

உண்மை, நன்மை, அழகு ஆகிய மூன்று நிலைகளின் ஊடாக உண்மைகளை மக்களுக்கான நன்மையுடன் முதன்மைப்படுத்தி, அவற்றை அழகுணர்வுடன் "நமது ஈழநாடு" மக்களுக்குத் தரும்.

தனியே ஒருவழித் தொடர்பாடலாக அமையாது, மக்கள் பங்கேற்கும் பொதுமன்றமாக "நமது ஈழநாடு" விளங்கும்.

மக்கள் மீதான ஆதிக்கமுறை அகன்ற, சமூகப் பொறுப்பு அணுகுமுறையில் "நமது ஈழநாடு" செயற்பட்டு வெகுசன ஊடகங்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழும்.

தகவல்களை அளித்தல், கல்வி, பொழுதுபோக்கு ஆகிய பணிகளினூடாக "நமது ஈழநாடு" ஒரு முழுமையான பத்திரிகையாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும்.

இவை அனைத்தோடும் - ஈழத் தமிழ் மக்களின் ஏகோபித்த உணர்வின் வெளிப்பாடாகவும், அவர்களின் அரசியல், பொருளாதார, சமூகவிடுதலையைத்தெளிவுடனும், உறுதியுடனும் முன்னெடுத்துச் செல்லவும் "நமது ஈழநாடு" திடசங்கற்பம் கொண்டுள்ளது.

# 02

# பனையில் தேள் கொட்ட தென்னைக்கா நோவென்பது?

கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு பகுதி சந்தித்த போரின் கோர விளைவுகள் வார்த்தைகளால் விபரித்துவிட முடியாதவை.

தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளாலும், கண்மூடித் தனமான விமான, எறிகணைத் தாக்குதல்களாலும் தமிழ் மண்ணில் ஆழமாகப் பதிந்துவிட்ட வடுக்கள் இலகுவில் அகன்று விடப் போவதுமில்லை.

தமிழ் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் பாரதூர மாகப் பாதித்துவிட்ட போரின் தாக்கங்களிலிருந்து மக்களை மீட்டெடுத்து, அவர்கள் தத்தம் சொந்த இடங்களில் மீள்குடியமரவும், அவர்கள் தமது இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பும் வகையில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை வேகமாக முன்னெடுக்கவும் வேண்டிய அவசியமான கடமைகள் ஏராளமாகக் காத்திருக்கின்றன.

இந்தப் பணிகளுக்கு பெருந்தொகையான நிதியுதவி தேவைப்படும் நிலையில் - பல நாட்டு அரசாங்கங்களும், மனிதநேய அமைப்புக்களும் தாமாக முன்வந்து உதவி செய்யத் தயாரென அறிவித்து வருகின்றன. அரசாங்கத் தரப்பையும் விடுதலைப் புலிகளையும் நேரடியாகச் சந்தித்து தமது உதவும் விருப்பை அவை வெளிக்காட்டி வருகின்றன.

அதேவேளை, அண்மையில் நடந்து முடிந்த தாய்லாந்துப் பேச்சுக்களின் அடிப்படையில் - இத்தகைய நிதியுதவிகளை அரசாங்கத் தரப்பும், விடுதலைப் புலிகளும் இணைந்து கோரிப் பெற்றுக்கொள்வர் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறான சூழலில் - வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்கு பின்னைய புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள் குடியேற்றத் திட்டங்களுக்கென வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நிதியுதவியை நாட்டின் ஏனைய பகுதிகளின் அபிவிருத்திக்குமெனப் பகிர்ந்து கொள்ளும் யோசனை அரசாங்கத் தரப்பில் கலந்துரையாடப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த நாட்டை ஐந்து வலயங்களாகப் பிரிப்பதெனவும், அவற்றில் ஒரு வலயமாகவே வட - கிழக்கு அமையும் எனவும் அரசாங்கத் தரப்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இத்தகைய யோசனை ஒன்றின் விரிவாக்கத்தை - இன்று கொழும்பில் நடைபெறும் அரசாங்க அதிபர்கள் மாநாட்டிலும் வைத்து ஆராய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையின் முக்கிய உறுப்பினரான மிலிந்த மொறகொட பிரிட்டனுக்குச் சென்று, பிரிட்டிஷ் அரசின் உயரதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்தி, இலங்கை முழுவதற்குமான அபிவிருத்திக்கென நிதியுதவியைக் கோரியுள்ளார்.

நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கென நிதி திரட்டிக் கொள்வதை எவரும் தடுக்கப் போவதில்லை. அது அவசிய மானதும் கூட,

ஆனால், போரினால் கோரமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கோடு ஒப்பிடுகையில், உண்மையில் உடனடி உதவி யாருக்குத் தேவையென்பதை நியாயமான சிந்தனையுள்ள எவருமே இலகுவாகத் தீர்மானிக்க முடியும்.

அத்தோடு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தகுந்த நிவாரணம் வழங்காது, முழுநாட்டுக்குமான அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திக்கவும் முடியாது.

இந்த நிலையைப் புரிந்து கொண்டு, வடக்கு - கிழக்கின் புனரமைப்புக்கு முன்னுரிமை கொடுப்பதே சாலச் சிறந்ததாக அமைய முடியும்.

அதேவேளை, அவ்வாறு செய்வதே தாய்லாந்துப் பேச்சுக்களின் அடிப்படையில் எட்டப்பட்ட முடிவின்படி இரு தரப்பும் இணைந்தே வெளிநாடுகளிடமிருந்து உதவிகோருதலும், புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதலும் என்ற முடிவிற்கு ஒத்திசைவானதாகவும் இருக்கும்.

அதைவிடுத்து, வட - கிழக்கு புனரமைப்பின் மீதான கவனத்தை மற்றைய பகுதிகளுக்குமென உடனடியாகச் சிதறவிடுவதும், தனியான நிதி சேகரிப்பு முயற்சிகளும் - கடந்த காலங்களில் தமிழர்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களைத் தவிர்க்க முடியாது நினைவுகூர்வதாகவே அமைந்துவிடும்.

தமிழர் பகுதிகளுக்கென வழங்கப்பட்ட உதவிகள் கடந்த காலங்களில் எப்படி தென்னிலங்கைக்குத் திட்டமிட்டு இடமாற்றப்பட்டன என்பதை தமிழர்கள் மறந்துவிடவும் இல்லையென்பதைச் சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, இத்தகைய கசப்பான அனுபவங்கள் மீளவும் நடைபெறாமல் இருப்பதை உடனடியாக உறுதிப்படுத்தும் பாரிய பொறுப்பை அரசாங்கமும், சர்வதேசமும் மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமானதாகும்.

# 03

# இனியும் தொடரக்கூடாது!

*களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 139 தமிழ் அரசியற் கைதிகள் நேற்று முன்தினம் முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.*

பல ஆண்டுகளாக வழக்கு விசாரணைகளின்றி சொல்லொணாத் துயரங்களுடன் சிறைகளில் வாடும் இத்தமிழ் அரசியற் கைதிகள் தம்மை விடுவிக்குமாறு கோரிப் போராட்டம் நடத்துவது ஒன்றும் புதிதல்ல.

ஏற்கனவே, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டங்களையும் வேறு பல வடிவங்களிலான போராட்டங்களையும் நடாத்திய இந்தக் கைதிகள் - அரசாங்கத்தினதும், அரசியல்வாதிகளினதும், மனிதநேய ஆர்வலர்களதும் வாக்குறுதிகளை நம்பி தமது போராட்டங்களை இடைநடுவில் கைவிட்டிருந்தனர்.

ஆனால், அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையும் கானல்நீராகவே தொடர்ந்து கொண்டிருந்தது.

இந்தநிலையில் - இனிமேலும் வெற்று வாக்குறுதிகளை நம்பிக் கொண்டிராமல், இறுதியான முடிவொன்றை

நோக்கியதாக தமது போராட்டம் இருக்கும் என்ற அறிவிப்புடன் தமிழ் அரசியற்கைதிகள் நேற்று முதல் போராடத் தலைப்பட்டுள்ளனர்.

யுத்தத்தில் அரசாங்கப் படைகளுக்கு எதிராக களத்தில் நின்று போரிட்ட போர்க் கைதிகளையே விடுவிக்க முடியுமென்றால், சந்தேக நபர்களாகவும், வழக்கு விசாரணைகளின்றியும் வாடும் தமக்கு ஏன் இந்தச் சிறைவாழ்வு என்ற ஏக்கம் மேலிட, தமிழ் அரசியற்கைதிகள் எழுப்பும் அவலக்குரல் கல்லையும் கரைய வைப்பதாகும்.

கடந்த முறைகளைப் போலல்லாமல் - இந்த முறை தமது விடுதலையில் ஒரு தீர்மானமான முடிவினை நோக்கியதாக தமது போராட்டம் இருக்குமென அவர்கள் தெரிவித்துள்ள நிலையில், இக்கைதிகளின் விடுதலையிலுள்ள சட்டச் சிக்கல்களையும் நோக்க வேண்டியுள்ளது.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இவர்கள் கைதானபோதும் அவசரகாலச் சட்டம் காலாவதியான இன்றைய சூழலில், அவசரகாலச் சட்டத்தின் கீழுள்ள பிரமாணங்கள் யாவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குரிய சட்டமுறி ஒன்றின் மூலமாக உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் - இன்னமும் அவசரகாலச் சட்டத்தின் மறைமுகமான பிடிக்குள் இக்கைதிகள் இருப்பதாகவே கருத முடியும்.

இவ்வாறான சூழலில் - இத் தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையை இரு கட்டங்களினூடாக நகர்த்த முடியும்.

ஒன்று, மனிதாபிமான அடிப்படையில் ஜனாதிபதி மூலமான பொதுமன்னிப்பொன்றை வழங்கி தமிழ் அரசியற்கைதிகளை உடனடியாக விடுவிக்கலாம்.

மற்றையவழி, பயங்கரவாத தடைச்சட்டத்தை நிரந்தரமாக நீக்குவதன் முலம் - இது போன்ற தடுத்துவைப்புக் கொடூரங்களும் அடாவடித்தனங்களும் இனிமேலும் நிகழாமலிருப்பதை உறுதிப் படுத்திக் கொள்வதுடன் - தமிழ் அரசியற்கைதிகளை விடுவிக்க வழி செய்தல்.

இவற்றில், முதலாவது வழியைப் பிரயோகிப்பதே தற் போதைக்கு ஏற்றதெனத் தமிழ் அரசியற் கட்சியினர் கூறினாலும் அத்தகைய தளர்வு தமிழர்களுக்கு நீடித்த பாதுகாப்பைத் தராதென்பது திண்ணமே.

ஏனெனில் - பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கத்தரப்பு என்னதான் சாக்குப்போக்குக்களைச் சொன் னாலும் - குறிப்பாக அரசியற் தீர்வொன்றை எட்ட முனைகையில் தெற்கில் ஏற்படலாம் எனக் கருதப்படும் எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையென்ற அரச தரப்புவாதம் உட்பட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வரலாற்று அடிப்படையில் நோக்கினால் அதன் தாக்கம் தமிழர் களையே பெரும்பாலும் குறிவைத்திருந்தது என்பது புலனாகும்.

எனவே, தமிழ் அரசியற்கைதிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்த போராட்டத்தை உடனடியாகக் கருத்திலெடுத்து, அவர்களது விடுதலைக்கு, நிரந்தரமான பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கல் மூலமாக தீர்வினைக் காண்பதற்கு அனைத்து தரப்பினரும் அழுத்தங்களைத் தரவேண்டியது அவசியமாகும்.

இனியும் இத்தகைய நிலை தொடரக்கூடாது என்பதில் அனைவரும் உறுதியாகவும் விழிப்பாகவும் இருப்போமாக.

# 04

# தெளிவான செயற்றிட்டம் வேண்டும்!

நிரந்தர சமாதானத்துக்கான முயற்சிகளில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரும் தீவிரமாக இறங்கியுள்ள இவ்வேளையில், உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து பல வருடங்களாக அகதி வாழ்க்கை வாழ்ந்துவரும் மக்களின் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகிறது.

இந்தவகையில் - வலிகாமம் வடக்கு பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் அவலநிலையைத் தீர்த்து வைப்பதற்கு அனைவருமே ஒன்றுதிரள வேண்டிய நேரம் வந்துள்ளது.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு என்பவற்றுக்கான முன்னேற்பாடுகள் ஆரம்பமாகவுள்ள இன்றைய நிலையில் வலி. வடக்கு மக்களின் பிரச்சினைக்கான முழுமையான, உடனடித்தீர்வு ஒன்று காணப்படுவது அத்தியாவசியமாகின்றது.

வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்தை வார்த்தை களாக, உறுதிமொழிகளாகப் பெற்றுக் கொள்வது இனியும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

ஏனெனில் - இன்றளவும் வலி. வடக்கு பற்றி பெற்றுக்கொள் ளப்பட்ட வாக்குறுதிகளில் நடைமுறைக்கு வந்தவை மிகச் சொற்பமானவையே.

வெறுமனே மக்களிடையே "பரபரப்பு" கிளப்பும் மாநாடுகளாலும், கலந்துரையாடல்களாலும், பிரமுகர்கள் சந்திப்பினாலும், பிரதேசங்களைப் பார்வையிட்டுத் திரும்புவதாலும் இதுவரை பெரிதாக எதையும் எவரும் சாதித்துவிடவில்லை.

மக்களிடையே எதிர்பார்ப்புக்களைத் தூண்டிவிடும் விஜயங்களையும், அறிக்கைகளையும் மக்கள் சலிப்புடனேயே இன்று நோக்குகின்றனர்.

எனவே, இனிமேல் வலிகாமம் வடக்கில் மீளக் குடியமர்வு பற்றியும், அதற்கான அணுகுமுறைகள் பற்றியும் தெளிவான, விரிவான, தொடர்ச்சியான செயற்திட்டம் ஒன்று உருவாக்கப்படுவது அவசியமாகும்.

இத்தகைய செயற்திட்டத்தை வெகுஜன அமைப்புக்களும், அரசியல்வாதிகளும், பொது மக்களும் இணைந்து உருவாக்கி அதனடிப்படையில் மீளக் குடியமர்வை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதே பயன்தரக்கூடியதாக அமையும்.

வடக்கின் பெரும் துறைமுகமும், ஒரேயொரு விமானத்தளமும். யாழ்ப்பாணத்திலே அதிகளவு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிய சீமெந்து உற்பத்தி நிறுவனங்களும், மீன்பிடியும் விவசாயமும் மிகச் செழித்த இயற்கை வளமும், அழகிய சுற்றுலா மையங்களும், வரலாற்றுப் புகழ்மிக்க தெய்வத் திருத்தலங்களும் அமைந்த வலி. வடக்குப் பகுதியை மக்களற்ற இராணுவப் பிரதேசமாக வைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்துவிடலாமென்றோ, புனரமைத்துவிடலாமென்றோ எவரும் எண்ணினால் அது மக்களை அப்பட்டமாக ஏமாற்றுவதாக இருக்கும்.

எனவே - உடனடியாகவும், தெளிவாகவும் வலி, வடக்கிற்கான மீளக்குடியமர்வைத் துரிதப்படுத்தும், அழுத்தம் தரும் செயற்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அதற்குச் சகல தரப்பினரும் விசுவாசத்துடன் ஒத்துழைக்கவும் வேண்டும்.

இவ்வாறின்றேல் - நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்றோம் என்பதுதான் உண்மையானதாக இருக்கும்.

# 05

# இயற்கை வளம் காக்க மக்கள் இயக்கம் உருவாகட்டும்!

யாழ். மண்ணின் இயற்கை வளத்திற்குத் தற்போது பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகச் சூழலியலாளர்கள் எச்சரிக் கின்றனர்.

ஒருபுறம் யாழ் - குடாநாட்டில் மிகக் குறைவாக எஞ்சியிருக்கும் இயற்கைத் தாவரங்கள் அழிக்கப்படுவது நிகழ, மறுபுறம் எமது மண்ணின் தன்மையையே கெடுத்துவிடக் கூடியதாகச் செயற்கை உரங்களதும், கிருமிநாசினிகளதும் பாவனை அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ் - குடாநாட்டின் இயற்கைத் தாவரங்களைக் கருத்திலெ டுக்கும்போது. வடமராட்சி கிழக்கு, தென்மராட்சிப் பகுதிகளில் வெகுவாகப் பரவிக்கிடந்த கண்டல் காடுகள் இன்று சரமாரியாக அழிக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

விறகுத் தேவைக்கென்ற பெயரில் காய்ந்த மரங்களை மட்டுமல்ல பச்சை மரங்களை வெட்டியழிப்பவர்களும் அதிகரித்துள்ளனர்.

இதேபோன்று, இப் பகுதியிலிருந்த சவுக்கு மரங்களும் கடந்த ஆண்டுகளில் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. இன்னும் சிலர் பசுமரங்களை எரித்துவிட்டு, சில நாட்கள் கழிய அவற்றைக் காய்ந்த மரங்கள் என வெட்டிச் செல்லும் தந்திரோபாயத்தையும் கடைப்பிடிக்கின்றனர்.

இது மட்டுமல்லாமல் - பொது நிறுவனங்களிலும், தனியார் வீடுகளிலும் உள்ள பயன்தரு மரங்கள் கூட, இன்று எவ்வித எதிர்நோக்குமற்று வெட்டித்தள்ளப்படும் சம்பவங்களையும் அன்றாடம் காணக்கூடியதாகவுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, இயற்கைப் பசளையையே பயன்படுத்தி, அதனூடாக சத்து நிறைந்த சுவையான விளைபொருட்களைத் தந்த யாழ். விவசாயிகள் இன்று செயற்கை உரப்பாவனையையும், இரசாயனக் கிருமிநாசினிகளையும் அதிகளவில் பயன்படுத்த ஆரம்பித்ததன் பின்னர் - விளைபொருட்கள் அமோகமானதே தவிர, அவற்றின் தரமும் சுவையும் மிகக் குறைந்து விட்டதையும் காணலாம்.

அத்தோடு, உடலின் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் இரசாயனப் பதார்த்தங்களும் இத்தகைய விளைபொருட்களூ டாக மக்களை அடையத் தொடங்கி விட்டன.

செயற்கை உரங்களின் பாவனையானது யாழ். மண்ணுக்கே உரித்தான வளத்தையும், சமநிலையையும் மோசமாகப் பாதித்துள் ளதுடன், மண்ணியல் கட்டமைப்பும் மாறிவருவதாக விவசாய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மண்ணியல் கட்டமைப்பு மாறினால், அதை மீளப் புனருத் தாரணம் செய்ய முடியாது எனவும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

ஏற்கனவே - குடாநாட்டின் மூலதாரமான தொழில்களில் ஒன்றான கடற்றொழில், கடல் வலயத் தடைகளால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயமும் இவ்வாறு சேதமுறும் நிலைக்குச் செல்லுமாயின் - யாழ். மண்ணின் சுயபொருளாதாரம் என்பதே கனவாகி விடும் ஆபத்தும் எம் முன்னாலுள்ளது.

ஒரு காலத்தில் பெரும் உற்பத்திச் சமூகமாக விளங்கிய யாழ். சமூகம் வெறும் நுகர்வுச் சமூகமாக மாறும் துர்ப்பாக்கியமும் இதனால் ஏற்படும்.

எனவே, இந்த மண்ணிலும் மக்களிலும் நேசம் கொண்ட அனைவரும், எமது இயற்கை வளத்தையும், சூழல் பாதுகாப்பையும் முன்னிலைப்படுத்த வேண்டும்.

மரங்கள் வளர்ப்பையும், இயற்கைப் பசளைப் பாவனையையும் ஊக்கப்படுத்தும் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

எமது இளைய தலைமுறைக்கு எம்மண்ணையும், சூழலையும் காக்க வேண்டியதன் அவசியமும், அதனூடான செயற்பாடும் பாடசாலை மட்டங்களிலும், பல்கலைக்கழக அளவிலும் உடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எமது வளங்களைப் பாதுகாப்பதென்பது பெரும் மக்கள் இயக்கமாக உருப்பெற வேண்டும். அதுவே எம் மண்ணையும் சூழலையும் பொலிவுடன் பேணுவதற்கான இறுதி வாய்ப்பாகவும் இருக்கும்.

உணர்வோம், உறுதி கொள்வோம்.

# 06

## மாற்றான் தாய் மனப்பாங்கா?

திருகோணமலைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் பகுதிக்குள் ஊடுருவியபோது கைது செய்யப்பட்ட ஆறு இராணுவ வீரர்களையும் விடுவிக்குமாறு கோரி, போராட்டம் நடாத்திய சிங்கள மக்களைச் சந்தித்து அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் உயர் மட்டக்குழு ஒன்று நேற்றுமுன்தினம் திருமலைக்குப் பறந்து சென்றது.

இந்தக் குழுவில் மிலிந்த மொறகொடவுடன், அரசின் சமாதான செயலணியின் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக, இராணுவத்தளபதி உட்படப் பலரும் இடம்பெற்றிருந்தனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் கூறுவதன்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலில் ஈடுபட்ட படையினரே அவர்களால் கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் கைது செய்யப்பட்டு ஒரு சில தினங்களிலேயே, சிங்கள மக்கள் திருமலையில் திரண்டு போராட்டம் நடத்தி வருவதும் - அவர்களைச் சமாளிக்க, போராட்டம் நடத்துபவர்கள் அழைக்காமலேயே அரசின் உயர் மட்டக்குழு அங்கு பறந்து சென்றதும் - மக்களிடையே வினாக்களை எழுப்பியுள்ளது.

களுத்துறைச் சிறைச்சாலையில் ஆண்டுக்கணக்காக எதுவித விசாரணைகளுமின்றி வாடும் தமிழ் அரசியல்கைதிகள் - தமது

அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு, தாம் எதுவித விசாரணை களுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தம்மை நிபந்தனைகளின்றி விடுதலை செய்யுமாறு குரலெழுப்புகையிலும் - சாகும்வரை தமது உண்ணாவிரதப் போராட்டத்தில் உடல்நிலை பாதிப்படைந்து அவர்கள் உயிருக்குப் போராடுகையிலும் -

அமைச்சர் மிலிந்த மொறகொட தம்மைச் சந்திக்க வேண்டு மெனவும், அவரைச் சந்தித்து தமது நிலையை அவருக்குப் புரியவைக்கச் சந்தர்ப்பம் ஒன்று தருமாறும் அவர்களை மிகவேண்டி நின்றபோதும்.

அதைப்பற்றி - இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்படும் வரை கவனம் சிறிதும் காட்டாதவர்கள் - திருமலைக்கு அதிவேகத்தில் பறந்துசென்று திருமலை சந்தை வீதியில் அடிபணிந்து பேசுவது வியப்பையும், வேதனையையும் எமது மக்களுக்குத் தருகின்றது.

சிங்கள மக்கள் குழம்பக்கூடாது, அவர்கள் மனம் நோகக் கூடாது என ஆதங்கப்படும் அரசாங்கம் - அந்தக் கருணையில் சிறிதளவாவது களுத்துறைச் சிறையில் வாடும் எமது சகோதரர் களிடம் காட்டவில்லை என்பது "பழைய குருடி கதவைத் திறவடி" கதை இன்னும் மறையவில்லையோ என்ற சந்தேகத்தை மக்கள் மனதில் விதைக்கின்றது.

இந்தச் சந்தேகத்தைப் போக்கி, உடனடியாக சிறைகளில் வாடும் எமது சகோதரர்களை விடுவிக்க அரசாங்கம் உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

தமிழ் மக்களுடன் உண்மையான சமாதானத்தையும் சக வாழ்வையும் உறுதிப்படுத்த, அரசாங்கம் அரசியல்கைதிகளின் போராட்டத்தை மதித்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

இன்றைய சமாதானச் சூழலில் தான் முன்னெடுக்கும் அமைதி முயற்சிகளில் உண்மையான விசுவாசமும், நேர்மையும் அரசாங்கத்திற்கு இருக்கும்பட்சத்தில், அதனைத் தமிழ் மக்களிடம் வெளிப்படுத்த இந்த வாய்ப்பை அரசாங்கம் பயன்படுத்த வேண்டும்.

அரசாங்கம் அவ்வாறு செய்யத்தவறின், அது மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே தமிழர்களை இன்னும் நோக்குகின்றது என்பதே அதனூடாக வெளிவரும் செய்தியாக இருக்கும்.

எனவே, உடனடி நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு, தமிழ் அரசியல்கைதிகளை விடுவித்து தனது நம்பகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும் எனத் தமிழ்மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

# 07

## எதிர்பார்ப்புக்களுடன்...!

இனிவரும் காலங்களில் பாரிய புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்றப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், யாழ். மாவட்டத்தின் அரச நிர்வாகக் கட்டமைப்பை அதற்கேற்ற வகையில் தயார்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பைச் சுமந்தவராக, யாழ். மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக செ. பத்மநாதன் பொறுப்பேற்றுள்ளார்.

ஏற்கனவே யாழ் - மாவட்டத்தில் திட்டப் பணிப்பாளராகவும், அரசாங்க அதிபராகவும் செயலாற்றியவர் என்ற ரீதியில் - அவரது சேவையை யாழ். மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் வரவேற்கின்றனர்.

கடந்த சில வருடங்களாகவே யாழ். மாவட்ட அரச நிர்வாகத்தில் காணக்கூடியதாக இருந்த சில நிர்வாகச் சிக்கல்களையும், திருப்தி யற்ற செயற்பாடுகளையும் சீராக்கிக் கொண்டு அவர் தனது பயணத்தை ஆரம்பிக்க வேண்டியவராகவுள்ளார்.

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கென ஒதுக் கப்பட்ட பெருந்தொகைப்பணம் மக்களைச் சென்றடையாமல் போனாலும் - எழுந்தமானமாக, பொருத்தமற்ற வகையில் நடைபெற்ற பதவி நியமனங்களும் - யாழ். அரச நிர்வாகத்தின் பேரில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சலிப்பையும் வெறுப்பையும் மாற்றும் பணியும் அவருக்குக் காத்திருக்கின்றது.

யுத்தத்தால் பல வருடங்களாகவே மிகவும் பாதிப்படைந்துள்ள யாழ். மாவட்டத்தினை மீளக் கட்டியெழுப்புவதற்கு பல வகையிலும் முயற்சிகளும், உதவிகளும் மேற்கொள்வதற்கான வழிவகைகள் உறுதியாக வருகின்ற தருணத்தில், யாழ். குடாநாட்டினது உடனடித் தேவைகளையும் நீண்ட இலக்கு களையும் ஒருசேரக் கையாள வேண்டிய அவசியம் இன்று எழுந்துள்ளது. இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீளக் குடியமர்த்தி, அவர்களது இயல்பு வாழ்க்கைக்கு வேண்டிய ஏற்பாடுகள் மக்களால் எதிர்பார்க்கப்படுகின்றன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ் - மண்ணின் சுய பொருளா தாரத்தை மீளக் கட்டியெழுப்பவும், நவீன முறைகளை அறிமுகப் படுத்தி தொழிலாற்றலை அபிவிருத்தி செய்யவும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டியுள்ளது.

அரசாங்க நிறுவனங்களினதும் அரசசார்பற்ற நிறுவனங் களினதும் பணிகளை ஒருங்கிணைத்து ஒத்திசைவான போக்கில் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதன் மூலமே சமூகத்தின் தேவைகளை முழுமையாக நிவர்த்தி செய்ய முயற்சிக்கலாம்.

யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைப்புக்கு ஏற்ற வகையில் - காத்திரமான கலந்துரையாடலுடன் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

அத்தகைய திட்டங்கள் - கண்காணிப்பும், மதிப்பீடும், பின்னூட்டமும் கொண்டவையாக தொடரப்படுவதன் மூலம் மக்களை உதவிகள் சென்றடைவது உறுதிப்படுத்தப்படும்.

குறுகிய காலத்தில் - பல அபிவிருத்தித் திட்டங்களை சமகாலத்தில் முன்னெடுக்க வேண்டிய தேவையையும் யாழ். மண் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து உருவான பட்டதாரிகள் உட்பட பெருந்தொகையான இளைய சமுதாயத்தினர் வேலைவாய்ப்பற்று வாடுகின்றனர். அவர்களுக்கான வேலைவாய்ப்புக்களிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இதைவிடவும், ஏராளம் எதிர்பார்ப்புக்களை யாழ். சமூகம் சுமந்துள்ளது. இந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பணிகளில் புதிய அரச அதிபர் தீவிர ஆர்வம் காட்டுவார் என்ற நம்பிக்கையும் மக்களிடம் உள்ளது. இதற்கான பதில் அவரது செயற்பாடுகள் மூலமாக மக்களுக்குக் கிடைக்கட்டும்.

# 08

# உலகிற்கே முன்மாதிரியானவர்கள் தமிழீழப் பெண்கள்!

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் இன்று வெகு உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது.

இன விடுதலையுடன், சமூக விடுதலையையும் முன்னெடுக்கும் பாதையில், இன்று வீறுநடை போடும் தமிழீழப் பெண்களின் ஆற்றலையும், இலட்சியப் பற்றையும், அர்ப்பணிப்பையும் உரத்துச் சொல்லும் நாளாக இன்றைய எழுச்சி நாள் திகழ்கின்றது.

பாரம்பரியம், மரபு எனக் கூறிக்கொண்டு அடிமைத் தளைகளால் சிறைப்பட்டிருந்த பெண்கள் - இன்று சமூகத்தை வழிநடத்தும் தலைவர்களாகவும், திறன் மிக்கவர்களாகவும் வளர்ச்சிபெற்று நிற்பதை தமிழினம் புளகாங்கிதமுடன் நோக்கும் காலம் இது.

சீரிய தலைமைத்துவத்தின் வழிநடத்தலில் - தமிழீழப் பெண்கள் கண்டுள்ள இப் புரட்சிகரமான மாற்றத்தை முழு உலகுமே இன்று வியப்புடன் நோக்குகின்றது, பாராட்டுகின்றது.

இந்த மாற்றம் வெகு இலகுவாகக் கிடைத்து விடவில்லை. காலம் காலமாக எமது சமூகத்தினுள் அழுந்திக் கிடந்த மூடநம்பிக்கைகளையும், ஆணாதிக்கம் மிக்க பாரம்பரியச் சிந்தனைகளையும் உடைத்தெறிந்து வர இரண்டு தசாப்தங்களைக்

கடக்க வேண்டியிருந்தது. இந்தப் பெரும் சமூக மாற்றத்தை, சமூக விடுதலையைப் பெற்றுக் கொடுத்த பெருமை விடுதலைப் போராட்டத்தையும், போராட்டத்தின் தளர்வில்லாத தலைமையையுமே சார்ந்தது என்றால், அது மிகையல்ல என்று கூறலாம்.

தமிழ்ப் பெண்கள் - தனித்து தமது வீடே கதி என்றிருந்த நிலையை மாற்றி, இன விடுதலைக்கான ஒரு வலுப்பெற்ற போராட்ட சக்தியாக இன்று வளர்ந்திருக்கின்ற நிலை எமது சமூகத்தில் மட்டுமல்லாது, சர்வதேச ரீதியாகவும் பெண்கள் பற்றி நிலவிய மூடத்தனமான கொள்கைகளை உத்வேகத்துடன் மாற்றம்காணச் செய்து வருகின்றது.

உள ரீதியாக மட்டுமல்ல உடல் ரீதியாகவும் திறமையுடன் சமர்க்களங்களில் பெண் போராளிகள் காட்டிய வீரமும், வேகமும் தமிழ்ப் பெண்களின் பெருமையை உலகளவில் பறைசாற்றியிருக்கின்றன. இத்தகைய பங்காற்றுதல் - அரசாங்கத்தினதும், அரச படைகளினதும் இனவன்முறைகளாலும், ஒடுக்குமுறையாலும் இன்னமும் தீவிரம் பெற்றதையும் நாம் மறந்துவிட முடியாது.

இன்றைய எழுச்சி நாளில் பெண் விடுதலையையும், சமத்து வத்தையும் இன்னமும் உறுதிப்படுத்துகின்ற, பாதுகாக்கின்ற பொறுப்பினை ஒவ்வொரு மக்களும் தங்கள் மனங்களில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட உறவுநிலை தொடங்கி சமூகநிலை வரை பெண்ணியம், பெண் விடுதலை என்பதை வெறும் வாய்ச்சொல் ஆகிவிடாது, அதனைச் செயலில் காட்டுவதற்கு ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

இன்றைய தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளில் இந்தத் திடசங்கற்பத்தை மனதில் பூண்டவர்களாக நாம் உறுதி கொள்வோமாயின், அதுவே இன்றைய தினத்தின் வெற்றியாகவும் அமையும்.

# 09
# பொறுமையின் அர்த்தம்!

அம்பாறை காஞ்சிரங்குடாவில் எழுந்த ஓலம் மறையுமுன்னரே நேற்று முன்தினம் திருமலையில் மற்றுமொரு மனிதப்படுகொலை அவலம் நடந்தேறியிருக்கிறது.

யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்துள்ளதென மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும்போது அமைதியைக் கிழித்தெறியுமாப்போல திருமலையில் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் துடிதுடிக்கக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்திருக்கிறார்கள்.

சமாதானத்தின் குரல் வளையை இறுகப்பற்றி நசுக்குவதாக கிழக்கிலிருந்து எழும் மனித அவலங்கள், தமிழ் மக்களைக் குறிவைத்துத் தாக்குகின்றன.

சமாதானத்திற்கான விசுவாசத்திற்காக பதினொரு மனித உயிர்களை தமிழினம் இழந்திருக்கிறது மிலேச்சத்தனமான தாக்கு தல்கள் மத்தியிலும் - பொறுமையை இழந்து விடாமல் அமைதிக்கான விலையை ஒவ்வொரு தமிழனும் செலுத்திக்கொண்டி ருக்கின்றான்.

உரிமைகளைக் காப்பதற்காக அகிம்சை வழியில் பலமுறை போராடித் தோற்றபோதும் - நியாயமும், அர்ப்பணிப்பும் கொண்டு தமிழினம் நடாத்தி வருகின்ற சத்தியப்போருக்கு

பெரும் பான்மைச் சமூகத்தின் ஒரு பிரிவினரும், படையினரும் தந்திருக்கின்ற மற்றொரு பதிலே காஞ்சிரங்குடா மற்றும் திருமலைச் சம்பவங்கள் ஆகும்.

இவ்வளவு நடந்த பின்பும் தம் எதிர்ப்பையும், கண்டனத்தையும் வேதனையையும் - துக்கதினம் மூலமாவே தமிழினம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

வீரம் விளையாடிய மண் இன்று தன்னிலை காத்து தணிந்து நிற்கிறது. இன்னமும் சந்தர்ப்பம் கொடுப்போம் என எரிமலையாகும் நெஞ்சங்கள் அமைதி காத்து நிற்கின்றன.

இவையெல்லாம் எதற்காக என்பதை அரசாங்கமும், பெரும் பான்மைச் சமூகமும் உணர வேண்டும். அமைதி வேண்டும் என்பதற்காக அடங்கிப் போயிருக்கும் தமிழினத்தின் உணர்வலை களைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

எங்களது உறவுகளைத் தொலைத்த போதும் - தமிழினம் சமாதானத்தின் பாதையில் உறுதியாகவுள்ளது என்பது பலவீனத் தின் வெளிப்பாடல்ல என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும், சர்வதேசமும் அதை உணரவேண்டும்.

இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடக்கக்கூடாது என தமிழினம் விண்ணப்பித்து நிற்கும் என அரசாங்கம் எதிர்பார்க் கக்கூடாது. நடக்காமல் காப்பதே தனக்கு அழகு என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளத் தவறினால் - இலங்கைத்தீவில் அமைதி என்பது எட்டாக்கனியாகவே ஆகிவிடும்.

இனி எந்த நடவடிக்கையும் அரசாங்கத்திலேயே தங்கியுள்ளது. தான் தேர்ந்தெடுக்கப்போகும் பாதை எதுவென்பதும், அதற்காக மேற்கொள்ள வேண்டிய அவசியமானதும் உடனடியானதுமான செயற்பாடுகளும் அரசாங்கத்திற்கே உரியன.

அமைதிக்கான அருமையான வாய்ப்பொன்றை நழுவவிடாது பார்த்துக்கொள்ளும் இறுதிப் பொறுப்பும் அரசாங்கத்திடமே உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, காஞ்சிரங்குடாவிலும், திருமலையிலும் உள்ளங்குமுறும் வண்ணம் உறவுகளை இழந்து நிற்கும் எம் சகோதரர்களின் கரங்களை நாம் ஒவ்வொருவரும் இறுகப்பற்றிக் கொள்வோம்.

எமது இனத்தின் உரிமைக்காக உரத்துக் கிளம்பிய அந்தக் குரல்களுக்காக நாம் மௌனம் கொள்வோம்.

எமது இதயங்களிலிருந்து வழியும் கண்ணீரோடு எம் சகோதரர்களுக்காக அஞ்சலி செலுத்திக்கொள்கின்றோம்.

# 10

## உங்களை எதிர்பார்த்திருக்கிறது சமூகம்!

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து மேலும் ஒரு தொகுதி பட்டதாரி மாணவர்கள் நேற்றைய தினம் வெளியேறியிருக் கிறார்கள். யாழ். சமூகத்தில் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பு என்பது காலம் காலமாகக் கொண்டுள்ள உயர்மதிப்பின் அடிப்படையில், எதிர்காலத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாக வெளியே வரும் மாணவர்களை வரவேற்கின்றோம், வாழ்த்துகின்றோம்.

கடந்த மூன்றாண்டுகளாகவோ நான்காண்டுகளாகவோ கற்ற கல்வியின், பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், தகுந்த கல்விசார் பின்புலம் ஒன்றுடன் சமூகத்திற்குள் புத்தூக்கம் நிறைந்த மனிதர்களாக உலாவரப் போகும் - இந்த இளைய சகோதர, சகோதரிகளின் முன்னால் - அவர்களது வாழ்க்கைப் பாதை என்ற நெடிய பயணம் காத்திருக்கின்றது.

இதுவரை காலமும் பெற்றோரதும், பாதுகாவலர்களதும் அரவணைப்பில், உதவியில் கழித்த காலம் கடந்துபோக தமது சொந்தக்கால்களில் நின்று தொழிலையோ, உயர்கல்வியையோ தொடர வேண்டியவர்களாக மாறியிருக்கும் இந்த மாணவர்கள் சந்திக்கப்போகும் நாளைய தினங்கள் பற்றி இன்றிலிருந்தே சிந்திக்கவேண்டும்.

ஒரு காலத்தில் - பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்த வுடன் அரச உத்தியோகம் தேடி வரும் என்ற பெரும் நம்பிக் கையில் எமது தமிழ்ச் சமூகம் வாழ்ந்திருந்தது. அந்தளவிற்கு, பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், அவர்களுக்கான அரச வேலைவாய்ப்பும் கணிசமானளவில் காத்திருந்தது. இந்தக் காலகட்டம் கடந்து போக, தனியார் துறையினரின் வருகையும், வேலைவாய்ப்புக் களில் தனியிடத்தைப் பெற்ற காலமும் வந்தது.

ஆனால், இன்றைய சூழலில் - பல்கலைக்கழகங்கள் உருவாக் கிவரும் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதோடு, புதிய தொழிற்துறைகள் எதிர்பார்க்கும் விசேட அம்சங்கள் பட்டதாரிகளிடம் எதிர்பார்த்தளவு காணப்படாததும், தெரிவுகள் விடயத்தில் நெருக்கடிகளை உண்டுபண்ணியுள்ளது.

கல்வியற்துறைப் பேராசிரியர் சந்திரசேகரம் கூறுவதுபோல - இன்றுள்ள தனியார் துறையினர் எதிர்பார்க்கும் - தொடர்பாடல் திறனும், கணினிசார் அறிவும், தலைமைத்துவப் பண்பும் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் உருவாக்கும் பட்டதாரிகளிடம் எதிர்பார்த்தளவுக்கு கிடைக்கப் பெறவில்லை என்ற கருத்தானது இங்கு ஆழமாக ஆராயப்பட வேண்டியதாகும்.

பல்கலைக்கழகங்கள் - பட்டங்களைச் சுமக்கும் பட்டதாரி களை உருவாக்குவதை விட, நாளை அந்தப் பட்டதாரிகள் வெளியுலகை எதிர்நோக்கக் கூடியவர்களாக அவர்களை உருவாக்குவதே தலைசிறந்த வழியாக அமையும் என்றும் பேராசிரியர் சந்திரசேகரம் மேலும் கூறுகின்றார்.

இந்த வகையில், யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து புதிதாக வெளியேறியுள்ள பட்டதாரிகள் தமது எதிர்காலத்தை வளப்படுத்தக் கூடியதாக தமது பாதையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழகப் படிப்பொன்றே போதுமானது என்று இருந்து விடாது, வேலைவாய்ப்புக்களை வழங்கப்போகும் வெளியுலகம் எதிர்பார்க்கும் தகுதிகளையும் அவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

தாம் கற்ற கல்விக்கான பணியொன்று கிடைக்கப் பெறாவிடில், சுயமுயற்சி போன்ற மாற்று வழிகளைச் சிந்தித்து தமது வலுவையும், அறிவையும், திறனையும் தேங்க விடாமல் நகர்த்திச் செல்லக்கூடிய வகையிலும் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

எல்லாவற்றிலும் மேலாக சுய வளர்ச்சியை மட்டுமே சிந்தித்து விடாது, தாம் வாழ்ந்துவரும் சமூகத்தின் உயர்வுக்கும் சிறப்புக்கும் பங்கேற்பாளர்களாக அவர்கள் மாறவேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தை மீளக் கட்டியெ ழுப்புவதற்கும், புதிய பலத்துடன் தமிழினம் தலைநிமிர்வதற்கும் அவர்கள் எமது பணியைப் பயன்படுத்த வேண்டும். அதுவே, அவர்கள் தம்மை வளர்த்த சமூகத்திற்காற்றும் சிறந்த சேவை யாகவும் இருக்கும்.

# 11

# அமைதிக்கு எதிரானவர்கள்!

யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதைப் போலவே சிங்கள இனவாதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவினது செயல்கள் இருக்கின்றன.

கடந்த வெள்ளியன்று திருகோணமலையில் நடைபெற்ற தமிழர் படுகொலைகளின் பின்னணியில் - ஜே.வி.பியினதும் அதன் நேச சக்திகளினதும் ஆதரவு இருப்பதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஏற்கனவே திருகோணமலையில் கடந்த காலங்களில் நடை பெற்ற பல வன்செயல்களோடும் ஜே.வி.பியின் தொடர்பு துலாம்பரமாக வெளியே தெரிந்தே இருந்தது.

இவ்வாறான சூழலில் - சமாதானத்திற்கான முன்னகர்வுகளைப் பாதிக்கக்கூடிய வகையில், தமிழ் மக்களின் மீது திட்டமிட்ட தாக்குதல்களைத் தொடர்வதன் மூலம் - தனது சதி வலையை ஜே.வி.பி. தயாராக்கி வருவதாகவே தெரிகின்றது.

தமிழர்களுக்கு வழங்கப்பட்டே ஆக வேண்டிய உரிமைகள் - சிங்கள இனத்தை நசுக்கிவிடும் என்றவாறான பிரசாரத்தை சிங்கள மக்கள் முன்னெடுத்து அமைதியைக் குழப்புவதற்கு ஜே.வி.பி. தன்னாலியன்ற அனைத்தையும் செய்யும் என்றே அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

குழம்பிய குட்டையில் மீன் பிடித்து விடலாம் என்ற தனது கனவை நனவாக்குவதற்காக எதையும் செய்யலாம் என்ற நிலைக்கு ஜே.வி.பி.யும் அதன் ஆதரவு சக்திகளும் காத்திருப்பதையே திருமலைச் சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஜே.வி.பி.யின் ஊடுருவலானது தனியே சிங்கள மக்களி டையே மட்டுமல்லாது, படையினருக்குள் நிகழ்ந்திருப்பதாகவே தெரிகின்றது.

தமிழர் விரோதம் என்ற கொடியின் கீழ் - அமைதியைச் சீரழிக்க முயல்வதானது தமக்கான சவக்குழியைத் தாமே அமைத்துக் கொள்வதற்கு ஒப்பானது என்பதை அமைதியைக் குழப்ப முயல்பவர்கள் புரிந்து கொள்ளாமலிருப்பதுதான் வியப்பானது.

இதையேதான் - திருமலையில் நடந்த கலந்துரையாடலொன் றில், விடுதலைப் புலிகளையும் தமிழர்களையும் காட்டமாகக் கண்டித்துப் பேசிய பௌத்த பிக்குகளுக்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க எடுத்துக் கூறியிருக்கிறார்.

தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமாதானத்தைப் பெறத் தவறினால் எல்லோருமே அழிக்கப்படுவோம். அத்துடன் நாட்டுக்கு எதிர்காலமொன்றும் இருக்காது என அவர் கூறியி ருப்பதை சரியாகப் புரிந்து கொள்ளும் எவரும் இவ்வாறான இனவிரோதத்தை தூண்டவும், அமைதியைக் குழப்பவும் முயற்சி செய்ய மாட்டார்கள்.

இன்றைய சமாதானத்துக்கான பாதை இலகுவாக உருவாக் கப்பட்ட ஒன்றல்ல என்பதையும் போரினால் சிங்கள இனமும் நாடும் சந்தித்த அழிவுகளோடு இன்றைய சூழலை ஒப்பிடும்போது, தற்போது நிலவும் மகிழ்ச்சியும் நிம்மதியும் சிதைக்கப் படக்கூடாததன் அவசியத்தையும் - உணர்ந்து கொள்ளும் எந்தப் பொதுமகனும் - ஜே.வி.பி. யின் அரசியல் உள்நோக்கத்தை தெளிவாகவே புரிந்து கொள்வோம்.

மீண்டும் வலுப்பெற முயற்சிக்கும் - சிங்களப் பேரினவாதச் சிந்தனைகளுக்கும், தமிழர் விரோதச் சக்திகளுக்கும் -

நியாயபூர்வமாகச் சிந்திக்கக்கூடிய சிங்கள மக்கள் தரப்போகும் எதிர்ப்பையும், அதனூடான செயற்பாடுகளையும் பொறுத்தே சமாதானத்தின் விளைவுகள் நிரந்தரமாகும் என்பது கண்கூடானது.

# 12

## மானுட விடுதலையை நோக்கி ஒன்றுகூடுவோம்!

கலையையும் கலை மாண்பினையும் போற்றி வளர்த்த தமிழ் மண்ணில் - நாளை மற்றுமோர் தமிழ் விழா அரங்கேறுகின்றது.

தமிழர் தம் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்து நிற்கும் - கலை நயமும், படைப்புத் திறனும் என்றுமே வற்றாத ஜீவ நதியெனத் தொடர்வதை நாளை ஆரம்பமாகும் "மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002" உலகின் எட்டுத் திக்கிலும் முரசறையவிருக்கிறது.

காதலையும், பிரிவையும், இயற்கையையும் பாடிய கவிஞர் கள் மத்தியில் - சமர்க்களமாடியபடியே புதிய புறநானூ ற்றைப் படைத்தவர்கள் மிகுந்த மண்ணில் - சமாதானத்தின் நிழலிலிருந்து, மீட்டலும் இனிச் செல்லும் பாதையும் பற்றி ஆக்கவியலாளர்கள் ஆராயவுள்ளனர்.

தமிழ் இலக்கியப் போக்கில் புதிய பரிமாணத்தைச் சுட்டி நிற்பதாக அமையப்போகும் - தமிழ்க் கூடல் நிகழ்வுகள் - இன, மத, தேச, அரசியல் வேறுபாடின்றி மானுட விடுதலை நோக்கில் ஒன்று கூடும் அற்புதம் மிக்க சந்திப்பாக அமையப்போகின்றன.

கடந்த சில தசாப்தங்களாக வேறு வேறு தளங்களில், வேறு வேறு அரசியல் நோக்கங்களுடன் ஆக்கங்கள் படைத்தோர், தமிழர் தாயகத்தின் பண்பாட்டுத் தலைநகரில் கூடுவது இலக்கியத்தின் மானுட நோக்கிற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியென்றே கொள்ளலாம்.

ஈழத்தமிழர் போராட்டத்திற்காக தமிழகத்தில் பெரும் நெருக்கடிகள் மத்தியிலும் ஆதரவுக் குரலும் உறுதியான பற்றுறுதியும் வெளிப்படுத்தியவர்களில் போற்றத்தக்கோரும் ஒன்றுகூடலில் சமூகந்தர இருப்பது தமிழர் அபிமானிகளின் மனங்களில் உவகையைத் தோற்றுவித்துள்ளது.

கடல் பிரித்தாலும் - நாங்கள் உங்கள் சகோதரரே என்று தோள்கொடுத்துத் துணைதர வந்திருக்கும் உறவுகளை வரவேற்பதில் ஈழத்தமிழ் மண் பெருமை கொள்கின்றது.

உயிரை ஆகுதியாக்கி உதிரம் சிந்திய மண்ணின் உயர்வை மேடைகளிலும் கவிதைகளிலும் ஓவியங்களிலும் எழுத்துருக் களிலும் செதுக்கிய எம் தமிழகச் சகோதரருடன் நன்றி மறவா உணர்வோடு சங்கமிக்கின்றோம்.

யுத்தத்தின் வலிகள் தாங்கி, விடுதலையொன்றே இலட்சிய மௌனவரிந்து நின்ற தாய் மண்ணின் உணர்வுகளை வருவோர் எல்லோரும் உணரவும், உள்வாங்கவும் - உட்பதிவை, உலகெங் கும் பரப்பவும் நாளை ஆரம்பமாகும் “தமிழ்க் கூடல்” வழிதரட்டும்.

இந்தவகையில் “தமிழ்க் கூடல் 2002” ஈழத்தமிழர் உரிமைப் போரின் அரசியல் இலக்குகளை மட்டுமல்லாது, அதற்கு அப் பால் விடுதலைப் போராட்டம் வழிச் செலுத்திய சமூக, மானுட விடுதலையை அதன் பல்வேறு பரிமாணங்களை, செல்வாக் கினை எடுத்துச் சொல்லும் வேளையில் - இதுவரை கால மும் இருந்துவந்த முரண்களும், எதிர்வாதத் திறனாய்வுகளும் வேற்றுமைகளும் நீக்கப்பட்டு ஒட்டுமொத்த மானுடத்தின் சமூக, பொருளாதார, அரசியல் தளை நீக்கத்திற்கு அது கட்டியம் கூறு வதாக அமையட்டும்.

தமிழ்க் கூடலுடன் ஆரம்பமாகும் புரிந்துணர்வும் புத்தூக் கமும் ஈழத் தமிழ் இலக்கியத்தை இன்னமும் வளம்படுத்தவும் வளர்க்கவும் ஊக்குவிசையாக அமையுமாயின் - அதுவே இந்த ஒன்றுகூடலின் வெற்றிகளில் குறிப்பிடத்தக்கதாகவும் அமையும்.

# 13

# அடக்கப்பட்ட மண்ணிலிருந்து ஒலித்த சுதந்திரக் குரல்!

*தமிழ் இனத்திற்காக தனியாளாக நின்று, உலகின் ஊடக வலைப்பின்னல்களூடாக உரத்துக் குரல் கொடுத்த மயில்வாகனம் நிமலராஜனின் (நிமால்) நினைவு தினம் இன்றாகும்.*

*யாழ்ப்பாணத்தின் ஊடகத்துறை வரலாற்றில் - மக்களின் தளத்தில் நின்று இயங்கி, தான் எழுப்பிய சுதந்திரக் குரலுக் காகவே தன்னுயிரையும் கொடுத்த நிமாலை யாரும் எளிதில் மறந்துவிடமுடியாது.*

*யாழ்ப்பாணம் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர், சிவில் நிர்வாகம் ஒன்று இல்லாத சூழலில், பத்திரிகைகளே வெளிவராத இக்கட்டான நிலையில் - உலகின் கவனத்திற்கு யாழ்ப்பாணத்தைக் கொண்டு சென்றதில் நிமால் ஆற்றிய பணிகள் அளப்பரியன.*

*தான் கொண்ட கருத்திலும், பாதையிலும் நேர்மையானவராகத் திகழ்ந்த நிமால் - ஊடகவியலாளன் ஒவ்வொருவரும் கொண்டிருக்க வேண்டிய துணிச்சலும் நியாயந்தேடும் மனப்பான்மையும் உள்ளத்தில் கொண்டவராகச் செயற்பட்டு வந்தார். காலத்தின் தேவையறிந்து அவரின் சேவை அமைந்திருந்தது.*

*நிமாலின் பணிகள் - அவரைத் தனித்து ஒரு ஊடகவியலாளனாக*

மட்டும் இனங்காட்டவில்லை. அதையும் கடந்து ஒரு ஊடகச் செயற்பாட்டாளனாக (Media Activist) நிமால் ஆற்றிய பணிகளை யாழ். மண் மறந்து விடாது.

தென்மராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது, எங்கும் மழையெனப் பொழிந்த குண்டு மழைகளுக்குள், கைதடியில் கவனிப்பாரற்று விடப்பட்ட ஆதரவற்ற வயோதி பர்களைப் பாதுகாத்து அழைத்துவருவதில் நிமால் காட்டிய புத்தி சாதுரியமும் மனிதாபிமானமும் என்றும் நினைவில் நிற்பவை.

ஊடகவியலாளன் என்றால் செய்திகளைத் திரட்டி தகவல்களை மக்களுக்குக் கொடுப்பவன் என்ற வரையறைகளுக்குள் நின்று விடாது, மக்களை நேசிப்பவனாக, மனிதநேயம் மிக்கவனாக இருக்க வேண்டும் என்பதற்கு தமிழ் ஊடகவியலாளர்களிடையே தகுந்த உதாரணமாகக் காட்டக்கூடிய தகுதியை நிமால் கொண்டி ருந்தார்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் நெருங்கி வருவது தெரிந்தும் - நியாயத்தின் பக்கம் நின்று வாதிட்ட நிமாலின் சேவையின்றிய அன்றைய யாழ்ப்பாணத்தை எவராலும் நினைத்துப் பார்க்க முடியாது.

ஊரெல்லாம் அடங்கிப் போக, ஒரு தனியாளாக நின்று (One Man Role) நிமால் - செய்த பணிகள் அந்தக் கொடுமையான இரவின் துப்பாக்கிச் சன்னங்களின் ஒலிகளூடே கரைந்து போனாலும் - ஒரு சுதந்திர ஊடகவியலாளனுக்குரிய பாதுகாப் பையும் இருப்பையும் கேள்விக்குறியாக்கிய அந்தச் சம்பவம் மக்களின் மனங்களை விட்டு இன்னும் அகலவில்லை.

மக்களுக்காக, மக்களின் துயர்களைக் களைவதற்காகத் தன்னை அர்ப்பணித்த ஊடகவியலாளனை, நேருக்கு நேர் நின்று அவனது நியாயத்தோடு மோதத் திராணியில்லாது, அவனது நேர்மைக்கு எதிர்நிற்கப் பயந்து வஞ்சகமாக சுட்டுக் கொன்ற கொடுஞ்செயலாளர்களை மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்.

நிமாலுக்கு நிகழ்ந்த துயரம் - முழு ஊடகத்துறைக்குமே விடுக்கப்பட்ட சவால் என்பது மட்டுமல்ல, மனிதாபிமானத்திற்கு

அடிக்கப்பட்ட சாவுமணி என்பதையும் எவரும் மறக்கவும் மாட்டார்கள். நிமாலின் இன்றைய நினைவு தினத்தில் - சுதந்திர ஊடகத்துக்கும், மனிதநேயமிக்க ஊடகப் பணிக்குமென ஒவ்வொரு ஊடகவியலாளர்களும் உறுதிகொள்வதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாக இருக்கும்.

# 14
# கிழக்கில் அமைதி தொடர...

கிழக்கு மாகாணத்தில் தொடரும் - அமைதிக்குக் குந்தக மான திட்டமிட்ட முயற்சிகளில் மற்றொன்றும் தோல்வி கண்டிருக்கின்றது.

தமிழ், முஸ்லீம் மக்களின் பொறுமையும், விடுதலைப் புலிகளினதும் படையினரதும் ஒத்துழைப்பும் - பெரும் இரத்தக்களரி ஒன்று ஏற்படுவதைத் தடுத்ததுடன் சமாதானத்தைக் குழப்ப நினைப்போரின் திட்டங்களும் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளன.

காஞ்சிரங்குடா, திருமலைச் சம்பவங்களின் தொடர்ச்சியாக அம்பாறையில் “திடீரெனக்” காணாமற்போன முஸ்லீம் இளைஞன் விவகாரத்தைக் கொண்டு, தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தவும் - அதனூடாக இன வன்செயல்களைத் தூண்டவும் சிலர் மேற்கொண்ட முயற்சிகளின் பின்னணி வெளித்தெரிய வந்துள்ளது.

இந்தப் பின்னணியில் கிழக்கின் முக்கிய முஸ்லீம் அரசியல் வாதி ஒருவரினது பக்க பலம் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் - சமாதானத்தை எரித்து, அதன் தீயில் குளிர்காய விரும்புபவர்கள் பற்றியும், அவர்கள் தேட நினைக்கும் அரசியல் ஆதாயங்கள் தொடர்பாகவும் தமிழ், முஸ்லீம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

சமாதானத்துக்கான நகர்வுகள் இருதரப்பிலுமான பரஸ்பர புரிந்துணர்வுடன் மேற்கொள்ளப்பட்டு வரும்போது, இவை போன்ற சம்பவங்கள் இனியும் தொடரப்படலாமென்ற எச்சரிக்கையையும் மக்கள் மனதிற் கொள்வது நன்றென்றே உணரப்படுகின்றது.

கிழக்கு நிலவரத்தைப் பொறுத்தவரை தமிழ், முஸ்லீம் சமூகங் களிடையே காலத்துக்குக் காலம் இன விரோதத்தைத் தூண்டும் சம்பவங்கள் நடைபெற்று வந்துள்ளன. அவ்வாறான நிலையில், எளிதில் பூசல்களைக் கிளப்பும் விதமாக உணர்வுமையமான பகுதிகளிலும் சமாதானத்தின் எதிரிகள் தம் கைவரிசையைக் காட்டக்கூடும்.

இதனைத் தவிர்ப்பதற்காக அக்கரைப்பற்றில் கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்ட - இரு சமூகங்களினதும் அமைதி காத்தல் முயற்சிகளும், வெளிப்படையான போக்குகளும் எதிர்காலத்திலும் தொடரப்படல் வேண்டும்.

வடக்கு, கிழக்கின் ஒட்டுமொத்த சுபீட்சத்திற்கு, தமிழ்-முஸ்லீம் சமூகங்களின் நெருக்கமான பிணைப்பும், பரஸ்பரம் சந்தேகங்களைக் களைந்து கொள்வதும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்

இரு சமூகங்களுக்கிடையிலான நேரடித் தொடர்பும், கால இடைவெளிகளிலான சந்திப்புக்களும் - குறுகிய அரசியல் நோக்கங்கொண்டோரின் செயற்பாடுகளை ஒதுக்கித் தள்ள வைத்துவிடும்.

தமிழ் - முஸ்லீம் சமூகங்களின் ஒருங்கிணைப்பின் மூலமே நிரந்தர சமாதானத்துக்கான சூழல் கிழக்கில் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெளிவாக ஏற்றுக்கொண்டு செயற்படுவதன் மூலம் - அக்கரைப்பற்றுச் சம்பவம் போன்ற "திட்டமிட்ட" செயல்களை அவை ஆரம்பிக்கப்படும் கணங்களிலேயே துடைத்தெறியவும் முடியும்.

# 15

# வாருங்கள், விளையாட்டுத் துறையை வளப்படுத்துவோம்!

வட - கிழக்கில் கூடிய கவனத்துடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளுள் விளையாட்டுத்துறை மிக முக்கியமான தாகும்.

கடந்த யுத்த காலங்களில் கல்வித்துறையோடு இணைந்து விளையாட்டுத்துறை வளர்ச்சியும் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டிருந்தது.

இராணுவ நடவடிக்கைகளாலும், தாக்குதல்களாலும் அன்றாடம் உயிரிழப்புக்களையும் இடப்பெயர்வுகளையும் சந்தித்து வந்த சமூகத்தில் - விளையாட்டுத்துறையின் உயிர்ப்பு என்பது எதிர்பார்க்கப்பட முடியாத ஒன்றாக இருந்தபோதும், இன்று அமைதி திரும்பியுள்ள சூழலில் விளையாட்டுத்துறையை வளப்படுத்தவும், வளர்த்தெடுக்கவும் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் ஏராளமுள்ளன.

எத்தனையோ இடர்களுக்கும், தடைகளுக்கும் மத்தியில், இன்று கிடைத்துள்ள போர் ஓய்வில், தமது திறமைகளை மிகப் பிரகாசத்துடன் வெளிப்படுத்திவரும் எமது இளைய தலைமுறையிடம் இருந்து கிடைத்துள்ள எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் - விளையாட்டுத்துறையை வேகமுடன் புனருத்தாரணம் செய்ய வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டி வருகின்றன.

மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவி நாடளாவிய அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டதும், திருமலை இந்துக் கல்லூரி மாணவன் - இலங்கையின் பாடசாலை மட்ட அதிவேக ஓட்ட வீரனாகத் தெரிவு பெற்றதும், சதுரங்க விளையாட்டில் உலகத் தரத்திற்குப் போட்டியிடும் யாழ். பல்கலைக்கழக மாணவனும் - இந்தவகையில் எம் மண்ணிலிருந்து உதித்த மாணிக்கங்களாகும்.

இவர்களைப் போல - இன்னும் ஏராளமானோர், இலைமறை காயாக, கொட்டிக்கிடக்கும் அதீத திறமைகளுடன் - தம்மை வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிடைக்காதவர்களாக இங்குள்ளனர்.

இவர்களை வெளிக்கொண்டு வந்து, எமது மண்ணின் புகழ், விளையாட்டுத்துறையின் ஊடாகவும் உலகெங்கும் பரவச்செய் வதற்கு செய்ய வேண்டியவை எமக்கு முன் ஏராளமாகக் காத்தி ருக்கின்றன.

குறிப்பாக, பாடசாலை மட்டத்திலிருந்தே விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யவேண்டியது இன்று மிக அவசிய மானதாக உள்ளது.

வட - கிழக்கிலுள்ள எத்தனையோ பாடசாலைகள் தகுந்த விளையாட்டு உபகரணங்கள் இன்றியும், ஏன் மைதானங்கள் கூட இல்லாத நிலையிலும் இருப்பது வேதனையான உண்மையாகும்.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து ஆர்வமும் திறனும் உள்ளவர்களை ஊக்குவிக்க பாடசாலைச் சமூகமும், பெற்றோரும், நிதிவளம் கொண்டோரும் முன்வர வேண்டும்.

எது எதற்கோ எல்லாம் - பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து விளம்பரங்கள் தேடுபவர்கள், நல்லதொரு விளையாட்டு வீரனை, வீராங்கனைகளைத் தேர்ந்தெடுத்து அவரது செலவீனங்களை ஈடுசெய்து, அவரை உலகத்தரம் வாய்ந்த வீரராக உருவாக்க உதவலாமே?

யாழ்ப்பாணத்திலிருந்து சிறந்த சதுரங்க வீரனாக உருவாகி வரும், யாழ். பல்கலைக்கழக மாணவன் சிவோதயன் உலகத்தரப்

போட்டிக்குச் செல்வதற்குத் திறமையிருந்தும், அதற்கான நிதியுதவியை எதிர்பார்க்கும் நிலையிலுள்ளார். இவரைப் போன்றவர்களுக்கு, எமது சமூகத்தின் தாராள மனம் படைத்த செல்வந்தர்களும், நிறுவனங்களும் உதவி செய்வார்களேயானால், எமது மண்ணிலும் ஒரு விஸ்வநாதன் ஆனந்தோ, கஸ்பரோவோ நிச்சயம் தோன்ற முடியும்.

எனவே, விளையாட்டுத்துறை ஆர்வலர்களும் அபிமானிகளும், கல்வி சார் சமூகமும் ஏனைய நிறுவனங்களும் இணைந்து எமது மண்ணின் விளையாட்டுத்துறையை வளம்படுத்தி, எமது மண்ணிலிருந்தும் - கார்ல் லூயிஸ்களையும், சுசந்திகாக்களையும், சச்சின் டெண்டுல்கர்களையும், ரொனால்டோக்களையும் உருவாக்க முயல்வோம்.

எங்கள் கைகளை எதிர்பார்த்திருக்கும் இரத்தினங்களைப் பட்டை தீட்டி, உலகெங்கும் அவை பிரகாசிக்க வழிசெய்வோம்.

# 16

## காலந்தவறிய நீதி

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலைக்காக சட்ட ரீதியான நகர்வுகள் சற்று வேகம் கொண்டுள்ளன போலத் தோன்றுகின்றன.

கடந்த சில வாரங்களில் மட்டும் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, விடுதலையான நபர்களின் எண்ணிக்கை என்பவற்றை நோக்கும்போது இது தெரியவருகின்றது.

அதேவேளை, கடந்த வாரம் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றின் ஊடாக, இதுவரை காலமும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வலிமையானதொரு சாட்சியமாகக் கொள்ளப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மீதான நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டதுடன்,

குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்ட வழிமுறைகள், அதற்கெனப் பயன்படுத்தப்பட்ட அழுத்தங்கள், வாக்குமூலங்களைப் பெற்றவர்களின் தகைமை போன்ற பல விடயங்களும் - இத் தீர்ப்பின் மூலம் மீளாய்விற்குட்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் வெளியுலகிற்கு உணர்த்தப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கொடூரத் தன்மையையும், நியாயம் மீறிய வகைகளில் அச்சட்டம் பயன்படுத்தப்பட்டதை கடந்த காலங்களில் பலரும் சுட்டிக்காட்டியதையும், வாதிட்டமையையும் - இத்தீர்ப்பு வலுவானதாக்குகின்றது.

தமிழ் மக்கள் மீது எந்தவித மனிதாபிமானமற்ற வகையிலும், கண்மூடித்தனமாகவும், அப்பட்டமான இனவாதப் போக்கிலும் கட்டவிழ்த்து விடப்பட்ட கைதுகளுக்கும், அதன் பின்னரான கொலைகளுக்கும், "காணாமற்போன" சம்பவங்களுக்கும், வெளியுலகமே தெரியாத நீண்ட சிறைவாசங்களுக்கும், சித்திரவதைகளுக்கும் காரணமாகவும், துணையாகவும் இருந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சட்டபூர்வத்தன்மையை - இத்தீர்ப்பு கேள்விக்குறியாக்கியுள்ளது.

கைதான தமிழ் மக்கள் மீது எழுந்தமானத்திற்குச் சாட்டப் பட்ட குற்றச்சாட்டுக்களின் பேரிலான வாக்குமூலங்களின் உண்மை நிலை கடந்தகாலங்களிலேயே அறியப்பட்டதொன்று என்றாலும், நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தற்போது அது உறுதிப் படுத்தப்பட்டிருப்பதானது,

இவ்வளவு காலமும் தமிழ்மக்கள் மீது பாய்ந்த மிலேச்சத்தனமான ஒரு சட்டத்தின் உள்முகத்தை வெளியுலகிற்கு உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்திருக்கிறது.

இதேபோன்று - இக்கொடுஞ் சட்டத்தில் மற்றும் பல பிரச்சி னைக்குரிய விடயங்களும் சட்டத்தின் வழியென வெளித்தெரிய வரும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையானது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் பாதிக் கப்பட்ட தமிழ் மக்களின் நியாயத்தின் குரலை உலகிற்கு உரத்துச் சொல்லியிருப்பதுடன், கடந்த காலங்களில் நீதித்துறை யும், நீதிமன்றங்களும் - எவ்வாறு பாரபட்சமாகவும், நியாய மின்றியும் செயற்பட்டிருக்கின்றன என்ற உண்மையையும் வெட்டவெளிச்சமாக்கியுள்ளது.

எனவே, இனிமேலாவது முறையான நீதியும், பாரபட்ச மின்மையும் நீதித்துறையிடமிருந்து தமிழ் மக்களுக்குக் கிடைக் குமா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள சம்பந்தப்பட்டோர் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்.

அதன் மூலம், சிறைகளில் வாடும் எம் சகோதரர்களது தளைகள் அகற்றப்பட்டு அவர்கள் சுதந்திர மனிதர்களாகட்டும்.

உண்மையினதும் நியாயத்தினதும் வெற்றிகள் மனித வதையை ஊக்குவித்த கொடுஞ்சட்டத்தை அகற்றிச் செல்லட்டும். ஒரு சட்டத்தின் வழியாக, நீதியின் பெயரைச் சொல்லி இடம்பெற்ற அநீதிகளுக்கு ஒரு முடிவு கிடைக்கட்டும்.

# 17

# அரசியல் நாகரீகமற்ற செயல்

இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான தீவிர முயற்சிகளில் இறங்கியிருக்கும் நோர்வே நாட்டை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஒருமுறை உதாசீனம் செய்யும் முகமாக நடந்திருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், தொடர்ந்து விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனும் முக்கிய பேச்சுக்களை நடாத்தி விட்டு, சமாதானத்திற்கான அடுத்த நகர்வுக்குச் செல்லுமுகமானதும், மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதுமான சமாதான முயற்சிகளுக்குப் பின்னர் - தன்னைச் சந்திக்க வந்த நோர்வேக் குழுவினரை, "வேலைப்பளு"வைக் காரணம் காட்டி ஜனாதிபதி சந்திரிகா சந்திக்க மறுத்ததானது தற்போது மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிகளில் அவருக்குள்ள பொறுப்பற்ற தன்மையையும், அலட்சியப் போக்கையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

மாநாடுகளிலும், ஊடகங்களிலும் - சமாதான முயற்சிகளுக்குத் தனது ஆதரவு இருப்பதாகப் பேசிவிட்டு, யதார்த்தத்தில் அமைதிக்கான நகர்வுகளை உதாசீனப்படுத்துவதென்பது, ஜனாதிபதி சந்திரிகாவின் முரண்பட்ட தோற்றங்களையும், அவற்றின் பின்னால் உள்ள அவரது உண்மையான நிலைப்பாட்டையும் வெளியுலகுக்கு எடுத்துக்காட்டுகின்றது.

இதேவேளை - இலங்கைத் தீவில் அமைதியை ஏற்படுத்தக் கிடைத்துள்ள அரியதொரு வாய்ப்பினைப் பயன்படுத்தாமல் - குறுகிய அரசியல் நோக்கம் கொண்டு அவர் செயற்படுகின்றாரோ என்ற சந்தேகத்தையும் ஜனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடுகள் வலிதாக்குகின்றன.

கடந்த சில நாட்களாகத் தென்னிலங்கையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்கெதிராக மிகத் தந்திரமான காய் நகர்த்தல்களில் தனது முழுக்கவனத்தைச் செலுத்தியும், அதனூடாக மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கான ஆட்சியதிகாரத்தைப் பெற் றுக்கொள்வதில் ஆர்வமும் கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா விடம்,

அரசியல் ஆதாயங்களைக் கடந்த அமைதிக்கான ஆதரவையும், அதன் வழியே இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானத்துக்குமான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டிய தேவைக்கான உந்துதலை யும் எதிர்பார்ப்பது ஒருவகையில் வீணாண எதிர்பார்ப்போ என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஏற்கனவே, சமாதானத் தூதுவர்களாகச் செயற்படும் நோர்வே நாட்டவர்கள் மீது கடுமையான, தேவையற்ற, காழ்ப்புணர்வு கொண்ட விமர்சனங்களை முன்வைத்தவரிடம் - இதுபோன்ற அலட்சியப்போக்கு தென்படுவது, சாதாரண விடயம் என்று சிந்திக்கத் தோன்றுகின்றது.

ஆனால் - ஒரு தனிப்பட்ட நபராக சந்திரிகா குமாரதுங்கவிடம் இத்தகைய போக்குகளை எதிர்பார்த்தாலும் ஒரு ஜனாதி பதிக்குரிய பொறுப்புணர்விலும், சமாதானம் நோக்கிய இன் றைய காலகட்டத்தின் அவசியம் கருதியும் - அவரிடமிருந்து இவ்வாறான நடவடிக்கைகள் தென்படுவது ஒரு ஆரோக்கிய மான அரசியல்வாதிக்குரிய குணாம்சமாகத் தென்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கப்பால், அரசியல் ஆதாயங்களுக்கப்பால் செயற்பட வேண்டிய ஜனாதிபதி சந்திரிகா - இதுபோன்று நடந்துகொள்வது, அவரது பதவிக்கு அழகான தல்ல என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

சர்வதேசமும் உன்னிப்பாக அவதானித்துவரும் - இலங்கையின் அரசியற் களத்தில், மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் - பல்வித பரிமாணங்களையும் கொண்டு நோக்கப்படுகையில் - சமாதான முயற்சிகளுக்கு இவ்வாறான ஒத்துழையாமையைத் தொடர்ந்தும் ஜனாதிபதி சந்திரிகா கடைப்பிடிப்பாரானால், அது அவரது அரசியல் வீழ்ச்சியின் மிகப்பெரும் குறியீடாக இருக்குமென்பதே உறுதியானதாகும்.

# 18

## வீட்டு வாசலுக்கே வரும் வெள்ளம்!

இலங்கைத் தீவில் ஏற்பட்ட யுத்தச் சூழலின் நேரடியான பாதிப்புக்கள் ஒருபுறமிருக்க, அதன் மறைமுகத் தாக்கம் இன்று பலதுறைகளிலும் பெருமெடுப்பில் வெளித் தெரிய ஆரம்பித் துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக நாட்டின் அபிவிருத்தித் திட் டங்களுக்கும், மக்களின் சுபீட்சமான, முன்னேற்றகரமான வாழ்க்கைக்கும் செலவிடப்பட்டிருக்க வேண்டிய பணத்தின் பெரும்பகுதி போராயுதங்களைக் கொள்வனவு செய்யவும், ஆயுதப் படைகளைப் பராமரிக்கவும் திருப்பிவிடப்பட்டது.

நாட்டு மக்களின் அத்தியாவசியத் தேவைகளான கல்வி, சுகா தாரம் போன்றவற்றுக்கு வந்து சேரவேண்டிய நிதி கூட எவ்வித முன்யோசனையுமற்று வெற்று வெற்றிப் பெருமிதங்களுக்காகவும், அரசியல் தளத்தைக் காத்துக் கொள்ளவும் போர்க்களங்களில் கொட்டப்பட்டது.

கொள்வனவு செய்த கப்பல்களுக்கும் விமானங்களுக்குமான செலவீடு போக, மோசடியாகவும் பெருந்தொகைப் பணம் யுத் தத்தின் பெயரால் கையாடல் செய்யப்பட்டு, அவை இன்று வங்கிப் பெட்டகங்களிலும், இனந்தெரியாத சேமிப்புக் கணக்குகளிலும் நிறைந்து கிடக்கின்றன.

நாட்டை வளப்படுத்த வேண்டிய நேரத்தில், வீண்விரயமான இத்தகைய நிதியினால் சிறிலங்காவின் பொருளாதாரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இது கடந்த ஆண்டுகளிலேயே வெளித் தெரியவந்தாலும், இதன் நீண்டகாலத் தாக்கத்தின் பயன்கள் இப்போது நேரடியாகவே நாட்டைக் குறிவைத்துத் தாக்கத் தொடங்கிவிட்டன.

அரசாங்கம் சந்தித்துள்ள வங்குரோத்து நிலையினால் - அரச திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் புதிய நியமனங்கள் எதனையுமே மேற்கொள்ள வேண்டாம் என்ற நிலைக்கு அரசாங்கம் வந்திருப்பதும்,

நாடெங்கிலும் உள்ள 2000 சமுர்த்தி உத்தியோகத்தர்களை வேலையிலிருந்து நீக்குவதாக அரசு ஆலோசித்து வருவதான செய்தியும் - இதன் ஒரு சில வெளிப்பாடுகளேயாகும்.

இதைவிட, அரசாங்கத்தின் வசமிருந்த நிறுவனங்களையும், சேவைகளையும் தனியார்மயமாக்க வேண்டிய கட்டாயத்திற்கும், யுத்தத்தால் நலிந்த பொருளாதாரமே முக்கிய காரணம் என்பது வெளிப்படையானது.

கடந்த காலங்களில் - தமிழினத்தை அழித்தொழிக்கவும், அரசியல் இலக்குகளை நோக்கிய வீம்புப் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தலைப்பட்ட அரசியல் சக்திகள் விதைத்தவையே, இன்று அறுவடையாகிக் கொண்டிருக்கின்றன.

இது ஒரு ஆரம்பநிலை வெளிப்பாடேயன்றி, தாக்கங்களின் உச்ச நிலை இதுதான் என்று வரையறுத்துவிட முடியாததும் இங்கு கவனிக்கத்தக்கது.

இங்கு ஒரு வேடிக்கை என்னவென்றால் - தனது ஆட்சிக் காலத்தில், தமிழர்களுக்கெதிரான மிகப் பாரிய இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டும், அதற்கு முன் ஏற்பட்டிருக்காத போர்ச் செலவீனத்தை ஈட்டித் தந்தும், முழுத் தீவையுமே போரிற்குள் கொண்டு சென்றதுமான பொதுஜன ஐக்கிய முன்னணியும், அதன் தலைவர்களும் -

தாம் சம்பாதித்துக் கொடுத்த பொருளாதார நெருக்கடி பற்றி சிந்திக்கக் கூட மாட்டாமல் - ரணில் அரசாங்கம் செய்துவரும் தனியார்மயமாக்கல் பற்றியும், வேலைவாய்ப்புக்கள் வழங்கப் படுவது இடைநிறுத்தப்பட்டது பற்றியும் "பலத்த கண்டனம்" தொடுப்பதுதான். அதை விட "இது மக்களை வெகுவாகப் பாதிக்கும்" என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த "அரசியல் வேடிக்கைகள்" ஒருபுறமிருக்க, இதனூடான உள்ளார்த்தத்தை சிங்கள மக்களும் அரசாங்கமும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

யுத்தத்தின் பாதிப்பு என்பது எவ்வளவு தூரம் நாட்டைக் குட்டிச்சுவராக்கும், இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் என்பதை உணர்ந்து கொள்ள இவையெல்லாம் எச்சரிக்கைகளே என்பது உணரப்பட வேண்டும்.

இதன்படி ஒரு வகையில் - தெற்கில் எழுந்த/எழுந்து வருகின்ற அரசியல் கோமாளித்தனங்களினதும், செயலற்ற பேச்சுக்களி னதும், இனவாதச் சிந்தனைகளதும் பாதை எப்படியிருக்கும் என்பதை சிங்கள மக்களுக்கு உணர்த்துவதற்கும், அம்பலப்படுத் துவதற்கும் கிடைத்த வாய்ப்புக்களாகவும் இந்த நெருக்கடிகளைக் கொள்ள முடியுமல்லவா?

# 19
# காலத்தின் தேவை

யாழ். பல்கலைக்கழகத்தில் - சட்ட பீடம் ஒன்றை அமைப்பதற் கான முன்நகர்வுகள் வேகம் பெற்று வருவதனை மிகுந்த மகிழ்ச் சியுடன் தமிழ்மக்கள் வரவேற்கின்றனர்.

தமிழர் தாயகப் பகுதியில் அமையவுள்ள முதலாவது சட்ட பீடம் என்ற வகையிலும் - காலத்தின் அவசியத் தேவை என்ற வகையிலும், சட்டபீடத்தை இங்கு அமைப்பதற்கான முயற்சி களுக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் தரவேண்டியது தமிழர்கள் எல்லோரதும் வரலாற்றுக் கடமையாகும்.

இது வரை காலமும் இலங்கையில் - கொழும்புப் பல்கலைக் கழகத்தில் மட்டுமே இயங்கி வந்த சட்ட பீடத்திற்கு அடுத்ததாக - இரண்டாவதாக ஒரு சட்டபீடம் அமைக்கும் வாய்ப்பை, யாழ். பல்கலைக்கழகம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் அமைக்கப்படுவதானது பல வகையிலும் முக்கியத்துவமுடையதாகின்றது.

தெற்குப் பல்கலைக்கழகங்களில் - சட்டக்கல்வியைப் பயில் வதற்கு தமிழ் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டு வந்தா லும், அது மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியாகவே இருந்து வந்துள் ளது. இந்த நிலையில் - அதிகளவு தமிழ் மாணவர்களைச் சட்டக் கல்விக்கு உள்வாங்கக் கூடிய ஒரு நிலையை புதிய சட்டபீடம் கொண்டிருக்கும்.

இதனால் - கொழும்பு பல்கலைக்கழகத்திலமைந்த சட்ட பீடத்தில் கற்ற / கற்றுவரும் தமிழ் மாணவர்களின் தொகையை விட, எதிர்காலத்தில் - தமிழினத்தில் அதிகளவு சட்டவாளர்களும், சட்டக்கல்வியாளர்களும் தோன்றுவதானது எமது சமூகத்தின் சட்ட அறிவுசார் புலமைத்துவத்தையும், சட்டம் பற்றிய விழிப்புணர்வையும் அதிகரிக்கச் செய்யும். இது ஒரு ஆரோக்கியமான சமூகச் சூழலுக்கு இட்டுச் செல்லும். சட்ட அறிவுசார் சமூகம் உருவாக வழி சமைக்கும்.

சட்டக்கல்வி என்பது தொழில்சார் விருத்திக்கு மட்டுமல்லாது, அறிவுத்தேடலுக்கான கற்றலுக்கும் வழிவகுக்கக்கூடியதான வாய்ப்பை புதிய சட்டபீடம் வழங்கக்கூடியதாக இருக்கும்.

யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் - ஏனைய துறைகள், சட்டபீடத்தின் வளத்தையும் அறிவையும் தமது துறைகளிலும் பயன்படுத்த இனி வாய்ப்புக் கிடைக்கும். உதாரணமாக முகாமைத்துவப் படிப்புக்களிலும், சமூகவியல் மற்றும் அரசியல் துறைகளிலும், மருத்துவத்துறையிலும் - சட்டபீடத்தின் துறைசார் உதவியும், ஒத்துழைப்பும் - முக்கிய பகுதித் தேவையை நிறைவு செய்ய உதவக் கூடியதாக இருக்கும்.

எமது சமூகத்தைப் பொறுத்தவரை - இன ஒடுக்குமுறையாலும், இராணுவ நெருக்குதல்களாலும், மனித உரிமை மீறல்களாலும் மிகப்பெரும் பாதிப்பைச் சந்தித்த/சந்தித்து வரும் சமூகம் என்ற ரீதியில் - எமக்கான சட்ட வழிமுறைகளைத் தேசியரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பலமுடனும், அறிவுசார் பின்புலத்துடனும் முன்னெடுத்துச் செல்ல புதிய சட்ட பீடம் வழியமைத்துத் தரும்,

எல்லாவற்றுக்கும் மேலாக எம்மை நாமே ஆளும் தன்னாட்சிக்கான தயார்படுத்தலில் நீதித்துறையின் வளத்தைப் பெருக்கவும், விருத்தி செய்யவும் - ஏற்கனவே செய்யப்பட்டுள்ள தயார்படுத்தலுக்கு, மிகப்பெருந்துணையான, பலமான அடித்தளமொன்றை அமைக்க புதிய சட்டபீடம் வழியமைக்க முடியும்.

தமிழ் மக்களுக்கேயான தன்னாட்சி, சுயநிர்ணயம், தாயகம் என்பவற்றை வலியுறுத்தும் எமக்கான சட்டங்கள் பற்றிய ஆய்வு

களுக்கும் - தேசவழமைச் சட்டத்தினதும் முக்குவச் சட்டத்தினதும் நல்ல கூறுகளை, எமக்கான வரலாற்றாதாரமாகக் கொள்ளவும், புதிய சட்டபீடத்தினூடாக முயற்சிகள் முன்னெடுக்கப்படவும் வாய்ப்புண்டு.

எனவே, யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய சட்டபீடத்தை விரைவாக ஆரம்பிக்கவும் அதனை வளர்ச்சியுறச் செய்யவும் - துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களும், ஆர்வலர்களும், தமது பணிகளை வழங்க முன்வரவேண்டுமெனத் தமிழினம் எதிர் பார்த்து நிற்கின்றது.

ஒரு பெரும் இலட்சியத்துக்கு அணிசேர்ப்பவர்களாக, அனை வரும் ஒருமுகத்துடன் புதிய சட்டபீடத்தை வரவேற்போம், வளம் சேர்ப்போம்.

# 20

## கல்வியாளர்களின் கடமை

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டம் பற்றிய உண்மையும், அதன் நியாயத்தன்மையும் பற்றிய திரிவுபடுத்தப்பட்ட கருத்துக்கள் - தென்னிலங்கையில் இனமுரண்பாடுகளைத் தீவிரம் பெறச்செய்யும் முக்கிய காரணிகளுள் ஒன்றாக அமைந்தன.

தமிழர் போராட்டத்தை - முழு இலங்கையையுமே தமிழர்களுடைய ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வரும் போராட்டமாகவும், தமிழர்கள் கோரும் அடிப்படை உரிமைகளை சிங்களவர்களுடைய உரிமைகளைப் பறிக்கும் சதியாகவும் - மாயைக்குள் சிங்கள மக்களைச் சிக்க வைப்பதில் பல சக்திகளும் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டன / இன்றும் ஈடுபட்டு வருகின்றன.

இத்தகைய பொய்ப் பிரசாரங்கள் தமிழர்கள் மீதான இன முரண்பாட்டையும், குரோதத்தையும் வளர்த்து விடுவதற்கான கருவிகளாகவும் பயன்படுத்தப்பட்டன.

இத்தகைய தமிழர் விரோதப் போக்கினை சிங்கள மக்களிடையே கருவுறச் செய்வதில் சிங்களப் புத்திஜீவிகளுக்கும் பெரும் பங்குண்டு.

உண்மை தெரிந்தும், யதார்த்தம் புரிந்தும் - குறுகிய அரசியல் இலாப நோக்கோடும், திட்டமிட்ட இனவாத நோக்கோடும் சிங்களப் புத்திஜீவிகள் கடந்த காலங்களில் மேற்கொண்ட பிரசாரங்களை தமிழர்கள் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்து

விடப்பட்ட வேளைகளில் தமிழினம் நேரடியாக அனுபவித்திருக்கிறது.

தவறான வரலாற்றுத் தவறுகளையும், அரசியல் திரிபுவாதங்களையும் - சிங்கள மாணவர்களிடம் எடுத்துச் சென்றதன் விளைவாகவும் -

தமிழர்கள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் ஏன் எழுந்தது என்பதையும், அப் போராட்டத்தின் நியாயத்தன்மையையும் சிங்கள மக்களிடம் திட்டமிட்டு மறைத்ததாலும் - தமிழர்கள் மீதான காழ்ப்புணர்வு அவர்களிடம் வளர்க்கப்பட்டதைப் பலரும் அறிவார்கள்.

இத்தகைய சூழலில், ஏலவே வேரூன்றியிருக்கும் இனவிரோத நச்சுக் கருத்துக்களை அகற்ற இனிமேலாவது தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் பற்றித் தெளிவான, உறுதியான விளக்கத்தை எடுத்துச்சொல்ல முன்வர வேண்டியதன் அவசியம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, வடக்கு - தெற்கு கல்வியாளர்கள் பங்கேற்ற மீள் நல்லிணக்கத்திற்கும் சமாதானத்திற்குமான கல்வி என்னும் தலைப்பிலான பயிற்சி முகாமில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளை, வளர்த்து வரும் நாகரீக முன்னேற்றத்தில் அறிவியல் ரீதியாகச் சிந்தித்து தீர்க்க முன்வர வேண்டும் என அங்கு கூடியிருந்த கல்வியாளர்களுக்கு, விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அழைப்பும் விடுத்தார்.

இந்த அழைப்பின் உள்ளடக்கமானது, நிரந்தர சமாதானத்துக்கான பலமான அத்திவாரமொன்று மக்களிடையேயிருந்தும் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

இந்த வகையில், இரு இனங்களுக்குமிடையிலான புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை, பரஸ்பரம் மதித்துக் கொள்வதற்கான அடிப்படைக் கடமை என்பவற்றை கல்வியாளர்கள் இனிமேலாவது மேற்கொள்ளவேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளே அரசியல் ரீதியாக எட்டப்படும் எந்தவொரு தீர்வையும் மிகச் சுலபமாக நடைமுறைக்குள்ளாக்க உதவும். நீண்ட அமைதிக்கும், சக வாழ்வுக்கும் அதுவே ஆரம்பப் படியாகவும் அமையும்.

# 21

# பயனுள்ள பங்கேற்பே தேவை!

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்கள் - தம்மை தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கக் கோரி - இன்று பேரணியொன்றை நடத்துகின்றனர்.

வேரோடியிருந்த மண்ணிலிருந்து கடந்த 15 வருடங்களாக அகற்றப்பட்ட நிலையில் தமது சொந்த நிலங்களில் வாழும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டவர்களாக அகதி முகாம்களிலும், வாடகை வீடுகளிலும் தமது வாழ்க்கையை நகர்த்தும் பரிதாப நிலைக்காளானவர்களாக இவர்கள் வாடுகின்றனர்.

ஏற்கனவே தமது நிலைகளை வெளியுலகிற்குக் கொண்டு சென்று நியாயம் தேட, வலி. வடக்கு மக்கள் மேற்கொண்ட முயற்சிகள் - கிணற்றில் போட்ட கல்லாக இருக்கும் நிலையில்,

இந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது தமது குரல் உரியவர்களை எட்டாதா என்ற ஆதங்கத்துடன் வலி. வடக்கு மக்கள் மீண்டுமொருமுறை இன்று போராடத் தலைப்பட்டுள்ளனர்.

வலி, வடக்கின் பொது அமைப்புக்களும், நிறுவனங்களும் ஒரு சேர, நியாயந்தருமாறு கோரும் இவ்வேளையில் - எமது அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இன்றைய மக்கள் போராட்டத்திலாவது ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குவார்களா? என்பது சந்தேகத்தின்பாற்பட்டதாக உள்ளது.

கடந்தமுறை வலி. வடக்கில், மிகப்பெருமெடுப்பில் பிரபல்யம் பெற்ற நேரடி விஜயத்தின்போது எமது அரசியல்வாதிகள் சிலர் - மேம்போக்கான வகையில் - வாதாடினோம் என்ற வரை யறைக்குள் நின்று கொண்டதும், அடிப்படையான புவியியற் தரவுகளையும் புள்ளி விபரங்களையும் திரட்டிக் கொள்ளாது நாமும் சென்று வந்தோம் என்ற மட்டில் நேரடி விஜயத்தில் நடந்து கொண்ட முறையும் - மக்களை அசூசைப்படுத்தியதை மறந்துவிட முடியாது.

ஏற்கனவே முன்பொருமுறை நமது நோக்கில் வலியுறுத்திய தைப் போல, வலி. வடக்கு மீளக்குடியமர்வைக் கொண்டு செலுத் துவதற்கான நிகழ்ச்சித் திட்டமோ, மீள் குடியமர்வை ஒருங்கி ணைப்பதற்கான அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய குழுவோ உருவாக்கப்படுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக் கைகள் இதுவரை எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

மக்கள் போராடினார்கள்: நாமும் பங்கேற்றோம்: ஏதோ பேசினோம்: இறுதியில் திரும்பினோம் - என்ற வெற்றுத்தனமான பங்களிப்பை எவரிடமிருந்தும் மக்கள் எதிர்பார்க்கவில்லை.

வலி. வடக்கு மக்களை மீளக் குடியமர்த்துவதில் உண்மை யான அக்கறையுடையவர்கள் - அம்மக்களின் குடியமர்வுக்குத் தேவையான முழுமையான புள்ளிவிபரங்கள், புவியியல் அறிவு, அம்மக்களின் பிரச்சினைகள், வேதனைகள் என்பவற்றைத் தீர அறிந்துகொண்டே - இன்றைய போராட்டத்தில் பங்காற்ற அருகதையுடையவர்களாக வேண்டும்.

மக்கள் மீளக்குடியமர்வதை மறுக்கும் படைத்தரப்பு தமது பாதுகாப்பினைக் காரணங்காட்டி ஒவ்வொரு நகர்வையும் மறுதலிக்கும்போது உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டுவதை விட, மக்களின் அவலங்களை ஆணித்தரமாக, மறுப்பு எழாத வகையில் உறுதியான ஆவணங்களுடன் வாதிடக் கூடியவர்களையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த வகையில் - இன்றைய போராட்டமானது, வலி. வடக்கு மக்களின் மீளக்குடியமர்வுக்கான முயற்சிகளை உந்திச் செல்லும் வகையில் அமைந்திட அனைவரது ஒத்துழைப்பும் கிடைக்கட்டும்.

அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், நாடோடிகளாக வாழும் வலி. வடக்கு மக்களுக்கு இனிமேலாவது ஒரு விடிவு கிடைக்க அனைவரும் அணி திரள்வோமாக.

# 22

# செயலணிக்கான எதிர்பார்ப்பு

போரால் பாதிக்கப்பட்ட வட கிழக்குப் பகுதிகளுக்கான புனர் வாழ்வு, மீள்குடியேற்றத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான கூட்டுச் செயலணி பற்றி தாய்லாந்தில் பேசப்பட்டுள்ளது.

இச்செயலணியின் இறுதிவடிவம் எவ்வாறமையும் என்ற ஆராய்வில் - இருதரப்பினரும் ஒருமித்த கருத்தினையும் எட்டி யுள்ளதாகத் தெரிகின்றது.

இனிவரும் காலத்தில் - வடக்கு, கிழக்கின் அபிவிருத்தியைச் செயற்படுத்தப்போகும் இச் செயலணிக் குழுவின் உருவாக் கமானது விரைவில் எதிர்பார்க்கப்படும் நிலையில், சமாதா னத்திற்கான நகர்வில் குறிப்பிடத்தக்க வெற்றியாக இது அமைய வுள்ளது.

இதுவரை காலமும் - போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக் கெனத் திட்டமிடப்பட்ட, பெறப்பட்ட நிதியினையும், உதவிக ளையும் - தமிழ் மக்கள் அனுபவித்திராத நிலையில் - விடுதலைப் புலிகள் பங்கேற்கும் கூட்டுச் செயலணியின் முக்கியத்துவமானது தமிழ்மக்களைப் பொறுத்தளவில் மிகப் பெரும் வரலாற்றுத் தேவையைத் தீர்க்குமெனவே எதிர்பார்க்கப்படுகின்றது.

போரின் வடுக்களைத் தனது ஒவ்வொரு அணுக்களிலும் தாங்கி நிற்கும் தமிழ் மண்ணும், மக்களும் - வேண்டி நிற்கும் பொருளாதார வளர்ச்சியையும், சுபீட்சத்தையும் பெற்றுத்தர கூட்டுச்செயலணி தீவிரமாக முனையவுள்ளது.

எமது தேவைகளை அறிந்த எம்மவர்கள் பங்கேற்கும் இக் குழுவானது வடக்கு, கிழக்கின் வளர்ச்சியைத் தனது நீண்டகால நோக்கிலும், மக்களது உடனடித் தேவைகளை காலகதியில் நிறைவேற்றும் வகையிலும் செயற்படும் என்ற நம்பிக்கையும்,

ஊழல், மோசடிகளற்ற, நிர்வாகக் குளறுபடிகள் தவிர்த்த நேர் மையான பணியை கூட்டுச் செயலணி செயற்படுத்தும் என்பது உறுதியானதாகும்.

அதேவேளை - சர்வதேச ரீதியில் இதுவரை காலமும் விடுத லைப்புலிகள் மீது சுமத்தப்பட்ட வந்த பயங்கரவாதிகள் என்ற அவதூறுப் பட்டத்தையும், அவர்கள் மீது கடந்த அரசாங் கங்களால் ஏற்படுத்தப்பட்டு வந்த பிரசார அழுத்தங்களையும் கூட்டுச் செயலணியானது நீக்கும் என்பதும் - அரசியல் முக்கியத் துவமுடையதாகும்.

விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை சர்வதேசத்திற்கு வலியுறுத்தவும், தமிழ் மக்களின் நல்வாழ் வுக்கான அவர்களது அர்ப்பணிப்பை அங்கீகரிப்பதாகவும் இந்த முயற்சி அமையவுள்ளது.

எதிர்வரவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு, விடு தலைப் புலிகளின் பிரசன்னமும் அவசியம் என்ற நிலைக்கு சர்வதேசமும் அரசாங்கமும் வந்திருப்பது - இந்த அங்கீகாரத்தின் உண்மைத் தன்மையைத் தெளிவாக்குகின்றது.

இது இவ்வாறிருக்க - கூட்டுச் செயலணியின் உருவாக்கத்தைக் குழப்ப முனையும் சக்திகளும் இல்லாமலில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், தெற்கிலும், கிழக்கிலுமுள்ள இன வாதச் சக்திகளும் கூட்டுச் செயலணியின் உருவாக்கம் பற்றியும், அதன் அரசியலமைப்பு வரையறைகள் பற்றியும், செயற்பாடுகள் பற்றியும் ஆராய்ந்து வருவதோடு - கூட்டுச் செயலணியைத் தடுப்பதற்கு தம்மாலான முயற்சிகளிலும் இறங்கத் தயாராகி வருகின்றன.

உண்மையில் கூட்டுச் செயலணியின் அபிவிருத்தி நோக்கானது போரின் நேரடிப் பாதிப்புக்குள்ளான வட, கிழக்கையும் கடந்து

வரட்சியாலும், அரசியல் காரணிகளாலும் தெற்கில் கவனிப்புக் குறைந்து கிடந்த அம்பாந்தோட்டை, மொனறாகலை மாவட் டங்களையும் - இன்னும் புத்தளம் மாவட்டத்தையும் கொண் டதாக, அவற்றையும் வளர்ச்சிப் போக்கினுள் கொண்டு வரக்கூ டியதான வகையில் அமைகையில் - அதனையும் குழப்ப நினைப் பவர்களை என்னவென்று சொல்வது?

இந்தவகையில் - கூட்டுச்செயலணியின் நோக்கமும் செயற் பாடும் நிரந்தர அமைதிக்கான அடித்தளமாக அமையுமென எதிர்பார்க்கப்படும் வேளையில், அதனை முடக்குவோமென வரிந்து கட்டுபவர்களைச் சமாதானத்தின் எதிரிகள் என்றே அப்பட்டமாகக் கூறலாம்.

# 23

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம்!

மூன்றாம்நிலைக் கல்வியின் முக்கியத்துவம் - தமிழர்களைப் பொறுத்தவரையில் காலங்காலமாக உணரப்பட்டுவந்தாலும் - நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளக் கூடியதாக, மூன்றாம் நிலைக் கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகக் கல்வியின் அவசியம் வலியுறுத்தப்படும் அதேயளவுக்கு அக்கல்வி யினூடாக புதிய உலகை அல்லது வெளியிலுள்ள சவால்களைச் சந்திக்கத் தேவைப்படும் வலுவை அக்கல்வியால் முழுமையாக உருவாக்கமுடியவில்லை. என்பது வெளிப்படையானது. இது யாழ். பல்கலைக்கழகத்திற்கும் பொருந்தும்.

இதற்குப் பல காரணங்களையும் ஆராயலாம். அரசாங்கத்தின் வழியாகத் தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்படாத வாய்ப்புக்கள், யுத்தத்தின் பாதிப்பு, வெளியுலகுடனான தொடர்புகள் காலத் துக்குக்காலம் துண்டிக்கப்பட்டமை முதலாக பல்கலைக்கழக அளவில், புதிய வழிச்செலுத்துகைகளை, திறனாற்றுகைகளை உள்வாங்கிக் கொள்ள நிலவிய தயக்கம் வரை நாம் இங்கு கருத் திற்கொள்ளமுடியும்.

ஆனால் - இன்று போர் ஓய்வுக்கு வந்த பின்னரும், அதே நிலை யில் எமது சமூகத்தின் உயர் இலக்குக் கொண்ட கல்வித்தரத்தை அப்படியே வைத்திருக்கவும் முடியாது.

உலகின் வளர்ச்சிக்கு ஒத்துச்செல்லும் வகையில், நவீன உலகை மனத்திண்மையுடன், திறனுடன் எதிர்கொள்ளக்கூடிய வகையில் - மாணவர்களை உருவாக்கக் கூடியதாக மூன்றாம் நிலைக் கல்வியின் தரத்தை உயர்த்தும் வழிமுறைகளை ஆராய்ந்து அவற்றைச் செயற்படுத்த அனைவரும் முன்வரவேண்டும்.

மரபுசார்ந்த, துறைசார் கற்கைநெறிகளின் எல்லைகளுக்குள் மாணவர்களின் அறிவாற்றலை, தேடலை மட்டுப்படுத்திக் கொள்ளாது கணினிசார் அறிவும், தலைமைத்துவப் பண்பும், தொடர்பாடற் திறனும், தொழில்சார் தேர்ச்சிக்கான பயிற்சியும் கொண்டவர்களாக மாணவர்களைத் தகவமைத்துக்கொள்வது இன்று அத்தியவசியமாகின்றது.

இன்று ஏற்பட்டு வருகின்ற சமாதானச் சூழலின் பகைப்பு லத்தைத் துணையாகக் கொண்டு - இந்தத் திறன்களை பல்க லைக்கழக மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் முயற் சிகளைச் செய்யவேண்டும்

அதேவேளை, உலகவங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களின், செயற்பாடுகளை, இலக்குகளை எமது சமூகத்திற்கேற்ற வகையில் வடிவமைத்து உள்வாங்குவதிலும் நாம் கவனமுடையவர்களாக வேண்டும்.

எமது மண்ணிற்குப் பொருத்தமற்ற, எமது கலாசாரத்திற்கு முரண்பாடான விடயங்களில், மிகவும் நிதானத்துடன் செயற் பட்டு எமது தனித்துவமும், வளஆளுமையும், பண்பாட்டுக் கலா சார விழுமியங்களும் பாதிக்கப்படாதவகையில் புதிய பார்வை களை, துணைபுரிதல்களை உள்ளீர்த்துக் கொள்வதில் நாம் ஆர்வமுடையவர்களாக மாறவேண்டும்.

மாற்றங்கள் எமது அடித்தளத்தை மாற்றிவிடாமல் - தரத் தையும், செழுமையையும் உயர்த்துபவையாக இருக்கும் பட்சத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்வதில் நாம் தயக்கம் காட்டத் தேவையில்லை என்றே கூறலாம்.

# 24

# வேண்டத்தகாத முயற்சி!

ஈழத்தமிழ் மக்களிடையே எவ்வித வேறுபாடுகளுமின்றி, அனைவரும் ஒன்றாய்த் திரண்டு நாம் சமூக மக்கள் என ஒன்றிணைந்து நிற்கும்போது, அநாவசியமான முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முனையும் நடவடிக்கைகள் பற்றி அனைவரும் மிகக் கவனமுடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டிய தேவையுள்ளது.

இந்த வகையில் - தமிழகத்தில் நடைமுறைக்கு வந்துள்ள மத மாற்றத் தடுப்புச் சட்டத்தை, இலங்கையிலும் கட்டங்கட்டமாகக் கொண்டு வருவதற்கு தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுவதான செய்தி நோக்கப்பட வேண்டியதாகின்றது.

தமிழகத்தில் மத அடிப்படைவாதம் செல்வாக்குச் செலுத்தும் நிலையிலும், அரசியல் ஆதாய நோக்கிலும் உருவாக்கப்படும் சட்டத்தை இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நிர்ப்பந்தமோ, தேவையோ எந்த வகையிலும் எழுந்திராதபோது, இவ்வாறான செய்தி மக்கள் மத்தியில் வீண் குழப்பங்களையும், மனஸ்தாபங்களையுமே தோற்றுவிக்கக் கூடியதாகும்.

இங்கு கடந்த காலங்களிலும் சரி, இன்றும் சரி மதமாற்றம் என்ற விடயம் பிரச்சினைக்குரிய விடயமாகவோ அல்லது அதனால் பிரச்சினைகள் ஏற்பட்டதான சம்பவங்களோ, தாக்கமோ

நிகழ்ந்திராதபோது - இவ்வறான சட்டத்தின் தேவை பற்றிச் சிந்திப்பதே அர்த்தமற்றது என்றே சொல்லலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் - அங்குள்ள அரசியற் களத்தில் - மதம் ஓர் வாக்கு வங்கியாக மாற்றப்பட்டுள்ள சூழலில், மதரீதியான அடிப்படைவாத உணர்வுகள் ஆக்கிர மித்துள்ள நிலையில், மதச்சார்பின்மை என்ற விடயமே கேள் விக்குறியாகியுள்ள கட்டத்தில் - முற்றுமுழுதான அரசியல் உள்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட மதமாற்றத் தடுப்புச் சட்டத்தை அங்குள்ள சிறுபான்மைச் சமூகங்களும், அரசியல் நீதியாளர்களும், அவதானிகளும் கடுமையாகக் கண்டித்து வரும் சூழலில்,

இலங்கையில் அவ்வாறான ஒரு சட்டத்தை அமுலாக்குவது என்ற பேச்சு எழ வேண்டியதன் அவசியம் என்னவென்பது தெரி யாமல் உள்ளது.

இலங்கையில் - இந்து மதத்தைச் சேர்ந்தோர் பலவந்தமாக மதம் மாற்றப்படக்கூடிய எத்தகைய அழுத்தங்களோ அல்லது புறநிலைகளோ இங்கு நிலவி வருவதாக எவரும் குற்றச்சாட் டுக்களையோ, விமர்சனங்களையோ இதுவரை எழுப்பியிராத நிலையில் - இத்தகைய செய்திகள் வீணான குழப்பங்களையும் விவாதங்களையுமே உருவாக்கும் அபாயம் நிறைந்தவையாகவே காணப்படுகின்றன.

நீண்ட காலமாகப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான, அவசியமான நடவடிக்கைகள், உதவிகள் என்பன செய்யப்பட வேண்டியனவாய் ஏராளமாகக் காத்திருக்கின்ற போது தமிழ் மக்களின் அரசியல் இலக்குகள் வென்றெடுக்கப் படுவதற்கான தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போது -

இவ்வாறு வீணான சிக்கல்களையும், விவாதங்களையும் தோற் றுவிப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்றாகும்.

எனவே - சமூகப் பொறுப்புணர்வுகளையும், மத நல்லிணக் கத்தையும் கவனத்திற் கொண்டு, பொருத்தமற்ற இத்தகைய செயல்களில் மிக்க நிதானத்தைக் கடைப்பிடிப்பதே உரியவர் களுக்கு அழகானதாகும்.

# 25

## வலைக்குள் சிக்கும் முயற்சி!

கடந்தகாலப் போர்ச்சூழலினால், அதல பாதாளத்துக்குச் சென்று கொண்டிருந்த பொருளாதாரத்தை, மீண்டும் நேர்ப்பாதைக்கு கொண்டுவரக்கூடியதான பெரு முயற்சிகளை மேற்கொண்டு வரும் ஐ.தே. முன்னணி அரசாங்கம் - போரினை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்ததன் மூலம் - மிகச் சாதகமான பொருளாதார ஆதாயத்தை ஈட்டத் தொடங்கியுள்ளது.

கொழும்பு முதற்கொண்டு தெற்கில் எந்தப் பகுதிகளிலும் நிலவிய தாக்குதல் அச்சங்கள் தவிர்ந்த நிலையில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெருமெடுப்பில் தமது முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, ஆண்டுதோறும் அதிகரித்து வந்த போர்ச்செலவு மட்டுப்படுத்தப்படும் சூழலும் உருவாகி வருகின்றது.

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்த உல்லாசப் பயணத்துறை, மீண்டும் பெருவளர்ச்சியைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள், புதிய அமைதிச் சூழலின் வழியே தோன்ற ஆரம்பித்துள்ளன.

பொருளாதார ரீதியாக போரின் நேரடிப் பாதிப்புக்களிலிருந்து இவ்விதம் அரசாங்கம் மீளத் தொடங்கினாலும் - போரின் நீடித்த, மறைமுகத் தாக்கங்கள், பொருளாதார நெருக்கடியை தற்போ

தைக்குத் தீர்த்துவிடாது என்பதை, இம்முறை வரவு செலவுத் திட்டம் எடுத்துக் கூறுவதாகவுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கான திஸ்ஸ தெய்வேந்திர ஆணைக் குழு சிபார்சு செய்த சம்பள உயர்வுகள் கருத்திலெடுக்கப்படா ததும், புதிய நியமனங்கள் எதுவும் தற்போதைக்குச் செய்யப்ப டாதென்ற அறிவிப்பும், ஓய்வூதியத் திட்டத்தில் - ஓய்வூதியம் பெறுபவரின் செலுத்துகைப் பணம் அதிகரிக்கப்பட்டிருப்பதும் இந்த நெருக்கடியை வெளிக்காட்டுவனவாகவே உள்ளன.

அதேவேளை, அரசாங்கம் தனக்கான பொருளாதார அழுத்தங் களிலிருந்து தப்பித்துக்கொள்ள தனியார் மயமாக்கத்தை துரிதப் படுத்த முனைந்து நிற்பதையும் இந்த வரவு செலவுத் திட்டம் வெளிப்படுத்துகின்றது.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதியமைப் புக்களின் விதிமுறைகளுக்கமைவாக அரசாங்கத் துறைகளில் ஆட்குறைப்பும், புதிய நியமனங்களை நிறுத்திக் கொள்ளுதலும், சம்பள உயர்வு மறுப்பும் செய்யப்படுவதை தனியார்மயமாதல் - உலகமயமாதல் கோணத்திலிருந்தும் சாதகமான முறையில் ஆராயமுடியும்.

அதேவேளை, கம்பனிகள் மீதான வரியானது முப்பத்தைந்து சதவீதத்திலிருந்து, முப்பது சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதும் தனியார்மயமாதலை ஊக்குவிக்கக் கூடியதாகும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு கொள்வதற்காக இவ்விதம் தனியார்மயமாதலை அரசாங்கம் ஊக்குவிப்பது உட னடித் தீர்வைத் தருவதாக, சாதகமான பொருளியற் சூழலை ஏற்படுத்துவதாக இருந்தாலும் -

உலகமயமாதலின் வேகத்தினுள் வேகமாக இலங்கை அள்ளு ண்டு போவதையே நாம் மறுபுறமாகக் காணமுடியும்.

இதன்வழியே நாட்டின் சுயத்திற்கும், தற்சார்புக்கும் பெரும் பாதிப்பு விளைவிக்கக் கூடியதான பொறிக்குள் நாடு நகர்ந்து கொண்டிருப்பது எவராலும் மறுக்க முடியாததாகும்.

தனியே நாட்டிற்கு மட்டுமன்றி, சமுதாயத்தினுள்ளும் பௌதீக, உளவியல் ரீதியான பாதிப்புக்களும் இதனால் ஏற்பட இடமுண் டாகும்.

தனித்தனித் தீவுகளாக மனிதர்கள் பிரிந்து கொள்வதும், பங்கு பற்றல் குறைவதும், பாதுகாப்பற்ற உணர்வு மேலோங்குவதும், இயந்திரமயமான வாழ்க்கையுமாக மனிதம் மரித்துப்போகும் சூழலும் - சமூக உறுப்பினர்களிடையே தோன்றும் அபாயத்தைப் புறக்கணிக்கவும் முடியாது.

பொருளாதார நெருக்கடிக்குள்ளிருந்து தப்புவதென நினைத்துக் கொண்டு உலகமயமாதல் வலைக்குள் சென்று விழும் போக் கிலேயே நாடு செல்கின்றதென்பதை மிக எச்சரிக்கையுணர்வுடன் நோக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

# 26

## சிறந்ததோர் ஆரம்பம்!

தமிழர் தாயகப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர் வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம் சார்ந்த பணிகளுக்கென நேரடி வெளிநாட்டு உதவிகளை ஏற்றுக் கொள்ளத்தக்கதான நிதியமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நிதியம் என அழைக்கப்படும் இந்த நிதியமே - இனிமேல் தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படவிருக்கும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கையாளும் அதிகாரத்தைக் கொண்டிருக்கப் போகின்றது.

இவ்வாறான நிதியமொன்று உருவாக்கப்படுவது தமிழர்களைப் பொறுத்தவரையில், பலவகையிலும் அத்தியாவசியமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.

போரினால் சின்னாபின்னப்படுத்தப்பட்டிருக்கும், பின்தள்ளப்பட்டிருக்கும் தமிழரின் பொருளாதாரத்தை மீளவும் - மிக நேர்த்தியாகவும், தொலைநோக்கு இலக்குடனும், எமது சுயம் சார்ந்ததாகவும் கட்டியெழுப்புவதற்கு, எமது அதிகாரத்தின் கீழ்வரும் நிதியம் - ஒரு தக்கவழித்துணையாகும்.

எமது மக்களுக்கான தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் தீர்த்துவைக்கவும் - தமிழ் மக்களுக்கான உறுதியான பொருளாதாரக் கட்டுமானமொன்றை நாமே உருவாக்கிக் கொள்ளவும் இனி வழியேற்படும்.

இதனூடாக தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள வளங்கள், நிபுணத்துவம், தொழிற்படை என்றவற்றின் உச்சப் பயன்பாட்டினையும் விருத்திசெய்யக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

இதேவேளை - கிளிநொச்சியில், இந்த நிதியத்தின் தலைமையகம் அமையவிருப்பதானதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது.

தமிழர் தாயகப் பகுதிகளுக்கான நிர்வாகக் கட்டமைப்புக்களின் உருவாக்கத்தில் - இத்தகையதொரு தலைமையகம் தாயகப் பகுதியிலேயே அமையவிருப்பது அதிலும் சர்வதேசத்தின் ஆதரவுடன் தலைமைப் பணிமனையொன்று உருவாவது தமிழ் மக்கள் தமக்கான நிர்வாகத்தை, தமிழ்மண்ணிலேயே உலக அங்கீகாரத்துடன் கருக்கொள்ளவைப்பதன் ஆரம்பமென்றும் கூறலாம்.

இது, பொருளியல் நோக்குக்கள் கடந்த அரசியல் இலக்குகளுக்கும் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியென்றே கொள்ள முடியும்.

அதேவேளை - வரலாற்றில் முதற்தடவையாக, வெளிநாடுகளின் நிதியுதவிகள் நேரடியாகவே இத்தகைய நிதியத்திற்குக் கிடைக்கவிருப்பதும் குறிப்பிட வேண்டியதாகின்றது.

வெளிநாட்டு உதவிகளை நேரடியாகப் பெறுவதன் மூலம் - விடுதலைப்புலிகளின் முக்கிய பங்கேற்புடனான நிதியத்தின் செயற்பாடானது - இதுவரைகாலமும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கென, தமிழர்களுக்கென உதவப்பட்ட நிதியுதவிகள் திசைமாற்றப்பட்டதைப் போன்ற நிலை உருவாவதைத் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

வட கிழக்கில் ஒருங்கிணைந்த அபிவிருத்திப் பணிகளைத் துரிதமாகவும், பெருமெடுப்பிலும் மேற்கொள்ள உதவுவதாக இருக்கும். அதேவேளை - விடுதலைப்புலிகளைச் சர்வதேச அளவில் அங்கீகரிப்பதுடன், விடுதலைப்புலிகளின் அரசியல் இலக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்ற செய்தியையும் சர்வதேசம் இதன் மூலம் வலியுறுத்திக் கூறும்.

இத்தகைய முக்கியத்துவம் மிக்க அபிவிருத்தி நிதியத்தின் உருவாக்கத்திற்கும், செயற்பாட்டுக்கும் பல நாடுகள் தமது முழுமையான ஆதரவையும் - பங்கேற்பையும் நேரடியாகத் தெரிவிக்கவும் ஆரம்பித்துவிட்டன.

இந்த வகையில் - வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நிதியத்தின் ஆரம்பம், சிறப்பான நம்பிக்கைதரும் அறிகுறிகளுடன் ஆரம்பித் திருக்கின்றது என்று துணிந்து கூறலாம் -

எனவே ஒட்டுமொத்தமாக, ஈழத்தமிழ்மக்களின் எதிர்கால அரசியல், பொருளாதார, சமூகவாழ்வில் - இந்த நிதியத்தின் தோற்றம், பெரும் திடத்தையும், புத்துணர்வையும் தருவதாக அமைந்திருப்பதை ஆணித்தரமாகச் சொல்லலாம்.

இது ஒரு ஆரம்பமாக - இனி எமக்கான காலம் கனியட்டும்; காத்திருப்போம்.

# 27

# கெடுபிடிகளும், சுரண்டலும்!

வடகிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரையில் பாரிய தொழில் முயற்சிகளில் ஒன்றாக விளங்குவது கடற்தொழில்.

இலட்சக்கணக்கானோர் தமது அன்றாட சீவனோபாயத்திற்கு தமிழர் பகுதியின் மிகப்பரந்த கடற்பகுதிவழியே கொட்டிக் கிடக்கும் வளத்திலேயே தங்கியுள்ள நிலையில், இந்த வளத்தில் தமக்கான உச்சப் பயன்பாட்டினைப் பெறமுடியாதவர்களாக அவர்கள் வாடிவருவதை எவருமே அறிவர்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக கடற்பகுதிகள், கடற்படையின் கண்காணிப்புக்கும், தாக்குதலுக்குமான பிரதேசமாகக் குறிவைக்கப்பட்டதால், கடற்தொழிலாளர்கள் பட்ட வேதனைகள் வார்த்தைகளில் அடங்காதவை.

கடலில் தொழிலுக்குச் செல்லும் அப்பாவி மீனவர்கள் - ஈவு இரக்கமின்றிக்கொல்லப்பட்டதும், அவர்களதுபடகுகள், தொழில் உபகரணங்கள் அடாத்தாகப் பறிக்கப்பட்டதும், ஏராளம் தொழிலாளர்கள் கடலில் வைத்தே காணாமற் போனதும், இன்னும் பலர் சித்திரவதை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டதும், கடற்படையின் கண்மூடித்தனமான நாளாந்தத் தாக்குதல்களால் குடியிருப்புக்கள் சிதைந்து கொலைவெறியாடப்பட்டதும் - எளிதில் மறந்துவிடக்கூடியவையல்ல.

இவை போதாதென்று, தமது அன்றாட வயிற்றுப்பாட்டுக்காகச் செல்லும் கடற்தொழிலாளர்களைச் சோதனை, பதிவுகள் என்ற பெயரில் கெடுபிடிக்குள்ளாக்கியதும், கடலிலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் என வளையமிட்டு, அவர்களுக்கான தொழிற் பரப்பைக் குறுக்கியதும் - கடலிலிருந்து கண்ணுக்கு எட்டிய தொலைவுகளுக்குள்ளேயே தொழிலாற்றலாம் என்ற கட்டுப்பாடு களும் - கடற்தொழிலாளர்களைத் தொடராக வதைத்தே வந்தன.

இந்நிலையில் - சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்ததும் - தமக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்றும், இனியாவது தமது வாழ்வில் சுபீட்சம் கிட்டும் என்றும் எதிர்பார்த்திருந்த கடற்தொழிலாளர்களுக்கு ஏமாற்றம் தருவதாகவே கடற்படை யின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படாமையும் தொடரும் கெடுபிடி களும் உள்ளன.

அதேவேளை - கிடைத்துள்ள ஓரளவு சாதகமான நிலையைப் பயன்படுத்தலாம் என எண்ணியிருந்தவர்களுக்கு மற்றுமொரு அச்சுறுத்தல் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது.

வடபகுதிக் கடலில் அத்துமீறி இலங்கையின் எல்லைகளுக்குள் மீன் பிடித்துவரும் இந்திய மீனவர்களின் செயற்பாடுகளே இப் புதிய அச்சுறுத்தலாக உருவாகியுள்ளது.

நீண்ட நாட்களாக நடைபெற்றுவரும் இந்தக் கடல்வளத் திருட்டுக்களில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் - எமது கடற் தொழிலாளர்களின் படகுகளையும், கடற்தொழில் உபகரணங் களையும் வேண்டுமென்றே சேதப்படுத்தியும் செல்கின்றனர்.

எமது கடற்தொழிலாளர்கள் - மிகக் குறைந்த வசதிவாய்ப் புக்களுடன், எமக்கேயான கடல் வளத்தை, அதாவது சமநிலை பாதிக்கப்படாதவண்ணம் நுகரும்போது.

பாரிய மீன்பிடிப் படகுகள் நவீன உபகரணங்களுடன் வந்து எமது கடல்வளத்தை அவர்கள் சுரண்டுவதைத் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

வடகடலில் ஆதிக்கம் செலுத்தும் கடற்படையினர் - இவ்வி டயத்தில் கண்டும் காணாமலும் இருக்கும் போக்கு, இத்திட்ட மிட்ட சுரண்டலுக்கு இவர்களும் துணைபோகின்றனர் என்ற சந்தேகத்தை கடற்தொழிலாளர்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

வடபிராந்திய கடற்படைத் தளபதி முதலாக, கடற்தொழில் அமைச்சு, பிரதமர் என அனைத்துத் தரப்பினரிடமும் பலமுறை முறையிட்டும் இதுபற்றித் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

எமது பொருளாதாரக் கட்டுமானத்தைச் சிதைக்கும் இத்தகைய நடவடிக்கைகளை - இன்னமும் அனுமதிப்பதன் அல்லது கவனத்திற்கொள்ளாதிருப்பதன் பின்னணி என்ன என்பதை உரிய தரப்பினர் தெளிவுபடுத்தவேண்டும்.

மேலும் - அமைதியின் பயன்களை, முற்றுமுழுதாக இல்லா விட்டாலும் - தமது சீவனோபாயத்திற்கான அளவிலாவது பயன்படுத்துவதற்குரிய உரிமையைக் கூட மறுப்பது ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறலன்றி வேறல்ல என்பதை அதிகாரத் தரப்பினர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

# 28

# ஆரோக்கியமான இளம் சமுதாயம் வேண்டும்!

இன்று எமது சமூக அமைப்பில் மிகக் கவனமெடுக்கப்பட வேண்டிய பலவீனமான தொகுதியினராக (weaker section) சிறுவர்கள் காணப்படுகின்றனர்.

நாளைய சமூகத்தைச் சிருஷ்டிக்கப்போகும் சிறுவர்கள் மீதான சமூகக்கவனிப்பும், வழிநடத்தலும் - மிகக் குறைந்திருப்பதன் வெளிப்பாடுகளை இன்று யாழ். குடாநாட்டில் பரவலாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்தவகையில் - கோப்பாய் பகுதி வீடொன்றில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட கோஷ்டியொன்றை மடக்கிப் பிடித்தபோது அக்குழுவிலிருந்த ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் தனது தந்தையுடன் அகப்பட்டுக்கொண்ட செய்தி மனதை அதிரவைப்பதாக அமைந்தது.

நல்வழி காட்டவேண்டிய தந்தையே, தனயனைத் திருட்டு வழிக்குப் பயன்படுத்திய இந்தக் கொடூரம், எமது சமூக அமைப்பு எவ்விதம் சீர்குலைவிற்குட்பட்டிருக்கின்றது என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இதை ஒரு சாதாரண நிகழ்ச்சியாகப் பார்த்துவிடமுடியாதப டிக்கு - இன்று எம் கண் முன்னாலேயே இன்னும் ஏராளமாக சிறுவர் மீதான அழுத்தங்கள், வன்கொடுமைகள், நெறிபிறழ் தல்கள் நடந்தேறி வருகின்றன.

யாழ். நகரப் பகுதிக்குள் - இரந்து கையேந்தும் சிறுவர்களை நாம் தினமும் பார்க்கின்றோம். சில சிறுவர்கள் - தமது பெற்றோராலேயே இவ்வாறு இரந்துவாழ்தலுக்கு உட்படுத்தப் படுவதை சமூகவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

குடாநாட்டில்பல்வேறுபகுதிகளிலுள்ளவாகனத்திருத்தகங்கள், வியாபாரநிலையங்கள், உணவுவிடுதிகள், நடமாடும் உணவு விற்பனை நிலையங்கள், விவசாய நிலங்கள் எனப் பல இடங் களிலும் இன்று சிறார்கள் வேலைக்கமர்த்தப்படுவது முன்னெப் போதுமில்லாத அளவில் அதிகரித்துள்ளது.

இவர்களில் பலர் - தமது பாடசாலைக் கல்வியை இடை நிறுத்திவிட்டு, தமது குடும்பத்தினரின் இசைவுடன், முழு நேரப் பணியாளர்களாக மாறியுள்ள கொடுமையை எவரும் கவனிப்பதாகத் தெரியாத நிலை அல்லது இதை ஒரு குற்றச் செயலாகப் பார்க்கும் மனோநிலை எவரிடமும் இல்லாமலும் போய்விட்டது வேதனைக்குரியது.

ஒரு காலத்தில் எத்தகைய சிரமங்கள் வரினும் கல்வியே பெரும் மூலதனம் எனப் பெருமைப்பட்ட யாழ். சமூகத்தில், கற்றலை இடைநிறுத்திவிட்டுத் தமது பிள்ளைகள் தொழில் செய்வதை ஊக்குவிக்கும் பெற்றோர்கள் உருவாகியிருப்பது கவனமெடுக்கப் பட வேண்டியதாகும்.

சிறார்கள் மீதுள்ள அழுத்தங்களில் மேலும் இரண்டு தலையாய விடயங்கள் - தனிப்பட்ட வகுப்புக்களும், தொலைக்காட்சி பார்த் தலுமாகும்.

தனிப்பட்ட வகுப்புக்கள் - பாடசாலை விட்டு வரும் சின்னஞ் சிறு மொட்டுக்களின் மீதான மிகப்பெரும் பாரச்சுமை மட்டுமல்ல, அவர்களது பொழுதுபோக்கு நேரத்தையும் கொன்றுவிடுவதாகும்.

இயற்கையை இரசிப்பது முதல் - கற்பனைக்கான நேரம் வகுத் தல், விளையாடித் தேக ஆரோக்கியம் பேணுதல் வரை - இன்றைய சிறார்களுக்கு அவை எட்டாக்கனியாகிவிடுகின்றன.

யாழ். குடாநாட்டிலுள்ள சிறுவர் பூங்காக்களில் மாலைநேரங் களில் எத்தனை சிறுவர்களைப் பார்க்கமுடிகிறது?

மாறாக - பாடசாலைச் சீருடை களைந்ததும் - அடுத்த பாடச் சுமையுடன் வீதிகளில் தள்ளாடி நடக்கும் சிறார்கள்தான் இன்று கண்களில் தென்படுகின்றனர்.

இந்த தொடர்ச்சியான கற்றல் - அச்சிறுபிள்ளைகளின் மீது கல்விசார்ந்த வெறுப்பையே உண்டுபண்ணிவிடும் என்ற அடிப் படை உளவியல் கூடப் பெற்றோர்களுக்குத் தெரியாதது வினோ தம்தான்.

இன்று பரவலாகிவரும் தொலைக்காட்சி பார்க்கும் பழக்கம் - அறிவுசார்ந்த அல்லது தகவல் தரும் அல்லது சூழலைப் பரிச்சயப்படுத்தும் நிகழ்ச்சிகளைத் தவிர்ந்த, வெறும் - உணர்ச் சிமயமான, வன்முறைசார்ந்த, பாலியல் இச்சைகளைத் துண் டக்கூடிய நிகழ்ச்சிகளால் நிரம்பியுள்ள நிலையானது சிறார் களின் உளவியலில் உண்டாக்கும் மனப்பதிவுகளைப் பற்றிப் பெற்றார்கள் சிந்திக்க மறப்பது ஏன்? இவை, சமூகப் பிறழ் வுகளையும், சமூக முரண்பாடுகளையும் தோற்றுவிப்பதற்குரிய வலுமிகுந்த பாதிப்புக்களென்பதை அவர்கள் கவனத்தில் கொள் ளாததன் தார்ப்பரியம் என்ன?

இன்றைய சமூகத்தின் வழிகாட்டல்களே நாளைய சமுதாயத் தைக் கட்டமைக்கும் என்ற உண்மையைப் பெற்றோர்களும் சமூகமும் உணர்ந்துகொண்டு தமது சிறார்களை நல்லமுறையில் வளர்க்கவும், வழிநடத்தவும் முன்வரவேண்டும்.

சமூகப் பொறுப்புணர்ந்தவர்கள் - இந்த விடயத்தில் கூடுதல் கவனமெடுத்து நமது இளஞ்சமுதாயத்தைக் காக்கவேண்டும். இது உடனடியாகச் செய்யப்படவேண்டியது மட்டுமல்ல, ஆழ்ந்த நோக்குடனும் மேற்கொள்ளப்படவேண்டும்.

# 29

# மீண்டும் மேட்டுக்குடிக் கல்விப் பாரம்பரியமா?

வடக்கு - கிழக்குப் பகுதியில் கல்வித்துறையானது மிகப் பெருமளவில் யுத்தத்தால் பாதிப்படைந்து காணப்படுகின்றது.

அடிப்படைக் கற்றலுக்கான வசதிகளின்றி, ஆசிரியர்களின்றி, தகுந்த கட்டடங்களின்றி, கற்றல் உபகரணங்களின்றி அல்லற் படும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் - இன்றும் எமது மண் ணில் தமது கற்றலைத் தொடர்ந்துவருகின்றனர்.

வன்னிப் பகுதியிலும், யாழ். குடாநாட்டின் வடமராட்சி கிழக்கு, தீவகம் மற்றும் கிராமப்புற பாடசாலைகளிலும் - இன்றும் மரநிழல்களில் தரையிலமர்ந்து கல்விகற்கின்ற பரிதாபநிலையில் மாணவர்கள் உள்ளனர்.

உலகமே கணினியைப் பற்றிப் பேசும்போது கணினியைத் தொட்டுக்கூடப் பார்த்திராத அவலச் சூழலில், வாய்ப்பற்றவர் களாக வாழ்ந்துவரும் சிறார்களும் எம் மண்ணில் உள்ளனர்.

இத்தகைய பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தமக்கான மிக அடிப்படையான கல்விவசதிகளைப் பெறுவதற்கே காலங் காலமாய்க் காத்திருக்கும் நிலையில் - பொருளாதாரப் பலம் படைத்தவர்களுக்கு மட்டுமே பயன்தரக் கூடியதான திட்ட மொன்று “சர்வதேச பாடசாலைகளாக” உள்நுழையப் போவ தான செய்திகள் வெளிவர ஆரம்பித்துள்ளன.

“சர்வதேசப் பாடசாலைகள்” ஆங்கிலக் கல்வியின் முன்னேற்றத்தில் மிகப் பெரும் பங்காற்றும் என்ற உண்மை ஒருபுறமிருக்க,

போரினால் சிதைந்துபோயுள்ள சமூகத்திலிருந்து எவரெவர் இத்தகைய பாடசாலைகளால் பயன்பெறப் போகின்றனர் என்ற கேள்வி மிகப் பலமாய் எழுகின்றது.

ஏனெனில், கொழும்பை மையமாக வைத்து எழுந்துள்ள சர்வதேசப் பாடசாலைகள் - மேட்டுக்குடி மக்களுக்கேயான பாடசாலைகளாகவே இன்று கருதப்படுகின்றன.

அங்கு - மாதந்தோறும் பல்லாயிரக்கணக்கில் ஊதியம் பெறுபவர்களின் பிள்ளைகள் மட்டுமே, அவற்றில் உள்நுழையும் அனுமதியைப் பெறுகின்றனர்.

இவ்வாறானதொரு “செல்வந்தப் பாடசாலைகள்” யாழ். மண்ணில் உருவாக்கப்படும்போது, யார் இவற்றில் அனுமதி பெறத் தகுதியுடையோர்? என ஆராயவேண்டிய அவசியமுள்ளது.

கண்முன்னாலேயே ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமக்கான அடிப்படைவசதிகளின்றி இலவசக் கல்வியொன்றினாலேயே தமது கற்றலைத் தொடரும் நிலையில் - மீண்டும் “மேட்டுக்குடிக் கல்விப் பாரம்பரியம்” ஒன்று உருவாக்கப்படுவதற்கான முயற்சியாக இது அமைந்துவிடுமோ என்ற சந்தேகம் மக்களிடையே எழுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலமும் பேசவல்ல, தொடர்பாடல் திறன் மிக்க, தலைமைத்துவப் பண்புமிக்க, தொழில்சார் தகைமையுள்ள மாணவர்களை உருவாக்கவேண்டிய தேவை இன்று எழுந்துள்ளதை யாரும் மறுக்கமுடியாது.

எமது மண்ணினையும் மக்களையும் முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்வதற்கு வலுமிகுந்த, கல்வியறிவுமிக்க இளம் சமுதாயம் ஒன்றின் அவசியத்தை எவரும் இல்லையென்று வாதிடவும் முடியாது.

ஆனால் - அத்தகையதொரு, சக்திமிகுந்த மாணவர்களை, சமூ கத்தின் மேட்டுக்குடியிலிருந்து மட்டும் பெற்றுவிடலாமென்று கருதினால், அது ஏராளம் ஏழை மாணவர்களின் எதிர் காலத்தையே பாழடித்துவிடக் கூடியதாக இருக்கும்.

கல்விச் சீர்திருத்தங்கள் மூலம், சமூகத்தில் சகலதரப்பினரையும் அபிவிருத்தி நோக்கிய பாதையில் அரவணைத்துச் செல்ல வேண்டிய நிலையில் - தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளியற் பலத்தின் மூலம் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்துகொள்ளலாம் என்ற குறுகிய நோக்கத்தை விட்டொழிக்கவேண்டும்.

எமது தேசத்தின் வளர்ச்சி நோக்கிய பாதை பரந்ததாக, சமத்துவமானதாக, மக்கள் அனைவருக்குமேயானதாக அமைய வேண்டுமேயன்றி வெளிநாட்டு உதவிகளின் பேரிலான, சர்வ தேச அமைப்புக்களின் நிபந்தனைகளின் வழியிலான "தேர்ந் தெடுக்கப்படுவோரின் வளர்ச்சியை" நோக்காகவோ, சமூக இடைவெளியை அதிகரித்துச் செல்வதாகவோ, சிந்தனா சக்தி யைத்தக்கவைத்திருக்கும் தாய்மொழிவழிக் கல்வியின் முக்கியத் துவத்தைக் குறைத்துவிடுவதாகவோ இருப்பது, மெய்யான அபிவிருத்தியைக் குறிக்காது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

# 30

# இவர்கள் திருந்துவார்களா?

*யாழ்ப்பாணம், 1995 ஆம் ஆண்டு இராணுவத்தின் கட்டுப் பாட்டினுள் வந்தபோது மிகப்பெரும் மனிதப் படுகொலைகளும், காணாமற்போன சம்பவங்களும் இந்தமண்ணில் நடந்தேறின.*

*சந்தேகத்தின் பேரில் கைதான நூற்றுக்கணக்கானோர் - அன்றிலிருந்து இன்றுவரை "காணமற்போனவர்களாக" ஆக்கப் பட்டனர்.*

*இவர்களுக்கு என்ன நடந்தது என்று தொடங்கிய விசாரணைகள் பாதியில் நின்றுகொண்டன. காணமற்போன தமது உறவுகள் உயிருடன் இருக்கிறார்களா என்ற தகவல்கூடத் தெரியாத அவலநிலையில் நூற்றுக்கணக்கான பெற்றோர்களும், சகோதரர்களும் இன்னும் கண்ணீரோடு வேதனைமிகுந்த வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.*

*செம்மணியிலும், இன்னும் பிற இடங்களிலும் - மண்ணுள் புதைக்கப்பட்ட மக்களது எலும்புக்கூடுகள் தோண்டியெடுக்கப் படும்போதெல்லாம் - அந்த நெஞ்சங்கள் படும்பாடு சொல்லி மாளாது. இது எமது உறவாய் இருந்துவிடக்கூடாது என்று, அவர்கள் காணும் வேதனை கரைகடந்து செல்கின்றது.*

*இத்தகைய கோரமான மனித அவலத்தை அரங்கேற்றிவிட்டு, மக்களின் இதயங்களை வெல்லும் யுத்தத்தை நடத்திய வேடிக்*

கையும் இந்த யாழ். மண்ணில்தான் நடைபெற்றது.

இந்த கொடுமைகளுக்கான சட்டபூர்வமான தீர்ப்பினை எதிர் பார்த்து எதிர்பார்த்து அவையெல்லாம் கானல் நீராகிவிடுமோ என்ற கட்டத்திற்கு வந்துவிட்டநிலையில் சர்வதேச மன்னிப்புச் சபை (அம்னெஸ்ரி இன்ரநெஷனல்) தனது அறிக்கையை வெளி யிட்டிருக்கின்றது.

யாழ். குடாநாட்டில் - 1995ஆம் ஆண்டு 600 பொதுமக்கள் காணாமற்போனமைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் - அன்று முக்கிய படைத் தளபதிகளாக இருந்த ரோஹான் தலு வத்தவும் ஜானக பெரோவுமே பொறுப்பு என சர்வதேச மன்னிப் புச்சபை குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

அன்று, யாழ். குடாநாடு இராணுவத்தின் முழுமையான கட்டுப் பாட்டினுள் இருந்தபோது, இத்தகைய மனிதவதைகளும் படுகொலைகளும் நடைபெற்றதை உயர் தளபதிகளாக இருந்தவர்கள் அறிந்திருக்காதிருக்கவும் முடியாது.

அதிலும் - இத்தகைய பெருந்தொகையானோர் காணமற்போன சம்பவங்கள் - ஜேர்மனியில் நடந்த நாஸிவதைகளுக்கொத்ததாக நடத்தப்பட்டதை நேரடியாகவே இந்த அதிகாரிகள் கையாண்டு மிருக்கக்கூடிய வாய்ப்புக்களுள்ளன.

ஏற்கனவே குறிப்பிட்ட இரண்டு படையதிகாரிகளும் தமிழர்கள் மீதான இனப்படுகொலை முயற்சிகளில் குற்றஞ்சாட் டப்பட்டவர்கள் என்ற ரீதியில் இவர்கள் மீதான சந்தேகம் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

இந்த அதிகாரிகளை வழிநடத்திய பாதுகாப்பு அமைச்சர், முப்படைகளினதும் பிரதம தளகர்த்தர் என்றவகையில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதான குற்றப்பொறுப்பும் சாமான்யமானதல்ல.

யாழ்ப்பாண வெற்றியைப் பாரம்பரிய அரசாட்சி முறையில் கொண்டாடிய ஜனாதிபதிக்கு, இந்த வெற்றிக்குப் பின்னான காலத்தில் நிகழ்ந்த அவலங்களும் அவற்றை நிகழ்த்துவதற்கு ஊக்கம் தரும் துணையாக இருந்த இராணுவத்தின் மீதான அவரது விசேட கவனிப்பும், கரிசனையும் - ஒதுக்கித் தள்ளிவிடக் கூடியதுமல்ல.

ஆனால் - மன்னிப்புச் சபையின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் எதனை விளைவிக்கக்கூடிய பலம் வாய்ந்தவை என்பதிலும், இத்தகைய குற்றச்சாட்டுக்களால் "பொறுப்புவாய்ந்த" இவர்கள் திருந்திவிடுவார்கள் என்றும் முடிவுகட்டிவிட முடியாது.

தனது அதிகாரப் பலத்தின் மூலம் எதனையும் செய்துவிடலாம் என்ற அழுங்குப் பிடிவாதத்துடன் இருக்கும் ஜனாதிபதியும், இராணுவத்தில் சேவையாற்றுவதுபோக, மிகப்பாதுகாப்பாக அரசின் ராஜதந்திரசேவையில் இணைந்துவிட்ட அந்த உயர் இராணுவ அதிகாரிகளும் இந்தக் குற்றச்சாட்டுக்களையிட்டுக் கவலைப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கமுடியாது.

மன்னிப்புச் சபையின் அறிக்கையானது சர்வதேசரீதியாக எந்தளவிற்குப் பாரதூரமானதாகக் கொள்ளப்படப்போகின்றது என்பதை வைத்தே, இக்குற்றச்சாட்டின் பெறுமதியைக் கண்டு கொள்ளலாம்.

# 31

# வன்னியை வளமாக்குவோம்!

வன்னியில் உயர்கல்வி நிலையங்களை, குறிப்பாக சர்வதேச தரம்வாய்ந்த தொழில்நுட்பக் கல்லூரியொன்றை அமைப்பதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான ஒரு முயற்சி வன்னிப்பகுதியின் நீண்டகால அபிவிருத்தித் திட்டமிடலுக்கான ஒரு பயனுள்ள நகர்வு என்பதோடு, அப்பகுதியிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கான பற்றாக்குறையை நீக்கும் முதற்கட்ட நடவடிக்கையாகவும் அமையப்பெறவுள்ளது.

வளமுள்ள வன்னிப்பகுதியில் - வனவளமும், கடற்தொழிலும், விவசாய வளங்களும் கொட்டிக்கிடக்கின்ற போதும் - கல்விசார்ந்த நிலையில், பெரும் வெற்றிடமொன்றே அங்கு நிலவிவருகின்றது.

கற்றலுக்கான அடிப்படை வசதிகள் முதலாக உயர்கல்வி வரையில் - அவசியமான தேவைகள் ஏராளமாயுள்ள நிலையில், வன்னியின் அபிவிருத்திக்கு, கல்விசார் விருத்தி நடவடிக்கை களில் முழுமையான கவனம் செலுத்தப்படவேண்டிய கட்டாயம் இன்று எழுந்துள்ளது.

முன்னைய காலங்களில் - வன்னியின் வளவிரிவாக்கம், கவனத்தில் கொள்ளப்படாதிருந்தபோதிலும் - விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றதன் பின்னர், குறிப்பாக யாழ்ப்

பாண இடப்பெயர்வின் பின்னர் வன்னிப் பகுதியின் தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது.

இராணுவத் தாக்குதல்களால் பெருமளவு குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றதோடு, விடுதலைப் புலிகளின் பிரதான மையமாகவும் வன்னி மாறியமையானது வன்னிக்கான விருத்திப் பணிகள் பற்றிய புதிய கண்ணோட்டத்தை ஏற்படுத்தி யிருந்தது என்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

இந்தவகையில் - விடுதலைப்புலிகளின் பிரதான மையமாக வன்னிப்பகுதி தோற்றம் பெற்றது வன்னியை வளமாக்குவதற் கான நீண்டகாலத் தொலைநோக்குத் திட்டங்களுக்கு உந்து விசையாக அமைந்தது என்றும் கூறலாம்.

இதன்படி கிடைத்துள்ள அரியவாய்ப்பினைக் கொண்டு, தமிழர் தாயகத்தின் பெருநிலப்பரப்பொன்றை சகலவழிகளிலும் முன்னேற்றுவதற்கான வழிவகைகளை முன்னெடுக்க இன்றைய காலம் வாய்ப்பானதாகும்.

வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்யவும், புனரமைக்கவும் திட்டமிடப்படும் திட்டங்களில், வன்னிப் பகுதிக்கு குறிப்பிடத்தக்க இடத்தை அளிப்பதன் மூலம் நீண்ட, நிரந்தரமான அபிவிருத்திப் பணிகளுக்குப் புதியதொரு பரிமாணத்தை ஏற்படுத்தமுடியும்.

பெரும் புவியியற் பரப்புடன் பரந்து, விரிந்துகிடக்கின்ற வன்னி எதிர்காலத்தை நோக்கிய, முழுமையான வளர்ச்சிக்கு, தகுந்த களமாக அமையுமென்ற யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் துரைராசாவின் கணிப்பீடுகள் துணை நிற்க, புதிய தொலைநோக்குத் திட்டங்களின் ஆரம்பம் இனி வேகங்கொள்ள வழி பிறக்கும் என்ற நம்பிக்கை வன்னிமக்கள் மனதில் உதயமாகியுள்ளது.

இந்த நீண்டகால ஆதங்கத்தைத் தீர்க்கும் முதற்படியாக தொழில்நுட்பக் கல்லூரிக்கான முயற்சி அமையவேண்டும்.

இதன்வழியே, யாழ் . பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடமும், விவசாய பீடமும் வன்னிக்கு நகருமானால், அவையும் பேராசிரியர் துரைராசாவின் கனவுகளை நனவாக்கும். அவை, வன்னிப்பகுதி மக்களின் வாழ்வில் - புதிய வளர்ச்சிப் பாதைகளையும் திறக்கும்.

# 32
## ஒஸ்லோ - புதியதொரு பதிவாக...

சர்வதேச அரங்கிலும் ஈழத்தமிழர்களாலும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நாளை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் ஆரம்பமாகின்றது.

கடந்த காலங்களில், இவ்வாறான உதவிவழங்கும் மாநாடுகள் நடைபெற்றபோது, அதனை ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கிய தன்மையிலிருந்து மிகவும் மாறுபட்டதாக - இம்முறை ஒஸ்லோ மாநாடு எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னர் நடந்த உதவிவழங்கும் நாடுகளின் கூட்டங்களில், சிங்கள அரசாங்கங்கள் - போரினை முன்வைத்தும், "பயங்கரவாதத்தை" ஒழிப்பதற்காகவும் நிதி திரட்டிய காலங்கள் சென்று - இம்முறை சமாதானத்துக்கான, போரினால் சிதைவுற்ற கட்டுமானங்களைச் சீர்படுத்துவதற்கான, மக்களது புனர்வாழ்வுக்கான உதவிகளை நாடும் நிலை உருவாகியுள்ளது.

அன்றைய மாநாடுகளில் கடுமையாக விமர்சிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் தரப்பினரே, தற்போது உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் முக்கிய தரப்பினராக மாறியதும்,

கடந்த அரசாங்கங்கள் யாரைப் பயங்கரவாதிகளெனச் சித்திரித்தனரோ, அவர்களது துணையுடனேயே நாட்டை இனி "மீட்டுக்" கொள்ளமுடியும் என அமைச்சர்களே பகிரங்கமாக

அறிவிக்குமளவிற்கு புதிய சூழ்நிலை உருவானதும், ஒஸ்லோ மாநாட்டில் காணும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இந்தவகையில் - சர்வதேச சமூகத்தின் போக்கும் ஈழத் தமிழர்களுக்குச் சாதகமான வகையில் உருவாகியிருக்கும் நிலையில் - ஒஸ்லோ மாநாட்டின் விளைவுகள் பற்றி பெரும் எதிர்பார்ப்புக்களும் நிலவிவருகின்றன.

இந்த சர்வதேச மாநாடானது அரசாங்கத்திற்கு எவ்வளவு தூரம் முக்கியமானதோ அதேவகையில் - தமிழர் தரப்பிலும் இந்த மாநாடு முக்கியத்துவம் மிக்கதாகின்றது.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கி ஸன் குறிப்பிடுவதுபோல, உதவிகளைத் திரட்டிக் கொள்வதிலும் பார்க்க, அரசியல் ரீதியில் ஒஸ்லோ மாநாட்டின் அவசியம் என்பது, தமிழர்களிடமும் மிக உணரப்பட்டதொன்றாகவே உள்ளது.

சமாதான முயற்சிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுவரும் விடுதலைப்புலிகள் - தமது அமைதியின்பாலான விசுவாசத்தை வெளிக்காட்ட இந்த மாநாடு உதவப் போகின்றது.

அதேவேளை, சர்வதேச அரங்கில் தமிழர்களின் ஏகபிரதி நிதிகளாக விடுதலைப்புலிகள் பங்கேற்பதன் மூலமாக அரசியல் ரீதியாக தமிழர்களுக்காகப் பேசும் அதிகாரத்தை விடுதலைப் புலிகள் கொண்டுள்ளார்கள் என்ற யதார்த்தம் உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உண்மைநிலையை உணர்ந்ததாகவே தெற்கிலிருந்து எழும் கருத்துக்கள் அமைந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் பங்கேற்புக்கு எதிராக பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் உரத்துக் கிளப்பும் எதிர்ப்புக் குரல்களின் வேகம் - இந்த உண்மையை, யதார்த்தத்தை சர்வ தேசம் ஏற்றுக்கொள்கின்றதே என்ற ஆதங்கத்தில் எழுவனவா கும். தமது அழுத்தங்களையும், கைகளையும் மீறிக் கொண்டு விடுதலைப்புலிகள் அங்கீகாரம் பெறுகின்றார்கள் என்ற

ஆற்றா மையின் வெளிப்பாட்டையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், லக்ஷ்மன் கதிர்காமரும், சரத் அமுனுகமவும், ரில்வின் சில்வாவும், விமல் வீரவன்சவும் தமது பேச்சுக்கள், அறிக்கைகள் மூலமாகத் தெரியப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, ஈழத்தமிழர் விவகாரத்தில் அண்மைக்காலத்தில் எவ்வித அசைவையும் வெளிக்காட்டாத இந்தியாவும், ராஜதந்திர மட்டத்திலான தனது ஆதரவை, ஒஸ்லோ மாநாட்டுக்குத் தெரி வித்திருப்பது குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் என்றே கொள்ள முடியும்.

ஒட்டுமொத்தத்தில் - வரலாறு முன்னெடுத்துச் செல்லும் இந்த விவகாரம் - இனிப் புதியதொரு பரிமாணத்தினூடாக வரலாற்றில் பதியப்படும் என்ற செய்தியையே ஒஸ்லோ மாநாடு எடுத்துக்காட்டியுள்ளதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

# 33

## பங்கேற்க வாருங்கள்!

மிகப்பெருமெடுப்பில் மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளை உடனடியாகவும், சீராகவும் முன்னெடுத்துச் செல்லவல்லதான நிர்வாகக் கட்டமைப்பொன்று இன்று அவசியமானதாகியுள்ளது.

ஒரே நேரத்தில் பல்வேறு துறைகள் சார்ந்த, பல அபிவிருத்தி வேலைகளைச் செயற்படுத்துவதற்கேற்ற வகையில் - குழப்பமில்லாத, அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்ட, பரவலாக்கப்பட்ட அமைப்பின் தேவையும் உணரப்பட்டுள்ளது.

அதேவேளை - செய்யப்படும் பணிகளின் பின்னூட்டலும், மதிப்பீடும் சமகாலத்திலேயே மேற்கொள்ளப்பட்டு அதற்கேற்றவாறு திட்டங்களில் மாற்றங்களையும், நேரியதன்மைகளையும் உருவாக்க வேண்டியுள்ளது.

குறுகியகால, நீண்டகால அடிப்படைகளிலான செயற்பாடுகள் வகைபிரிக்கப்பட்டு, இரண்டு நோக்குகளிலுமாக திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஆயத்தங்களும், தயார்படுத்தல்களும் பல்வேறு வழிகளிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் - இவற்றின் சமூகம் சார்ந்த பங்கேற்புப் பற்றியும் விரிவாக ஆராயப்பட வேண்டியதாகின்றது.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரையில் இதுவரை காலமும் மேற்கொள்ளப்படாத பாரிய வேலைத்திட்டங்கள் இனி இடம் பெறவிருக்கின்றன. புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் மக்களைச் சென்றடையவிருக்கின்றன.

இத்தகைய அபிவிருத்தியையும், மீள் கட்டுமானங்களையும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும், அவற்றில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்கேற்பதாகவும் சமூகத்தின் பணி அமையப் போகின்றது.

சமூகத்தின் ஒவ்வொரு கூறுகளுக்குமுள்ள பொறுப்புணர்வும், விலகிச்செல்லாத தன்மையும், அர்ப்பணிப்புடனான பங்கேற்பும் எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பிரதிப லிக்கப்பட்டாக வேண்டும்.

அபிவிருத்திப் பணிகளின் - குறுகிய, நெடுந்தூர இலக்குகள் என்ன?, அதன் சாரம்சம் என்ன? அதற்காகக் கொடுக்கப்படுகின்ற வழிமுறைகள் என்ன? பின்னூட்டலிலும், மதிப்பீட்டிலும் என்ன பங்கு வகிக்கப்போகின்றோம்? என்ற இன்னோரன்ன விடயங்களினூடாக, சமூகத்தின் கூறுகள் தங்கள் பங்கேற்பை நிகழ்த்திச் செல்லலாம்.

எத்தகைய திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தால் மிகப் பயனுடையதாக இருக்கும்?, தங்களுக்கானஉடனடித் தேவைகள் என்ன? போன்ற ஆலோசனைகளையும் அனுபவங்களையும் நிர்வாகக் கட்டமைப்பினருடன் பகிர்வதற்கு மக்கள் முன்வர வேண்டும்.

புத்திஜீவிகள், துறைசார்ந்த நிபுணர்கள், சமூக நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் உட்பட தனியாட்கள் வரை அபிவிருத்திப் பணிகளைத் தளர்வின்றியும், இலக்குநோக்கியும் கொண்டுசெல்ல நம்மாலியன்ற அனைத்தையும் செய்யும் கடமையை ஏற்க வேண்டும்.

சமூகத்தின் பூரணமான ஒத்துழைப்பும் ஒருமித்த ஆதரவும் இருந்தால் மட்டுமே கிடைக்கின்ற அரியவாய்ப்புக்களை நடை முறையில் செயலாக்கமுடியும்.

எனவே, எமது சமூகம் முழுவதுமே ஒன்றுபட்டு, ஒரேயணியில் நின்று எமக்கு நேர்ந்த பாதிப்புக்களிலிருந்து மீட்சியுறவும், தேவை களை நிறைவேற்றவும் ஏற்றதாக எம்மைத் தகவமைத்துக் கொள் வோம்.

# 34

## இரவும் ஒளிதரும் தேசத்திலிருந்து தளராத நம்பிக்கைக் கீற்றுக்கள்!

ஒஸ்லோ உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு எதிர்பார்த்ததைப் போலவே குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுடனும் சமாதானத்தின் மீதான உறுதிப்பாட்டையும் நம்பிக்கையையும் இன்னமும் வலுவாக்குவதாகவும் அமைந்துள்ளது.

ஒஸ்லோ மாநாடு இரண்டு வழிகளில் முக்கியமான இலக் குகளைச் சாதித்திருக்கின்றது. ஒன்று அரசாங்கத்துக்கும் புலிக ளுக்கும் இடையிலான உயர்மட்டத்திலான சந்திப்பொன்று இடம்பெற்றமை. மற்றையது அமைதிக்கானதும், அதன் வழியே அபிவிருத்திக்கானதுமான தமது அர்ப்பணிப்பை, அரசாங்கம் - விடுதலைப்புலிகள் ஆகிய இரண்டு தரப்பினருமே சர்வதேசத் திற்கு ஒன்றிணைந்து, ஒரேகுரலில் எடுத்துச் சொன்னமையாகும்.

முதலாவது விடயத்தைப் பொறுத்தவரையில் - நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமாதானமுயற்சிகள் ஆரம்பிக்கப் பட்டதன் பின்னர் நடைபெற்றுவந்த சந்திப்புக்களில் - இதன் முக்கியத் துவம் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகின்றது.

அமைதி முயற்சிகள் ஒரு கட்டத்திற்கு நகர்ந்தபின்னர் - அவற்றின் உறுதிப்பாடுகள் பற்றிய சந்தேகங்கள் களைந்த பின்னர், நடைபெற்றுள்ள இச்சந்திப்பு - இனிவரும் சமாதானப் பேச்சுக்களுக்கு புதியதொரு உத்வேகத்தையும், நம்பிக்கையையும் தருவதாக அமைந்திருக்கின்றது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான எதிர்கால உயர்மட்ட நேரடிப் பேச்சுக்களுக்கு பரிச்சயமான, நட்பார்ந்த சூழலொன்றைத் தோற்றுவிக்கவும் இச்சந்திப்பு துணை புரிவதாக அமைந்துள்ளது.

கடந்தகாலங்களில் நடைபெற்ற, குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சிப் பொறுப்பேற்றதும் நடைபெற்ற பேச்சுக்களோடு ஒப்பிடும்போது புதியதொரு பரிமாணத்தின் ஊடாக, தற்போதைய பேச்சுக்கள் நகர்வதை அவதானிக்க முடியும்.

அதாவது, பிரதிநிதிகளுக்கிடையிலான பேச்சுக்களும், முடிவு கள் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களில் ஏற்பட்ட தாம தங்களும் ஏற்படுத்திய சலிப்பையும், தோல்வியையும் தவிர்க்கும் வகையில் - தற்போதைய பேச்சுக்கள் அமைவதை முக்கியமாக நோக்கமுடியும்.

பிராந்தியரீதியாகவும், விவகாரங்கள் தொடர்பாகவும், உச்ச நிலைப் பேச்சுக்கள் வழியாகவும், பலமட்டங்களின் பங்களிப் புடனும் தொடரும் தற்போதைய பேச்சுக்கள் - பல வழிகளிலும் முன்னேற்றகரமான அம்சங்களைக் கொண்டிருப்பனவாகும்.

பிரச்சினைகளையும், விவாதங்களையும், முரண்பாடுகளையும் அந்தந்த மட்டங்களிலேயே தீர்த்துக்கொள்வதன் மூலம், அவை தீவிரம் பெறுவதையும், அதனால் சமாதான முயற்சிகள் பாதிப் படைவதையும் தடுக்கக்கூடியதாகவும் -

அனைத்துத் தரப்பினதும் பங்காற்றுதல் மூலம் பல்வேறு பரிமாணங்களிலுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்துக் கொள்ளக்கூடியதாகவும் - அமைதிக்கான பொறுப்பை சகலமட் டங்களிலும் வலியுறுத்தச் செய்யும் வகையிலும் - அமைகின்ற புதிய சமாதான முயற்சிகளில் - உச்சநிலைச் சந்திப்புக்கள் என்ற புதிய கட்டத்திற்கு நகர்வதற்கு தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட முதற்காலடி ஒஸ்லோவினூடாக அடுத்த படிகளுக்குச் செல்கின்றது என்றே கொள்ளமுடியும்.

ஒஸ்லோ மாநாட்டினூடாக வெளிப்படுத்தப்பட்ட இரண்டாவது இலக்கான சர்வதேசத்திற்கான அமைதிக்கான உரத்தகுரலும், ஒத்துழைப்பும் - போரினால் சிதைந்துபோன இலங்கைத் தீவின் புனரமைப்புக்கும், புத்தாக்கத்திற்கும் - உலகின் கவனத்தைச் சரிவரக் கவர்ந்து, வெற்றியைத் தந்திருக்கின்றது.

ஒஸ்லோ மாநாட்டில் பங்கேற்ற நாடுகளின் எண்ணிக்கையும், உயர்மட்ட ஆதரவும் - போரில் ஈடுபட்ட இரு தரப்பினரதும் கோரிக்கைகளுக்கு சர்வதேசம் அங்கீகாரத்துடன் செவிசாய்த்திருப் பதை எடுத்துக் காட்டுகின்றது.

இந்தவகையில் - ஒஸ்லோ மாநாடு, தனது இலக்குகளை எட்டிவிட்டதாகவே கருதமுடியும்.

ஒஸ்லோ மாநாட்டில் ஒலித்த பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினதும், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தினதும் உரைகளும், கருத்துக்களும் - சமாதானத்திற்கான அதியுயர் பங்கேற்பையும், அப்பழுக்கற்ற விசுவாசத்தையும் உலகின் எட்டுத் திக்குகளுக்கும் கொண்டுசென்றிருக்கின்றன என்றால் அது மிகையல்ல என்றே கூறலாம்.

# 35

## தேசத்தின் வரலாறான மாவீரர்கள்!

*இன்று மாவீரர் எழுச்சிநாள், தியாகத்தின் உச்சநிலையில், தங்களையே ஆகுதியாக்கி தாய்மண்ணின் விடிவுக்காகத் தம்மையே அர்ப்பணித்த வேங்கைகளின் நினைவுநாள்.*

*ஒடுக்குமுறைகளுக்கும், இன அழிவுக்கும் உள்ளாகியிருந்த தமிழினத்தின் உயிர்மையத்தைக் காப்பதற்காகவும் -*

*கண்மூடித்தனமான அரசபயங்கரவாதத்தின் கோரக்கரங்களைத் தகர்த்தழித்து, தம்மையே அரணாக்கியும் -*

*வெறிகொண்டு படைநடாத்தி, பூவும் பிஞ்சுகளுமாய் எமது இனம் சிதைக்கப்பட்டபோது அதனைத் தடுத்து எமக்கான படையாகியும் -*

*எமக்கென்றொரு மொழி, எமக்கென்றொரு மக்கள், எமக்கென்றொரு தேசமென உயர் இலட்சியங்களை வரித்துக் கொண்டு, தம் உயிர்களை அவற்றுக்காய் விலைகொடுத்தும் - வீரவரலாறு படைத்த மாவீரர்களின் தியாகமே, எமது தேசத்தின் ஒவ்வொரு அணுக்களிலும் வியாபித்துநிற்கின்றது.*

*தமிழினம் தனக்கான மண்ணில், தனக்கான உரிமைகளுடன் தலைநிமிர்ந்து வாழ்வதற்காக தம்மையோ, தமது வாழ்வையோ, தமது விருப்புவெறுப்புக்களையோ பொருட்படுத்தாது விடிவு ஒன்றுதான் எங்களின் இலக்கு எனத் தளராது துணிவுடன் களமா*

டியவர்களால்தான் - இந்த மண்ணும், மனிதர்களும் இன்றும் சுயகௌரவத்துடனும், எதனையும் எதிர்நோக்கும் உறுதியுடனும் வாழும் நிலை உண்டாகியிருக்கின்றது.

மாவீரர்கள் - தமது சாதாரண வாழ்க்கையைத் தவிர்த்து, தமது வாழ்வின் முழுப்பரிமாணங்களையும், “விடுதலை” என்ற உயிர் மூச்சுடன் கலந்துகொண்டே வாழ்ந்தனர்.

உயரிய இலட்சியத்திற்காக தமக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்ந்ததால் - இவர்கள் மக்களின் பிள்ளைகளாயினர்.

இந்த வேதங்களின் வழியில்தான், எமது இனத்தின் வரலாறு என்றும் சொல்லப்படும். தமிழினத்தின் உணர்வுகள், மாவீரர்களின் காவியங்களால்தான் உலகெங்கும் எடுத்துச் செல்லப்படும்.

எங்களுக்காக மரணித்தவர்களின் எண்ணங்களே, எமது மண்ணின் இதயத்துடிப்பாய் எங்கும் ஒலிக்கும்.

நான் என்ற வரையறை கடந்து நாங்கள் என்ற பரப்புக்குள் எம்மை இட்டுச்சென்ற இத்தெய்வங்களின் வரலாறு எங்களைப் புனிதப்படுத்தட்டும்

இந்தத் தேசத்தின் விலைமதிக்கமுடியாத அரும் பொக்கிஷங்களாக, எமது மண்ணில் துயில் கொள்ளும் இம்மாவீரர்களின் தியாகத்தை, இன்று நாம் ஒவ்வொருவரும் மீட்டுக்கொள்வோம்.

விதைகுழியில் வித்தாகிக் கிடக்கின்ற எங்கள் சகோதர, சகோதரிகளின் உள்ளங்களை எமக்குள் உள்வாங்குவோம். தனிமனித சரித்திரங்களாய் சாதனை படைத்திட்ட எங்கள் அருந்தெய்வங்களின் வாழ்க்கை எங்களுக்குப் பாடமாகட்டும்.

ஒருமனதாய் - சிரந்தாழ்த்தி, எங்கள் இதயங்களிலிருந்து வெளிவரும் உணர்வார்ந்த அகவணக்கங்களை எங்களின் காவல் தெய்வங்களுக்குச் சமர்ப்பணமாக்குவோம். எமது பாதை இதுதானென உறுதிகொண்டு, எம் மாவீரர்களின் கனவுகளை நனவாக்க இன்று உறுதிபூணுவோம்.

# 36

# தெளிவான இலக்கு!

மாவீரர் தினத்தையொட்டி, தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய உரையானது தமிழ்மக்களது அரசியல் இலக்குப் பற்றிய தெளிவான கொள்கைப் பிரகடனமாக அமைந்துள்ளது.

தமிழ்மக்கள் வேண்டும் ஆட்சியதிகாரமானது, எமது தாயக நிலத்தில் எமது மக்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் கூடியதாக இருக்கவேண்டுமென்றும் தலைவர் பிரபாகரன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தனித்துவமான ஒரு மொழி, பண்பாடு, வரலாறு, நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு தாயக நிலம், இன அடையாள உணர்வு போன்ற பண்புகளின் அடிப்படையில் - தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக, ஒரு மக்கள் சமூகமாக அமைந்துள்ளதால் - தமது தாயக மண்ணில், தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி உரிமைகளோடு வாழவிரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாஷையாகும் எனத் தலைவர் கூறியுள்ளமையானது,

அரசியல் தீர்வைநோக்கிய இனிவரும் முயற்சிகள் எத்தகையனவாக இருக்கவேண்டுமென்பதற்கு தமிழர் தரப்பிலிருந்தான தகுந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது.

தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய தீர்வு எத்தகையதாயிருக்கும் என அரசாங்கத் தரப்பும், சர்வதேசமும் மிகவும் எதிர்பார்த்திருந்த

நிலையில் - தலைவர் பிரபாகரனின் இந்த அறிவிப்பு தமிழர் தரப்பினரின் எதிர்பார்ப்பை உலகின் முன்வைத்துள்ளது.

தமிழ்மக்களின் அரசியல் தகைமையையும், சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வையும் நிர்ணயிப்பது தமிழ்மக்களின் அடிப் படை அரசியல் உரிமையாகும் என்றவகையில், சுயநிர்ணய உரிமையின் சாரம்சத்தையும் தலைவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

இந்த சுயநிர்ணய உரிமையானது ஐ.நா. சாசனத்திலும் பிரகட னங்களிலும் குறிப்பிடப்படும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை மையப்பொருளாகக் கொண்டதே என அவர் குறிப்பிடு வதானது -

தமிழ் மக்களின் அரசியல் உரிமையானது உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட ஒன்றே என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

சர்வதேசம் அங்கீகரித்த, பிரேரித்த தீர்வொன்றையே தமிழினம் நாடிநிற்கின்றது எனத் தலைவர் தெரிவித்திருப் பதானது சர்வதேசமயப்படுத்தப்பட்டிருக்கும் எமது பிரச்சினையின் பரிமாணங்களையும், அதற்கான தீர்வினையும் யதார்த்தபூர்வமான தென எடுத்துக்காட்டியுள்ளது.

திம்பு முதல் தாய்லாந்து வரை தமிழர் விடுதலைப் போராட் டத்தில், பல்வேறு கட்டங்களிலும் முன்வைக்கப்பட்ட தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை என்ற மாறாத மூலக்கோட்பாடுகளின் அடிப்படையிலேயே, இன்று விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்படும் தீர்வுக்கான யோசனையும் அமைந்திருப்பது, விடுதலைப் புலிகள் கொண்டுள்ள கொள்கைப் பற்றிலிருந்தும், அக்கொள்கை களுக்காகத் தமது இன்னுயிர்களைத் தந்த மாவீரர்களின் தியாகங்களின் பெறுமதியிலிருந்தும் - விடுதலைப் புலிகள் தளரவில்லை என்பதை வெள்ளிடைமலையெனக் காட்டிநிற்கின்றது.

அதேவேளை போருக்கு ஓய்வுகொடுத்து, சமாதான வழியில் சமரசப் பேச்சுக்கள் வாயிலாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக்

கொள்ளும் வழியிருந்தால் - அதனையே விடுதலைப் புலிகள் விரும்புவார்கள் என்ற தலைவர் பிரபாகரனின் அறிவிப்பும் -

ஆயுத வன்முறையில் ஆசை கொண்டு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. இன அழிவை இலக்காகக் கொண்ட இன வாத ஒடுக்குமுறையின் உச்சத்தில், அந்நிய இராணுவ அடக்கு முறை சகிக்கமுடியாத அளவிற்கு தீவிரமடைந்த கட்டத்திலேயே ஆயுதமேந்தவேண்டி வந்தது என்ற வரலாற்று உண்மையையும் அவர் அழுத்திச் சொல்லியிருப்பது -

விடுதலைப் போராட்டத்தை, வன்முறைசார்ந்த பயங்கரவாத மாகப் பார்க்கும் கருத்தியல்களுக்குத் தகுந்த பதிலைக் கொடுத் துள்ளது.

பலமிக்க நிலையில் - போராட்ட வல்லமையை நிரூபித்துக் காட்டி, சாதகமான இராணுவச் சமநிலையில் நின்றபடியே சமாதானக் கதவுகளைத் திறந்தோம் என்று கூறும் தலைவர் பிரபாகரனின் வார்த்தைகள் - தமிழினம், தளராதபலத்துடன் - பேரம் பேசக்கூடிய உயர்தளத்தில் நின்றுகொண்டிருப்பதையும், அதனூடே தன்னம்பிக்கையும், எதனையும் எதிர்கொள்ளக்கூடிய துணிச்சலும் மிளிருவதன் முலம் மிகப்பெரும் மனோதிடமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வகையில் தலைவரின் மாவீரர் தின உரையானது பலதரப் பினதும் சந்தேகங்களை நீக்கியதோடு, தமிழர்களின் மிகத் தெளிவான அரசியல் இலக்கையும், அவர்கள் எதிர்பார்க்கும் ஆட்சியதிகாரத்தையும் உறுதியாக வெளிக்காட்டியிருப்பது நிரந் தர சமாதானத்திற்கான நகர்வுகளை, சிக்கலின்றி சுமூகமாக முன் னெடுத்துச் செல்ல வலுவூட்டுவதாக அமைந்திருப்பதைத் தயக்க மின்றிச் சொல்லலாம்.

# 37

## தேவை விழிப்புணர்வு!

எமது மண்ணின் வரலாற்றுத் தொன்மையை, எமது மக்களின் பாரம்பரியத்தை வெளிக்காட்டும் சின்னங்களாக, பொக்கிஷங் களாகத் திகழும் அரும்பொருட்களை தமிழர் தாயகப் பகுதியிலிருந்து எடுத்துச்செல்வதற்கு விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் தடைவிதித்திருப்பது காலத்தின் தேவைகருதிய ஒன்றாகும்.

எமது இனத்தின் பண்பாட்டினையும் மரபையும் - எதிர்காலச் சந்ததிக்குக் கொண்டுசெல்லும் அரும்பொருட்கள் எமது இனம் வேரோடி வாழ்ந்துவரும் வரலாற்றையும், அதன் பெறுமதியையும் எடுத்துச் சொல்லும் காலத்தின் வெகுமதி என்றே கூறலாம்.

எமது இனம், எமது தாயகம், எமது மொழி, எமது பண்பாடு என நாம் கட்டிக்காக்கவேண்டிய எம் மூலதனங்களின் குறியீடாகவும் அரும்பொருட்கள் விளங்குகின்றன.

இத்தகைய அரும்பொருட்களை இழப்பதென்பது எமது அடிப்படையையே இழந்துவிடுவதற்கு ஒப்பானதாகும்.

அண்மைக்காலங்களில் - இந்தப் பொக்கிஷங்களின் மதிப்பும், கௌரவமும் உணரப்படாதவகையில், விற்பனை என்றும், கடத்தல் என்றும் - எம் மண்ணிலிருந்து அரும்பொருட்கள் பல வெளியே எடுத்துச் செல்லப்பட்டுவருகின்றன.

கலை, பண்பாட்டுக் கழகம் அறிவித்திருப்பதுபோல - இந்த அரும்பொருட்களை இழப்பதென்பது எமது அடையாளத்தையும், அதை வேண்டிநிற்கும் எமது போராட்டத்தையும் வலுவிழக்கச் செய்யும் என்பதிலிருந்து - இவை எமது மண்ணிலிருந்து எடுத்துச் செல்லப்படுவதன் தாக்கம் தெளிவாகப் புலனாகும்.

அறிந்தோ, அறியாமலோ இத்தகைய செயல்கள் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றிக் கவலைப்படாது எம்மவர்கள் சிலர் இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் துணைபோயினர்.

ஆனாலும், இத்தகைய செயல்கள் தகுந்த காலத்தில் இனங்காணப்பட்டு, அவற்றைத் தடுப்பதற்கு ஏற்ற வழிமுறை களும் அறிவிப்புக்களும் விடுக்கப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக் குரியதே.

உண்மையில் - அரும்பொருட்களை வெளியே கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையானது - இன்னொரு வகையிலும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் போதுமானதாகும்.

இதுவரை காலமும் எமது கண்முன்னே காணப்படுகின்ற அல்லது வெளித்தெரியாமல் மறைந்துகிடக்கின்ற அரும்பொ ருட்களைப் பாதுகாத்துப் பேணவேண்டிய செயலூக்கத்தை இத்தடை தந்திருக்கின்றது எனச் சொல்லலாம்.

உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளில் நவீனத்துவமும் உலகமயமாதலின் செல்வாக்கும் உள்நுழைந்துவிட்ட போதிலும் கூட, அந்நாடுகள் தமது பாரம்பரியச் சின்னங்களை, அரும் பொருட்களை, தமது பண்பாட்டின் தளத்தைப் பாதுகாப்பதில் செலுத்தும் அக்கறையை நாமும் உள்வாங்கிக் கொண்டு எமது தாயகத்திலும் இவ்வாறானதொரு மறுமலர்ச்சியை உண்டாக்க இனித் தீர்மானமும், திடசங்கற்பமும் கொள்ளவேண்டும்.

இது தொடர்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகளை உறுதிப்படுத்த, சமூகத்தின் சகல தளங்களிலும் இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அனைவரும் ஒருசேர இயங்கவேண்டும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், சமூக சமய நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், தன்னார்வ அமைப்புக்கள் எனச் சகலரும் இவ்விடயத்தில் உரத்த சிந்தனையை மேற்கொண்டு எமது அடையாளத்தைப் பேண உறுதிகொள்வோம்.

# 38

# நீண்ட தூரமாயினும் நிதானத்துடன் செல்வோம்!

ஓஸ்லோவில் நடைபெற்று வரும் மூன்றாம் கட்டப் பேச்சுக் களில் - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட, கிழக்குப் பகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளின் முன்னெடுப்புப் பற்றியும், போர் நிறுத்தத்தை இன்னமும் செம்மையாக்குதல் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை மீளக்குடியமர்த்துதல் போன்ற விடயங்களோடு - இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினை நோக்கியதான ஆராய்வுகளின் பணியும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அரசியல் தீர்வுக்கான ஆய்வுகளும், கலந்துரையாடல்களும் - தற்போதைக்கு ஆரம்பிக்கப்பட மாட்டாதென இருந்த நிலையில் - இந்த ஆராய்வும், பரிசீலனையும் எதிர்பார்க்கப்படாததொன்றாக உள்ளது ஒருபுறமிருக்க

அரசியல் தீர்வை நோக்கிய ஆய்வுகளின் அல்லது பரிசீலனை களின் அடிப்படை பற்றிய உறுதியும் தெளிவும் முக்கியமானதா கின்றது.

இந்த வகையில் - விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து வெளி யாகியுள்ள கருத்துக்கள், எதிர்பார்க்கப்படும் தீர்வுக்கான அடிப்ப டைத்தளமொன்றை மிக உறுதியானதாகவும், தெளிவானதாகவும் முன்வைத்திருக்கின்றன.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையிலிருந்து - இந்த அடித்தளம், உலகின் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே - அரசியல் தீர்வுக்கான பரிசீலிப்புக்களின் விடயத்தில், விடுதலைப் புலிகளின் தரப்பு மிகத் தெளிவாகவும், அர்த்தமுடை யதாகவும் தமது நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளதென்றெ கூறலாம்.

ஒஸ்லோவில் - கனடா நாட்டின் சமஷ்டி பற்றிய அரசியலமைப்பை ஆராய்வுக்குட்படுத்திய பின்னர் கருத்து வெளியிட்ட- விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும், அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - கூறியது இதனை வெளிக்காட்டப் போதுமானதாகும்.

தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் - குறிப்பிட்ட சுயநிர்ணய அடிப்படையிலேயே, அரசியல் தீர்வுக்கான இறுதி வடிவம் அமைய முடியுமென வலியுறுத்தியுள்ளார்.

கனடா தவிர ஏனைய எந்த நாடுகளினதும் சமஷ்டி, சுயநிர்ணயம், சுயாட்சி பற்றிய மாதிரிகளைப் பரிசீலனைகளுக்குட்படுத்தும்போதும்,

அதனை எமக்கேற்றதாக உள்வாங்குவதற்கு, மிகச் சிறந்ததோர் எதிர்பார்ப்புநிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவே தலைவரின் மாவீரர் தின உரை அமைந்திருக்கின்றது.

இந்த இலக்கினை நோக்கி மிகவும் ஆழமான, தீவிரமான ஆய்வுப்பணிகள் தேவையாகவுள்ளன.

எமக்கான தகுந்ததோர், நீதியான, நிரந்தரமான தீர்வொன் றினை நோக்கி நகர்வதற்கு நீண்ட ஆலோசனைகளும், கலந்துரையாடல்களும் மிக அவசியமானவை.

இதற்கான பாதை வெகு சுலபமானதாகவோ, விவாதங்களற்ற தாகவோ, முரண்பாடுகளற்றதாகவோ அமைந்துவிடப் போவதுமில்லை.

எனவே - விடுதலைப்புலிகளின் தலைவர் தமது உரையில் குறிப்பிடுவதுபோல,

எவ்வித நிபந்தனைகளும், நிர்ப்பந்தங்களும் இன்றி வரம்புகள் வரையறைகளின்றி, காலக்கட்டாயமின்றி சுதந்திரமாகப் பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டுமென்றும்,

அவசரமின்றி, நிதானமாகத் தமிழ் மக்களின் அரசியற் தகைமைகளையும் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வையும் நிர்ணயிப்பதான அரசியல் உரிமையை நோக்கிச் செல்வதுமே சாலச் சிறந்ததாக அமையும்.

அவ்வாறானதொரு நிலைப்பாட்டையே சர்வதேசத்திடம் இருந்தும், அரசாங்கத் தரப்பிடமிருந்தும் தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# 39

## தடுப்பதற்குத் தயாராவோம்!

யாழ். குடாநாட்டில், மழைக்காலத்திற்கேயுரிய தொற்று நோய்களின் பாதிப்பு, அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தலைகாட்ட ஆரம்பித்துள்ளது.

வாந்திபேதியும், நெருப்புக்காய்ச்சலும், வயிற்றோட்டமுமாக மக்களைப் பாதிக்கச் செய்யும் இந்தத் தொற்றுநோய்கள் - தீவிரம் பெறமுன்னர், ஏற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், எதிர்கொள்ளற் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவேண்டிய தேவை அவசியமாகவுள்ளது.

தொற்றுநோய்கள் பற்றிய எச்சரிக்கைகளையும், ஆலோசனைகளையும் - சுகாதாரப் பிரிவினர் வெளியிட்டுவருகின்ற போதும், மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

மக்கள் தமது சூழலையும், பொது இடங்களையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்வதன் மூலமும் - தம்மைத் தாமே தொற்றுநோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கேற்ற வழிமுறைகளையும் கைக்கொண்டு வந்தாலுமே மிகப் பெரும் நிர்ப்பீடணத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம்.

மழைக்காலங்களில் நீர் தேங்கக்கூடிய இடங்களை இனங்கண்டு, அவற்றைச் சீர்படுத்துவதாலும், குடிநீர் பெறும் கிணறுகளுக்கு "குளோரின்" இடுவதாலும், குப்பை கூழங்களை எரித்தோ புதைத்தோ - சூழலைச் சுத்தமாக்குவதாலும், வீட்டைச் சுற்றியுள்ள பற்றைகள், தேவையற்ற தாவரங்களை அழித்துவிடுவதாலும் - இலகுவான வழிமுறைகள் மூலம் முதற்கட்டப் பாதுகாப்பைத் தேடிக்கொள்ளமுடியும்.

அதேவேளை, சுகாதாரமான பழக்கவழக்கங்களைப் பேணிக் கொள்வதன் மூலமும் நோய்த்தடுப்பை வலுப்படுத்த முடியும்.

இவ்வகையில் - கொதித்தாறிய நீரைப் பருகுதல், தொற்று நீக்கிகளைப் பயன்படுத்துதல், திறந்தவெளிகளில் மலசலம் கழிப்பதைத் தவிர்த்தல் என அடிப்படையான சுகாதார முறைகளைப் பின்பற்றுதல் அனைவருக்கும் இலகுவானதே.

இதேவேளை, நோய்த்தொற்று எனச் சந்தேகிக்குமிடத்தும் அல்லது நோய்ப்பாதிப்பு என உறுதிப்படுத்தப்படுமிடத்தும் வீணான தாமதங்களையும், கைமருந்துப் பாவனையையும் தவிர்த்து, தகுந்த மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொள்வது இரண்டாம் கட்டப் பாதுகாப்பாகும்.

உடனடியாகவே, வைத்தியரின் ஆலோசனையையும், அறிவுரை களையும் ஏற்றுச் செயற்படுவதன் மூலமே மற்றவர்களுக்கு நோய் பரவுவதைத் தடுப்பதுடன், வேகமாக நோய்த்தாக்கத் திலிருந்து விடுபடவும் முடியும் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மக்களுக்கான பாதுகாப்பு வழிகள் இவ்வாறிருக்கும்போது, ஏனைய துறையினரும் தொற்றுநோய்ப் பாதுகாப்புக்குத் தகுந்த ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டிய கடப்பாடுடையவர்களாக உள்ளனர்.

பொது இடங்களைச் சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் பேண அந்தந்தப் பகுதிகளுக்குரிய அரச அதிகாரத் தரப்பினரும், சுகாதாரப் பிரிவினரும் பொறுப்புணர்வுடன் செயலாற்றவேண்டும்.

உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் வைத்திருப்போர் உயர்ந்தபட்ச சுத்தத்தைப் பேணத்தவறின், அவர்கள் சமூகக் குற்றமிழைத்தவர்களாகவே கருதப்படுவர். யாழ்ப்பாணத்திலுள்ள உணவகங்களிலும், சிற்றுண்டிச்சாலைகளிலும் குறிப்பிடத்தக்க வீதமானவை சுகாதாரமான நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை என்பதே மக்களின் குற்றச்சாட்டாகவும் உள்ளது. இவ்விடயங்களில் சுகாதாரப் பிரிவினர் கூடிய கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இன்று நிலவுகின்றது.

அதேவேளை, யாழ். குடாநாட்டிலேயே வைத்தியசாலை வசதிகள் குறைந்த பகுதிகளுக்கான தகுந்த முன்னேற்பாடுகள் இதுவரை செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை.

மக்கள், நோய் கண்டால் வைத்தியசாலைகளைத் தாமே நாடி வருவர் என வழக்கமாகக் காத்திருப்புநிலையிலிருக்காமல் - மருத்துவ வசதிகள் கிடைக்காத, குறைவாக உள்ள பகுதிகளுக்கு காலத்துக்குக்காலம் - மருத்துவப் பரிசோதனைகளையும், கண்காணிப்பையும் வழங்க வைத்தியசாலைகள் முன்வர வேண்டும்.

இந்தவகையில் சமூகத்தின் சகல தரப்புக்களிலிருந்தும் ஒழுங்கான நடைமுறைகள் பின்பற்றப்படுமாயின் தொற்றுநோய்களின் பாதிப்புக்களைப் பெருமளவில் தகர்த்துவிட எம்மால் முடியும் என்பதே நிதர்சனமாகும்.

# 40

# தேடலைத் தொலைக்கின்றோம்!

அண்மையில் யாழ்ப்பாணக் கல்விச்சமூகத்தில் நடந்த நிகழ் வொன்று மனதை நெருடுவதாக அமைந்தது.

வட - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நூலக அபிவிருத்திப் பிரிவினால் யாழ் - மாவட்டத்திலுள்ள 41 பாடசாலைகளுக்கெனக் கொண்டுவரப்பட்டிருந்த, தலா ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான நூற்தொகுதியைப் பெற்றுக் கொள்வதில் அதிபர்கள் காட்டிய அசிரத்தை பற்றி சம்பந்தப்பட்ட மாகாண உயரதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

நூற்தொகுதியைப் பெற்றுக் கொள்ளுமாறு பத்திரிகைச் செய்தி வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தும் குறிப்பிட்ட எண்ணிக்கையான பாடசாலை அதிபர்களே உடனடியாக, நேரடியாக வந்து அவற்றைப் பெற்றுக்கொண்டதாகவும் ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள் அவற்றைப் பெறுவதில் சிரத்தை காட்டவில்லையென்றும் அந்த அதிகாரி வேதனையுடன் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நூலகங்களின் முக்கியத்துவம் பற்றியும் மாணவர்கள் நூல்களை தேடிப் படிப்பதற்குரிய தேவை பற்றியும், அதனை ஊக்குவிப்பதற்குரிய வழிமுறைகள் தொடர்பாகவும் நிலவும் - அலட்சியப் போக்கினையே இந்தச் சம்பவம் காட்டுகின்றது என்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

யாழ். மாவட்டம் மட்டும் என்றல்ல, இன்று பரவலாக பாடசாலை மட்டங்களில் மாணவர்களிடையே வாசிப்பினைத் தூண்டக் கூடிய வகையில் வாய்ப்புக்களோ, ஊக்குவிப்புக்களோ மிகக் குறைந்து விட்டதென்றே சொல்லலாம்.

பெரும்பாலான பாடசாலைகளில், புத்தக அலுமாரிகளில் கண்ணாடிச்சட்டங்களுக்குப் பின்னால் ”காட்சிப்படுத்தப்படும்” நூல்கள் எவையும் மாணவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

ஒவ்வொரு வருடமும் நூலக வாரத்தில் மட்டும் இந்த நூல்கள் மாணவர்களின் கரங்களுக்குச் செல்லும், வாசிப்பதற்கு என்றல்ல, அவற்றைத் தூசிதட்டி, துடைத்து மீண்டும் காட்சிப் பொருளாக்கும் சடங்கு நிகழ்வே அப்போது நடைபெறுகிறது.

பல பாடசாலைகளிலும் நூலகங்களுக்குரிய அடிப்படை வசதிகள் கூட இருப்பதில்லை. நூலகமொன்றை உருவாக்க வேண்டிய அவசியமும் உணரப்படுவதில்லை.

மாணவர்களுக்கான கற்பித்தல் என்பது, தனியே நான்கு சுவர்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுவிட்ட துயரமான நிலையில் - வாசிக்கவும், அதனூடாகத் ”தேடலை” மாணவர்க ளிடையே உருவாக்கவும் அதிபர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ “நேரம்” இல்லாமல் போகின்றது.

ஒரு காலத்தில் - மாணவர்களுக்கென இருந்த ”நூலக நேரம்” இன்று காணாமற் போய்விட்டது வகுப்பறைக் கற்பித்தல் அதனை ஆக்கிரமித்து விட்டது.

இவைபற்றியெல்லாம் கவலைப்படாத நிலையிலேயே அதிபர் களும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் இருப்பதுதான் வேதனை தரக்கூடியதாகும்.

சர்வதேச தரத்திலுள்ள பல்கலைக்கழகங்களில், கல்வி நிறுவனங்களில் நூலகங்களுக்கு மாணவர்கள் செல்ல வேண்டும் என்பது இன்று கட்டாயமாக்கப்பட்டு விட்டது. நூல்களைத் தேடிக்கற்க வேண்டியதன் அவசியம் அடிக்கடி எடுத்துரைக்கப்படுகின்றது.

ஆய்வுகளுக்கும் திட்டப்பணிகளுக்கும் நூலகத்தின் துணை அடிப்படையானது.

ஆனால் - எமது பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் நிலவும் நூலகப் புறக்கணிப்பு நிலையானது, மாணவர்களின் பரந்துபட்ட அறிவுக்கான ஆர்வத்தைத் தூண்டாமலேயே விட்டு விடுவதோடு, உயர் கல்விக்கென வரும்போது ஒரு திண்டாட்ட நிலையையும் ஏற்படுத்தி வருகின்றது.

தமிழ்ப்பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்களை நூலகங்களில் காண்பதே இப்போது மிக அரிதாகி வருகின்றது. பல்கலைக்கழக மட்டங்களில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு பல மாணவர்களும், அந்த இறுதிக்கட்டத்திலேயே நூலகங்க ளுக்குள் நுழைய ஆரம்பிக்கின்றனர்.

இந்த துரதிர்ஷ்டமான நிலைமை உருவாகுவதற்கு பாடசாலை மட்டங்களில், நூலகங்களைப் பயன்படுத்துவது பற்றிய பரிச்சயம் ஏற்படுத்தப்படாததே முக்கிய காரணமாகும்.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய கல்வித் திட்டத்தில் - நூலகங்களின் அவசியம் பற்றி வலியுறுத்தப்படுவது ஓரளவு திருப்தி தரக்கூடிய தொடக்கமாக இப்போது இருந்தாலும்,

பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர் களும், கல்வி அதிகாரிகளும், இந்த விடயத்தில் உடன் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர்.

பாடசாலைகளில் சிறியளவிலேனும் நூலகங்களை உருவாக் குதல், மாணவர்களுக்கு அந்த நூல்களை வழங்கி வாசிப்புத் திறனை ஊக்குவித்தல், பாடசாலை நூலகத்திற்கென பொறுப்பா சிரியர்களை நியமித்தல், பாடசாலை நேரங்களிலேயே வாரத்திற்கு ஒரு முறையாவது நூலக நேரத்தை ஒதுக்குதல், பாடசாலை நேரம் தவிர்ந்த வேளையிலும் விடுமுறை தினங்களிலும் நூலக வசதிகளை மாணவர்களுக்கு அளித்தல், இதற்கான உதவிகளை பெற்றோர்கள், நலன் விரும்பிகளிடமிருந்து பெறுதல் என இன்னோரன்ன பணிகளை இவர்கள் ஆற்ற முடியும். செய் வார்களா?

தென்னாசியாவிலேயே மிகப்பெரிய நூலகத்தை வைத்திருந்த பெருமைக்குரியவர்களான நாம் - இன்று பாடசாலை நூலகங்களைப் பொறுத்தளவிலேயே இவ்வளவுக்கு சிறுமைப்பட்டுப் போவதன் தார்ப்பரியத்தை உணரும் நாள் இனியாவது வரட்டும்.

# 41

# தங்குநிலையாளரைக் கவனியுங்கள்!

*வடக்கு-கிழக்கினைப் பொறுத்தவரை, உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களில் ஒன்றாக வேலை வாய்ப் புப் பிரச்சினை தீவிரம் பெற்றுவருகின்றது.*

*அண்மையில், யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி 83,061 இளைஞர், யுவதிகள் எதுவித வேலைகளுமற்ற நிலையில் இருந்துவருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.*

*இவர்கள் - மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 28 சதவீத மானோர் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*இதேவேளை, இன்னுமொரு புள்ளிவிபரத்தின்படி, யாழ். மாவட்டத்தில் உயர்கல்வி வாய்ப்புக் கிடைக்காது பாடசா லைகளிலிருந்து வெளியேறிய 25,000 இற்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புக்களற்று உள்ளதும் தெரியவந்துள்ளது.*

*உலகளவில் மனிதவளத்தின் முக்கியத்துவமும், பிரயோகமும் பற்றிய கவனக்குவிப்பு அதிகமாகியுள்ள நிலையில் - யாழ். மாவட்டத்தில் இவ்வளவு பெருந்தொகையான மனிதவளம் வெறு மனே வீணாக்கப்படுவதென்பது அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகும்.*

அதிலும் - துரித அபிவிருத்தியை நாடி நிற்கும் எமது மண்ணில் இத்தகையதொரு மனிதவளம் - நாட்டின் அபிவிருத்தியிலோ, முன்னேற்றத்திலோ எவ்வித பங்காற்றுதலையும் தராது தங்கி நிற்கும் பிரிவாக இருப்பது அபிவிருத்திசார் வழிமுறைகளுக்குப் பெருந்தடையாக இருக்கப்போவதென்பதும் நிச்சயமே,

இந்த ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளை தங்குநிலை யாளர்களாக வைத்திருப்பதென்பது நாட்டின் அபிவிருத்தி மட்டு மல்ல, சமூகக் கட்டமைப்பின் சீர்செயற்பாட்டுக்கும் முரணாவ தாகவே அமையும்.

தொழிலற்ற இளைஞர், யுவதிகளின் உளவியற் பிரச்சினை களும், செயற்பாடுகளும், சமூகம்சார் நடவடிக்கைகளிலிருந்து அவர்கள் விலகிச்செல்லும் ஆபத்தை உருவாக்குவதோடு, நாளை இவர்கள் சமூகமுரண் செயற்பாடுகளில் (Anti Social Activities) ஈடுபடவும் தூண்டச் செய்கின்றது.

உலகளாவிய ரீதியில் - வேலைவாய்ப்பின்மையால் எழுந்த பிரச்சினைக்கு, மற்றுமோர் உதாரணமாக எமது பிரதேசமும் மாறிவிடக்கூடாது என்பதில், சம்பந்தப்பட்டோர் கவனஞ் செலுத்தவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உயர்கல்வி நிலையங்களாக பல்கலைக் கழகமும், தொழில்நுட்ப நிறுவனங்களும் செயற்பட்டு வந்தாலும் இவை கூட, வேலையற்றோர் பட்டாளத்தை "பட்டதாரிக ளாகவும்", "தொழில்நுட்ப அறிவுகொண்டோராகவும்" உருவாக் குகின்றனவேயன்றி தமது நிறுவனங்களில் கற்றலை முடித்துக் கொள்ளும் மாணவர்களை "தொழிற்தகைமையாளர்களாக" உருவாக்குவதில்லை என்பது கண்கூடு.

இந்தவகையில் - பாட சாலைக் கல்விவரை பெற்று நீங்குவோர் முதல் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் வரை அனைவருமே வேலையற்றோராக உலாவுவதே இம்மண்ணில் நடை பெறுகின்ற தேயன்று, வேறொன்றல்ல.

எனவே, வட கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகள் வேகங்கொள்ள இருக்கும் இவ்வேளையில்

சம்பந்தப்பட்டோர், அதிகாரங்கொண்டோர் அனைவருமே இப்பாரிய மனிதவளத்தைப் பயன்படுத்த முன்வரவேண்டும்.

அதேவேளை, வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளும் - தம் மனப்போக்குகளில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். தங்கிநிற்பவர்களாகவும், சமூகத்தின் சுமையாகவும் தங்களை நிறுவுவதிலிருந்து விடுபட்டு தம்மைத் தொழிற்தகைமையாளர் களாக உருவாக்கிக்கொள்ள அவர்கள் முன்வரவேண்டும், சுய முயற்சிகளிலும் ஆர்வங்காட்டவேண்டும்.

சமூக அக்கறையுடையவர்கள் - இவ்விடயங்களில் தகுந்த ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்க வேண்டும்.

அனைவரும் இந்தப் பிரச்சினையின் ஆழத்தை உணர்ந்து செயற்பட்டால் மாத்திரமே இந்தத் தங்குநிலையாளர்களைத் தகுந்த, திறனுள்ள தொழிற்படையாக மாற்றமுடியும். அது சமூக வளர்ச்சிக்கும் வழிதரும். இது செயற்படுத்தப்படுமா? சமூகத்தின் சுமை தளருமா?

# 42

# உறவுகளுக்கு முன் உரிமை வேண்டும்!

ஊடகவியலாளர்களுக்குரிய சுதந்திரமும், உரிமைகளும் மறுக்கப்படும் நாடுகளில் இலங்கைக்குத் தனியான இடம் உண்டு.

குறிப்பாக ஆயுதப்படையினராலும், பொலிஸாராலும், அரசாங்கத்தின் புலனாய்வுப் பகுதியினராலும் - ஊடகவியலாளர்கள் பலவகையிலும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் / அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர்.

துணிச்சலுடன் செயற்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் படையினரும் பொலிஸாரும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தமை இவற்றுள் குறிப்பிடத்தக்கது.

ரிச்சர்ட் டீ சொய்ஸா, மயில்வாகனம் நிமலராஜன், "சட்டன" பத்திரிகையாளர் றோகணகுமார போன்றோரின் படுகொலைகளுடன் -

இக்பால் அத்தாஸ் மீதான கொலைப்பயமுறுத்தல், மட்டக்களப்பில் டி.சிவராம், விஜேயந்திரன் மீதான தாக்குதல்கள், ஜி.நடேசன் வீட்டின் மீதான கைக்குண்டுவீச்சு, மன்னாரில் ஃபஸ்மி மீதான அச்சுறுத்தல், வவுனியாவில் மாணிக்கவாசகம் மற்றும் கொழும்பில் ஸ்ரீகஜன் கைது, யாழ்ப்பாணத்தில் வித்தியாதரன் மீதான அச்சுறுத்தல், "ராவய"வின் உவிந்து

குருகுலசூரியவின் மீதான தாக்குதல் வரை ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளும், கொடுமைகளும் தணிந்ததாகத் தெரியவில்லை.

ஊடகவியலாளர்கள் துணிச்சலுடன் நீதியின் பக்கம் நின்று செய்திகளை வெளியிடுவதற்கு படையினர் தரப்பில் நிலவிவரும் நெருக்குதலும் அடாவடித்தனங்களும் கொஞ்சமேனும் குறையாத நிலையில் -

பொலிஸ் மா அதிபரின் புதிய அறிவித்தலொன்று, அவரது நோக்கம் எதுவாக இருந்தபோதும், ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில் - பயமுறுத்தலுக்கான ஆரம்பப்படியோ எனச் சந்தேகம் கொள்ளத்தக்கவகையில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு பிரதேசரீதியாகவும் அவ்வப்பகுதிகளில் வசிக்கும் ஊடகவியலாளர்களின் விபரங்களையும், முகவரியையும் திரட்டிக்கொள்வதற்கு பொலிஸ் மா அதிபர் அவ்வப்பகுதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு சுற்றறிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸாருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையே நல்லு றவை வளர்க்கும் வகையில் - எப்போதும் தொடர்பு கொள்ளத் தக்கதாக, இந்த விபரங்கள் திரட்டப்படுவதாக அவர் கூறிய போதிலும் - இவ்வாறான தகவல்களை அளிப்பதற்கு ஊடகவிய லாளர்கள் முன்வராததோடு, தமது தரப்பின் அச்சத்தையும் சந்தேகங்களையும் வெளியிட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் - உண்மையில், ஊடகவியலாளர்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள விரும்பினாலும் - இன்றுவரை கிடைக்கும் அனுபவங்கள் - நல்லுறவுக்கு எவ்வகையிலும் உதவக் கூடியதாக இல்லை என்பதே யதார்த்தம் ஆகும்.

ஒரு நாட்டினைத் தாங்கிநிற்கும் நான்காவது தூணெனவும், நாட்டில் நடக்கும் அராஜகங்களைக் கண்காணிக்கும் காவல் நாயெனவும் வர்ணிக்கப்படும் - ஊடகவியலாளர்களின் பணியின் பெறுமதியையும் அவசியத்தையும் உணராதவர்களாகவே படை யினர் நடந்துவரும் நிலையில் -

“நல்லுறவைப்” பேணப் பொலிஸ் மா அதிபர் விரும்புவாராயின், முதலில் ஊடகவியலாளர்களின் பணிக்குரிய சுதந்திரத்தையும் உரிமைகளையும் வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

இல்லாதுவிடில், ஒருபுறம் ஊடகவியலாளர்கள் மீதான குறிவைத்துத் தாக்குதல்கள் இடம்பெறும்போது மறுபுறம், நட்புறவின்பேரில் ஊடகவியலாளர்களின் பெயர் விபரங்களைத் திரட்டமுனைவதென்பது, அச்சுறுத்தலுக்கான வழிவகைகளை இன்னமும் இலகுவாக்கிவிடும் என ஊடகவியலாளர்கள் அஞ்சுவதையே இன்னமும் உறுதிப்படுத்திவிடும்.

# 43

# அமைதி அச்சுறுத்தல் வலயங்கள்!

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்தது முதற்கொண்டு சமூக வாழ்வை ஏற்படுத்துவதில் மிகப் பெரும் தடைக்கல்லாக இருந்துவரும் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு விவகாரத்தை ஆராயும் உபகுழுக் கூட்டத்திலும் பெரும் சர்ச்சையையும் முரண்பாட்டையும் ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ். குடாநாட்டின் குறிப்பிடத்தக்க நிலப்பரப்பை ஆக்கிரமித்துக்கொண்டு ஆயிரக்கணக்கான குடிமனைகளையும், பெருமளவு தோட்டப் பகுதிகளையும், கரையோரப் பகுதிகளையும் சூனியப்பகுதியாக, இராணுவப் பிரசன்னத்துக்குள் வைத்திருக்கும் "உயர் பாதுகாப்பு வலயங்கள்" சமாதானத்திற்கான முயற்சிகளில் பாதிப்பைத் தரும் "அச்சுறுத்தல் வலயங்கள்" என இன்று உருவாகியிருக்கின்றன.

வளமிகுந்த பாரிய நிலப்பரப்பை, இராணுவநலநோக்கில் தொடர்ச்சியாகக் கையகப்படுத்தி வைத்துக்கொண்டு எவ்விதத் தளர்வுகளுமற்ற பிடிவாதப் போக்கில் இராணுவம் தன் நிலைப்பாட்டைப் பேணுமாயின், இனிமேல் - பாதுகாப்பு உபகுழுக் கூட்டங்களில் கலந்துகொள்வதில் பயனில்லை என்ற விடுதலைப்புலிகளின் அறிவிப்பு, மக்களின் மனநிலையை நேரடியாகவே படைத்தரப்பிடம் தெரிவிக்கவைத்திருக்கின்றது.

ஓமந்தையில் நடந்த முதலாவது பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்திலும், பின்னர் முகமாலையில் நடந்த மாவட்டரீதியான உபகுழுக் கூட்டத்திலும், இறுதியாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுவின் இரண்டாவது கூட்டத்திலும் உயர் பாதுகாப்பு வலயம் மிகமுக்கியமான விவகாரமாகப் பேசப்பட்டாலும் -

பேச்சுக்களில் பங்குபற்றிய இராணுவத்தரப்பு குறிப்பாக, யாழ். மாவட்ட இராணுவ உயர் அதிகாரிகள் - மிக இறுக்கமான நிலைப்பாட்டையே கடைப்பிடித்தனர்.

மக்களது மீள்குடியேற்றம், சமூகநிலை, அபிவிருத்தி, புனர் வாழ்வு புனரமைப்பு என்பவற்றைவிட உயர் பாதுகாப்பு வலயத்தின் இராணுவச்சார்பு ஆதாயமே அவர்களது வாதாட் டமாக இருந்தது.

ஏற்கனவே, ஒஸ்லோ பேச்சுக்களிலும் யாழ். பிராந்தியத்தில் மீள்குடியேற்றம் தொடர்பான பேச்சுக்களிலும் யாழ். இராணுவத் தளபதியின் நடவடிக்கைகள் கடும்போக்கானது என விடுதலைப் புலிகளால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதேநிலையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்களிலும் நீடித்ததால் - விடுதலைப் புலிகள் தரப்பில் கால அவகாசம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டியிருந்ததாகத் தெரியவருகிறது.

சமாதானத்துக்கான உறுதிப்பாடு என்பது, பரஸ்பரம் இரண்டு தரப்புக்களிலிருந்து நல்லெண்ண முயற்சிகளின் விளைவாகவே விருத்தியடையும் என்ற நிலையில் - தொடர்ந்தும் படைத்தரப்பு விட்டுக்கொடுப்பற்ற மனோநிலையிலிருப்பது எவ்வகையிலும் வரவேற்கக் கூடியதல்ல.

மாறாக - அமைதிக்கான நம்பிக்கையை, பரஸ்பரப் புரிந்து ணர்வைச் சிதைத்து விடுவதாகவே அது அமைந்துவிடுமென்பது கவனிக்கத்தக்கது.

இவ்வாறான நிலைமை படைத்தரப்பினால் புரிந்துகொள்ளப் பட முடியாத ஒன்றல்ல. ஏனெனில், பல தடவைகள் - விடுதலைப்

புலிகளின் தரப்பினால் மட்டுமல்ல, பொது அமைப்புக்களாலும், தொண்டு நிறுவனங்களாலும் இந்த விடயம் பற்றிப் பல தடவைகள் எடுத்துரைக்கப்பட்டே வந்துள்ளது.

அதேவேளை, உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியகற்றப்பட்ட மக்களின் அவலவாழ்வும் - படையினர் கண்முன்னமேயுள்ளது.

இந்தவகையில் - நிலைமை சரிவர உணரப்பட்டாக வேண்டிய போதும், நிரந்தர அமைதிக்கான வழிவகைகளுக்குத் துணை நில்லாது, இராணுவநலனை நிலைநிறுத்துவது என்பது மனிதாபிமானமற்ற, மக்கள் நலன் கருதாத போக்கேயன்றி வேறல்ல.

எனவே - நிரந்தரமான சமாதானத்தை உருவாக்கவேண்டு மென்ற உறுதிப்பாடு இருக்குமானால், படைத்தரப்பு தன்னிலையில் மாற்றத்தைச் செய்யவேண்டியது கட்டாயமாகும்.

அவ்வாறான ஒரு முயற்சியே அமைதிக்கான முயற்சிகளுக்கு, இராணுவம் குறுக்கே நிற்கவில்லை, முட்டுக்கட்டையாக இல்லை என்பதை நிரூபிப்பதாக அமையும்.

ஆகவே, இடம்பெயர்ந்து வாழும் மக்களின் துன்பநிலையைப் போக்க, அம்மக்களுக்கேயான சொந்த இடங்களுக்கு அவர்கள் திரும்பிச் செல்ல, சமாதானத்தின் விளைவுகளை அம்மக்கள் அனுபவிக்க படைத்தரப்பு முழு முயற்சிகளையும் எடுக்கவேண்டியது அவர்களுக்குரிய அவசியமான கடமையேயாகும்.

# 44

## அயலகத்தின் அசைவுகள்!

தென்னாசியப் பகுதியில், பிராந்திய வல்லரசு என்ற தனது செல்வாக்கினை உறுதிப்படுத்திக் கொள்வதில் இந்தியா முனைப்பாக இருந்துவருகின்றது.

இப்பிராந்தியத்தில் நடைபெறும் - அரசியல், இராணுவ நகர்வுகள் எதுவாயினும் - அது, தனது நாட்டின் பிராந்திய ஏகாதிபத்தியத்தைப் பாதிப்பதாக, தனது நலன்களை, முக்கியத்துவத்தைக் குறைப்பதாக இருக்கக்கூடாதென்பதில் இந்தியா அதிக கவனம் காட்டிவருகின்றது.

இந்தவகையில் - இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் அண்மையில் நடைபெற்றுவரும் நிகழ்வுகள் - தனது நலன்களைப் பாதித்துவிடுமோ என்ற அச்சம் இந்தியாவுக்கு ஏற்பட்டிருப்பதை, கொழும்புக்கு இந்தியாவிலிருந்தான இரண்டு விஜயங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

ஒஸ்லோவின் மத்தியஸ்தத்துடனான சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இலங்கை விவகாரத்தில் தன் செல்வாக்குத் தளர்ந்துபோவதையும் - அமெரிக்காவினது ஆதிக்கம் படிப்படியாக உறுதிபெறுவதையும் - தனக்கான சவாலாக இந்தியா கருதிக்கொண்டது.

இதனூடான அழுத்தமே - இந்தியாவின் மௌனமாகவும் பல மாதங்களாகத் தொடர்ந்தது.

இராஜதந்திரரீதியிலான இந்த மௌனம், கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிட விரும்பவில்லை என்ற இந்தியத்தரப்பின் காரணமாக வெளியிடப்பட்டாலும் - அந்தளவு இலகுவில், இலங்கைப் பிரச்சினையிலிருந்து இந்தியா ஒதுங்கிக் கொண்டுவிடாது என்பதே உண்மையாக இருந்தது.

இதற்கேற்றாப்போல அல்லது இந்தியாவின் விருப்பத்திற்கேற் றாப்போல பொதுஜன ஐக்கிய முன்னணித் தரப்பிலிருந்து அரசியல் நகர்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரன் அனுரா பண்டாரநாயக்க தலைமையில் - பொதுஜன ஐக்கிய முன்னணியினது முக்கியஸ்தர்கள் கொண்ட குழுவொன்று இந்தியா சென்று - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில், இந்தியா தலையிடவேண்டும் என "வலியுறுத்திக் கூறித்" திரும்பியுள்ளது.

ஒஸ்லோ உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்காமல் "ஒதுங்கி இருந்த" இந்தியா எதிர்பார்க்கப்பட்ட அழைப்பு உள்நாட்டிலிருந்தே கிடைத்ததும் - தனது வெளிவிவகாரச் செயலாளரை இலங்கைக்கு உடனடியாகவே அனுப்பிவைத்தது.

சமாதான முயற்சிகள் தொடர்பில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் காலத்துக்குக்காலம் இந்தியாவுக்கு விளக்கமளித்து வந்தாலும், தனது வெளிவிவகாரச் செயலாளரைக் கொழும்புக்கு அனுப்பியதன் மூலம் - விட்டகுறையைத் தொட்டதாக, இந்தியா மீண்டும் உள்நுழைய ஆயத்தமாகிவிட்டதாகவே கருதப்படுகின்றது.

இந்திய வெளியுறவுச் செயலர் கன்வால் சிபாலின் விஜயத்தின் போக்கையும், அவர் ஆராய்ந்த விடயங்களையும், தெரிவித்த கருத்துக்களையும் நோக்கும்போது - இது தெளிவாகப் புலனாகக்கூடியதாகும்.

சாதாரண உத்தியோகபூர்வ விஜயமாக அல்லாது தமிழ்க் கூட்டமைப்புத் தவிர்ந்த தமிழ்க்கட்சிகளுடனான அவரது சந்திப்பும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்களும் - இவ் விஜயம் சாதாரண விடயமாகக் கருதப்பட முடியாது என்பதையே உணர்த்தியுள்ளன.

இதேவேளை, கன்வால் சிபாலின் விஜயத்தைத் தொடர்ந்து, அங்கிருந்து இந்திய முன்னாள் இராணுவத் தளபதி நம்பியார் தலைமையிலான உயர்மட்டப் பாதுகாப்புக் குழுவொன்றும் கொழும்பு வந்தடைந்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயங்களை ஆராய்வது என இவ்விஜயத்தின் நோக்கம் தெரிவிக்கப்பட்டாலும் - இக்குழுவின் விஜயத்தின் உண்மையான நோக்கமோ அல்லது விஜயம் செய்யும் பகுதிகள் பற்றிய தகவல்களோ வெளியே கசிந்துவிடாதபடி பேணப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இந்தவகையில் - வெளிப்பேச்சுக்கு - இலங்கை விவகாரத்தில், தான் ஒதுக்கியிருப்பதுபோல இந்தியா காட்டிக் கொண்டாலும், தனது ஆதிக்கத்தினைச் சார்ந்தும், செல்வாக்குத் தொடர்பாகவும் உள்ளார்ந்த செயற்பாடுகளை இந்தியா மேற்கொண்டுவருவதை அறியமுடியும்.

எவ்வாறிருந்தாலும், இந்தியாவின் நலன் பேணும் விடயங்கள் தொடர்பாக "பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடிப்பதுபோல்" இந்தியா நடந்துகொண்டாலும் - தமிழர்கள் கடந்தகாலப் படிப்பினைகளின் அடிப்படையில் விழிப்பாக இருப்பது அவசியமானதாகும்.

# 45

# தேவை கருதிய முதன்மை

வடக்கு - கிழக்கிலுள்ள உடனடி மனிதாபிமான மற்றும் புனர் வாழ்வுத் தேவைகளில் பெண்கள், சிறுவர்களுக்கான நலத்திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிலுள்ள உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் செயற்பாட்டுத் திட்டங்களில் - போரினால் இடம்பெயர்ந்தோருக்கான மீள் குடியமர்வு, யுத்தப் பாதிப்புக்குள்ளோருக்கான வேலைவாய்ப்பு ஆகியவற்றோடு பெண்கள், சிறுவர்களின் நலனும் முதன்மைப் படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதோடு, காலத்தின் தேவை கருதிய பொருத்தமான செயற்பாடுமாகும்.

கடந்தகாலப் போர் அனர்த்தங்களினால் - பெண்களும், சிறுவர்களும் சந்தித்த பாதிப்புக்கள் மிகப் பாரியனவும் ஆழமானவையுமாகும்.

யுத்தத்தின் நேரடித் தாக்கங்களும், மறைமுக விளைவுகளும் இப்பிரிவினரைக் கடுமையான வகையில் அழுத்தத்திற்குள் ளாகியிருப்பதை சகல தரப்பினருமே ஏற்றுக்கொள்கின்றனர்.

பெண்களைப் பொறுத்தவரையில் - பொருளாதார, உளவியல் ரீதியில் அவர்களடைந்த தாக்கம் இலகுவில் ஈடு செய்யமுடியாத தாகவேயுள்ளது.

வடக்கு - கிழக்கில் குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் போரின் கோரங்களுக்குள் குடும்பத்தலைவர்களை இழந்து விதவைகளா னோரின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கதாக இருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

பிரதான உழைப்பாளிகளை இழந்தமையால் குடும்பத்தை நகர்த்திச்செல்வதற்கு மிகவும் சிரமப்படும் சூழலில், இப்பெண்கள் அனுபவித்துவரும் வேதனைகள் சொல்லிமாளாதவையாகும்.

இவர்களுக்கான உதவிகளைப் பெற்றுத்தருவதாக பல்வேறு மனிதநேய அமைப்புக்கள் களத்தில் இறங்கினாலும், பாதிப்படைந்த பெண்களுக்கான பொருளாதார மீட்சியை நிரந்தரமானதாகவும், முன்னேற்றகரமானதாகவும் ஆக்கிக் கொள்வதற்கான நகர்வுகள் சொல்லிக் கொள்ளத்தக்க வெற்றியைப்பெறவில்லை என்பது வெளிப்படையானது.

சுயதொழில் முயற்சிக்கான கடன்கள் என்றவகையில் வழங்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அளவான நிதியுதவி தொழில் மூலத்தை ஆரம்பிக்க உதவியது தவிர உற்பத்திகளைச் சந்தைப்படுத்தவோ, சுற்றோட்டத்துக்குக் கொண்டுசெல்லவோ உதவக் கூடியதாக இருக்கவில்லை. அதற்கான படிமுறைகளும் சீராக வழங்கப்படவில்லை.

எனவே, பொருளாதாரரீதியில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வு, சீரியமுறையிலும், தொலைநோக்கோடும் மேற் கொள்ளப்பட வேண்டியது என்பது மிக அவசியமானதாகவே இன்றுள்ளது.

இந்தவகையில் - சுயதொழில் முயற்சிகளுக்கானஉதவிகள் - கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் - புதிய வழிமுறை களினாலும் நீண்டகால நோக்கிலும் மேற்கொள்ளப்பட வேண்டியதேவைஇன்றுஎழுந்திருப்பதை, வடக்கு-கிழக்கிலுள்ள உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுக்கான செயற்குழு கருத்திற் கொண்டே தனது முக்கிய கருத்திட்டங்களில் ஒன் றான பெண்கள் நலத்திட்டங்களை வரைந்திருப்பது பாராட்டத் தக்கதாகும்.

இப்பொருளாதார உதவியினால் - போரினால் கணவனை இழந்த பெண்களுக்கான உளவியல் தாக்கங்களுக்கும் ஓரளவிலாவது காலப்போக்கில் மருந்திடமுடியும்.

சிறுவர்களுக்கான கல்வி, சுகாதாரம், போஷாக்கு மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றியதாக நலத்திட்டப் பணிகள் - முதற் கட்டடப் புனரமைப்புப் பணிகளுக்குள் உள்ளடக்கப்படுவதானது, இளைய சமுதாயத்தின் ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.

பாடசாலைக் கல்வியிலிருந்து இடைநிறுத்தப்படுவதைத் தடுத்தல், பாடசாலைக் கல்வியை முன்னெடுப்பதற்கான வளங்களை, வசதிகளை அளித்தல், கல்வியைத் தொடர்வதற்கான உதவிகள், அடிப்படைச் சுகாதாரம் மற்றும் தொற்றுநோய்களிலிருந்தான பாதுகாப்பு, கைக்குழந்தைகளுக்கான ஊட்டஉணவு, பாடசாலைச் சிறார்களுக்கான போஷாக்குப் பராமரிப்பு, குழந்தைத் தொழிலாளர்கள் எனப் பல்வேறு வழிகளிலுமாக நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதாக சிறுவர் நலத்திட்டங்கள் அமையும் என்பதால் சமூகத்தில் சிறாருக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதொன்றாக உருவாகும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

சமூகத்தின் நலிவடைந்த பகுதிகளுக்கு எதிர்பார்க்கப்படும் இத்தகைய அபிவிருத்தித் திட்டங்கள், தகுந்த சமூக மீள்கட்டுமானத்திற்குத் துணையாகும் என்பதைத் துணிந்து கூறலாம்.

# 46

# அதிகரிக்கும் திருட்டுக்களும் பொதுமக்களின் தற்காப்பும்!

யாழ். குடாநாட்டில் ஒருசில வாரங்களாகத் தணிந்திருந்த திருட்டுச் சம்பவங்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்துவரும் போக்கில் காணப்படுகின்றன.

கடந்த சில தினங்களுக்குள் மட்டும் இரவுவேளைகளில் வீடு புகுந்து திருடிய சம்பவங்களும், பகற்கொள்ளைச் சம்பவங்களும், தனியேசெல்லும் பெண்களிடமிருந்து நகைகளைப் பறித்துச் செல்லும்நிகழ்வுகளும்,கோயில்களில்நடக்கும்திருட்டுக்களுமாக பல இடம்பெற்றுள்ளன.

ஏற்கனவே "நமது நோக்கில்" சுட்டிக்காட்டியிருந்ததைப் போல சரியான பாதுகாப்பை வழங்கவல்ல நிர்வாகமொன்று ஏற்படுத்தப்படாத சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சமூகவிரோதிகளின் செயற்பாடுகள் இன்னமும் கட்டுப்படுத்தப்படாத நிலையினையே தொடரும் திருட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

சமூகப் பாதுகாப்பும், சட்டம் ஒழுங்கும் - வாகன அனுமதிப் பத்திரங்களைச் சோதனையிடுவதிலும் வீதிப்போக்குவரத்தை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சீர்செய்வதுமென மட்டுப்ப டுத்தப்பட்ட அளவிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மாலைநேரத்திற்குப் பின்னர் இச்செயற்பாடுகளும் அரிதாகி விடுகின்றன. சமூக விரோதச்செயல்களில் ஈடுபடுவோருக்கு இது வாய்ப்பானதாகவும் அமைந்துவிடுகின்றது.

இதனால், இரவுநேரத் திருட்டுச் சம்பவங்கள் ஒரு தொடக்கமாக மட்டுமன்றி வழிப்பறிகளாகவும், கோஷ்டிக் கொள்ளையாகவும் உருவாகும் ஆபத்துக்களும் இல்லாமலில்லை.

இந்தவகையில், பாதுகாப்பற்ற சூழல் சமூகவிரோதிகளுக்கு மேலும் துணிவையும், ஊக்கத்தையும் தந்துவிடுவதாகவே அமைந்துள்ளது.

பொதுமக்கள் தரப்பிலும் இத்தகைய திருட்டுக்களை, சமூக விரோதச் செயல்களைத் தடுத்துநிறுத்துவதற்கான தற்காப்பு ஒழுங்கமைவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

முன்பிருந்த சமூக உறவும், அதனைப் பேணுவதுமான செயற்பாடுகளில் நாட்டம் குறைந்ததும் - தனித்தனி வீடுகளுக்குள் தொடர்பாடல் முடங்கிப் போனதும் - தனக்குப் பிரச்சினை வரும்போது மட்டும் பார்த்துக்கொள்ளலாம் என்ற முரண் சமூகச் சிந்தனை உருப்பெற்று வருவதும் - நகரங்களுக்குள் மட்டுமே அருகிப்போயிருந்த குழுமஉருவாக்கல் கிராமப்புறங்களுக்கும் பரவிப்போனதும் - இத்தற்காப்பு ஒழுங்கமைவைச் செயற்படுத்தத் தவறிவருகின்றன.

அதேவேளை - கடந்தகால யுத்த அனுபவங்களின் பேரில், பக்கத்து வீட்டில் என்ன நடந்தாலும் வாய்திறந்து கேட்கக் கூட அச்சமுற்ற நாட்களின் நினைவும் - இங்கு தடையாகவே உள்ளது.

அடங்கிக் கிடந்துவிடுவதும், அச்சமடைவதும் இத்தகைய பாதுகாப்பற்றநிலையைத் தொடர்ந்து தக்கவைத்திருக்குமே தவிர சமூகவிரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான உறுதியைத் தராது என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தவகையில் கிராமங்கள்தோறும், வீதிகள்தோறும் மக்கள் தமக்கான தற்பாதுகாப்புப் பணிகளை உடன் ஆரம்பித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒன்றுதிரளும் மனப்பான்மையும், கூட்டுச்செயற்பாடுகளும் - திருட்டுக்களைத் தடுப்பதோடு மட்டுமல்லாது சமூகஉணர்வையும் வளர்ப்பதாகவே அமையும்.

இன்று, யாழ். குடாநாட்டில் ஏராளமாகவுள்ள சனசமூக நிறுவனங்கள், கிராமிய அமைப்புக்கள் என்பன இத்தகைய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முயற்சிக்கலாம்.

திருடர்கள் போன்ற சமூகவிரோதிகள் தாமாகத் திருத்தாத பட்சத்தில், மக்களாக அவர்களைத் திருத்தினால்தான் அவர்கள் திருந்துவார்கள் என இருந்தால் அதனைச் செய்வதில் தடையில்லை என்றே கூறலாம்.

# 47

## மார்க்கம் தவறும் மதகுருக்கள்!

உலகிலுள்ள அனைத்து மதங்களும் மனிதனை நல்வழிப்பபடுத்துவதையும், ஒழுங்கான பாதையில் அவனை வழிச்செலுத்துவதையுமே நோக்கமாகக் கொண்டுள்ளன.

தீய எண்ணங்களை, தீயசெயல்களை விடுத்து அமைதியும், நிம்மதியும் சூழ்ந்த உலகமே, கடவுளுக்கு விருப்பமானதென்பதையே மதங்கள் ஆழ்ந்தநோக்குடன் எடுத்துக் கூறுகின்றன.

இந்தவகையில், உலகின் பழமையான மதங்களில் ஒன்றான பௌத்தத்தில் - நல்ல சமூகத்தையும் நல்ல வாழ்க்கையையும் உருவாக்குவதே பிரதான இலக்கெனக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

புத்தபெருமான் போதித்துச்சென்ற உயர் கருத்துக்கள் மனிதகுலத்தின் உயர் விழுமியங்களாகப் போற்றப்படுகின்றன.

ஆனால்,பௌத்தமதத்தை,அதன் தத்துவங்களைக்காத்து-அதன் சீரியபண்புகளூடாக பௌத்தமக்களை வழிநடத்தவேண்டிய பௌத்த பிக்குகளில் சிலரின் நடத்தைகள் - அம்மதத்தின் கோட்பாடுகளையே சீரழித்துவருவதாக அமைந்துவிடுகின்றன.

இலங்கைத்தீவில் அமைதி வேண்டும் என்ற ஆதங்கத்தோடு மக்கள் அனைவரும் காத்துநிற்கும்போது, சமாதான

முயற்சிகளைச் சீர்குலைக்கும் விதமாக, சிங்களமக்களிடையே இனவாதப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்துவிடுவதும், அமைதியை ஏற்படுத்தக் கடுமையாக முயன்றுவரும் நோர்வே நாட்டவர்களுக்கெதிரான எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்துவதுமாக பௌத்தபிக்குகள் சிலர் முன்னின்று செயற்படுவது அமைதிக்கு விரோதமானது மட்டுமல்ல, புத்தபகவானின் கோட்பாடுகளையே மலினப்படுத்துவதாக அமைந்துவருகின்றது.

ஆன்மீக, மத நம்பிக்கையுள்ளவர்கள் கடவுள் விரும்பாத தீயசெயல்களைச் செய்வதற்கு அஞ்சுவார்கள் எனக் கூறப்படு வதுண்டு. ஆனால், மதத்தின் பெயராலேயே பேரினவாதத்தைத் தூண்டுவதற்கு இவர்கள் முயற்சிப்பது பௌத்தமதத்தின் கௌரவத்திற்கே இழுக்கானதாகும்.

தமிழினத்துக்கு எதிரான விரோதச் சிந்தனைகளையும், மதம் சார்ந்த அடிப்படைவாதத்தையும் வளர்ப்பதான கருத்துக்களே இத்தகையோரால் வெளிப்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக, பிக்குகள் முன்னணி என்னும் அமைப்பு - கடவுள் நம்பிக்கையைக் கடுமையாக எதிர்த்த, மதத்தை அபின் என விமர்சித்த கார்ல் மார்க்ஸின் மார்க்ஸியப் பாதையில் வந்தவர்களெனத் தம்மைக் கூறிக்கொள்ளும் - ஜே.வி. பி.யுடன் இரண்டறக் கலந்து, இத்தகைய நச்சுச்செயல்களில் வெகுதீவிரமாக ஈடுபட்டுவருகின்றது.

அன்பையும் அமைதியையும் அஹிம்சையும் போதித்த பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்ளும் இம்மதகுருமார் இவை அனைத்தும் இந்த நாட்டில் உறுதியாக வேரூன்றுவதைக் கண்மூடித்தனமாக எதிர்ப்பதும் -

அவலத்தையும், அழிவையும் போரையும் வேண்டி - அறிக்கைகள் விடுவதும் எத்துணை முரண்பட்ட செயல்களாகவுள்ளன என் பதை அறிவார்களா?

உலகிலுள்ள அனைவரும் சமத்துவமானவர்கள் என்ற, புத்தபகவானின் வழிவந்தவர்களாகத் தம்மைக்

காட்டிக்கொள்ளும் இவர்கள் சகோதர இனத்தவருக்கான உரிமை களைப் பறிப்பதிலும், தடுப்பதிலும் ஆர்வம் கொண்டு செயற் படுவதை பௌத்ததர்மம் அனுமதித்துவிட்டதா?

உண்மையான மகிழ்ச்சியே நிர்வாணத்தை அடையும் வழியென வாழ்ந்துகாட்டியவரின், அப்பெருந்தகையின் பாதையிலிருந்து பெருந்தூரம் விலகிச் செல்லும் இத்தகைய வேடதாரிகளை பௌத்த சமூகம் தொடந்தும் அனுமதிக்குமாயின், அது பெருமை வாய்ந்த அம்மார்க்கத்தையே மாசுபடுத்திவிடும் என்பதை உண்மையான பௌத்தர்கள் கருத்திற் கொள்ளவேண்டும்.

# 48

## ஆட்கொல்லியின் ஆபத்து!

யாழ். குடாநாட்டில் பரவிவரும் இனந்தெரியாத காய்ச்சலின் தீவிரத்திற்குப் பலியானோரின் எண்ணிக்கை அதிகரித்துவரும் போக்கில் காணப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக நாளொன்றுக்கு இருவர், ஒருவரென பலியாகும் மக்களின் எண்ணிக்கை - இந்நோயின் அபாயத்தையும், உடனடித் தடுப்பு நடவடிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

பொதுமக்களிடையே இப்புதிய காய்ச்சல் பற்றிய அச்சவுணர்வு பரவலாகவே எழுந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்த அச்சம் - பதற்றத்தையும், பீதியையும் எட்ட முன்பு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியது கட்டாயமாகின்றது. இது தொடர்பாக வைத்திய அதிகாரிகளும், யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகமும் போர்க்கால நடவடிக்கையினை எடுத்து ஆவனசெய்ய வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இப்புதிய காய்ச்சல் பரவ ஆரம்பித்து - இதுவரை ஒரு மாதமாகின்ற நிலையிலும் - இன்னமும் இது இனந்தெரியாத காய்ச்சலாகவே இருப்பதும், தடுப்பு மருந்துகள் இல்லையென மருத்துவமனைகள் கைவிரிப்பதும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

மக்கள் நலனை முன்னிறுத்தி அதிகரித்து வரும் உயிரிழப்புக்களைத் தடுப்பதற்கு, அனைத்தையும் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு மிகுந்தவர்களுக்கு - இது, பொருத்தமான பதிலாகத் தெரியவில்லை.

தென்பகுதியிலிருந்து பரவும் டெங்கு இன வைரஸே இக் காய்ச்சலுக்குக் காரணமென யாழ். வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் கூறினாலும் - அதனை உறுதி செய்ய முடியாத நிலையில் யாழ். வைத்தியசாலை இருப்பதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

யாழ். வைத்தியசாலைக்குப் போதிய ஆய்வுகூட வசதிகளோ, விசேட வைத்தியர்களோ, தேவையான மருந்துகளோ பற்றாக் குறையாக இருப்பதும் நிலைமையை மேலும் சிக்கலாக்கியது.

ஆனால் - இவற்றினைக் காரணம் காட்டி, அநியாய உயிரிழப்புக்கள் தொடர்வதை எவரும் நியாயப்படுத்திவிட முடியாது.

காய்ச்சல் ஆரம்பித்த ஒருசில தினங்களுக்குள்ளேயே நோயாளி அபாயக்கட்டத்தை எட்டி விடுவதும், தொடர்ந்து மரணத்தைத் தழுவுவதும் - இந்த நோயின் பயங்கரத்தையும், பாதிப்பின் வேகத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.

இந்த நிலையில் - உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாது போனால், மேலும் பல உயிர்களை இழக்கநேரிடும் என்ற நிலை பற்றி , இந்த ஆபத்தின் தீவிரம் பற்றி தகுந்த நடவடிக்கைகளுக்கு ஏன் இத்தனை தாமதம் என்பது புரியாமலிருக்கின்றது.

இத் தாமதநிலைக்கு யாழ். வைத்தியசாலையின் வளப்பற்றாக்குறை காரணமா? துறைசார் மருத்துவர்களின் வெற்றிடமா? அல்லது கொழும்பிலுள்ள சுகாதாரப் பிரிவினரின் கவனக்குறைவு காரணமா? என எதுவாக இருந்தாலும் - பலியாகும் மனித உயிர்களுக்கு முன் இவற்றை வெறுமே காரணம் காட்டிக் கொண்டிருக்க முயல்வது, மனிதாபிமானத்திற்கு விரோதமான தாகும்.

தெற்கில் எங்கோ ஒரு மூலையில் டெங்கு பரவ ஆரம்பித்ததும் விரையும் வைத்திய அதிகாரிகள் குழுவும், நாடு தழுவிய தேசிய அபாய அறிவிப்புமென துரித முயற்சிகள் மேற்கொள் ளப்படும்போது யாழ். மண்ணில் பலியாகும் உயிர்கள் பற்றிக் கவலைப்படாதது, வேதனையையும் வியப்பையும் தருகின்றது.

இவ்விடயத்தில் - யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, பொது அமைப்புக்களோ இதுவரை கவனம் எடுக்காததும், உரிய நடவடிக்கைகளுக்கு இதுவரை எந்த அசைவையும் காட்டாததும் கண்டிக்கத்தக்கது.

யாழ். குடாநாட்டை அச்சுறுத்தும் - இந்நோயின் தாக்கத்தி லிருந்து மக்களைக் காக்க, அவசர நடவடிக்கைகள் எடுக்கப்ப டாதவிடத்து, பலியானோர் எண்ணிக்கை இன்னமும் அதிகரித்தே செல்லும் ஆபத்துள்ளதால் - அனைவருமே இவ்விடயத்தில் உடனடி அக்கறை காட்ட வேண்டியதுடன் செயற்பாடுகளிலும் இறங்கவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# 49

# நியாயமற்ற நிபந்தனைகளால் நிலைதடுமாறும் சமாதானம்

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றி, சுமூகவாழ்வை அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதான முயற்சிகளுக்கு - எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாத நிபந்தனைகளை விதித்த இராணுவத்தின் திட்டவரைபை நிராகரித்திருக்கும் விடுதலைப்புலிகள் - இந்த நிபந்தனைகள் யதார்த்தத்திற்குப் பொருத்தமற்றவை என்றும் அறிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் காலங்காலமாக வாழ்ந்துவரும் சொந்தபூமியில், அவர்களது வம்சம் ஆழவேரூன்றிய தாய்மண்ணில் வாழ்வதற்கு,

யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்த, நாடுமுழுவதும் சமாதானத்தின் பேறுகளை அனுபவித்துவரும் நிலையில், அகதிவாழ்வைத் தொலைத்து நிம்மதியான, நிலையான சுமூகநிலையை அம்மக்களும் பெறவேண்டிய உரித்துடையவர்களாக இருக்கும்போது,

மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது போல, பொதுமக்களது மீள் குடியேற்றத்திற்கு தனது இராணுவ நலன் சார்ந்த நிபந்தனைகளையும், அழுத்தங்களையும் இராணுவம் முன்வைப்பதானது சமாதான முயற்சிகளைப் பாதிக் கும் திட்டமிடப்பட்ட நகர்வே என்பது வெளிப்படையாகின்றது.

இடம்பெயர்ந்து வேதனைகள், விரக்திகள் மத்தியில் அவல வாழ்வு வாழ்ந்துவரும் மக்களை நிபந்தனைகளின் பேரிலான மீள்குடியேற்றம் என்ற பெயரில் - இராணுவத்தின் கண்காணிப் புக்குள் திறந்தவெளிச் சிறைக் கைதிகளாக உருவாக்கும் சூழ்ச்சிப் பொறியாக,

மக்களை, தமது உயர் பாதுகாப்பு வலயங்களைத் தக்கவைக்கும் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தத் திட்டமிட்ட இராணுவத் தரப்பின் சுயரூபம் வெட்டவெளிச்சமாகியிருக்கின்றது.

ஒருபுறம் அரசாங்கமானது சமாதான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ள அதேவேளை - இராணுவத் தரப்பின் இத்தகைய நிபந்தனைகள் விதிப்பு சாண் ஏற முழம் சறுக்கும் நிலையாக மாறிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணக்கம் கண்டு - இயல் புநிலையைத் தோற்றுவிப்பதற்கான உறுதிப்பாட்டிற்கு முற்றிலும் மாறான பக்கத்திலேயே இராணுவம் நின்றுவருகிறது என்பது இதன் மூலம் உணர்த்தப்பட்டிருக்கின்றது.

பரஸ்பரம் நம்பிக்கை தரவல்ல செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம், சமாதானத்திற்கான எதிர்பார்ப்பை உறுதியாக்கவேண்டிய தேவை அவசியமாகியுள்ள நிலையில், சற்றேனும் தளர்வுகாட்டாத நிலைப்பாட்டை இராணுவம் அழுங்குப்பிடியெனப் பிடித்துவருவதானது நிரந்தர சமாதானத்தைவிட, தனது இராணுவ ஆதாயத்தையே படைத் தரப்பு முன்னிலைப்படுத்துவதையும்,

பேச்சுக்கள் மூலமும், கலந்தாலோசனைகள் மூலமும் பாதுகாப்பு விவகாரங்களில் - இசைவாக்கத்தையும், இணக்கப் போக்கையும் கொண்டுவரமுயலும் உபகுழுவின் செயற்பாட் டையும் அர்த்தமிழக்கச் செய்வதாகவே அமைந்துள்ளது.

பொதுமக்களது மீள்குடியேற்றத்திற்கும் சமூகவாழ்க்கைக்கும் எவ்வகையிலும் தொடர்பற்ற, விடுதலைப் புலிகள் ஆயுதங் களைக் களையவேண்டும் என்றதும், கனரக ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்யப்போவதுமான நிபந்தனைகள் பாதுகாப்பு

வலயப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தாம் சம்மதிக்கவே போவதில்லை என்ற இராணுவத்தின் பிடிவாதத்திற்குத் துணைசேர்ப்பனவாகவே அமைந்துள்ளன.

சமாதானத்தின் ஆக்கபூவமான முயற்சிகளுக்குத் தனது நிபந்தனைகள் மூலமாக அச்சுறுத்தலை இராணுவம் தந்திருப்பதாகவே இதன் மூலம் கருதமுடியும்.

இந்த முட்டுக்கட்டையை நீக்கி, இந்த அச்சுறுத்தலை அகற்றி தான் சம்மதித்ததுபோல, விடுதலைப் புலிகள் இணக்கம் கண்டதற்கு இணங்க - இவ்விடயத்தில் அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளில் இறங்கவேண்டும்.

பெரும் முயற்சிகள் மூலம் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் நம்பிக்கைக்கோபுரம், இராணுவநலனை முன்னிறுத்திய, பிடிவாத நோக்கம் கொண்ட, விட்டுக்கொடுப்பில் ஆர்வமற்ற, சந்தேகங்களைத் தக்கவைத்த நிபந்தனைகள் மூலம் சிதறடிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதில் அரசாங்கம் உடனடிக் கவனம் செலுத்தவேண்டும். இல்லாவிடில், இதனாலேயே மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறைச் செய்த குற்றம் அரசாங்கத்தைச் சாரவேண்டியதாகிவிடும்.

# 50

## விழிப்பாயிருப்போம்!

ஈழத்தமிழர்களின் நீண்ட விடுதலைப் போராட்டம் ஆயிரக்கணக்கான போராளிகளின் தியாகத்துடனும், மக்களின் அர்ப்பணிப்புடனும் முன்னெடுக்கப்பட்டு - இன்று மிகப்பெரும் கௌரவத்துடனும், பலத்துடனும் - தமிழர்களது உரிமைகள் சர்வதேச அங்கீகாரத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைக்குச் சென்றிருக்கிறது.

இந்த உயர்நிலையை எட்டிக்கொள்வதற்கு கடந்துவந்த பாதைகள் - விடுதலைப் போராட்டம் சந்தித்த வெற்றிகள் மற்றும் இழப்புக்கள் என்பன - இப்போராட்டத்தின் பெறுமதியை உணர்த்திநிற்கின்றன.

இந்தநிலையில் - எமது வாழ்வையும், சுதந்திரத்தையும், எமக்கான ஆட்சியதிகாரத்தையும் தீர்மானித்துக்கொள்ளும் உரிமை எமது மக்களுக்கேயுண்டு என்பதை விடுதலைப் போராட்டம் உலகெங்கும் உரத்துச் சொல்லியிருக்கிறது.

சமாதானத்துக்கான நகர்வுகளின் போதும் - இந்தத் தளத்தில் நின்றே விடுதலைப் புலிகள் தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக தமிழ்மக்களின் ஆட்சியதிகார உரிமையைக் கோரிநிற்கின்றனர்.

இவ்வாறானதொரு பேரம்பேசும் வல்லமையைக்கொண்டுள்ள தமிழர் தரப்பினது நியாயப்பாட்டையும் அவர்களுக்குள்ள அடிப்படை உரிமைகளையும் சர்வதேசமும் வலியுறுத்தத்

தொடங்கியுள்ளபோது,

எமது தாயகத்தின் அருகேயுள்ள பிராந்திய வல்லரசான இந்தியாவின் செயற்பாடுகளோ தமிழர்களிடம் சந்தேகங்களை ஏற்படுத்துவனவாக அமைகின்றன.

அண்மையில் நடந்தேறிய, இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் கன்வால் சிபாலின் விஜயமும் - அதனைத் தொடர்ந்த இந்தியாவின் படையியல் ரீதியான சில நகர்வுகளும் - தென்னாசியப் பிராந்தியத்தில் மேலாதிக்கம் செலுத்த நினைக்கும் பிராந்திய வல்லரசு என்ற நிலையோடு, ஈழத்தமிழர் விவகாரத்தில் நேரடியாக இருக்காவிட்டாலும், மறைமுகமானரீதியில் இந்தியா தலையீட்டினை மேற்கொள்வதை உறுதிப்படுத்திவருகின்றன.

சமாதானத்தின் செல்போக்கும், அதன் முன்னேற்றமும், அமை தியை மீண்டும் ஏற்படுத்துவதற்கான சர்வதேசத்தின் அக்கறையும் தென்னிலங்கை இனவாதிகளிடையே ஏற்படுத்திய எரிச்சலூட்டும் தன்மையை ஒத்ததாகவே, அதற்கு எவ்விதத்திலும் குறையாத அளவிலேயே இந்தியாவின் வெளிப்படுத்துகையும் ஆரம்பமாகியிருக்கிறது.

குறிப்பாக - இராணுவநலன் சார்ந்தவிடயங்கள் பற்றிய இறுக் கமான சூழல் ஏற்பட்டிருக்கும் இத்தருணத்தில், இந்தியாவின் வெளியுறவுச்செயலர் கன்வால் சிபால், இலங்கைக் கடற்படைத் தளபதியை புதுடெல்லிக்கு அழைத்து சர்வதேசக் கடற்பரப்புக் கண்காணிப்புப் பற்றியும், இலங்கையின் கடற்பகுதியில் கப்பல்களின் நடமாட்டம் தொடர்பாகவும் பேசுவதென்பது தென்னாசியாவின் பிராந்திய வல்லரசு என்ற கோதாவுடன், வலுமிக்க விடுதலைப்புலிகளின் கடற்புலிகளது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதிலும் ஆர்வம் கொண்ட போக்கே என்பது கவனிக்கத் தக்கதாகின்றது.

அரசியல் ரீதியாகவும், அதேவேளை படையியல் ரீதியாகவும் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலைகாட்ட வெளிப் படுவதென்பது - ஈழத்தமிழர் விவகாரத்தில் இன்னமும் இறுக் கமான போக்கைக் கடைப்பிடிக்கும் கொள்கை வகுப்பாளர்கள்

சிலர் புதுடெல்லியின் "சௌத் புளொக்"கில் ஆதிக்கம் செலுத்து வதையும்,

விடுதலைப்புலிகளின் பலம் மேலோங்குவதையோ, ஈழத் தமிழர் பேரம்பேசும் வலு அதனால் உறுதியாவதையோ சகித்துக்கொள்ள முடியாத சிந்தனை இன்னமும் அங்கு அகன்று போகாமலிருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

இந்தவகையில் - சமாதானத்தையும், அதன் வழியே தமிழர்கள் உரிமைபெற்று வாழ்வதையும் ஏற்றுக்கொள்ள முடியாதவர் களாயிருக்கும் தெற்கு அரசியல் சக்திகளின் துணையுடன் நடைபெறும், இந்தியாவின் எந்த முயற்சிகளும், கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் ஆழமாக நோக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.

சமாதானத்தை முழுமனதுடன், ஆர்வமுடன் வரவேற்கும் அதேவேளை - இத்தகைய நகர்வுகள் குறித்தும் தமிழர்கள் சிரத்தையும், கவனமும் கொண்டிருப்பது காலத்தின் அவசியமா கின்றது.

# 51

## ஒளிதரும் ஆண்டாய் வருவாயா...?

சமாதானத்துக்கான நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கான தலைவர் வே. பிரபாகரனின் உத்தியோகபூர்வ அழைப்புடன் ஆரம்பமான 2002 ஆம் ஆண்டு - இந்த ஒரு வருடகாலத்திற்குள் குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சாதனைகள் பலவற்றையும் எட்டியதாக நிறைவுபெற்றிருக்கிறது.

போரின் தாக்கமும், பதற்றமும் தணிந்து - இலங்கைத்தீவின் நிரந்தர அமைதிக்கும் நிம்மதியான வாழ்வுக்குமான ஆண்டாக, கடந்த ஆண்டில் வெற்றிகரமான பல நகர்வுகள் நடந்தேறியிருக்கின்றன.

இந்தவகையில் - விடுதலைப்புலிகளுடனான நோர்வே அரசாங்கத்தின், சமாதான முன்னெடுப்புக்கான பேச்சுக்கள் லண்டனில் நடைபெற்றது முதல் - அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நேரடியாகப் பங்கேற்ற ஒஸ்லோ பேச்சுக்கள் வரை "சமாதானத்தின் ஆண்டாக" 2002 ஆம் ஆண்டு கடந்து சென்றிருக்கின்றது என்றே கூறமுடியும்.

இந்தவகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு உடன்பாட்டில் தலைவர் வே.பிரபாகரனும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த பெப்ரவரியில் கையெழுத்திட்டமை இலங்கைத்தீவில் சமாதானத்துக்கான உறுதியான அடித்தளமொன்றை ஏற்படுத்தியது.

இதன்வழியே, விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்தும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துமுகமாக போர்க்கைதிகளாக இருந்த படையினரை அவர்கள் விடுவித்து சமாதானத்துக்கான ஆர்வத்தை எடுத்துக்காட்டினர். பதிலுக்கு அரசாங்கமும் - பல ஆண்டுகளாக நடைமுறையிலிருந்துவந்த பொருளாதாரத் தடைகளை கட்டங்கட்டமாக நீக்க ஆரம்பித்தது.

இத்தகையதொரு ஆரோக்கியமான சூழலில் ஸ்கன்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பின் பின்னர் - போர் நிறுத்தத்தைச் செம்மையாக்குவதற்கும், கண்காணிப்பதற்கும் மாவட்டரீதியாக குழுக்கள் இயங்கத் தொடங்கின. இத்தகைய சர்வதேச கண்காணிப்பு போர் ஓய்வை உறுதிப்படுத்தியதோடு அமைதிமுயற்சிகளில் சீர்குலைவு ஏற்படாமலும் தடுப்பதற்கும் பேருதவியாக அமைந்தது.

இதேசமயம் - விடுதலைப்புலிகளே மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதைத் தமது தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைத்து நாடாளுமன்றத் தேர்தலில் பெருவெற்றியீட்டிய தமிழ்க் கூட்டமைப்புப் பிரமுகர்கள் - விடுதலைப்புலிகள் வழிநடத்தலில் ஒன்றுபட்டுச் செயற்பட இணக்கம் தெரிவித்தமையானது தமிழ் மக்கள் ஒரே தலைமையின் பலமுடன் திரண்டுநிற்பதை உலகத் திற்கு எடுத்துச்சொன்னது.

அடுத்து, தலைவர் வே. பிரபாகரன் - பல ஆண்டுகளின் பின்னர் சர்வதேசமெங்கும் இருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான செய்தியாளர்களைக் கிளிநொச்சியில் சந்தித்தார்.

அமைதிப்பாதையில் விடுதலைப்புலிகளுக்குள்ள விசுவாசமும், நீதியான, நியாயமான அரசியல் தீர்வொன்றுக்கான தமிழர்களின் உரிமைப்போரின் உள்ளார்த்தமும் - பிரபாவினால் அழுத்தத் திருத்தமாக எடுத்துக்கூறப்பட்டது. இச்சந்திப்பின் மூலம் - உலகம் கொண்டிருந்த பல சந்தேகங்கள் நீக்கப்பட்டு, தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தின் நியாயப்பாடு அனைவராலும் தெளிவாகப் புரிந்துகொள்ளப்பட்டது.

தொடர்ந்து, அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமான சந்திப்புகள் நீடித்து செப்டெம்பர் பதினைந்தில் சர்வதேசத்தின் ஆதரவுடனான உயர்மட்டச் சந்திப்பு தாய்லாந்தில் ஆரம்பமானது. முதற்சுற்றுப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நிறைவுற தமிழ் மக்களின் உடனடித் தேவையாகவும், யுத்தத்தின் பாதிப்புக்களை நீக்குவதற்கான முதற்படியாகவும் - மீள்குடியமர்வு, மற்றும் புனரமைப்புப் பணிகளிலும் இணைந்துசெயற்படவும் - பாதுகாப்பு விவகாரங்களைக் கையாளவுமென உபகுழுக்கள் அமைக்கப்பட்டன.

இதுவரைகாலமும் முன்னைய சிங்கள அரசாங்கங்களின் பொய்ப் பிரசாரத்தினாலும் ராஜதந்திர அழுத்தங்களினாலும் “பயங்கரவாதிகள்” எனப் பெயர் சூட்டப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் நியாயமான, மக்களுக்கான போராட்டத்தை சர்வதேசம் அங்கீகரிக்க ஆரம்பித்தது.

வெளிநாட்டுத் தூதுவர்களும், சர்வதேச அமைப்புக்களும் விடுதலைப்புலிகளுடன் நேரடியாக, உத்தியோகபூர்வமான பேச்சுக்களுக்காக வன்னிக்கு வர ஆரம்பித்தது - ஈழத்தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளைச் சர்வதேசம் அங்கீகரித்ததன் வெளிப்பாடாக அமைந்தது.

இந்த ராஜதந்திர வெற்றி, ஒஸ்லோ உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் பின்னர் சுவிற்ஸர்லாந்து அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரிலான விடுதலைப்புலிகளின் விஜயத்திலும் உறுதியானது. இவ்வகையில் சமாதானத்திற்கான உறுதியான, நேர்முகமான நிகழ்வுகள் அரங்கேறினாலும் அமைதியைச் சீர்குலைக்கும் தன்மையான, சமாதானத்திற்கு விரோதமான செயற்பாடுகளும் நடந்தேறியேவந்தன.

குறிப்பாக, கடற்பகுதியில் நடைபெற்ற கடற்படையினரின் அத்துமீறல்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் என்னும் பெயரால் மக்களின் வாழ்விடங்களைச் சூழ்ந்த இராணுவ ஆக்கிரமிப்பின் தளர்வற்றபோக்கும் - எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், விசேட அதிரடிப்படையினரால் கிழக்கில் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான படுகொலைகள்,

திருமலையில் நடந்த / நடைபெற்றுவரும் ஈ.பி.டி.பி.யினரதும் படையினரதும் மக்கள் விரோதச் செயற்பாடுகள் எனத் தொடர்ந்து இறுதியாக மீள்குடியேற்றக்குக்கான நியாயமற்ற நிபந்தனைகள் என சமாதானத்தை அச்சுறுத்தும் நிகழ்வுகள் தொடரவேசெய்தன.

இவை அனைத்துக்கும் மேலாக, அமைதியும், அரசியல் வழியில் நியாயமானதீர்வும் வேண்டுமென்பதற்கான முயற்சிகளும் தளர்வின்றி முன்வைக்கப்பட்டுவருகின்றன

தமிழ் மக்கள் - தமது தாயகமண்ணில், தம்மைத்தாமே ஆளும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்காக உறுதியான தலைமையின் கீழும், பெருமைப்படும் படைப்பலத்துடனும், மனம் நிறைந்த எதிர்பார்ப்புக்களுடனும் இன்று மலரும் புத்தாண்டை வருகவருக என்றே வாழ்த்தி நிற்கின்றனர்

# 52

# வெட்கித் தலைகுனியுது யாழ். குடாநாடு!

யாழ். குடாநாட்டு மக்களே வெட்கித் தலைகுனியும் வண்ணம் பாலியல் சார்ந்த குற்றச்செயல்கள் இங்கு அதிகரித்துவருவதை அண்மைய நாட்களாகக் காணமுடிகின்றது.

தமிழினத்தின் ஒழுக்கவாழ்வும், தீயனவற்றைச் செய்ய அஞ்சும் தன்மையும் சிறப்புற்று வாழ்ந்த இந்த மண்ணில் - இத்தகைய கொடூரங்களைப் புரியும் மனித ஓநாய்களின் நடமாட்டங்களும் அதிகரித்துவருவது கவலைக்குரியது மட்டுமல்ல, உடனடி நடவடிக்கைக்கும் அவசியமானதாகும்.

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலத்தில் கல்விகற்று வந்த, செ.துவாரகா என்னும் பத்துவயதேயான இளம்குருத்தொன்றின் மர்மமரணம் சம்பந்தமரன விசாரணையில் - அச்சிறுமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டே படுகொலை செய்யப்பட்டிருக் கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

அதேவேளை கடந்தமாதம் நடைபெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் ஒன்று தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

17 வயதான இளம்பெண் ஒருவருக்கு, அவரது உறவினர் வீட்டிற்கு கூட்டிச்செல்ல உதவுவதாகக் கூறிய குடும்பஸ்தர் ஒருவர், அப்பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

கோண்டாவில் பகுதியில், டிப்போவுக்கு அருகாமையில் நடந்த இச்சம்பவம் - நேற்றே வெளியுலகிற்கு வந்தது.

இந்த இரு சம்பவங்களையும் விட குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எண்ணிக்கையிலான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும், பாலியல் சார்ந்த குற்றச்செயல்களும் யாழ். குடாநாட்டில் அண்மைக்காலத்தில் நடந்திருப்பதாகவும் - அவை பல்வேறு காரணங்களால் மூடிமறைக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இத்தகைய மிருகச் செயல்கள் - சீர்மிகுந்த சமுதாயமொன்றில் பெருகிவரும் அபாயம், புறந்தள்ளக்கூடியதொன்றல்ல.

கிருஷாந்தி குமாரசாமி, ரஜனி வேலாயுதம் என, மிலேச்சத்தனம் கொண்ட படையினரின் வெறித்தனத்துக்கு இலக்கான எம்மினப் பெண்களின் வதைபடு கதைகளின் தொடர்ச்சியாக - இன்று எமது சமூகத்திற்குள் வாழும், மனிதர்களாக உலாவிவரும் மிருகங்களின் உடற்பசிக்கு - இளம்பிஞ்சுகளும், பெண்களும் இலக்காகினர் என்றால் - எமது சமூகத்தின் மனிதநேயமும், சகோதரத்துவமும், பாதுகாப்பும் எங்கே போய்த் தொலைந்ததென்றே கதறவேண்டியிருக்கிறது.

எப்போது ஒருபெண் நடு இரவிலும் பாதுகாப்பாகத் தனியாக நடமாடமுடிகின்றதோ, அன்றே இந்தியா சுதந்திரமடைந்தது என ஏற்றுக்கொள்வேன் என மகாத்மாகாந்தி கூறிவிட்டுப்போன பின்பு அவ்வாறானதொரு சுதந்திரமும் பாதுகாப்பும் - இதே யாழ். மண்ணில் சில ஆண்டுகளுக்கு முன் நிலவியபோது பெருமைப்பட்டும், மகிழ்ச்சியுற்றும் இருந்த உள்ளங்கள் - இன்றுள்ள நிலைமையை எண்ணி, வேதனையும், விரக்தியுமாக தளர்ந்துபோகின்றன.

எங்களது சகோதரிகளை, எங்களது தாய்மாரைக் காக்க வேண்டிய இந்தமண் - இப்படியாக ஏன் சிதைகின்றது என்ற கேள்விகளே மனதைக் கிழித்து ரணமாக்குகின்றன.

அங்கொன்றும் இங்கொன்றுமாக - மனிதமிருகங்களின் வெறித் தனத்திற்கு எம் சகோதரிகள் இரையாக்கப்படுகின்றபோது

எமது சமூகத்தின் ஒழுங்கும், பாதுகாப்பும் விடைதெரியாத வினாக்களாக எழுந்துவருகின்றன.

இந்த வெறித்தனமிக்க மிருகங்களுக்குத் தகுந்த தண்டனை அளிப்பதோடு, எமது சமூகத்தின் நடத்தைகளை - உடனடியாக, ஆழமாக மீளாய்வு செய்யவேண்டிய கட்டாயத்திலிருப்பதை நாம் உணரவேண்டியவர்களாக உள்ளோம்.

எமது மண்ணில் தற்போது உருவாகிவரும் - பெண்களுக்கு எதிரான பாலியற் சேட்டைகள், அருவருக்கத்தக்க தெரு விமர்சனங்கள் - இவையெல்லாம் ஏற்படுத்தும் உளவியற் சீரழிப்புக்கள் - ஆரம்பகட்டத்திலேயே தடுத்துநிறுத்தப்பட வேண்டிய கட்டாயத்தை உணர்த்துவதாக இச்சம்பவங்கள் அமைகின்றன.

ஒருபுறம் கலாசாரத்தையே சீரழிக்கும் பழக்கவழக்கங்கள் எமது கண்ணுக்கு, திறந்த வீடுகளுக்குள் நுழையும் ஏதோ ஒன்றைப் போல சகட்டுமேனிக்கு எடுத்துவரப்படுவது பற்றி சமூகச் சிந்தனையுள்ளவர்கள் உடன் கவனிக்கவேண்டும்.

பாலியல் வக்கிரம் கொண்ட இந்தப் பிறழ்வாளர்கள் ஏன் உருவாகின்றனர் என்பது கண்டறியப்படவேண்டும். அவ்வாறு உருவாகுவதற்கான சகல காரணிகளும், எவ்வித தயக்கமுமின்றி தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

எவ்வாறு எம் சகோதரிகள், தாய்மார் சுதந்திரமாகவும், பாது காப்புடனும் இந்த மண்ணில் உலாவந்தார்களோ அதே சுதந்தி ரத்தையும், பாதுகாப்பையும் அவர்களுக்கு வழங்கவும் -

சமூகக் கட்டமைப்பைச் சீர்படுத்தவும் - அனைவருமே ஒன்று திரண்டு குரல் கொடுப்போம், செயற்படுவோம்.

# 53

## வரையறுத்தே வாழ்பவர்கள்!

யாழ். குடாநாட்டைக் கடந்த சில வாரங்களாக அச்சுறுத்தியும், பீதியிலுமாழ்த்தி வரும் இனந்தெரியாத வைரஸ் காய்ச்சலினைக் கட்டுப்படுத்துவதற்கும் - இது தொடர்பான போர்க்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குமாக அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட மட்டத்திலும், பிரதேச செயலகர் பிரிவுகளிலும் செயலணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் - அரசாங்க நிர்வாகத்தின் இந்தச் செயற்பாடு காலதாமதமான நடவடிக்கை யானாலும் கூட - இந்த வகையிலாவது விழிப்புணர்வுடன் செயலாற்ற முன்வந்திருப்பது ஓரளவு பாராட்டத்தக்கதே.

ஏனெனில் - இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் பரவ ஆரம்பித்ததன் பின்னரே யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரசாங்க அமைப்புக்களின் "செயற்பாட்டுத்திறன்" பற்றி மக்கள் தெளிவாக அறியும்படியான நேரடி அனுபவங்கள் மக்களுக்குக் கிடைத்தன.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் - வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்குப் போர்க்கால நடவடிக்கைகள் தற்போதாவது அறிவிக்கப்பட்டிருப்பதை வரவேற்கவேண்டி யவர்களாகவே மக்கள் உள்ளனர். எப்போதுமே அத்தியா வசியமாக, உடனடியாகச் செயற்பட வேண்டிய நிலையில் இருக்கவேண்டிய சுகாதார, மருத்துவப் பிரிவினர் - "வருமுன்

காப்போம்” என்பதைவிட, “வந்தபின் பார்ப்போம்” என அசமந்தப் போக்கில் இருந்ததையே கடந்த நிகழ்வுகளில் மக்கள் கண்டிருந்தனர்.

ஒருபுறம் மக்கள் தொடர்ச்சியாகப் பலியாகிக் கொண்டிருக்க, தினமொன்றுக்கு பெருந்தொகையான நோயாளிகள் வைத்தியசாலைக்குப் படையெடுத்து வர சம்பந்தப்பட்டவர்கள் ஆளையாள் மாறிமாறிக் குற்றஞ்சாட்டி அறிக்கைப்போர் நடத்திக் கொண்டிருந்த பரிதாபநிலையை யாழ்ப்பாணம் கண்டிருக்கிறது.

இந்த வகையில் - பெருமளவில் அழிவுகளையோஅல்லது எதிர்பாராத பாதிப்புக்களையோ - எதிர்கொண்டு சமாளிக் க்கூடிய நிலையில் யாழ்ப்பாணம் இல்லாதிருந்ததும் வெட்ட வெளிச்சமானது.

தமது அன்றாட, கிராமத்திற்குட்பட்ட பணிகளுக்கு மட்டுமே தம்மை வரையறுத்துக் கொள்கின்ற அரசாங்க ஊழிய மனோபாவமும்,

தமக்கான வேலைப் பட்டியலை வைத்துக்கெண்டு அதற்கு அப்பால் சிறிது நகரவும், சிந்திக்கவும் தலைப்படாதவர்களாக தம்மை உள்ளடக்கிக் கொள்வதையும்,

தமக்கான பணிகளைத் தெட்டத்தெளிவாக, அழுத்தந் திருத்தமாக வரையறுத்துக் கொண்டு எல்லைகளிட்டு, அதற்கப்பால் என்ன நடந்தாலும் - அது சமூகத்தைப் பாரியளவில் பாதித்தாலும் கூட அது அடுத்த வீட்டுக்காரன் கடமை என தப்பித்துக் கொள்ளும் உணர்வும் - எமது அதிகாரிகளிடையே ஊறிப் போயிருப்பதை மக்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றனர் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

அரசாங்க ஊழியர்கள் - அவர்கள், சுகாதாரப் பிரிவினரோ மருத்துவத் துறையினரோ மக்களுக்குச் சேவையாற்றவே பணிக் கமர்த்தப்பட்டிருக்கின்றனர் என்பதையும், அவர்களிடம் முழுமை யான, திருப்தியான சேவையை எதிர்பார்ப்பது மக்களின் உரிமை

என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த வகையில் - இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் கற்றுத்தந்த அனுபவங்களினூடாக தமது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், செயற்பாடுகளையும் - இவர்கள் மீளாய்வு செய்து மக்களுக்கான அர்ப்பணிப்புணர்வுடனான சேவைக்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டுமென்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த வகையில் - யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரசாங்க அதிகாரிகளினதும் - முழுமையான பணிகளை உத்தரவாதப்படுத்த வேண்டிய, உடன் மீளாய்வுக்குட்படுத்த வேண்டிய அவசியத்தை அரச நிர்வாகத் தலைமையிடம் யாழ். மக்கள் முன்வைக்கின்றனர்.

# 54

## கால எல்லைகள் கவனம்!

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி, அவர்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கான, கட்டங் கட்டமான முயற்சிகளை உள்ளடக்கிய திட்டவரைபொன்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணங்கியுள்ளனர்.

இதன்படி, இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படவிருக்கும் மீள்குடியமர்வு நடவடிக்கையினூடாக - இந்தப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காண இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன்படி, அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே, இராணுவத்தினர் தாம் தங்கியிருக்கும் பொதுமக்களின் வீடுகள் மற்றும் கட்டடங்களிலிருந்து- குறிக்கப்பட்ட காலவரையறைக்குள் வெளியேறிவிடுவரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் - யாழ். மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க பகுதிகளில், இராணுவப் பிரசன்னம் இழிவடைவதுடன், அப்பகுதிகளில் சமூகவாழ்வுக்கும் வழியேற்படமுடியும் என எதிர்பார்க்கலாம்.

இந்தக் கட்டம் செம்மையுறப் பூர்த்திசெய்யப்பட்டதும் - உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு பற்றிய அடுத்தகட்டம் ஆரம்பமாகவுள்ளது. இதற்கு, சர்வதேச இராணுவ நிபுணர்களின் ஆலோசனையும், வழிப்படுத்தலும் பெறப்படவுள்ளது.

இந்த இரு கட்டங்களினூடாகவும் மீள்குடியமர்வை, சொல்லியபடி செயலில் காட்டும்பட்சத்திலேயே - இணக்கம் காணப்பட்ட திட்டவரைபு முழுமைபெறும் என்பது திண்ணம்.

தாய்லாந்துப் பேச்சுக்களினூடாக இம்முறை பிரேரிக்கப்பட்ட திட்டவரைபில் - முதலாம் கட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய காலஎல்லைகள் அழுத்தந்திருத்தமாகக் குறிக்கப்பட்டுள்ள நிலையில் - அக்கால எல்லைகளுக்குள்ளான இலக்குகளை அவசியம் நிறைவேற்றியே தீரவேண்டிய கடப்பாடு அரசாங்கத்திடம் விடப்பட்டுள்ளது.

இந்த இலக்குகள் நிறைவேற்றப்பட்டு, முதற்கட்டம் பூர்த்தி யாக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு - தமிழ் மக்களிடம் மட்டு மல்ல, சர்வதேச அளவிலும் வியாபித்து நிற்பது அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கான கண்காணிப்பைத் தருவதாகவே அமைகின்றது.

அதேவேளை, இந்தமுறை தாய்லாந்துப் பேச்சுக்களில் - உயர் பாதுகாப்பு வலய விவகாரமும் மக்களது மீள்குடியேற்றமும் பேச்சுக்களின்போது கடுமையை ஏற்படுத்தியிருந்ததும் அரசாங்கத்திற்கு ஒரு முன்னெச்சரிக்கையாகும்.

இந்தவகையில், தமிழ் மக்களின் சமூகவாழ்வில் விடுதலைப் புலிகள் கொண்டுள்ள தீவிரநிலைப்பாடும், இந்த முறை பேச்சுக்களில் அரசாங்கத்தினால் மிகச் சரியாகப் புரிந்து கொள்ள வைக்கப்பட்டுள்ளதால் - பாதுகாப்பு உபகுழு அனுபவத்தை மீளவும் பெற அரசாங்கம் முயலாது என நம்பலாம்.

போரின் தாக்கங்களை அகற்றி, மக்களது புனர்வாழ்வுக்கும், புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் வழிசெய்யாமல் - அடுத்த கட்டங்களுக்கு நகரமுடியாது என விடுதலைப்புலிகள் காட்டிய உறுதிப்பாடும் - அரசாங்கத்தை, வாக்குறுதியளித்தபடி செயற்பட வைக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனாலேயே, இம்முறை அரசியல் விவகாரங்கள் அரசாங்கத்தரப்பினால் சற்றே அடக்கி வாசிக்கப்பட்டதையும் காணமுடிந்தது.

அடுத்துவரும் மாதாந்தச் சந்திப்பிற்கு முன்னராக தனது முதற்கட்ட நடவடிக்கைகளை வெளிப்படுத்த வேண்டிய அழுத்தத்தை அரசாங்கத்திற்கு விடுதலைப்புலிகள் ஏற்படுத்தி யிருப்பதும் இந்தவகையில் கவனத்திற்குரியதே.

எனவே, தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல, சர்வதேசத்திற்கும் மீள்குடியேற்றம் பற்றிய முன்னேற்றத்தைக் காட்டவேண்டிய, அமைதி மீதான ஆர்வத்தை உறுதிப்படுத்தவேண்டிய முக்கிய கட்டத்திற்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது என்றே கூறலாம். அரசாங்கத்தின் பதிற் செயற்பாடுகளிலேயே இனி அனைத்தும் தங்கிநிற்கின்றது.

# 55

## பகிடிவதை என்னும் பாதைதவறிய செயல்!

*யாழ். பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் - அம்மாணவர்களைப் பகிடிவதைக்குள்ளாக்கும் வேதனைதரும் சம்பவங்களும் நடைபெற்றுவருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசிக்கின்ற புகுமுக மாணவர்களை, சிரேஷ்ட மாணவர்கள் உடல், உளரீதியாகத் துன்புறுத்தாது நட்புறவுடன் அவர்களுடன் உறவாடி ஆரோக்கியமான சூழல் ஒன்றை உருவாக்கவேண்டும் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை விடுத்திருந்தபோதும் - இம்முறை வழக்கமான பகிடிவதைகள் குறைந்துவிடுமென்று எதிர்பார்த்தபோதும், அந்த எதிர்பார்ப்புக்களைப் பொய்யாக்கும் வண்ணம் - பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்கள் சிலர் தொடர்ந்தும் பகிடிவதைகளில் ஈடுபட்டுவருவதாக புதுமுக மாணவர்களும் பெற்றோர்களும் மிகுந்த மனக்கசப்பு அடைந்துள்ளனர்.*

*பகிடிவதை என்ற ரீதியில் - நெறிமுறையற்ற வார்த்தைப் பிரயோகங்களும், வக்கிரமான வெளிப்படுத்துகைகளும் இந்த முறையும் சர்வசாதாரணமாக நடைபெற்றுவருவதைக் கண்கூடாகக் காணவும் முடிந்தது.*

புதுமுக மாணவர்களின் விரிவுரைகளுக்கு இடைநேரங் களிலும், விரிவுரைகள் முடிந்தபின்னரும் - புதுமுக மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்குள் வைத்தே பகிடிவதைக்கு உள்ளாக்கப்படுவது இம்முறையும் நடைபெற்றுவருகின்றது.

நட்புடனும், நல்லுறவுடனும் ஆரோக்கியமாக நடைபெற வேண்டிய சிரேஷ்ட புதுமுக மாணவர்களின் அறிமுகம் - நெறிமுறையற்ற வார்த்தைகளாலும், அணுகுமுறைகளாலுந்தான் ஆரம்பமாக வேண்டுமென்ற பல்கலைக்கழக சம்பிரதாயத்தை கண்மூடித்தனமாக, சிந்திக்கும்வகையற்றுப் பின்பற்றும் இத்தகைய மாணவ சமுதாயத்தை எண்ணும்போது - இவர்கள் பல்கலைக்கழகக் கல்வியினூடாக ஒழுக்கவியலைப் பெற்றார்களா என்பதையே சந்தேகிக்கவைக்கின்றது.

பல்கலைக்கழகத்தை சமூகத்திலிருந்து பிரித்தெடுத்து தனி யொரு உலகமாகக் கருதி முன்னோர்கள் உருவாக்கிய மாயைக்குள் நின்று எவ்வகையிலும் சமூகச் சிந்தனையற்ற விதமாக புதுமுக மாணவர்களுக்கு உடல், உளரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் "வக்கிர எண்ணம்" இன்னும் பல்கலைக்கழகத்தை விட்டு மறைந்துபோகாதது கண்டிக்கத்தக்கதாகின்றது.

பல்கலைக்கழக வளாகத்தை விட்டுக் கடந்துவந்தால் - இந்தச் சமூகம் எதிர்பார்த்துநிற்கின்ற புத்திஜீவிகளாக, சமூகப் பொறுப்புள்ளவர்களாக உருவாகாமல் - அவர்களைச் சமூகம் ஏற்றுக்கொள்ளாதென்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தனியே கல்வியை மட்டுமல்ல, உயரிய மனிதப் பண்புகளை, தலைமைத்துவத்தினை, ஒழுக்கத்தினை, சமூகப் பொறுப்பு ணர்வினை, தாய்நாட்டுப் பற்றினை வளர்த்துவிடவல்ல பல்கலைக்கழகத்தில் - இவ்வாறான சமூகத்திற்கு ஒவ்வாத செயல்களை அரங்கேற்றுவதென்பது பல்கலைக்கழகத்தின் கௌரவத்தையே சிதைத்துவிடுவதாகும்.

சிரேஷ்ட மாணவர்கள் சிலரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய அத்துமீறல்களைத் தட்டிக்கேட்கவும், தடுக்கவும் சக

மாணவர்கள் முன்வரவேண்டும், முயற்சிசெய்யவேண்டும்.

"உன் நண்பர்களைச் சொன்னால் உன்னைப் பற்றிச் சொல்ல முடியும்" என்று அறிஞர் ஒருவர் கூறியதுபோல - தங்களது நண்பர்கள் இவ்வாறு முறைகேடாக நடப்பதை ஊக்குவிப்ப வர்களாக அல்லது கண்டும் காணாமல் இருப்பவர்களாக இல்லாமல் - சகமாணவர்கள் அவர்களை நல்வழிக்குக் கொண்டு வரவேண்டும்.

பல்கலைக்கழக நிர்வாகம் இவ்விடயத்தில் அதிக கவனம் எடுத்து - இந்தப் "பாரம்பரியத்தை" நீக்கிவிட வழிகாணவேண்டும்.

இது ஒன்றும் முடியாத விடயமல்ல. ஏற்கனவே மேற்கிலும், உலகில் சிறந்த பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் - பகிடிவதை முற்றாக ஒழிக்கப்பட்டு விட்ட நிலையில் - இத்துயரத்தைச் சுமப்பவர்களாக மாணவர்களை விட்டுவிடாது, தகுந்த நடவடிக் கைகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

தரம் ஒன்றில் இணையும் மாணவருக்கே வரவேற்புவிழா வைத்து, அன்பளிப்புக்கள் கொடுத்து, வீதியுலாவும் கூட்டிச் சென்று பாடசாலையை நட்புடன் அறிமுகமாக்கும் நிகழ்வுகள் நடைபெறும் இன்றைய நாட்களில் - பல்கலைக்கழகம் மட்டும் காட்டுமிராண்டித்தனமான பகிடிவதைகளால்தான் - புதுமுக மாணவர்களை எதிர்கொள்ளவேண்டுமா'?

சிந்தியுங்கள் சகோதரர்களே! போரால் சிதைந்தபூமி, நீங்களும் தோள்கொடுத்துத் தூக்கிவிடுவீர்கள் எனக் காத்திருக்கும்போது உங்கள் எண்ணங்களை, பெறுமதிமிக்க நேரத்தை - இந்தச் சின்னத்தனங்களுக்குள் தொலைத்துவிடாதீர்கள்

உங்கள் சிந்தனையும் திறமையும் - உங்களுக்கும் சமூகத்திற்கும் ஆக்கபூர்வமானதாகட்டும்.

# 56

## கல்விச்சாலைகளின் கலக்கநிலை!

யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள பதினோராம் ஆண்டு வரையான வகுப்புக்களைக் கொண்டிருக்கும் சிறிய பாடசாலை அது.

அயலிலுள்ள பகுதிகளிலிருந்து மாணவர்கள் ஏராளமாய் அங்கு கல்விகற்க, ஒருகாலத்தில் வகுப்புக்கள் நிறைந்திருக்கக் காணப்பட்ட அப்பாடசாலையில் - இம்முறை தரம் ஒன்றில் சேர்ந்த மாணவர்களின் தொகை என்ன தெரியுமா?

ஆக, நான்கு மாணவர்கள் மட்டுமே அப்பாடசாலையில் சேர்ந்தனர்.

அதேவேளை அப்பாடசாலைச் சூழலிலிருந்து அதிகாலையில் "பாடசாலைச் சேவை" வாகனங்களில் பெருந்தொகையான சின்னஞ்சிறார்கள் நகரப்பகுதிகளை நோக்கி அள்ளுண்டு செல்வதையும் - அப்பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், அப்பாடசாலையில் புதிதாகச் சேர்ந்த நான்கு மாணவர்களும், அவர்தம் பெற்றோரும் கவலையுடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இது, தனியே அந்தக் குறிப்பிட்ட பாடசாலையில் என்று மட்டுமல்ல யாழ். மாவட்டத்திலுள்ள பல சிறிய பாடசாலைகளும், கிராமப்புறப் பாடசாலைகளும் எதிர்நோக்கும் மிகப் பாரிய சவாலாக மாறியிருக்கின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் - பெருந் தொகையான மாணவர்கள் குவிந்துவர, இந்தச் சிறிய பாடசாலைகள் வெறிச்சோடிப் போகும் நிலை ஏன் ஏற்பட்டது என்பது மிகப்பெரிய வினாவாக மேலெழுந்துவருகின்றது.

ஒருபுறம் - பிரபல பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கே வகுப்புக்களின் பிரிவுகள் 3,4 என அதிகரிக்க - மறுபுறம் சிறிய பாடசாலைகளைக் கடந்து நகரத்திற்கு நகரும் மனோபாவம் ஏன் வியாபிக்கின்றது என்பது கல்வியாளர் சமூகத்தில் ஆதங்கத்தைத் தோற்றுவித்துவருகின்றது.

சிறிய பாடசாலைகள் இவ்விதமான தளர்வினைச் சந்திப்பதற்குரிய காரணிகள் எவையெனக் கண்டறியப்பட்டு, அவற்றுக்குத் தீர்வுகாணப்படாவிட்டால் வரும் ஆண்டுகளில் இப்பாடசாலைகளின் மொத்த மாணவர் தொகையே இரட்டை இலக்கங்களுள் அடங்கிவரும் பரிதாபநிலை தோன்றிவிடலாம்.

இது நீடித்தால் - இப்பாடசாலைகள் தமது செயற்பாட்டுத் தன்மையை இழக்கும் அபாயம் வந்துசேரும். இத்தளர்வுநிலை மேலும் பரவி - கற்கும் மாணவர்களிலும் கற்பிக்கும் ஆசிரியர்களிலும் சலிப்புநிலை தோன்ற பிரபல பாடசாலைகளுக்கு பிள்ளைகளை "ஏற்றுமதி செய்யும்" பொருளாதார வசதிவாய்ப்பில்லாத பெற்றோரால் தமது பிள்ளைகளின் கல்வியும் இடைநிறுத்தப்படலாம்.

இது, வெறும் கற்பனையான எதிர்வு கூறலல்ல. அண்மையில் கரவெட்டிப் பகுதியிலுள்ள விநாயகர் வித்தியாலயம் என்னும் சிறிய பாடசாலைக்கு நேர்ந்த கதிதான் இது.

இவ்வாறு சிறிய கிராமப் படசாலைகள் சரிவைச் சந்திப்பதைத் தடுத்துநிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என ஆராய்ந்தால், கிடைக்கும் பதிலும் திருப்திகரமானதாக இல்லாமலுள்ளது. யாழ். குடாநாட்டிலுள்ள பிரபல பாடசாலைகள் - இன்னும் வளமுள்ள பாடசாலைகளாக மாற்றம் காண, இச் சிறிய பாடசாலைகள் மெல்லச் சாகும் நிலையை அணுகிவருவதாகவே அறியமுடிகின்றது.

இந்த நிலையைத் தடுத்துநிறுத்த வேண்டிய கடமை பெருமளவில் கல்வித் திணைக்களத்தினருக்கும், அதேவேளை பொறுப்புணர்வு பெற்றோருக்கும் உள்ளது.

சிறிய கிராமப் பாடசாலைகளுக்கான வளப்பங்கீடும், ஆசிரியர் வளமும் மிகுந்ததரமுடன் பேணப்பட்டு வந்திருந்தால் - இவ்வாறான நிலை ஏற்படுவது காலத்துக்குக் காலம் ஓரளவாவது தடுக்கப்பட்டிருக்கும்.

அருகிலுள்ள பாடசாலை வளமுடனும், தரத்துடனும் இயங்கியிருந்தால் - இப்பாடசாலைகளை விடுத்து நகரப் பாடசாலைக்குப் பிள்ளையை அனுப்புவதுபற்றி பெற்றோர் சற்றுச் சிந்திக்கவே செய்வர். இது யதார்த்தம்.

ஆனால், அருகிலுள்ள பாடசாலை வளமிழந்துபோனால் - பெற்றோரின் கவனமும் நகருக்கு நகர்வது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இந்நிலையில் - இவ்விடயத்தில் முதற்கட்ட நடவடிக்கைகள் கல்வித் திணைக்களத்திடமிருந்தே மேற்கொள்ளப்படவேண்டும்.

அதேவேளை பெற்றோரும், ஒவ்வொரு பகுதியின் நலன்விரும்பிகளும் இணைந்து இத்தகைய பாடசாலைகளைச் "சாகவிடாது"காக்கவும் முன்வரவேண்டும்.

இல்லையேல் - இனிவரும் காலத்தில் சிறிய, கிராமப் பாடசாலைகள் பாழடைந்து, உருக்குலைந்துபோவதே விளைவுகளாகிவிடும்.

# 57

# சிதைவு சீராக வேண்டும்!

யாழ். மாவட்டச் சமூகக் கட்டமைப்பைப் பற்றிப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்தாலும் - குடும்ப உறவுகளைப் பொறுத்த வரை நல்லதொரு உறவுநிலையைப் பேணுவதான பண்பே பன்னெடுங்காலமாக நிலவிவந்தது.

குறிப்பாக, கணவன் - மனைவி உறவென்று பார்க்கும்போது மிகவும் அந்நியோன்னியமான, எடுத்துக்காட்டான பிணைப்புக்களுக்கு ஏராளமான உதாரணங்களை யாழ். சமூகம் என்றைக்கும் தந்துவந்திருக்கிறது.

யாழ். குடாநாட்டின் - கிராமப் பகுதிகளாயினும் சரி, நகர்ப் புறமாயினும் சரி இந்த உறவுநிலை என்பது கௌரவமிக்க, மதிக்கத்தக்க, போற்றுதற்தக்க நிலையிலிருந்ததை எவரும் மறுக்க முடியாது.

கணவன் - மனைவி இருவரிடையே முரண்பாடுகளோ, சச்சரவு களோ தோன்றினாலும் கூட அந்த வேறுபாடு, அந்த வீட்டின் எல்லைகளைத் தாண்டாத ஒரு "கிடுகுவேலிக்" கலாசாரமும் யாழ்ப்பாணத்தில் வேரூன்றியிருந்ததை எவருமே கண்டனர்.

யாழ்ப்பாணச் சமூகத்தை ஆராயப் புகுந்த சமூகவியலாளர்கள் கூட - இந்த இறுக்கமான கட்டமைப்பைப் பற்றிய ஆய்வுகளில், பிரச்சினைகளை ஒடுக்கியே வைத்திருக்கும் பண்பு தெரிந்ததாகக்

குறிப்பிட்டாலும் - தமது பிரச்சினைகளை ஒடுக்கி அல்லது வேறுவார்த்தைகளில் கூறுவதானால் - அப்பிரச்சினை பூதாகரப் படுத்தப்படாமல் தடுத்துவிடும் மனோபாவம் மிகுந்திருந்ததை அவர்கள் சுட்டிக்காட்டவே செய்தனர்.

இவ்வாறானதொரு சூழலில் - நேற்றுமுன்தினம் கையில் கிடைத்த புள்ளிவிபரமொன்று யாழ்ப்பாணத்தில் கணவன் - மனைவி உறவுநிலையில் ஏற்பட்டிருக்கும் மிகப்பெரும் பாதிப்பை முகத்திலடித்தாற்போல எடுத்துச் சொன்னது.

கடந்த இரண்டு வருடங்களில் யாழ்ப்பாணத்தில் - 130 விவாகரத்து வழக்குகளும், 114 தாபரிப்பு வழக்குகளும் பதிவாகியிருந்ததாக நீதிமன்றப் புள்ளிவிபரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, 1996 ஆம் ஆண்டுமுதல் 2000 ஆண்டுவரை பதிவான 231 விவாகரத்து வழக்குகளோடும், 150 தாபரிப்பு வழக்குகளோடும் ஒப்பிடும்போது கடந்த இரண்டு வருடங்களில் - 2001, 2002 ஆம் ஆண்டுகளில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை பெரும் அதிகரிப்பென்றே கொள்ளமுடியும்.

சமூகவியல் ரீதியில் - இத்தகைய அதிகரிப்பு, அதுவும் உறவு நிலைகளைப் பாதிக்கும் விவகாரங்களில் காணப்படும் உயர்வு, மற்றைய துறைகளைப்போல எளிதில் இழிவுபடுத்திட முடியாததாகும்.

அதுவும் - முன்னரே குறிப்பிட்டது போன்று யாழ்ப்பாணச் சமூகம் போன்ற, சூழ்நிலைகளை இறுக்கமெனப் பேணிய சமூகத்தில் - இத்தகைய பிரிவுகள் ஆர்முடுகலென அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டு, தீர்வு காணப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

சீதனப் பிரச்சினை, தொழிலின்மை, வறுமை, கணவன் - மனைவி பிரிந்திருத்தல், உறவுகளால் பிரச்சினை, இடம்பெயர்வு போன்ற காரணங்களே இந்தப் பிரிவுகளுக்கு அடிப்படையென அடையாளங்காணப்பட்டன.

அதுவும் - சில விவாகரத்து வழக்குகள் திருமணம் நடந்து 4,5 மாதங்களுக்குள்ளேயே நீதிமன்றங்களுக்கு எடுத்துவரப் பட்டுள்ளன.

இந்த நிலைமைகளினடிப்படையில் - திருமணவாழ்வை ஆரம்பிப்பதற்குரிய புரிந்துணர்வும் சகிப்புத்தன்மையும் கணவன் - மனைவியிடம் காணப்படாததும், சீதனம் போன்ற நிராகரிக்கப்படவேண்டிய, ஆனால் பாரம்பரிய வலுமிக்க பொருளியற் காரணிகளின் மதிப்பிழந்து போகாத செல்வாக்கும் - வேறு புறக்காரணிகளும் திருமணபந்தத்திற்கு அச்சுறுத்தலாகியுள்ளதை உணரமுடிகின்றது.

அதேவேளை, போர்ச்சூழலின் பின்னர் உருவான அல்லது வலுப்பெற்ற தொழில் வாய்ப்பின்மை, இடம்பெயர்வு, கணவன் - மனைவி பிரிந்திருத்தல் என்பனவும் விவாகரத்துக்களுக்குக் காரணமாகியுள்ளன.

இவை வெளிப்படையாகத் தெரியும் காரணிகளானாலும் கூட இந்தவிடயங்கள் மிக ஆழமாகவும், உணர்வுபூர்வமாகவும் ஆராயப்படவேண்டிய தேவை இன்று உருவாகியுள்ளது.

விவாகரத்துக்கள் பெருகிப்போன அல்லது சாதாரணமாகிப் போன சமூகமாக அடையாளம் கொள்ளாமல் - இப்பிரிவுகளைத் தணிக்கவேண்டிய அல்லது தடுக்கவேண்டிய பொறுப்பும் சகலருக்கும் உள்ளது.

பொறுப்பும் - பெறுமதியும் மிக்க பந்தத்தைத் தக்கவைக்க வேண்டிய கணவன் - மனைவி முதலாக பிரிவுகளுக்கான காரணங் களைத் தூண்டும் ஊக்கிகள் வரை அனைத்துமே கவனத்திற் கொள்ளப்படவேண்டியது இந்தவகையில் அவசியமாகின்றது.

ஏனெனில், அளப்பரிய பண்புகளும், செழுமையான எண்ணங் களும் கொண்ட கணவன் - மனைவியின் நீடித்த உறவே ஆரோக் கியமான சமூகத்திற்கும், எதிர்காலச் சந்ததிக்கும் அடித்தளமானது என்பதை அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

# 58

## பழைய பாதையில்...!

சமாதான முயற்சிகளில் இந்தியா கொண்டுள்ள "அக்கறையும் , நிலைப்பாடும்" மீண்டுமொருமுறை தெளிவாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

இந்திய வெளியுறவுச்சேவையில் சிரேஷ்ட அதிகாரியாக வெளியுறவுச் செயலாளராகக் கடமையாற்றி, தற்போது இந்திய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைவகுப்பில் ஆலோசக ராகவும் இருந்துவரும் யோகேந்திரநாத் டிக்ஸிற் - "Gulf News" சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் சமாதான முயற்சிகளை எப்படி இந்தியா பார்க்கின்றதென்பதை வெளிப்படுத்தி இருக்கிறார்.

அமைதி முயற்சிகளைப் பயன்படுத்தி, தமது தாயகப் பகுதிகளைக் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளப் புலிகள் திட்டமிட்டு வருவதாகவும், இது குறித்து நோர்வே நாட்டவர்கள் கொஞ்சமாவது புரிந்துகொள்வார்கள் எனத் தான் நம்புவதாகவும் டிக்ஸிற் தெரிவித்திருக்கிறார்.

டிக்ஸிற்றின் இந்தக் கருத்துக்கள், அடிப்படையில் - விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கையீனத்தைத் தோற்றுவிக்கவேண்டும், அவர்களது அமைதியின்பாலான விசுவாசத்திற்கு மாசு கற்பித்து விடவேண்டும் என்ற தெளிவான இலக்குகளைத் தெரிவிப்பதுடன்,

நோர்வே மேற்கொண்டுவரும் மத்தியஸ்த முயற்சியை, கேலியோடு விமர்சிக்கும் "பிரபுத்துவப்" பார்வையையும் அவர் அள்ளி வீசியிருப்பதை எடுத்துக்காட்டுகின்றன.

டிக்ஸிற்றின் இக்கருத்தானது வெறுமனே தனியொரு இந்திய ராஜதந்திரியினது கருத்து என ஒதுக்கிவைத்துவிட முடியாததாகும்.

ஏனெனில், இலங்கை விவகாரத்தில் நீண்டகாலப் பரிச்சயமுடைய, மிகமுக்கிய துரோகத்தனங்களுக்கும் குழப்பங்களுக்கும் காரணமான டிக்ஸிற் - இந்திய வெளியுறவுச் சேவையில் இன்றும் ஆதிக்கம் செலுத்திவரும் மிக முக்கிய நபர் என்பதோடு - இந்தியாவின் பார்ப்பனிய அதிகாரவர்க்கத்தினதும் கொள்கை வகுப்பாளர்களினதும் பிரதிநிதியாகவும் இனங்காணப்படக் கூடியவரேயாவார். இந்தவகையில் - இந்தியா அமைதி முயற்சிகளை எவ்வாறு நோக்குகின்றது, அதனது இலக்கு என்ன என்பது டிக்ஸிற்றின் கருத்துக்களினூடாக உன்னிப்பாகக் கவனிக்கப்படவேண்டியதாகின்றது.

அமைதி முயற்சிகளின் ஆரம்பம் முதலே சந்தேகத்துடனும், ஒதுங்கியிருப்பதாகவும் காட்டிக்கொண்டே, உள்ளூர ஏராளம் அரசியல் நகர்வுகளுடனும் செயற்பட்டுவந்த இந்தியத் தரப்பு தனது அடுத்தகட்ட நடவடிக்கையை மத்தியஸ்தம் வழியேயும், அரசியல், பொருளாதார ஆதரவுரீதியாகவும் அமைதிச் சூழலை வளர்த்தெடுக்க முயற்சிக்கும் நாடுகளின் மீது விஸ்தரித்துள்ளது.

நோர்வே தனது நிலைப்பாட்டில் உறுதியாகவும், விமர்சனங்கள் - எதிர்ப்புக்களைக் கடந்தநிலையிலும் தனது பணிகளைத் தொடர்ந்துவரும்போது அமைதி முயற்சிகளில் தன்னார்வத்தோடு முக்கிய பங்களிக்கமுயலும் ஜப்பானின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க இந்தியா முயன்றது. இந்தவகையில் - புதுடெல்லிக்குச் சென்றிருந்த ஜப்பானின் விசேட தூதுவர் யகூசி அகாஷியைச் சந்தித்த - இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ரா - இலங்கை விவகாரத்தில் ஜப்பான் உதவுவதை இந்தியா விரும்பவில்லை என்பதை நேரடியாகவே வலியுறுத்தியிருந்தார்.

இதனைக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் மறுத்தபோதும், கொழும்பு வந்த அகாஷி செய்தியாளர்களிடம் பேசும்போது. இந்தியா தன்னிடம் அழுத்திச் சொன்னதை பகிரங்கமாகவே வெளியிட்டதுடன் - இலங்கையின் சமாதானமுயற்சியில் தலையிட வேண்டாம் என இந்தியா ஒருபோதும் தமக்கு வேண்டுகோள் விடுக்கமுடியாது என்றும் தெரிவித்தார்.

இந்தவகையில் - ஜப்பானையும் கட்டுப்படுத்த முயன்ற இந்தியாவின் முயற்சிகள், அது நினைத்ததுபோல வெற்றியளிக் கவில்லை என்றே கூறலாம்.

இருந்தபோதும் - தனது தலையீடுகளையும், விசமத்தனமான பிரச்சாரத்தையும் இந்தியா இத்துடன் கைவிடுவதாகத் தெரிய வில்லை.

ஏற்கனவே - இலங்கையுடன் தான் பெற்ற அனுபவங்களை மறக்கமுடியாதிருந்தும் - இந்தியாவின் ஆதிக்கமனப்பாங்கும், இலங்கை விவகாரத்திற்குத் தீர்வொன்று ஏற்படாமல் குழப்பநிலையைத் தக்கவைத்து அரசியல் ஆதாயம் தேடும் அப்பட்டமான சுயநலமும், மீண்டுமொருமுறை டிக்ஸிற் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதை தமிழ்மக்கள் எச்சரிக்கையுடன் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

# 59

## உயரிய சமுதாயத்திற்கு...

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடித் தளத்தை ஏற்படுத்தித் தரும் காரணிகளில் பாடசாலைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன.

இளம் பருவத்தினரின் பெருமளவு நேரம் பாடசாலைகளில் செலவிடப்படுவதுடன், சமூகமயமாதலுக்கான முகவர்களாகப் பிரதான பாத்திரத்தையும் கல்விச்சாலைகளே வகிக்கின்றன.

இந்தவகையில், தனியே கற்றல் மட்டுமல்லாது, ஒவ்வொரு மாணவனும், மாணவியும் சமூகத்திற்குப் பொறுப்பானவர்களாக உருவாவதற்கு வேண்டிய வழிகாட்டு நெறிகளையும் தருவதாகப் பாடசாலைகள் திகழ்கின்றன.

இவ்வகையில் ஒரு முழுமையான மனிதனைத் தோற்றுவிப் பதற்கான பிரதான சூழ்நிலையைத் தரும் பாடசாலைகளில் மாணவர்களைச் செம்மையானவர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும் வளர்த்தெடுப்பதற்கு ஒழுக்கக் கல்வியை அறிமுகம் செய்ய கல்வியமைச்சு தீர்மானித்திருக்கின்றது. இந்த நடவடிக்கையானது காலத்திற்குத் தேவையான ஒன்றென்பதோடு - இதனை அமுலாக்கவேண்டிய கட்டாயத்தையும் இன்றைய சமூகநிலை வலியுறுத்துவதாக அமைகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே காணப்படுகின்ற - வேண்டத்தகாத பண்புகளைக் களையவும், நற்பண்புகளையும் நல் ஒழுக்கங் களையும் கடைப்பிடிப்பதற்கான வழிவகைகளை மாணவர்களிடையே உள்வாங்கச் செய்யவும் ஒழுக்கக்கல்வி அவசியமாகின்றது.

இன்றைய பாடசாலை மாணவர்களிடையே பெற்றோரை, மூத்தோரைக் கனம்பண்ணும் பண்பு குறைவடைந்திருக்கின்றது.

அனுபவத்திலும், அறிவிலும், வயதிலும் மூத்தவர்களிடமிருந்து அறிவுரைகளை, ஆலோசனைகளைப் பெறுவதை இன்றைய இளம் சமுதாயம் வேப்பங்காயாகவே எண்ணுகின்றது.

பணிவும், தன்னடக்கமும் தேடற்கரிய பண்புகளாகிவிட்டன. இவை அனைத்தும் கடந்து, மூத்தோரை உளரீதியாக மட்டுமல்ல உடல்ரீதியாகத் துன்புறுத்தி, அதில் சந்தோஷம் காணுமளவிற்குக் கூட நிலைமை தீவிரமடைந்திருக்கின்றது.

அண்மையில் - ஒரு சில தினங்களுக்கு முன்னர், நாவலர் வீதிப்பகுதியில் வீதியோரமாக நடந்துசென்ற வயோதிபர் ஒருவரை, எதுவித காரணமுமின்றி வயரால் தாக்குமளவுக்கு அதனைச் சுவாரசியமான சம்பவமாக எடுத்துக்கொண்டு, அந்த வயோதிபர் துன்பப்படுவதைக் கண்டு நகைக்குமளவுக்கு - இளஞ்சமுதாயத்தினரின் போக்கு உருவாகியிருப்பதை இங்கு ஒரு உதாரணமாக நாம் நோக்கலாம்.

அதேவேளை, சமூகத்தில் நடந்துகொள்ளும் வழிமுறைகள், பண்புகள் கூட இன்றைய மாணவர்களிடம் இல்லாமல் போவதையும் வெகுசாதாரணமாகவே கண்டுகொள்ள முடிகின்றது.

வீதிகளில், பொது இடங்களில் குழுக்களாகச் சேர்ந்து இளைஞர்கள் புரியும் வரைமுறையற்ற செயல்களும், கிண்டல் கேலிகளும் முறைதவறிய நடத்தைகளும் - முகத்தைச்சுழிக்க வைப்பதை, வேதனைப்படுத்துவதை யாழ். குடாநாட்டில் எங்கெங்கும் அவதானிக்கக்கூடியதான சமூகச்சூழலை பலரும் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றனர்

இன்றைய மாணவர்களிடம் பொறுப்புணர்வும், தலைமைத் துவப் பண்பும் பற்றிப் பேசினால் - அவற்றை ஏதோ விநோதப் பண்புகளாகப் பார்க்கும் மாணவர்களையே தாம் வகுப்பறைகளில் காண்பதாக ஆசிரியர் ஒருவர் கவலையுடன் குறிப்பிட்டார்.

அதேவேளை, தொலைக்காட்சி, திரைப்படங்களின் செல்வாக்கும் அவற்றினூடான பதிவும் மாணவர்களை இன்னமும் மாய உலகத்திற்குள்ளேயே வைத்திருப்பதில் வெற்றிகாணுகின்றன.

அதீதமான பாலியல் சார்ந்த கிளர்வுகள், நெறிமுறையற்ற வன்முறைசார்ந்த செயற்பாடுகள், யதார்த்தத்திற்குப் பொருந்தாத கனவுச்சூழல்கள் என இவை கற்றுத்தரும் வேண்டத்தகாத பாடங்கள் - இன்று எமது வீடுகளிலுள்ள இளம் பிஞ்சுகளிலேயே வெளிப்படுத்தப்படுகின்றன.

இத்தகைய புறச்சூழல்கள் பற்றிய தெளிவும், வரைமுறைகளும், உண்மையும் மாணவர்களிடம் எடுத்துச்சொல்லப்படவேண்டும்.

சமூகத்திற்கேற்ற உயர் பண்புகள் வகுப்பறைகளில் பயிற்சி களினூடாக, செயற்பாடுகளினூடாக வலியுறுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகள் - அறிவுசார் கல்வியோடு மட்டும் நின்றுவிடாமல், பூரணத்துவமான மனிதர்களை உருவாக்கும் சமூகமயமாதல் பங்கினையும் அவை சிறப்பாக நிறைவேற்றவேண்டும். இதற்கு, ஒழுக்கக்கல்வி அறிமுகப்படுத்தப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

உலகின் தரம்வாய்ந்த கல்வி நிறுவனங்கள் பலவற்றிலும் ஒழுக்கக்கல்வியானது வகுப்பறைக் கற்பித்தலுடன் இணைக் கப்பட்டு, அது ஓர் பாடமாக ஆக்கப்பட்டிருக்கும் நிலையில்,

இந்த ஒழுக்கக்கல்விக்கான பரீட்சைகளும், மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு, இக்கற்றலில் தேர்ச்சிபெறுவோரே அடுத்த கட்டத்திற்கு நகரமுடியும் என்ற கட்டாயம் அங்கெல்லாம் அமுலாக்கப்படும்போது-

இங்குள்ள பாடசாலைகளும் ஒழுக்கக்கல்வியைப் போதிக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் முழுமனதுடன் வர வேற்கவேண்டும்.

மக்களின் வாழ்வியலில் முக்கியத்துவம் பெறும், வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு அடித்தளமாகும் ஒழுக்கத்தை எமது இளஞ் சமுதாயத்திற்கு சற்றே அழுத்தத்துடன் எடுத்துச்சொல்லி, அவர்களை வழிநடாத்த அனைவருமே ஒருங்கிணைந்து செயற் படவேண்டும்.

# 60

## பசுமை வதம்!

யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவற்றுள் இயற்கைச் சமநிலைக் குழப்பமும் முக்கியமானதொன்று,

கடந்தகாலப் போர் நடவடிக்கைகள் - மக்களை அழித்ததும், கட்டடங்களைத் தகர்த்ததும், பொருளாதாரத்தைச் சிதைத்ததும் வெளிப்படையாகத் தெரிந்த பாதிப்புக்களென்றால் -

இயற்கைக்கு நேர்ந்த அழிவும் பாதிப்பும் ஓரளவு கண்ணுக்குத் தெரிந்தாலும் - நீண்டகாலப் பாதிப்புக்களாக, மறைமுகமாக இயற்கைவளங்கள் அடைந்திருக்கும் காயம் வலுவானதே எனச் சூழலியலாளர்கள் கூறுகின்றனர்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் - தென்மராட்சிப் பகுதியில் தலையிழந்து, கருகிநிற்கும் தென்னைகளும், வன்னிப் பெருநிலப்பரப்பில் குண்டுச் சிதறல்களாலும், வெடிமருந்தின் தாக்கங்களினாலும் அழிந்திருக்கும் அழகிய காடுகளும் ஏ-9 வீதிவழியே வரும் எவரது மனதையும் கலங்கச் செய்யும் பேரழிவுகளாகும்.

இவ்வளவு இருந்தும் - இயற்கை வளத்தைப் பாதுகாப்பதென்றே உறுதிபூண்டு சில அமைப்புக்களாவது இயங்கிவருவது எமது இயற்கை வளம் காக்கப்படும் என்ற நம்பிக்கையைத் துளிர்விடச் செய்திருப்பதுடன், சூழல் காப்பாளர்களுக்கு மகிழ்ச்சியையும் தந்துவருகின்றது.

இந்தவகையில் அண்மையில் - வன்னிப் பெருநிலப்பரப்பின் காடுகளிலுள்ள வன விலங்குகளைக் காப்பதற்கு, தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவு ஒழுங்கமைப்புக்களை அறிவித்துள்ளது.

வன விலங்குகளின் அழிவுவீதம் அதிகரித்துவருவதால், வன விலங்குகள் அழிந்துவிடக்கூடிய அபாயம் எழுந்துள்ளதால், உயிரினச் சமநிலை பாதிப்புறும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் வனவளப் பாதுகாப்புப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் கிளிநொச்சிப் பகுதிக்குச் சென்றிருந்த, உலக வங்கியின் தென்னாசியப் பகுதிக்கான உபதலைவர் மீகோ நிஷிமிசு யுத்தம் அழிந்தநிலையிலும் வன்னிப் பெருநிலப்பரப் பின் வயல்வெளிகள் பசுமைபூண்டு மலர்ந்திருந்ததை மிகவும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். தமிழ் மக்களின் தளராத உறுதியை அந்தப் பசுமை தனக்கு எடுத்துச் சொன்னதாக அவர் புளகாங்கிதமடைந்திருந்தார்.

இந்தவகையில் - ஒருபுறம் எமது இயற்கை வளம் தாக்கப்படுவதற்கான முயற்சிகள் பற்றியதாயும், எமது மக்களின் தளராத உறுதி தொடர்பாகவும் - சிலாகிக்கப்படக்கூடியதாக இருக்கும்போது,

மறுபுறத்தில் - யாழ். மாவட்டத்தில் நடந்துவரும் சில செயற்பாடுகள் இயற்கை வளக் காப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துவருவதைச் சுட்டிக்காட்டவேண்டிய தேவையும் எழுந்தது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் பசுமையான, பயன்தரும் மரங்கள் தறிக்கப்படுவதும், புதிய கட்டடங்கள் அமைக்கிறோம், புனரமைப்புச் செய்கிறோம் என்றவகையில் வீடுகளிலுள்ள மரங்களை அழித்துவிடுவதும் இன்று சர்வசாதாரணமாகிவிட்டது.

அண்மையில் - இளவாலைப் பகுதியில் இவ்வாறு நடந்த நிகழ்வொன்று - சூழல் பாதுகாப்புச் சங்கத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை - குடாநாட்டிலுள்ள பொது இடங்கள் மற்றும் வயல் நிலங்களில் சட்டவிரோதமாக மணல் அகழும் வேலைகளும் அதிகரித்துவருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

மீசாலை, மட்டுவில், வரணி, கச்சாய், அரியாலை, வல்லிபுரம், வல்லை, மணற்காடு, துன்னாலைப் பகுதிகளில் - எழுந்தமானமாக, கண்மூடித்தனமாக மண் ஏற்றப்படுவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

எதுவித தூரநோக்குமில்லாது மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த, யாழ். மாவட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் அறிவித்தல் விடுத்திருக்கிறது.

இந்த அறிவித்தலின் பிரகாரம் - குறிப்பிட்ட இடங்களில் மணல் அகழ்வுசெய்யத் தடைவிதிக்கப்பட்டிருப்பதுடன், தவறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. யாழ். குடாநாடு, வனவளம் பெருமளவில் கொட்டிக்கிடக்கும் பூமியல்ல. அதேவேளை, நிலத்தடி நீரை மட்டுமே நம்பியிருக்கும் பிரதேசமும் கூட.

இந்நிலையில் - கண்மூடித்தனமாக, பசுமையான மரங்களை அழிப்பது, கிடைக்கும் மழைவீழ்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதோடு மண் அகழ்வு போன்ற நடவடிக்கைகள் நிலத்தடிநீர் வளத்தில் பாதிப்பை ஏற்படுத்தி, குடாநாட்டை உவர் நிலமாக்கிவிடும் ஆபத்தும் இருப்பதை இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் உணரவேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட வளமோடு இருக்கும் குடாநாட்டுப் பிரதேசம் - இதனால் எதிர்காலத்தில் மனிதவாழ்க்கைக்கு உகந்த சூழற்தன்மையை இழப்பதோடு, பாலைநிலப் பூமியாகவும் மாறிவிடவும் கூடும்.

எனவே, யுத்தம் தணிந்துள்ள இவ்வேளையிலாவது அழிந்த, சிதைந்த எம் மண்ணில் எஞ்சியிருக்கும் வளங்களையும் அழித்துவிடும் முட்டாள்தனமான செயற்பாடுகளிலிருந்து எம்மைத் தவிர்த்துக் கொள்வோம். உள்ளதை இன்னும் பெருக்கும் ஆக்கப் பணிகளில் சிரத்தை காட்டுவோம்.

# 61

# அரிசியில் ஏப்பம்!

எரியும் வீட்டில் இடுங்கியது அறுதியென உயிரிழந்து, வீடிழந்து, வாசலிழந்து இனி இழப்பதற்கு எதுவுமில்லை என வாடிநிற்கும் மக்களுக்கான நிவாரண விநியோகத்திலும் மோசடி என்பது தொடர்கதையாகின்றது.

ஏற்கனவே, யாழ். குடாநாட்டில் கடந்தகாலங்களில் நடைபெற்ற ஊழல், மோசடிகள் - இம்முறை அரிசி அபகரிப்பு வழியாகப் புதிய கதையாகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்திற்கென இந்தியாவிலிருந்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நியமித்த வழங்குநரால் பெறப்பட்ட அரிசி விநியோகத்தில் பெரும் மோசடி நடந்திருப்பது "நமது ஈழநாடு" வாயிலாக வெளிவந்ததைத் தொடர்ந்து இந்த மோசடியின் பரிணாமமும், மோசடி நடந்த விதமும் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

இந்தியாவிலிருந்து 2000 மெற்றிக் தொன் அரிசியை ஏற்றியதாகக் கப்பலின் பதிவுகள் சொல்ல, ஒவ்வொரு மூடையிலும் பத்துக் கிலோவுக்கும் அதிகமாகக் களவாடப்பட்டு, 500 மெற்றிக் தொன் அரிசி "கபளீகரம்" செய்யப்பட்ட உண்மை தற்போது வெளிவந்திருக்கிறது.

இந்த மோசடியில் ஈடுபட்டது யார் என்ற சந்தேகம் வலுவாக எழுந்துவரும் நிலையில், இதுபோன்று இன்னும் எத்தனை மோசடிகள் இடம்பெற்றனவோ, இன்னமும் இடம்பெறக் காத்திருக்கின்றனவோ என்ற கேள்விகள் மக்களிடையே அதிகரித்துவருகின்றன.

நடைபெற்ற அரிசி மோசடியில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளபோதும் - இதில் மறைந்துள்ள பெரியகைகளின் செல்வாக்கினூடாக, உண்மைகள் எவ்வளவு தூரம் வெளிவருமென்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தமிழ் மக்களின் மீதான யுத்தத்திலும், பின்னர் யுத்தத்தின் பாதிப்புக்களை நீக்குவதாகக் கூறி மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளிலும் - கையாடப்பட்ட, பைக்குள் விழுந்த நிதியளவு எத்தனை கோடி பெறும் என்ற அங்கலாய்ப்புடன் இந்த "அரிசி மோசடியும்" இணைந்துவிட்டது.

சுருட்டியவரை இலாபமென தமிழ் மக்களை ஏமாற்றியும், ஏய்த்துப் பிழைக்கும் கூட்டங்கள் இனியும் செயற்பட்டால் - நாங்கள் என்னென்ன வழிகளில் எல்லாம் வஞ்சிக்கப்படுவோமோ எனத் தமிழ் மக்கள் ஏங்கிநிற்க,

அரிசி மோசடியின் பின்னால் நடந்த இன்னுமொரு சுருட்டல் பற்றியும் மக்களுக்குத் தெரியவந்திருக்கிறது. வடமாகாண அரிசி உற்பத்தியில், குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள உற்பத்தியாளர் களிடமிருந்து அரிசியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும், அந்த வாய்ப்புக்கள் தட்டிக்கழிக்கப்பட்டதும்,

அதற்குப் பதிலாக தரகுப்பணத்தின் செல்வாக்கால் - பெரும் பணமுதலைகளிடம் - யாழ். குடாநாட்டு நிவாரணத் தேவைக்கான அரிசி விநியோகம் அகப்பட்டிருந்ததும் வெளிப்படையாகி இருக்கிறது.

உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து நியாயமான விலையில் அரிசியைப் பெறுவதன் மூலம் உள்ளூர் உற்பத்தியா

ளர்களை ஊக்குவிப்பதுடன், கடந்தகாலங்களில் எழுந்த தரமான அரிசி விநியோகப் பிரச்சினையையும் தவிர்த்திருக்கலாம் என யாழ். அரச செயலகத்தினால் சிபார்சு செய்யப்பட்டும், அந்த சிபார்சு புறந்தள்ளப்பட்டிருப்பது நியாயமான கோபத்தை மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது.

வடமாகாணத்திலுள்ள அரச செயலகங்கள் மூலம் - உற்பத்தியாளர்களிடம் இருந்து அரிசியைப் பெறுவதனால் - மிகச் சுருக்கமான போக்குவரத்து வசதியுள்ள நிலையில், தரைவழியாகவே அரிசியைக் குடாநாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய சூழ்நிலையில், இந்தியாவிலிருந்து அரிசியைக் கப்பலில் ஏற்றி எடுத்துவருவதன் மூலம் - பொருட்களைக் கப்பலில் ஏற்றும் கூலி, கப்பற் போக்கு வரத்துக்கான செலவு, பருத்தித்துறையில் பொருள் இறக்கக் கூலி, மீண்டும் அரிசியை அரச செயலகக் களஞ்சியங்களுக்குக் கொண்டுவரும் கூலி என- “சுண்டங்காய் காற்பணம் சுமை கூலி முக்காற்பணம்” கதையும் இங்கு நடந்திருக்கிறது.

இவ்வளவையும் மீறி அல்லது மறைத்து, அரிசியில் ஆதாயம் தேடமுனைந்தவர்களது வேடம் இப்போது களையப்பட்டுள்ள நிலையில் - இனி அடுத்துவரும் நடவடிக்கைகள் நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையாகவும் அமைவது அவசியம் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர், வலியுறுத்துகின்றனர்.

தம்மைச் சுரண்டும் நடவடிக்கைகளையும், ஏமாற்றி ஏய்க்கும் செயற்பாடுகளையும் இனிமேலும் அனுமதிக்க மக்கள் தயாராகவில்லை என்பதைக் குற்றம் புரியமுனைவோர் குறித்துக் கொள்ள வேண்டும்.

# 62

## ஊர் கூடித் தேரிழுப்போம்!

நோய்வாய்ப்பட்டு, தளர்வுற்றுக் கிடந்த விளையாட்டுத் துறையை தூக்கிநிறுத்தி மீண்டும் புத்தூட்டம் அளிப்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள செய்தி உள்ளூர் விளையாட்டு ஆர்வலர்களினதும், வீர, வீராங்கனைகளதும் காதுகளில் தேன்பாய்ச்சும் செய்தியாக ஒலிக்கிறது.

இந்தவகையில் - யுத்த மேகங்கள் சூழ்ந்து திரண்டிருந்த வட கிழக்குப் பகுதியில், மாபெரும் விளையாட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் மிகப் பிரமாண்டமான முறையில் தயாராகிவருகின்றன.

தமிழீழ விளையாட்டுத் துறையினர் நடாத்தும் தமிழீழ தேசிய பெருவிளையாட்டுப் போட்டி 2003, இம்முறை இரண்டாவது தடவையாக கிளிநொச்சியில் பெருவிமரிசையாக நடைபெறவுள்ளது.

வட கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இருந்தும், இம்முறை போட்டியாளர்கள் கிளிநொச்சியில் கூடவிருப்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.

இவ்வாறான விளையாட்டு விழாக்ககள் நலிந்துகிடக்கும் உள்ளூர் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் என்பதோடு, இலைமறைகாயாக மறைந்திருக்கும் திறமையாளர்களை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தும் அற்புத வாய்ப்பாகவும் அமையவுள்ளது.

வட - கிழக்கைப் பொறுத்தவரையில் போர் காரணமாக விளையாட்டுத்துறை பெருமளவில் விருத்தியடையவில்லை என்பதோடு, விளையாட்டுத்துறையை வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகளும், ஊக்குவிப்பும் கிடைப்பது மிகக்குறைவாகவே இருந்தன.

இந்த நிலையில் - தற்போது உருவாகின்ற சமாதானச் சூழலைச் சரிவரப் பயன்படுத்தி, உள்ளூர் விளையாட்டு வீரர்களைச் செம்மைப்படுத்தி, திறன் வளர்த்து முன்னேற்றும் பாரிய பணி காத்திருக்கின்றது.

இந்த அவசிய நடவடிக்கையில், தமிழீழ விளையாட்டுத்துறை கவனம்கொண்டு, அதன் தொடக்கமாக இவ்வாறான விளையாட்டு விழாக்களை நடாத்தமுன்வந்திருப்பது காலத்தின் தேவை கருதிய, பாராட்டுக்குரிய விடயமாகும்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் - விளையாட்டுத் துறைக்கெனத் தனியான அமைச்சர் முதல் ஒவ்வொரு விளையாட்டுக்குமெனத் தனித்தனிச் சபைகள், அமைப்புக்கள் அமைக்கப்பட்டு சகலவசதிகளும், வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ள நிலையில் - தமிழர் பகுதிகள் மாற்றான்தாய் மனப்பான்மையுடன் வெளிப்படையாகவே புறக்கணிக்கப்பட்டுவந்தன.

இவ்வாறான சூழலில் - எம்மை நாமே வளர்த்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கவேண்டிய அழுத்தமான சூழலில், விளையாட்டுப் பெருவிழா போன்ற முயற்சிகள் - “நாமும் வெல்வோம்” என்ற உறுதியையும் ஊக்கத்தையும் எமது விளையாட்டு வீரர்களிடையே வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

இம்முறை உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், வலைப்பந்து, கரப்பந்து ஆகிய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, வரும் காலத்தில் மைதான விளையாட்டுக்கள், மெய்வல்லுநர் விளையாட்டுக்கள், உள்ளக விளையாட்டுக்கள் எனப் பல்வேறு துறைகளிலும் - தமிழீழ விளையாட்டுத்துறையினர் ஊக்கம் தரவேண்டுமென அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

இது, விளையாட்டுத்துறையினர் மட்டுமே தனித்துச் சாதிக்கக்கூடிய விடயமல்ல. எமது பிரதேசங்களிலுள்ள பொருளாதார வலுவுள்ளோர், வர்த்தகர்கள், அமைப்புக்கள் என அனைவரும் இணைந்து, வேண்டிய உதவிகளையும் ஒத்துழைப் புக்களையும் செய்யும்போது - இவையெல்லாம் அதிவீச்சுடன் சாத்தியமாகும்.

ஆரோக்கியமும், விடாமுயற்சியும், திறனும் கொண்ட இளம் விளையாட்டு வீரர்களை எமது மண்ணிலிருந்து உருவாக்க அனைவரும் ஒன்றுதிரண்டு செயற்பட்டாலேயே, எமது மண் ணிலிருந்தம் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் தோன்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும். எனவே, விளையாட்டுத்துறையினரின் தொடர்முயற்சிகளுக்கு அனைவரும் ஆதரவளிப்போம்.

உலக அரங்குகளில் நாளை எமது வீரர்களும் வெற்றிக்கொடி நாட்ட - இன்றே எம் பங்களிப்பைப் பற்றிச் சிந்திப்போம்; செயற் படுவோம்.

# 63

## யாருக்குச் சுதந்திரம்...?

*இன்று, இலங்கை பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்ததைக் கொண்டாடும் நாள். இன்றுடன் 55 ஆண்டுகளாக இலங்கை சுதந்திரமடைந்துவிட்டதாகக் கூறப்பட்டாலும் - இத்தீவில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த 55 ஆண்டுகளும் இனரீதியான ஒடுக்குமுறையின் நினைவு ஆண்டுகளாகவே கவனிக்கப்படுகின்றன.*

*1948 இலிருந்து தமிழர்கள் மீது அடாவடித்தனத்தையும், இன ஒழிப்பையும் வகைதொகையின்றிக் கட்டவிழ்த்துவிட்ட சிங்கள அரசாங்கங்கள் - தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கிக் கொடுமைப்படுத்தினரே தவிர, தமிழினமும் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ளும் நிலையிலிருந்து வெகுதொலைவிலேயே தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர்.*

*தமிழர்களுக்கான சம உரிமைகளைக் கொடுப்பதற்கு மட்டுமல்ல, இருக்கின்ற அடிப்படை உரிமைகளையும் பறித்துவிட்ட வரலாறே இலங்கையின் சுதந்திர வரலாறாக இருக்கிறது.*

*1948 இல் இந்திய வம்சாவழித் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமான இத்துன்ப வரலாறு - இன்னும் தொடர் கதையாகிவருகின்றது.*

*1956 இல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவந்ததன் மூலம் - தமிழ் மக்களின் மொழியுரிமை பறிக்கப்பட்டது. சிங்கள மொழி யின் மேலாதிக்கம் - தமிழ் மக்களின் மீது திணிக்கப்பட்டது.*

*1957 இல் தமிழர் தந்தை செல்வநாயகமும், எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவும் செய்துகொண்ட உடன்படிக்கை, குறுகிய பௌத்தசிங்கள பேரினவாதத்தின் தூண்டுதலால் கிழித்தெறியப்பட்டது. தமிழர்களுக்கான ஆட்சியுரிமை பகிரங்கமாகவே மறுக்கப்பட்டது.*

*1958 இல் தமிழர்களின் இரத்தம் குடித்த சிங்கள மிலேச்சத் தனம் - தமிழனாய்ப் பிறந்த குற்றத்திற்காக கைக்குழந்தையையும் கொதிக்கும் தாரில் போட்டுக் கொன்றது. கண்ணுக்குமுன்னே உறவுகள் வெட்டியும், குத்துப்பட்டும் படுகொலையாக, துடித்த நெஞ்சங்களின் அலறல்கள் விண்ணை முட்டின.*

*1965களில் டட்லி - செல்வா உடன்படிக்கைக்கும் - தெற்கில் எழுந்த ஆதிக்கச் சிந்தனைகள் அழிவையே தேடித்தந்தன.*

*1972 இல் - பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறையைக் கொண்டுவந்து தமிழ் மாணவர்களின் கல்விக்குக் குழிபறிக்கப்பட்டது. உயர் புள்ளிகளைப் பெற்றும், தமது பல்கலைக்கழக வாய்ப்பை இழந்த தமிழ் மாணவர்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்கவும் அதுவே அடிப்படையாகியது.*

*தமிழ் வளர்த்தோம், தமிழால் வளர்ந்தோம் எனப் பெருமை கொண்டாடி யாழ்ப்பாணத்தில் 1974 இல் நடந்த தமிழாராய்ச்சி மாநாடு, திட்டமிட்டுக் குழப்பப்பட்டு, தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் களமானது.*

*1977களில் மீண்டும் ஒருமுறை தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாதம் பாய்ந்து இரத்தம் குடித்தது. தேயிலைச் செடிகளின் பசுமைக்கு தம் இரத்தம் சிந்தியே உரமாகிப்போன மலையகத் தமிழர்கள் பலர் கொன்றொழிக்கப்பட்டனர்.*

*1981 இல் - தமிழ் மக்களின் கருவூலமாகத் திகழ்ந்த, தென்னாசியாவின் மிகப்பெரும் நூலகமாகத் திகழ்ந்த யாழ்.*

நூலகம் - காட்டுமிராண்டித்தனமாகத் தீவைத்துக் கொழுத்தப் பட்டது. அங்கு கருகியது நூல்கள் மட்டுமல்ல, தமிழர்களின் இதயமும்தான் என்பதைச் சிங்களப் பேரினவாதம் எக்காளமிட்டுக் கொண்டாடியது.

1983 கறுப்பு ஜுலையில் நாடு முழுவதும், எங்கெங்கு காணினும் தமிழர் உடல்கள் எரியும் நாற்றமே காற்றை நிரப்பியது. வடக்கில் சிங்களப் படையினர் கொலைவெறியுடனும், தெற்கில் சிங்களக் காடையர்கள் அரசியல் ஆசீர்வாதத்துடனும் தமிழர்களைக் கொன்றொழிப்போம் என இரத்தவேட்டையே நடாத்தினர். நாட்டின் தலைவரே நாசகாரிகளைத் தூண்டினாரென்றால் - நடப்பது என்னவாயிருக்கும்?

வெட்ட வெட்டத் தழைப்பவர்களாக எழும் தமிழர்களை வேரறுக்க, சமயம் பார்த்திருந்த சிங்களக் காடையர் கும்பல்கள் தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடின. திருடமுடியா தவற்றைத் தீக்கு இரையாக்கின. கொளுந்து விட்டெரிந்த இலங்கையில், தமிழர்களின் சுதந்திரம் காணாப் பொருளானது.

இவ்வளவுக்கும் பின்னர் - இனிப் படை நடத்தியே தமிழர்களை அழிப்போமெனத் திரண்டுவந்த சிங்களப் படைகள், ஆண்டுகள் இருபதாய் நடாத்திய அட்டூழியமும் அழிவும் மறக்கமுடியுமோ? மன்னிக்கத் தகுந்ததோ?

இதன் பின்னரும் - அமைதிக்காகக் கைகொடுத்திருப்பவர் தமிழரென்றால், அவர்தம் பெருந்தன்மையைச் சிங்களதேசம் புரிந்துகொண்டதா என்பது இன்னும் கேள்விக்குறியாகவுள்ளது.

கௌரவமான சமாதானத்தினை, சகவாழ்வினைத் தேடி நிற்கின்ற போதும் - உயர் பாதுகாப்பு வலயமென்றும், தடைகளென்றும், கெடுபிடிகளுமாக காணாமற்போன சுதந்திரம் இன்னும் கடைகெட்டே கிடக்கிறது.

அழுத்தங்கள் களைந்து, தமிழருக்கான உரிமைகள் தந்து, தம்மைத்தாமே ஆளும் சுயாட்சியுமளிக்கும் நாளே எமக்கான சுதந்திரநாள் என்ற உறுதியில் - இன்றைய நாளும் எமக்குக் கறுப்புநாள்தான் என்றே உரத்துச் சொல்கிறோம்.

# 64

## கருகிய நினைவுகளுடன் ஒரு வெண்ணிறக் கட்டடம்

ஈழத்தமிழர்களின் அறிவுக் கருவூலமாக விளங்கிய யாழ். நூலகம் பேரினவாதத் தீயில் எரிந்து கருகியதை தமிழினத்தின் வரலாறு என்றும் ஒரு மாறாத வடுவாக, ஆறாத ரணமாகவே சுமந்துகொண்டிருக்கின்றது.

தென்னாசியாவில் மிகப் பெரும் நூலகம் எமது நூலகம் எனப் பெருமையுடன் உலாவந்தவர்களின் நெஞ்சம் வேகும்படியான நிகழ்வுகளைத் தமிழினம் மறக்கவும் மாட்டாது; மன்னிக்கவும் மாட்டாது.

இனியும் பொறுக்கோம் என உணர்வுடன் எழுந்த தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கியமானதொரு சான்றா தாரமாகத் திகழ்ந்த யாழ். நூலகம் -

இன்று, பழைய நினைவுகளை மறந்துவிடச் சொல்லும் அழுத் தத்துடன், புதிய கட்டடமாக வெளிப்பூச்சு மிளிர்ந்திட நிற்கிறது.

பார்வைக்கு மட்டுமே இது புனரமைக்கப்பட்டு விட்டாலும், இழந்ததை மறந்துவிட முடியாத உள்மன ஆதங்கத்தை எவராலும் புனரமைத்துவிட முடியவில்லை.

எங்கள் வரலாறு வீறுகொண்டெழுவதற்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக, ஒரு நினைவுச்சின்னமாக எரிந்த நிலை யிலேயே பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டிய யாழ். நூலகக்

கட்டடம், அரசியலும் ஆதாயமும் ஒருங்குசேர்ந்திட வெண்ணிறக் கட்டடமாய், கருகியநினைவுகளை மறைத்து எழுந்துநிற்கின்றது.

சிதைந்துபோன நூல்களும், அழிந்துபோன சுவடிகளும், நூலகம் எரிந்ததோ எனக் கேள்வியுற்றதும் இதயமே நின்றுபோன தமிழபிமானிகளும் என எல்லாமே மறந்துபோக ஒரு உற்சவம் அங்கு தலையெடுக்க நிமிர்கிறது.

வெண்பூச்சும், பூமரங்களும் மட்டுமே நிலைநிறுத்தப்பட்ட தமிழரின் ஆன்மாவை அதில் இருத்தமுடியாத நிலையில் - திறப்புவிழாவிற்கு நாளும் குறிக்கப்பட்டுவிட்டது.

இனியென்ன கொண்டாட்டம்தான். பதவிகள் களையுமுன்பே அரங்கேற்றத்தை நடாத்திவிடத் துடிப்பவர்கள் - அரசியல் நாடகத்தை மேடையேற்றிவிடலாம் என்ற முழக்கமே நூலகமெங்கும் எதிரொலிக்கிறது.

தொலைந்துபோன அறிவுக்களஞ்சியத்தின் ஆன்மாவைத்தான் தேடமுடியவில்லை. தளபாடங்களும், நிர்மாணப் பணிகளுமாவது முடித்துவிடலாம்தானேயென்றால் - அதற்குள் போய்விடுமே அதிகாரமென்று, குறைப் பிரசவமாய் அறிவின் அன்னையவளுக்கு சத்திரசிகிச்சைக்கும் நாள் தீர்மானிக்கப்படலாயிற்று.

இனி அழைப்பிதழ்கள் பறக்கும், எரித்தவர்கள் பெயர்கள் மறைய, புனரமைத்தோர் பட்டியலென்றும், திறந்துவைப்போர் பெருமையென்றும் கட்டளைக் கற்கள் துதிபாடும்.

இதற்குத்தானே ஆசையுற்றோம் என்ற நெஞ்சங்கள் நிறைவு கொள்ளும் - தங்களின் வரலாற்றைத் தாமே மறைக்கிறோம் / மறக்கிறோம் என்ற வலியின் வேதனை இல்லாமலேயே.

யாழ். நூலகம் எரிந்த நினைவுகள் மனதை இன்றும் அம்பாய் அறுக்கிறதென்றால், புனரமைப்பு என்றும் திறப்புவிழா என்றும் நடக்கும் அரசியல் விளையாட்டுக்களைத் தமிழ் மக்கள் இன்னமும் வேதனையுடன் நோக்கும் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர்.

நூலகத்தை மீண்டும் ஒரு களஞ்சியமென நிறுவவேண்டும் என்ற எதிர்பார்ப்பைவிட, நமது காலத்தில்தான் திறக்கப்பட்டது என்ற குறுகிய அரசியல் நோக்கமே மேலாதிக்கம் செலுத்துவதை அசூசையுடன் மக்கள் பார்க்கின்றனர்.

ஆண்டாண்டு காலமாக அரும்பெரும் சொத்தாகப் பேணப் படவேண்டிய நூலகத்தை அவசரகதியில் திறப்பதன் மூலம் எதனைச் சாதித்திட இவர்கள் முயற்சிக்கின்றனர் என மக்களிடம் வலுவாகவே வினாவும் எழுகின்றது.

யாழ். நூலகம் இன்று நவீன உலகம் எதிர்பார்த்து நிற்கின்ற வசதிகள், வாய்ப்புக்கள் அனைத்தையும் பூரணமாகப் பெற வேண்டும்.

தனியே நூலகம் மட்டுமல்லாது தகவல் தொழினுட்பத்தின் அனைத்து அம்சங்களும் கொண்டதாக அது அமையவேண்டும்.

புதிதாய் நூலகம் உருவாகும் வேளை அது கொண்டிருக்கும் எமது இனத்தின் வரலாறு அழுத்தமாய்ச் சொல்லப்படவேண்டும்.

உலகெங்கிலுமிருந்தும் - இன்னமும் வீச்சுடன் உதவிகள் கோரப்படவேண்டும்.

யாழ். நூலகத்தால் அறிவு வளர்த்தோர், சிந்தனை ஏற்றம் பெற்றோர் அனைவரும் மனமுவந்து தம் பங்களிப்பைச் செய்ய ஊக்குவிக்கப்படவேண்டும்.

இவை அனைத்துடனும் ஒரு முழுமையான செயற்பாட்டுத் திறன்மிக்க நிலையிலேயே நூலகம் திறக்கப்படவேண்டும் என்பதே மக்களின் ஒட்டுமொத்த கருத்தாக உள்ளது.

# 65

# பாராட்டத்தக்க சேவை!

போர் ஓய்ந்த மண்ணில் - யுத்தத்தின் தொடர்ச்சியாக மக்களைப் பெரிதும் அச்சுறுத்திக் கொண்டிருப்பவை பரவலாகப் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் ஆகும்.

யுத்தக் களங்களாக இருந்த பகுதிகள் பலவற்றிலும் மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் நிலையில் - மிதிவெடிகளால் அவர்களுக்கான அச்சுறுத்தல் அதிகரித்தேவருகின்றது.

தனியே இராணுவ முன்னரங்க நிலைகளை அண்டியபகுதிகளில் மட்டுமல்லாது, எழுந்தமானமாகப் பல பகுதிகளிலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பது ஆபத்தை இன்னமும் அதிகமாக்கியுள்ளது.

இவ்வாறு புதைக்கப்பட்ட மிதிவெடிகள் பற்றிய வரைபடங் களையோ, தகவல்களையோ தருவதில் இராணுவத்தரப்பு பின்னடித்துவருவதால் - அவற்றைச் செயலிழக்கச் செய்வதற்கான வாய்ப்புக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் - சர்வதேசரீதியிலான கண்ணிவெடிகள் அகற்றும் நிபுணர்கள் தொடங்கிய மிதிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகள், எதிர்பார்த்தளவு வெற்றியைத் தரவில்லை என்றே அறியப்படுகின்றது.

பரந்த பிரதேசங்களில் ஏகத்துக்கும் விதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதில் - இந்நிபுணர்கள் கடைப்பிடிக்கும் வழிமுறைகளும், செயற்பாடுகளும் - மிதிவெடிகள் அகற்றுவதைத் துரிதப்படுத்துவதற்குப் பெருமளவில் துணையாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், வன்னியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவின் தொழிற்பாடும் திறமையும் - மிகக் குறிப்பிடத்தக்க சாதனையாகத் திகழ்ந்துவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தகுந்த உபகரணங்களோ, தொழிற்தகைமையோ இல்லாத போதும் - அண்மைக்காலத்தில் - மனிதநேயக் கண்ணிவெடி யகற்றும் பிரிவினர் - செயலிழக்கவைத்த மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும், அவர்களால் சுத்திகரிக்கப்பட்ட நிலப்பிரதேசத்தின் அளவும் வியப்பைத் தருவனதாகும். வெளிநாடுகளிலிருந்து வந்த கண்ணிவெடியகற்றும் நிபுணர்கள் - ஆச்சரியப்படும் அளவுக்கு இவர்களின் பணி இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

மிகுந்த அர்ப்பணிப்புடனும், சேவையுணர்வுடனும் - தமக்கான ஆபத்துக்களைப் பொருட்படுத்தாது தொடரும் மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினரின் பணி தமிழ் மக்களால் மனமுவந்து பாராட்டப்படவேண்டிய சேவையென்பதில் சந்தேகமில்லை.

இதுவரை காலமும் வன்னிப் பகுதியில் மட்டுமே தமது சேவையை வழங்கிவந்த கண்ணிவெடியகற்றும் பிரிவு அண்மையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்துடன் செய்துகொண்ட உடன்பாட்டுக்கமைய, யாழ். குடாநாட்டிலும் தனது சேவையை விரிவாக்கம் செய்யவுள்ளது.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் கூட சாவகச்சேரி கெருடாவில் பகுதியில், மீளக் குடியேறுவதற்காக வீட்டைத் துப்புரவு செய்துகொண்டிருந்த இளைஞ ரொருவர், நிலத்தை மண்வெட்டியால் கொத்திய போது மர்மப் பொருளொன்று வெடித்ததில் படுகாயமடைந்தார்.

இதுபோன்ற ஏராளமான சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வரும்போது - இயல்புவாழ்க்கைக்கு அச்சுறுத்தலான காரணி களாக அவை அமைந்துவரும் நிலையில், யாழ். குடாநாட்டில் தீவிரமான செயற்பாட்டிலமைந்த மிதிவெடிகளகற்றும் பணி அவசியமாகியுள்ளபோது மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினரின் பணி இங்கும் மகத்தானதாகவே அமையுமென எதிர்பார்க்கலாம்.

இந்தநிலையில் - இதுவரை காலமும் தமக்கான பணிகளைத் தாமே வடிவமைத்துவந்த இப்பிரிவினரில் ஒருபகுதியினர், சர்வதேசதரத்திலான மிதிவெடி அகற்றும் பயிற்சியைப் பூர்த்தி செய்திருக்கின்றனர்.

இவ்வாறு 80 பேர் தமது பயிற்சிகளைப் பூர்த்திசெய்து வெளியேறும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

திறமையாக இயங்கிவரும் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு தகுந்த தொழிற்தகைமையை வழங்குவதாக இந்தப் பயிற்சிகள் அமைந்திருக்கின்றன.

எனவே, மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் திறனாற்றல் இன்னமும் பெருகிவரும் என நம்பலாம்.

இந்தவகையில் - உள்ளூர் அமைப்பொன்று சர்வதேசதரத்தில் வளர்ந்துவருவது நமக்கெல்லாம் பெருமைதரக் கூடியதொன்றே யாகும்.

# 66

# இணையத்தை இசைவாக்குவோம்!

ஊடகங்களைப் பயன்படுத்துவது பற்றிய தமிழகத்திலுள்ள உணர்வலைகளைப் பற்றிப் பாடிய கவிஞனொருவன் - "அவர்கள் சந்திரனைக் காணக் கணினிகளைப் பயன்படுத்த, நம்மவர்கள் சாத்திரம் சொல்லவே கணினிகளைப் பயன்படுத்துகின்றனர்" எனக் கவலைப்பட்டான்.

தமிழகத்திலுள்ள நிலைமை என்னவோ அவ்வாறிருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தபோது, நமது நாட்டில் ஊடகங்களின் பயன்பாடு குறிப்பாக இணையம் போன்ற நவீன தகவற் தொடர்பு வழிமுறைகளின் பயன்பாடு பற்றிய நிலைமையும் அதேபோன்றதொரு கட்டத்திலிருப்பதைக் கவலையுடன் நோக்கவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இணையத்தின் பயன்பாடு மிகப் பெருமளவில் எங்கிருக்கின்றது என்று கேட்டால், வெளிநாடுகளிலுள்ள உறவினர்களுடன் தொடர்புகொள்ள "நெற் போனை"யே பலரும் பெருமிதத்துடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

உண்மையில் இணையத்தின் வழியாக எல்லைகளற்ற பயன்பாடுகள் தினத்துக்கும் விரிவடைந்துபோக நாம் "நெற்போன்"களுக்காகவே இணையத்தைப் பயன்படுத்துவது ஊடகங்களை எம்மவர்கள் கையாள்வதிலுள்ள குறைபாட்டினையே எடுத்துக் காட்டுகின்றது.

உலகின் மிகப்பெரும் நூலகமாகவும், எண்ணிலடங்காத தகவல்களின் களஞ்சியமாகவும், கணத்துக்குக்கணம் மாறுதல் களைத் தரவுகளாகத் தரும் வசதிகளுடன், ஒலி ஒளி அமைப்புக் களுடன் - இணையம் காத்திருப்பதை அறிந்தவர்கள், அதனைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை யாழ். குடாநாட்டில் மிகக் குறைந்தளவில் இருப்பதாகவே தகவல்கள் கூறுகின்றன.

இணையத்தைப் பற்றிய அறிவும், அதன் பயன்பாடுகள் தொடர்பாகவும் - கற்றோர் மத்தியில் கூட போதியளவு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லை என்பது உண்மையிலேயே கவலை தரக்கூடியதாகும்.

பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை இணையத்தைப் பயன்படுத்தி, தேவையான அறிவைத் திரட்டிக் கொள்வதில் - ஊக்கமற்ற தன்மையே பெருமளவில் காணப்படுவதாகத் தெரியவருகின்றது.

இத்தகைய மனநிலைக்கு என்ன காரணம் என்று கண்டறி யப்பட்டு, அந்தக் காரணம் களையப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது உடனடித் தேவையாகும்.

ஏனெனில் - மிக வேகமாக வளர்ந்து வரும் உலகில், நாம் அந்த வேகத்துடன் இணைந்து இயங்குபவர்களாக மாறாதுவிடில், அந்தத் தாமதம் எம்மை நேரடியாகப் பாதிக்கச்செய்யும் ஒன்றா கவே தற்போது தீவிரமடைந்து வருகின்றது.

தகவல் தொழிநுட்பத்தின் வளர்ச்சி வேகத்தில் - உலகமே மிகக் குறுகிய கிராமமாக உருவாகிவரும் சூழலில், எம் முன்னேயுள்ள வாய்ப்புக்களை நாம் பயன்படுத்தத் தவறியவர்களாக இருக்கக் கூடாது என்ற ஆதங்கத்தை மாணவர்கள் மனதிற்கொள்ள வேண் டும்.

அதேவேளை - இத்தகைய வாய்ப்புக்களை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதற்தும் பாடசாலைகளும், பல்கலைக் கழகமும் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

இணையத்தின் பாவனையை முழுமையான மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலமாக தகவல் தொழில்நுட்ப ஆற்றலை அவர்கள் உள்வாங்கிக்கொள்ள வழிசெய்ய வேண்டியவர்களாக கல்வித்துறையினரும், அதிபர்களும், ஆசிரியர்களும் உள்ளனர்.

வெறுமனே புத்தகப் பூச்சிகளாக மட்டுமல்லாது பரந்துபட்ட அறிவினைப் பெறுவதற்கான உத்வேகம் அவர்களிடம் வளர்க்கப் பட்டாக வேண்டும்.

இல்லையேல் - உலகத்தையே எமது வரவேற்பறைக்குக் கொண்டுவந்த தொலைக்காட்சியானது திரைப்படங்களுக்கும் தொடர் நாடகங்களுக்கும் உரியதாக்கப்பட்டு தொலைக்காட்சி மூலமான தகவலறிவு பெறுதல் பின்தள்ளப்பட்டுவிட்ட நிலையே - இணையத்துக்கும் எமது பிரதேசத்தில் ஏற்படும் துர்ப்பாக்கிய நிலையை நாம் சந்திக்க வேண்டியவர்களாக இருப்போம்.

# 67

# வெறியாட்டம்!

மானிப்பாய் பகுதியில் நேற்றுக்காலை பெண் போராளிகள் மீது இராணுவத்தினர் மிலேச்சத்தனமான முறையில் நடந்து கொண்ட சம்பவம் - மக்களிடையே அதீத கோபத்தையும், அமைதியின்மையையும் உருவாக்கியிருக்கிறது.

பெண் போராளிகள் அணிந்திருந்த இடுப்புப்பட்டிகளை அகற்றுமாறு, பலவந்தமானமுறையில் - காடைத்தனமான செயலில் இராணுவத்தினர் இறங்கியதற்கு போராளிகள் எதிர்ப்புத் தெரிவிக்கவே,

அப்பெண் போராளிகளைக் கொடுமையான முறையில், மிருகத்தனமாகத் தாக்கியிருக்கின்றனர் படையினர். இதனைத் தட்டிக் கேட்கத் திரண்ட மக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கியும் விரட்டியுமடித்தவர்கள் - அப்பட்டமாக ஒரு வெறியாட்டத்தினை நேற்று நடாத்தி முடித்திருக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும், போர் நிறுத்தமீறல்களில் மிகப்பாரதூரமான விடயங்களில் ஒன்றாக இந்தச் சம்பவம் அமைந்திருப்பதுடன்,

பெண் போராளிகள் மீது குறிவைத்து நடாத்தப்பட்டிருக்கும் இத்தாக்குதலின் மூலம் எத்தகைய ஈனத்தனமான காரியத்தையும் செய்வதற்கு இராணுவத்தினர் தயாராகிவருகின்றனர் என்ற அச்சுறுத்தலும் வலுவடைந்துள்ளது.

கடந்த சில வாரங்களாகவே போர் நிறுத்த வழிமுறை களை மதிக்காத தன்மையுடனும், அமைதிநிலைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் பாணியிலும் படையினரின் செயற்பாடுகள் அமைந்துவருவதானது அலட்சியப்படுத்தக்கூடியதொன்றல்லவே.

அதிலும் - மானிப்பாயில் நடைபெற்ற தாக்குதலானது திட்டமிடப்பட்ட முறையிலேயே நடாத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருவதானது அமைதிச் சூழலைச் சீர்குலைப்பதென்று தீவிரம் கொண்டுள்ள சக்திகள் படையினருக்குள்ளும் உரங்கொண்டு வருவதையே எடுத்துக்காட்டுகின்றது.

அதேவேளை - இச்சந்தர்ப்பத்தைக் கண்டித்து, உடனடியாகவே அப்பகுதியில் திரண்ட பொதுமக்கள் - போராளிகள் மீது கட்ட விழ்த்துவிடப்பட்ட அரக்கத்தனமான தாக்குதலைத் தடுக்க முனைந்தபோதும், எதிர்த்து நியாயம் கேட்டபோதும் - அம் மக்கள் மீதும் தமது வெறியாட்டத்தை நடாத்தியிருக்கின்றனர் அங்கு நின்றிருந்த படையினர்.

இதன் தொடர்ச்சியாக, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு சம்பவ இடத்திலிருந்தபோதே அங்கு திரண்ட மக்கள் மீது கலகமடக்கும்படையினர்கண்மூடித்தனமாகச்சகட்டுமேனிக்குத் தாக்கியிருக்கின்றனர்.

இதன் மூலமாக, தமது அடாவடித்தனத்தை மக்கள் மீதும் திருப்பி, நியாயம் கேட்கமுனைவோருக்கு அச்சுறுத்தல் விடுத்தி ருப்பதன் மூலம், தமது காட்டுமிராண்டித்தனமான செயல்களை மூடிமறைக்கவும், மக்களை மௌனிகளாக்கிப் பயமுறுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழர் கலாசாரத்தில் பெண்களுக்கு மிக உயரிய ஸ்தானமும், கௌரவமும் பேணப்பட்டுவரும் நிலையில் -

அதிலும் குறிப்பாக, விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை பெண் போராளிகளின் தனித்துவமும், முற்போக்குத்திறனும் விடுதலைப் போராட்டத்தில் அவர்களது திறன்மிகுந்த செயற்பாடும் - தமிழ்ச் சமுதாயத்தில் பெண் போராளிகளுக்கு மிக உயர் நிலையை வழங்கியுள்ளபோது,

அத்தகையோர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியும், அவர்களைத் துன்புறுத்தியும் - கத்தியால் குத்தியும், சப்பாத்துக் கால்களால் உதைத்தும் கொடுஞ்செயல் புரிந்ததும் - தமிழ் மக்கள் மத்தியில் - தீவிரமான ஆத்திரத்தையும், பொறுக்கமுடியாத கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

போர் நிறுத்தமீறல் என ஒத்துக்கொண்டாலும் - இந்தத் தாக்குதல் கிளம்பியுள்ள அதிர்வலைகள் தணிந்துவிடப் போவதில்லை.

தமது அட்டூழியத்தையும் அடாவடித்தனத்தையும் - கட்டாக் காலித்தனமாகக் கட்டவிழ்த்துவிடுவதில் படையினர் தொடர்ந்தும் ஈடுபாடு காட்டுவார்களேயானால் - அதனைப் பொறுத்துக் கொள்ளவும், பார்த்துக்கொண்டு நிற்கவும் தமிழ்மக்கள் தயாராகஇல்லை என்பதைப் படைத்தலைமைகளும், அரசாங்கமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் - இனியும் கவனத்தில் கொள்ளத் தவறினால், நிலைமை கைமீறிச் சென்றுவிடும் என்ற எச்சரிக்கையை சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்திற் கொள்ளவேண்டுமென்பதே கொதித்து எழுந்துவரும் மக்களின் செய்தியாக இருக்கிறது.

# 68

## சிதைக்கப்படும் உரிமைகள்!

கருத்துக்களைச் சேகரிக்கும் சுதந்திரமும், கருத்துக்களை வெளியிடும் சுதந்திரமும் அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத் தப்பட்டுள்ள ஒரு நாட்டில் - மக்களுக்குச் செய்திகளைக் கொண்டு செல்லும் பணியைச் செய்துவரும் ஊடகவியலாளர்கள் மீதான நேரடித்தாக்குதலும் அச்சுறுத்தலும் அண்மையநாட்களில் தீவிரமாக அதிகரித்துவருகின்றன.

குறிப்பாக, தமிழ் ஊடகவியலாளர்கள் - படையினரால் உடல் ரீதியாகத் தாக்கப்படுவதும், அவர்களது உடைமைகள் நாசமாக் கப்பட்டு அச்சுறுத்தப்படுவதுமாக ஊடகவியலாளருக்கான உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன.

யுத்தகாலத்தில் - தமிழ் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளும், கொலைமுயற்சிகளும், மிரட்டல்களும் ஊடக வியலாளர்களுக்கெதிரான நேரடியான சவாலாகவும், உண்மைக்கும், நியாயத்திற்குமான கண்ணுக்கு முன்னரேயான ஆபத்தாகவும் உருவெடுத்திருந்த காலம் கடந்துபோக,

சமாதான காலத்திலும் ஊடகவியலாளர்கள் மீதான அடாவடித் தனம் கட்டவிழ்த்து விடப்பட்டு வருவது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும்.

கருத்துக்களை வெளியிடும் சுதந்திரமும் - அதனைவிட மனித உரிமைகளும் பற்றிப் பெரிதாகப் பேசப்படும் நிலையில், அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களில் கூட மனித உரிமைகள் விவகாரம் முக்கிய பங்கெடுத்துவருகின்ற சூழலில் -

தமது பணியைச் செய்யமுயற்சிக்கும் ஊடகவியலாளர்கள் படையினரால் மிருகத்தனமாகத் தாக்கப்படுவதென்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதது.

அண்மையில், நெல்லியடியில் ஊடகவியலாளர் தவச்செல்வம் மீது பொலிஸார் நடாத்திய தாக்குதல் பற்றிய, மனிதஉரிமை மீறல் வழக்கு உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றபோதே,

மானிப்பாயில் நேற்றுமுன்தினம் பெண் போராளிகள் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்ட சம்பவத்தில், செய்திசேகரிக்கச் சென்ற இரண்டு ஊடகவியலாளர்கள் படையினரால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களது புகைப்படக் கருவிகள் நிலத்தில் அடித்து உடைக்கப்பட்டன. குறிப்புப் புத்தகங்கள் கிழித்தெறியப்பட்டன.

சம்பவத்தில் படையினரின் தாக்குதலில் நமது ஈழநாட்டின் வலி. கிழக்குப் பிரதேசச் செய்தியாளரும், தினக்குரலின் அலுவலக நிருபரும் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் முன்பாக வைத்தே அடித்துத் துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர்.

தாம் ஊடகவியலாளர்கள் என அவர்கள் தம்மை இனங்காட்டிய போதும், அவர்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்பட வில்லை. மாறாக, அதன்பின்னர் அவர்களது புகைப்படக்கருவி கள் பறிக்கப்பட்டு, அவற்றை நிலத்தில் உடைத்துச் சிதைத்திருக்கின்றனர் படையினர்.

ஊடகவியலாளர்களுக்கு நேர்ந்திருக்கும் இக்கதி தமிழ் ஊடக வியலாளர்களின் மீதான "அரச பயங்கரவாதம்" இன்னமும் தணிந்துவிடவில்லை என்பதையே எடுத்துக்காட்டியிருக்கிறது.

யாழ். மண்ணில் நிலைகொண்டிருக்கும் படையினரின் இராணுவ ஆக்கிரமிப்பு மனோபாவமும், தாம் எந்த ஒடுக்கு முறைகளையும் மேற்கொள்ளலாம் என்ற திமிர்த்தனமும் சற்றும் குறைந்துவிடவில்லை என்பதை - ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் உறுதிசெய்திருக்கின்றன.

இவ்வாறான நிலையில் - ஊடகவியலாளர்களது பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியிருக்கும் சம்பவங்கள் அடுத்தடுத்துத் தொடர்வதை ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு எதிர்க்க முன்வரவேண்டும்.

தகவல் தொடர்புத்துறை அமைச்சு எனத் தனியான அமைச்சி ருந்தும், யாழ். அரச செயலகத்தில் தகவற்பிரிவு இயங்கியும், மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பலர் இருந்தும் - ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது தொடர்கதையாவதை இனியும் அனுமதிக்கமுடியாது / அனுமதிக்கக் கூடாது.

வெகுசன ஊடகங்களின் தேவை அத்தியாவசியமானதொன் றாக வேண்டிநிற்கும் இன்றைய காலகட்டத்தில் - உண்மை நிலையை வெளிக் கொண்டுவரவும், நியாயத்திற்காகப் போராடவும், ஒடுக்குமுறைகளை அடாவடித்தனங்களை வெளிக்கொண் டுவரவும் துணிந்துநின்று செயலாற்றும் ஊடகவியலாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைவரும் ஒன்றுதிரண்டு குரல் கொடுக்கவேண்டும்.

ஊடகத்துறையின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டாலேயே அச்சமூகத்தின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்டதாகும் என்பதை மனதிற்கொள்வோம்.

# 69

## தடமறிந்து நடைபோட...

கணினிக் கல்வியிலும், தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்வதிலும் யாழ். மாணவர்களிடையே ஆர்வம் மிகுந்திருந்தாலும், மிகச் சரியான வழிகாட்டல் அவர்களுக்குக் கிடைக்காமலிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கணினிக் கல்வி நிறுவனங்கள் தெருவுக்குத் தெருவென அதிகரித்துவரும் சூழல் நிலவுகின்றபோதிலும் அவை வழங்கும் பயிற்சிகளின் தரமும், சான்றிதழ்களின் அங்கீகாரமும் கேள்விக்குறியனவாகவே அமைந்துள்ளன.

மாணவர்களும் இதைப்பற்றிக் கவலைப்படாது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்குடனும், கணினிக்கல்வி கற்றுவருவதான கௌரவத்தைக் காத்துக்கொள் வதாகவுமே கணினி நிலையங்களுக்குச் செல்வதையும் கவலையுடன் நோக்கவேண்டியுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி உலகளவில் வெகுதுரி தமாகவும், மிகப்பரந்ததாகவும் வளர்ந்துவருகின்றபோது எம்மவர்கள் சான்றிதழ்களில் மாத்திரம் மோகம்கொண்டு நிற்பதுபற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவது கட்டாயமாகின்றது.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் பிரபல நிறுவனம் ஒன்றில் நடைபெற்ற நேர்காணலொன்றுக்கு கணினி அறிவுடையோர் தேவை என அறிவிக்கப்பட்டிருந்தபோது, பெருந்தொகையானவர்கள் அந்நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்தனர்.

அவர்கள் தம்வசம் எடுத்துவந்த சான்றிதழ்களும் அவர்கள் குறிப்பிடத்தக்க கணினி அறிவைப் பெற்றிருந்ததாகவே தெரிவித்தன.

ஆனால், நேர்முகப்பரீட்சை முடிந்து அவர்களைப் பயிற்சி வழியாகப் பரீட்சித்தபோது, அநேகர் விசேடதரத்துடன் சித்திய டைந்திருந்த பாடப்பரப்புக்களிலேயே செயன்முறைத் திறனைக் காட்டமுடியாதிருந்தது பெரும் அதிர்ச்சியைத் தருவதாக இருந்தது.

இங்கு அந்த மாணவர்களை நோவதா அல்லது அவர்களுக்குக் கல்விதந்த கணினி நிலையங்களைக் கடிந்துகொள்வதா என்ற திண்டாட்டமே செயன்முறையைப் பரீட்சித்தவர்களுக்கு ஏற்பட்டது.

இச்சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. யாழ்ப்பாணத்தில் கணினி அறிவைப் பெறும் வழிமுறை எவ்விதமான நிலையி லிருக்கிறது?, எவ்வளவு தூரம் அது சான்றிதழ் நோக்கியதாக, வர்த்தகமயப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை உணர்த்துவதாகவே இந்தச் சம்பவம் இருந்தது.

உண்மையில் - கணினி தொடர்பான கற்கைநெறிகளைக் கற்கவிரும்புபவர்கள் - எத்தகைய நோக்கத்திற்காகத் தமக்கு அக்கல்வி தேவைப்படும் என்பதைத் தீர்மானித்துக்கொண்டே, தகவல் தொழில்நுட்பப் பரப்பினுள் நுழையவேண்டும்.

கணினி பற்றிய அறிமுகமும், தமது எதிர்கால உயர்கல்விக்கான அல்லது தொழில் வாய்ப்புக்கான கணினி அறிவுமாகத் திட்டமிடப்பட்டமுறையில் - தகவல் தொழில்நுட்பப் பரப்பினுள் நுழைவதன் மூலம் - தமது பணத்தை மீதப்படுத்துவதுடன், கவர்ச்சிகரமான, தொகுதிதொகுதியான கணினிக்கல்வி

மாயையிலிருந்தும் தெளிவடையலாம்.

அதேவேளை, யாழ். குடாநாட்டில் இயங்குகின்ற கணினி நிறுவனங்களும் - கொழும்பில் இயங்கிவரும் வியாபார மையங்களாகிவிட்ட கணினி நிறுவனங்களைப் போலல்லாது மாணவர்களுக்கான வழிநடத்துதலை நேர்மையாகவும், இதயசுத்தியுடனும் வழங்க முன்வரவேண்டும்.

அது மட்டுமல்லாது, யாழ். பல்கலைக்கழகமும் தனது வளாகம் கடந்த சேவையை, ஆலோசனைகளை மாணவர்களுக்கு வழங்க முடியுமானால், அது பெரும் வாய்ப்பானதாகவும் அமையும்.

எனவே, யாழ்ப்பாணத்திலுள்ள கல்வியியலாளர்களும், சமூக ஆர்வலர்களும், தன்னார்வ அமைப்புக்களும், கணினி நிறுவனங்களும் இணைந்து கணினிக் கல்வி பற்றியும் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி வாய்ப்புக்கள் தொடர்பாகவும் விழிப்புணர்வும், வழிகாட்டுதலும் தரவல்ல கருத்தரங்குகளை, கலந்துரையாடல்களைத் தர முன்வரலாமே..?

# 70

# இலவசக் கல்விப் மீற்றலும் அன்பளிப்புக் கலாசாரமும்!

பாடசாலைகளில் பரவிவந்த ஒரு விஷக்காய்ச்சலுக்குத் தடை மருந்தை சுற்றுநிருபம் மூலம் வட கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுமதிக்கும்போது, உதவி நிதிகளோ, அன்பளிப்புக்களோ வற்புறுத்திப் பெறுவது விரோதச் செயல். அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை தரும் சுற்றுநிருபத்தை விடுத்துள்ளார் மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் - புதிய மாணவர்களைச் சேர்க்கும்போது பெற்றோரிடமிருந்து நிதி அறவிடப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துவருவதாகவும், ஏழைப் பெற்றோரிடமிருந்து அன்பளிப்பு என்ற பெயரில் கட்டாய நிதி வசூலிப்பு பாடசாலைகளில் நடைபெறுவதாக முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும் மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வளவும் சொன்ன சுற்றுநிருபம் - வழக்கமான, சம்பிர தாயமான வார்த்தைப் பிரயோகங்களையும் குறிப்பிட்டு - இந்தச் சட்டவிரோதச் செயலை சட்டமுறைக்குட்பட்ட செயலாக எவ்வாறு மாற்றிக் கொள்ளலாம் என்ற வழிமுறையையும், அதிபர்க ளுக்குச் சொல்லிக் கொடுப்பதுதான் வேடிக்கையாகிப் போகிறது.

மாணவர்களைப் புதிதாக அனுமதிக்கும்போது உதவிநிதியோ, அன்பளிப்புக்களோ மற்றும் பொருட்களோ எவர் மீதும் வற்புறுத்திப் பெற்றதாகவோ இருக்கக்கூடாது என "அழுத்திக் கூறும்" இச்சுற்றுநிருபம் -

இதுவரை காலமுமான அனுபவங்களை மீட்டுக்கொள்ளாது அன்பளிப்புக் கோரும் அதிபர்களுக்கு நோகாது அடிகொடுக்குமாப்போல, அடிகொடுக்கும் வித்தையையும் செய்கிறது.

அதாவது - இதுவரை குறிப்பிட்ட பாடசாலை தன்னிடமிருந்து வற்புறுத்தியோ, வலிந்தோ, அடாத்தாகவோ, அன்பளிப்புப் பெற்றதாக எந்தப் பெற்றோருமே, பகிரங்கமான எதிர்ப்புக்களைக் காட்ட முன்வராத பட்சத்தில் -

இனியும் அவ்வாறு பெற்றோர்கள் துணிந்து தட்டிக்கேட்க முன்வருவார்களா என்ற சந்தேகம் வலுவுடனேயே இருக்கும் வேளையில் - இச்சுற்றுநிருபம் எதனைச் சாதிக்கப்போகிறது என்பது முக்கியமான வினாவாகும்.

இன்று வடக்கு கிழக்கிலுள்ள பாடசாலைகளில் புலமைப் பரி சில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்கூட தேசியப் பாட சாலைகளிலும், பிரபல பாடசாலைகளிலும் அனுமதி கோரும்போது,

அவர்களிடமிருந்தும் அன்பளிப்புப் பணம் பெறப்படுவது சாதாரணமாகிவிட்ட சூழ்நிலையில் - அவ்வாறானதொரு கட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையின் நோக்கமே பகிரங்கமாகக் கேள்விக்குள்ளாக்கப்படும்போது -

அதனையே தடுக்கமுடியாதிருக்கும் கல்வித் திணைக்களம், ஒட்டுமொத்தரீதியில் வெறும் சுற்றுநிருபம் மூலம் - அன்பளிப்புப் பெறும் பழக்கத்தை இல்லாதொழித்துவிடலாம் என எண்ணுவது வேடிக்கையானது மட்டுமல்ல இதன்மூலம் - "ஒப்புக்குச் சப்பாணியாக" நாமும் அறிவித்திருக்கிறோம் பாருங்கள் - என்ற விதத்தில் செயற்படுவதையே எடுத்துக் காட்டுகின்றது.

எனவே, இந்தச் சிக்கலை, ஏழைப் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையை யதார்த்தபூர்வமாகத் தீர்ப்பதற்கு என்ன வழியிருக் கிறது என்பது கண்டறியப்படவேண்டும்.

“இலவசக் கல்வி” என ஒருபுறம் உரத்துக் கூறிக்கொண்டு மறுபுறம், பாடசாலைக் கட்டடத்திற்கு எனவும், தளபாடங்க ளுக்கு எனவும், மைதானம் அமைக்க உதவி எனவும் இன்னும் பலதேவைகளைக் கூறிக்கொண்டு அன்பளிப்புப் பெறுவதென்பது - இலவசக் கல்வியின் அர்த்தத்தையே சீரழித்துவிடும் என்பதைக் கவனத்திற்கொண்டு சுற்றுநிருபங்கள் வழியான சம்பிரதாயபூர்வ அறிவித்தல்களை விடுத்து யதார்த்தபூர்வமாக, உண்மையாக அன்பளிப்புக் கலாசாரத்தைத் தடுப்பதற்குக் கல்வித் திணைக்களம் வழி காணட்டும்.

# 71

## விஷ வித்து!

தமிழர் தாயகப் பகுதிகளில் - அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்களில் - தமிழர்களின் அடையாளத்தைச் சிதைக்கவும், வரலாற்றுரீதியான ஆதாரங்களைத் திரிவுபடுத்தவும், மத ஆக்கிரமிப்பைச் செய்யவுமான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருவதை இன்றும் காணக்கூடியதாகவிருப்பது - தமிழினத்தை அச்சுறுத்தும் மிக ஆழம் கொண்டதாக உருப்பெற்றுள்ளது.

ஏற்கனவே தமிழ்ப் பகுதிகளில் தமிழர் பண்பாட்டையும், கலாசாரத்தையும், வரலாற்றுச் சின்னங்களையும் - யுத்தத்தின் பெயரால் படைகளும், சில இடங்களில் சிங்களமக்களும் - அழித்துச் சிதைத்த வரலாற்றுக் காயங்கள் பலவும் எங்கெங்கும் பரந்திருக்கையில்,

அமைதிக்காலத்திலும் - தமிழ்ப் பகுதிகளில் மத ஆக்கிரமிப்பைக் கட்டவிழ்த்துவிடும் வரைமுறையற்ற செயல், யாழ். குடாநாட்டின் இதயப்பகுதியான கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

கந்தரோடையின் வரலாற்றுப் பெறுமதியை திரிபுபடுத்தி, அப்பிரதேசத்தையும், அங்கு காணப்படும் வரலாற்று ஆதாரங்களையும் சிங்கள பௌத்தத்திற்குச் சொந்தமாக்கும் முயற்சியில் படையினரும், பௌத்தபிக்குகள் சிலரும் ஈடுபட்டுவருகின்றனர்.

ஏற்கனவே, தென்கிழக்குப் பகுதியிலே தமிழ் மக்களின் அடை யாளத்தை, அவர்களின் வாழ்வியலை, அங்கு வேரூன்றிப் போயி ருந்த தமிழரின் பண்பாட்டை கொஞ்சம் கொஞ்சமென அகற் றியும் அழித்தும் - இன்று அம்பாறையை, சிங்களவர்கள் பெரும்பான்மையினராக வாழும் மாவட்டமாக மாற்றிய கொடுமையும்,

மட்டக்களப்பின் வடபாலிலுள்ள பல தமிழ்க்கிராமங்கள் இன்று சிங்களக் கிராமங்களாகவும் - யாருமற்ற சூனியப் பிரதேசங் களாகவும் பறித்தெடுக்கப்பட்ட துயரமும் -

திருகோணமலையையும், மட்டக்களப்பையும் துண்டாடுவோ மென கங்கணங்கட்டி அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடனும் ஆதரவுடனும் "சேருவில" ஓர் ஆக்கிரமிப்புச் சின்னமாக மாறி விட்ட விந்தையும் -

திருமலையில் தமிழ் ஒலித்த பகுதிகளெல்லாம் இன்று அப்பட்டமாகவே, பகிரங்கமாகவே சிங்களக் கிராமங்களாக படையினரின் பாதுகாப்புடன் - அப்பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழ் மக்களின் கண்முன்னாலேயே உருவாக்கப்பட்டிருப்பதும் -

தமிழர் தாயகத்தின் இதயப் பகுதியாகத் திகழும் மணலாறு இன்று "வெலி ஓயா"வாக சிங்களமயப்படுத்தப்பட்டு, தமிழ் மக்களின் பொன் கொழிக்கும் பூமி - இராணுவக் காவலில் சிங்களப் பகுதியென அடாத்தாக்கப்பட்டுள்ளதும் -

இன்னும் மன்னாரிலும், வவுனியாவிலும் ஏராளம் ஆக்கிரமிப்புக்கள் நிகழ்ந்துள்ள சூழலும் - தமிழ் மக்கள் மீதான போரின் ஒரு வடிவமாக மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில்,

தமிழ் மக்களின் பண்பாட்டுத் தலைநகரமெனக் கருதப்படும் யாழ்ப்பாணத்திலேயே, அடிமடியில் கைவைப்பதாக சிங்கள பௌத்தத்திற்கு உரிமம் நிலைநாட்ட முனையும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

யாழ். குடாநாடு இராணுவத்தின் ஆதிக்கத்திலிருப்பதைத் துணையாகக் கொண்டு, மிகப் பாரிய துரோகமொன்று புதிய விகாரைவடிவில் கந்தரோடையில் அரங்கேறிவருகின்றது.

இதன்மூலம் - கந்தரோடையை பௌத்த தலமாக்கி சிங்கள பௌத்த பேரினவாதத்தினை அங்கும் விதைபோட்டு விருட்சமாக்க அடிபோடப்பட்டுவிட்டது.

தமிழர்தம் தாயகத்தின் பலபகுதிகளையும் சிங்களப் பௌத்த பேரினவாதத்திற்குத் தாரைவார்த்துவிட்ட அல்லது பறிபோக விட்ட வரலாற்றுத் தவறை யாழ்ப்பாணத்திலும் தொடர்வதற்கு அனுமதிக்கப்போகின்றோமா? எனத் தமிழர்கள் அனைவரும் இக்கட்டத்தில் விழிப்புணர்வு பெறவேண்டும்.

இல்லையேல் - இன்று அனுமதிக்கப்பட்டுவிட்ட தகரக்கொட்டகை, இன்னும் சில தினங்களிலேயே தாதுகோபமாகி கந்தரோடை எமது கையைவிட்டுப் போகவும், அது பரந்துவிரிந்து கொஞ்சம் கொஞ்சமாக யாழ்ப்பாணத்தையே சிங்கள பௌத்த பிரதேசமாகத் திரிபுபடுத்தவும், அப்பட்டமான ஆக்கிரமிப்புக்கும் ஊக்குவித்துவிடும்.

# 72

## கண்துடைப்பு

இலங்கையில் வேலைவாய்ப்பற்று வாடும் இளைஞர், யுவதிகளில் - பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் மிகக் குறிப்பிட்ட வீதத்தில் அதிகரித்து வருவதாக அரசாங்கப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இறுதியாகத் திரட்டப்பட்ட தகவல்களின்படி 25, 000 இற்கும் அதிகமான பட்டதாரிகள் வேலையற்று இருப்பதாகத் தொழில் அமைச்சு அறிவித்திருக்கின்றது.

இவர்களுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான பயிற்சிகளும், குறிப்பிட்ட காலத்திற்கு ஊக்குவிப்புப்பணமும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

அரசின் திட்டம் இப்படியிருக்கையில் - இத்தகைய பயிற்சிகளும், நடவடிக்கைகளும் வேலையற்றிருக்கும் இப்பட்டதாரிகளுக்கு எத்தகைய உறுதியான வாய்ப்புக்களை எதிர்காலத்தில் தரப்போகின்றன என்ற கேள்வியும் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஏனெனில், இலங்கையைப் பொறுத்தவரையில் - உள்நாட்டு வேலைவாய்ப்பை எடுத்துக்கொண்டால், இங்கு பெருமளவு அபிவிருத்தித் திட்டங்களோ, அரச சேவைக்குத் தேவையான

உள்ளீர்ப்புகளோ தற்போதைக்கு முன்னெடுக்கப்படும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த இரண்டு தசாப்தங்களாகத் தொடர்ந்த போரினால் பெரும் சிதைவைச் சந்தித்திருக்கும் பொருளாதாரத்தை அங்குலம் அங்குலமாகக் கட்டியெழுப்புவதற்கே, மீண்டும் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பைத் தூக்கிநிறுத்துவதற்கே சமாதானத்தின் வழியான வெளிநாட்டு உதவிகளையே நம்பியிருக்கும் அரசொன்றினால் - வேலைவாய்ப்புக்களை அள்ளிவழங்கும் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கமுடியுமென எதிர்பார்த்தால் அது பகற்கனவாகவே இருக்கும்.

அதேவேளை - அரசாங்க சேவைகளிலும் ஆட்சேர்ப்புச்செய் வதற்கோ, பிரதியீடுகளை மேற்கொள்வதற்கோ முடியாத நிலையிலும் அரசாங்கம் இருப்பதைச் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது.

அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தின் பொருளாதார பலம் இடங்கொடுக்காத நிலையில் - "சுயமாகவே ஓய்வு பெறும் திட்டம்" ஒன்றையும் உலகவங்கியின் உதவியுடன் அரசாங்கம் நடைமுறைப்படுத்திப் பார்த்தது.

அரசாங்க சேவைகளிலுள்ள "வயோதிபர்களை", அவர்களாகவே விலகிச் செல்லும் கவர்ச்சியைக் காட்டி, இளைஞர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சி இற்றைவரை வெற்றியைத் தரவில்லை.

இதில் நடந்த சுவாரசியமான திருப்பமென்னவென்றால், உயர் பதவிகளில் இருந்த "பெருச்சாளிகள்" சிலர் - இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்திடமிருந்து பெருந் தொகை நிதியைப் பெற்று விலகிக் கொண்டாலும் - மீண்டும் ஒப்பந்த அடிப்படையில், அரசாங்க சேவைக்குள் உள்நுழைந்து கொண்டதைச் சொல்லலாம்.

பிரபல சிங்களப் பழமொழியான "கதிரையிலிருந்து கனத்தைக்குப் போகும்" புண்ணியவான்களாக இவர்கள்,

என்றுமே அரசாங்கச் சேவையை உடும்புப்பிடி எனப் பிடித்துவருவதால் - இளைஞர்களை உள்ளீர்ப்புச் செய்யமுடியாத சூழல் நிலவுவதுடன்,

நடுத்தர, கீழ் பதவிநிலைகளுக்குள் நுழையும் இளைஞர்களால் உயர் பதவி அனுபவங்களைத் திரட்டிக்கொள்ளமுடியாத நிலை யும் நிலவுகின்றது.

இது ஒருபுறமிருக்க, உண்மையிலேயே வேலைவாய்ப்பற்றி ருக்கும் பட்டதாரிகள் மீதுள்ள கவலையில்தான் புதிய திட்டங்களை அரசாங்கம் தயாரிக்கிறதா என்றால், அதற்குக் கிடைக்கும் பதிலும் சந்தேகத்தைத் தருவதாகவே அமைகின்றது.

ஜே. வி. பி. தனது அரசியல் இலக்குக்காக வேலைவாய்ப்பற்றி ருக்கும் இளைஞர், யுவதிகளை பட்டதாரிகளைக் குறிவைத்து இறங்கியிருப்பதாலும் - அது தெற்கில் சாதகமான பலன்களை ஜே. வி. பிக்கு அள்ளிவீச ஆரம்பித்திருப்பதாலும் -

ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலே, அரசாங்கம் பட்டதாரிகளுக் கான புதிய பயிற்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையை, அவசியத்தை உருவாக்கியது.

எனவே, வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் - வெறுமனே அரசாங்கத்தை நம்பியிருக்காமல், தமது பாதையைத் தாமே தேடி, எதிர்காலத்தை வளப்படுத்தத் தமது கைகளை நம்புவதே பொருத்தமானதாகவும், உபயோகமாகவும் இருக்கும் என்பதைச் சொல்லவே வேண்டியிருக்கிறது.

# 73

## உணவு! உரிமை! உஷார்!

தொற்றுநோய்களுக்கும், மேலும் பல வியாதிகளுக்கும் காரணமாகும் உணவுப் பொருட்களின் சுகாதாரத் தன்மை பற்றிய செய்திகள் கடந்த சில வாரங்களாக மக்கள் மத்தியில் அடிக்கடி பேசப்படுவதைக் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

குறிப்பாக, உணவகங்களிலும், இறைச்சி விற்பனைக் கூடங்களிலும், கொல்களங்களிலும், பழங்கள், சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் தெருவோரக்கடைகளிலும் - சுகாதாரம் பேணப்படும் தரம் மிகக் குறைவடைந்திருப்பதை பரவலாக யாழ். மாவட்டம் முழுவதிலும் காணமுடிகின்றது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் விஜயங்களைத் தொடர்ந்து ஒரிரு நாட்களுக்கு சுகாதாரமும், சுத்தமும் பேணப்பட்டாலும், பின்னர் - "பழைய குருடி கதவைத் திறவடி" கதையாக, சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்வதை மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுகாதாரப் பிரிவினர் - யாழ். நகரிலுள்ள உணகங்களிலும், இறைச்சி விற்பனைக்கூடங்களிலும், தெருவோரக் கடைகளிலும் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டுவரும் பணிக்கு, இவ் விற்பனை நிலையங்களது உரிமையாளர்கள் - மக்கள் நலனை முன்னிறுத்தி ஒத்துழைத்தால் மட்டுமே, சுகாதாரத்தையும், சுத்தத்தையும் பேணக்கூடியதாக இருக்குமென்பது நிச்சயம்.

யாழ். குடாநாடு அண்மைக்காலமாக தொற்றுநோய்களது பாதிப்புக்குள்ளான பகுதியாகி வருவதால், இவ்விடயத்தின் தீவிரத்தன்மையைக் கவனத்திற்கொள்வதும் அவசியமாகின்றது.

அதேவேளை, பொதுமக்களும் இவ்விடயத்தில் சுகாதாரப் பிரிவினருக்கு உதவவேண்டியவர்களாகின்றனர். சுகாதாரமற்ற உணவகங்களை அறியும் பொதுமக்கள், அவற்றைப் பற்றிய தகவல்களை உடனடியாக சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாது, சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்ட உணவ கங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்கின்றனரா எனக் கண்காணிப்பதும், இல்லாவிடில் - அவற்றைத் தட்டிக்கேட்பதும் தமக்குள்ள உரிமை என்பதை மக்கள் அறியவேண்டும்.

இதேவேளை மிக அண்மைக்காலமாக, சில உணவுப் பொருட்கள் மீது கொழும்பில், நுகர்வோர் அமைச்சினால் தடைவிதிக்கப்பட்டிருந்தும், அதே பொருட்கள் யாழ். வர்த்தக நிலையங்களில் தொடர்ந்தும் விற்பனைக்கிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக, செயற்கை நொறுக்குத்தீனிகள் கொண்ட பைகளுடன், பிளாஸ்ரிக் அல்லது றபர் பந்துகளை இணைத்து விற்பனை செய்வதை மேற்படி அமைச்சு தடைசெய்திருந்தும், இப்பொருட்கள் யாவும் யாழ்ப்பாணத்தில் தங்குதடையின்றி விற்பனையாகியே வருகின்றன.

இந்தப் பிளாஸ்ரிக் அல்லது றபர் பந்துகளை குழந்தைகள் உண்ணும் பொருளென நினைத்து அவற்றை உட்கொண்டு, அதனால் உயிருக்குப் போராடிய சம்பவங்களைத் தொடர்ந்தே இத்தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை பாவனைத் திகதி முடிவடைந்த பண்டங்களின், குளிர்பானங்களின் விற்பனையும் தெற்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதுடன், பாவனைத் திகதி குறிப்பிடாத கொள்கலன் குளிர்பானமொன்றை அருந்திய மாணவன் ஒருவன் உயிர்ப்பலியுமாகியுள்ளான்.

தெற்கிலிருந்தான வர்த்தகப் பாதை திறந்துவிடப்பட்டதன் பின்னர் - யாழ். குடாநாட்டிலும் இத்தகைய பண்டங்களும், குளிர்பானங்களும் நுழையாது எனக் கூறிவிடமுடியாது.

எனவே - மக்கள் இவ்விடயங்களில் கூடிய அவதானம் செலுத்துவதோடு, நுகர்வோர் பாதுகாப்பைப் பேணுவதற்கான வலிமையான, பலமான கட்டமைப்புக்களையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

இதற்காக நுகர்வோர் பாதுகாப்பு மன்றங்களை அமைக்கவும், அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அக்கறையுள்ளோர் முன்வரலாமே?

# 74

## சலிப்பைத் தரும் உறுதிமொழிகள்!

சில தினங்களிற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் மிலிந்த மொறகொடவும், கடற்படைத் தளபதியும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் - யாழ். குடாநாட்டு நிலவரங்களை அறிந்துசென்றதோடு, மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், யாழ். அரசாங்க அதிபரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களையும் நடாத்தியிருந்தனர்.

முதலில் இந்த விஜயம் யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு நிலவரங்களை மதிப்பீடு செய்வதற்கான பயணமே எனக் கூறப் பட்டபோதும் - பின்னரே இந்த விஜயத்தினதும், கலந்துரை யாடலினதும் பின்னணி விடயங்கள் வெளியாகின.

இதனடிப்படையில் - வடபகுதியில் இயல்புநிலையை ஏற்படுத்துவது பற்றி ஆராய்வதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த விசேட பணிப்பின் பேரிலேயே அவர்களது வருகை இடம்பெற்றது தெரியவந்தது.

அதேவேளை, - இவ்வாறானதொரு மதிப்பீட்டை மேற்கொள் வதற்கான அழுத்தம், நோர்வேத்தரப்பு, பிரதமரிடம் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே கிடைத்ததாகவும் மேலும் தெரியவருகின்றது.

இவற்றினடிப்படையில் - இன்னமும் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவில்லை என்பதை பிரதமர் ரணில் ஒப்புக்கொள்வதாகவே இந்த விஜயத்தின் பின்னணி கூறுகின்றது.

அதேவேளை - இந்த விஜயத்தின் பின்னர் பலாலிப் படைத் தளத்தில் நடைபெற்ற மனிதநேய அமைப்புக்களுடனான சந்திப்பின்போது யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங் களுக்கு வெளியேயுள்ள 88 காவல் அரண்களை அகற்றுவதற்குத் தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்திருக்கிறார்.

ஆனால் - இந்த இரு விடயங்களில் வழியேயும் - அதாவது, இயல்புநிலை தோன்றவில்லை என்பதைப் பிரதமர் ஒப்புக் கொள்வதான விடயமும், காவலரண்களை அகற்றுவதான ஒஸ்ரின் பெர்ணான்டோவின் உறுதியளிப்பும் - எவ் வகையான விளைவுகளைத் தரப்போகின்றன என்பதை நம்பிக்கைக்குரிய தாகக் கூறமுடியாதிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், வட கிழக்கில் நடைபெறுவதாக உறுதியளிக்கப்பட்டிருந்த பல விடயங்களும் விவகாரங்களும் - இன்னமும் தீர்வினை நோக்கி நகர்த்தப்படாமலேயே, அசைவற்ற நிலையிலிருப்பது மக்கள் மத்தியில் சலிப்பையே தோற்றுவித்திருக்கிறது.

அரசாங்கத்தரப்பு பிரசாரப்படுத்தும் அல்லது உறுதிகள் வழங்குமளவுக்கு அந்த விடயங்களுக்குச் செயலாக்கம் தருவதில் பின்னடித்து வருகின்றமையைக் கடந்த ஒரு வருடத்திலும் தமிழ்மக்கள் அனுபவரீதியாகவே உணர்ந்துள்ளனர்.

இயல்பு வாழ்க்கைக்கான அடிப்படை விஷயங்களில் கூட பிரமாதமாகச் சொல்லிக் கொள்வதற்கான தளர்வுகளைப் படைத்தரப்பு இதுவரை மேற்கொள்ளவில்லை. படைத்தரப்புக்கு உரியவாறு அழுத்தம் கொடுத்து சுமூகவாழ்க்கையை உறுதிப்படுத்துவதிலும் அரசாங்கம், முன்னேற்றகரமான நிலைப்பாடுகளை எட்டியதாகவும் தெரியவில்லை.

இவைபற்றி பேச்சுவார்த்தை மேசைகளில் விடுதலைப்புலிகள் பல தடவைகள் வலியுறுத்தியும், சுட்டிக்காட்டியும்,

மக்களைப் பிரதிநிதித்துவப்படும் பொது அமைப்புக்களும், மனிதநேய நிறுவனங்களும் எடுத்துக்கூறியும்,

இயல்புநிலையைச் சொல்லிக்கொண்டது போல் உருவாக்கம் செய்வதில் - குறிப்பிடத்தக்கதாக எதுவுமே நடைபெறவில்லை என்பதே கண்கூடு.

மக்களது மீள்குடியமர்வும், புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளும், படையினரின் கெடுபிடிகள் நீக்கமும் - புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் எவ்வாறு இருந்தனவோ, அதிலிருந்து மக்கள் நலன் நோக்கியதாக நகரவில்லை என்ற நிலையிலும்,

இதுவரை அமைச்சர்கள் பலரும், சர்வதேச நிறுவனங்களைச் சேர்ந்தோரும் யாழ். குடாநாட்டுக்கு அடிக்கடிவந்து அனுதாபத்துடன் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டுச் செல்வதாக உறுதியளிப்புக்களை விடுத்தும் - எதுவுமே பலன்களைத் தராதபோதும்,

பிரதமரின் விசேட கவனமும் ஒஸ்ரினின் அறிவிப்பும் - நடைமுறைச் சாத்தியப்படுமா என்பதை, எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் நிலையில் மக்களில்லை என்பதே யதார்த்தமானது.

# 75

## ஊடுருவலும் ஊக்குவிப்பும்!

இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவி, அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் இந்திய மீனவர்களுக்கும், உள்ளூர் மீனவர்களுக்கும் இடையே பேசாலைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மாலை பெரும் கைகலப்பொன்று நடைபெற்றுள்ளது.

பேசாலைக் கடற்பிராந்தியத்தில் நடந்த இம்மோதலில், இரண்டு தரப்பினருமே பயங்கரமாக மோதிக்கொண்டதில் - இரு தரப்பிலுமாக இருபதிற்கும் அதிகமானோர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தக் கலவரம் - இலங்கை, இந்திய மீனவரிடையே பதற் றத்தை அதிகரித்திருப்பதோடு மீண்டும், மீண்டும் இவ்வாறான மோதல்கள் வெடிக்கலாம் என்ற அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஏற்கனவே கடற்படையினரின் கெடுபிடிகளாலும், தாக்குதல் களாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் மீனவர்கள் - ஊடுருவி அத்துமீறலில் ஈடுபட்டு அடாவடித்தனம் புரியும் இந்திய மீனவர்களால் பாதிக்கப்படுவதனதும் -

உள்ளூர் மீனவர்களுக்கே உரித்தான கடல்வளம் கொள்ளை யிடப்படுவதனதும் எதிரொலியாக - இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்திய மீனவர்கள் - இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவுவதும், உள்ளூர் மீனவர்களது படகுகளைத் தாக்குவதும், வலைகளை அறுத்தெறிவதும் தனியே மன்னார் வளைகுடாவில் மட்டுமன்றி, வடபாலுள்ள கடற்பகுதிகள் எங்கனும் தினந்தினம் நடக்கும் நிகழ்வாகவே தற்போது அரங்கேறிவருகின்றது.

யுத்தச் சூழ்நிலையிலும், கடற்படையின் கெடுபிடிகளாலும், தாக்குதல் அச்சத்தாலும் உள்ளூர் மீனவர்கள் - தமது கடற் பகுதிக்குள்ளேயே ஆழமாகச் சென்று மீன்பிடியில் ஈடுபடாத நிலைக்குள் கட்டுண்டிருப்பதைச் சாட்டாக வைத்துக்கொண்டு, இந்திய மீனவர்களால் எமக்குரிய கடல்வளம் பெருமளவில் அடாத்தாகப் பறித்தெடுக்கப்பட்டுவந்தது.

இதனைத் தடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ள கடற்படையோ - இந்திய மீனவர்கள் ட்ரோலர்களில் இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழைவதைக் "கண்டும் காணாமலும்" விட்டுக்கொண்டு உள்ளூர் மீனவர்களின் படகுகளைத் தமது அதிவேகப் படகுகளால் தாக்கி மூழ்கடித்தும், மீனவர்களைச் சகட்டுமேனிக்குத் தாக்கியும் கொடுஞ்செயலைத் தொடர்ந்துவந்தனர்.

போர் நடைபெற்ற காலம் என்று மட்டுமல்ல போர் நிறுத்தம் கைச்சாத்தாகியபின்னரும் கூட, கடற்படையினரின் இத்தகைய அடாவடித்தனங்கள் - தொடர் கதையாகி கடற்தொழிலாளரின் வயிற்றிலடிக்கும் கதை நீடித்தேவருகின்றது.

கடற்படையினரின் இந்த அச்சுறுத்தலைத் தமக்குச் சாதக மாக்திக் கொண்ட இந்திய மீனவர்கள் - இன்னமும் துணிவுடனும், கேட்போர் எவருமில்லை என்ற திமிர்த்தனத்துடனும், இலங்கைக் கடற்பகுதிக்குள் சுதந்திரமாக நுழைந்து தமது திருட்டை நடத்தி வந்ததை உள்ளூர் கடற்தொழிலாளர்கள் மனங்கொள்ளா வேதனையுடன் சுட்டிக்காட்டிவந்தனர்.

இதுபற்றி அரசாங்கத்திடமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும், மனித உரிமை அமைப்புக்களிடமும் முறையிட்டபோதும்-அதுகருத்திலெடுக்கப்பட்டுநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக எதுவுமே தெரியவில்லை.

ஒரு நிலையில், இந்திய மீனவர்களிடம் "தரகு" பெற்றுக் கொண்டோ அல்லது இந்திய மீனவர்களைத் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான கருவிகளாகப் பயன்படுத்தும் நோக்குடனோ கடற்படையினரே இந்த அத்துமீறல்களை ஊக்குவித்து வருவதாகவும் உள்ளூர் மீனவர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவை மட்டுமல்லாமல் - உள்ளூர் மீனவர்கள் மீதான தாக்குதலுக்கும், கடல்வளத் திருட்டுக்கும் - தமிழர் விரோதப் போக்கை மனதிற்கொண்டு கடற்படையினரே பல சமயங்களில் வழிசமைத்துக் கொடுப்பதாகவும் சாடப்படுகின்றது.

அதேவேளை - இந்திய அதிகாரிகளோ, கடலோரக் காவற் படையினரோ இந்த விவகாரத்தில் தமது நாட்டு மீனவர்களின் போக்கினைக் கட்டுப்படுத்துவதற்கான எந்த முயற்சிகளிலும் இறங்குவதாகத் தெரியவில்லை.

அவர்களது கண்முன்னாலேயே - இந்தியக் கடல் எல்லையைக் கடந்து அத்துமீறல் நடந்துவருவதையும் இங்கு குறிப்பிட் டாகவேண்டும்.

இந்தவகையில் - இந்திய மீனவர்களும், இந்திய அதிகாரிகளும், கடலோரக் கடற்படையினரும், இலங்கைக் கடற்படையினருமே பேசாலைச் சம்பவத்துக்கு மூலகாரணம் என்பதுடன்,

தொடர்ந்து இதுபோன்ற அத்துமீறல்களும், ஊக்குவிப்புக்களும் நிகழ்ந்துகொண்டே இருக்குமானால் - அது நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிடும் என்பதையும் சுட்டிக்காட்டவே வேண்டி யிருக்கிறது.

# 76

## ஊடுருவலுக்குப் பின்னால்...!

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிநுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்டுவரும் இந்திய மீனவர்களின் விவகாரம் - பேசாலைச் சம்பவத்தைத் தொடர்ந்து சூடுபிடித்துவருகின்றது.

நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிய இந்திய மீனவர்களில் 105 பேர், அவர் களது ட்ரோலர்களுடன் - உள்ளூர் மீனவர்களால் சுற்றிவளைக்கப்பட்டுப் பிடிக்கப்பட்டனர்.

குறிப்பிட்ட இரண்டு தினங்களிலும் நடைபெற்றுள்ள இந்த அத்துமீறல்களை வைத்துப்பார்க்கும்போது - இந்திய மீனவர் களின் அடாவடித்தனமும், அத்துமீறலும் ஒருபுறமிருக்க, இவர்களை ஊக்குவித்து எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றி விட்டுக் குளிர்காய விரும்புபவர்களின் போக்குப் பற்றியும் கவனிக்கவேண்டியதாகின்றது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீற லென்பது இன்று நேற்று நடைபெறும் விடயமல்ல, பல ஆண்டு களாகவே தொடரும் இந்த வரைமுறைமீறல் - பல சந்தர்ப்பங் களிலும் நேருக்குநேரான மோதல்வரை கொண்டு சென்றிருக்கின்றது. குறிப்பாக, கச்சதீவுப் பகுதியில் நடைபெற்ற மோதல்கள், கைகலப்புக்கள் தொடர்பாக வடக்கு மற்றும் வடமேற்குக் கடற்கரையோரப் பிரதேசங்களில் வாழும் மக்களின் அனுபவக் கதைகள் ஏராளமே.

இவை ஒருபுறம் நடந்து கொண்டிருந்தாலும் - தமிழகத்திலுள்ள தமிழர்களுக்கும், ஈழத்தமிழர்களுக்குமான உறவென்பது பாதிக்கப்படாததொன்றாகவே இருந்துவந்தது.

இங்கு அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடும் காலங்களிலும், இராணுவ நடவடிக்கைகள் தீவிரம்பெறும்போதும் - தமிழகத்திற்கு ஈழத்தமிழர்கள் அகதிகளாகச் சென்றது அங்குள்ள மக்கள் ஈழத்தமிழர்களுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் அனுதாபமும், ஆதரவும் தந்ததும் வெளிப்படையானது.

இத்தகைய நிலை காலப்போக்கில் தணிந்துகொண்டாலும், நீறுபூத்த நெருப்பாகவே ஈழத்தமிழர்களுக்கும் விடுதலைப் போராட்டத்திற்குமான ஆதரவுத்தளம் தமிழகமெங்கும் இன்றும் பரவிக்கிடக்கக் காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு சூழலில் - இதுவரைகாலமும் இலங்கைக் கடற்படையினரோ ஈழத்தமிழர்களுக்குச் செய்த கொடுமைகளுக்கும் அழிவுகளுக்கும் குறைவில்லாத வகையிலேயே தமிழக மீனவர்களையும் துன்புறுத்திவந்தனர். பல சந்தர்ப்பங்களில் படுகொலைகளும் நடந்தேறின.

இலங்கைக் கடற்படை என்றாலே - இந்திய மீனவர்கள் மத்தியில் பெரும் அச்சமும் நிலவிவந்தது.

ஆனால், அண்மையகாலங்களில், குறிப்பாகப் போர் நிறுத்தத்திற்குப் பின்னர் - இலங்கைக் கடற்படையினர் தமது தந்திரோபாய நடவடிக்கைகளில் ஒன்றாக, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிநுழைவதையும் மீன்பிடித்துச் செல்வதையும் "கண்டும் காணாமல்" விட்டுவரும் போக்கைக் கடைப்பிடித்துவந்தனர்.

இவ்வாறு இலங்கைக் கடற்பிராந்தியத்தினுள் - இந்திய மீனவர்கள் முன்னர் நுழைந்தபோதெல்லாம் - இலங்கையின் இறையாண்மைக்கான அச்சுறுத்தலாகக் கருதி அவர்களைச் சுட்டுத்தள்ளிய இலங்கைக் கடற்படையினர், தற்போது இவ்வாறு நடந்துகொண்டதன் பின்னணி மர்மத்துக்குரியதாகவே இருந்துவந்தது.

கடற்படையினரின் இந்தப் போக்கினால் - எல்லை தாண்ட வந்த இந்திய மீனவர்கள் - உள்ளூர் மீனவர்களின் படகுகளைத் தாக்கியும், வலைகளை அறுத்தும் அடாவடித்தனம் புரிந்ததோடு கடல்வளத்தையும் இஷ்டத்துக்குக் கொள்ளையடித்துச் செல்ல முற்பட்டனர்.

இலங்கைக் கடற்படையினரின் மறைமுகமான ஊக்குவிப்பால் நடந்த இந்த நடவடிக்கைகள் - உள்ளூர் மீனவர்களிடம் நியாயமான கோபத்தினை ஏற்படுத்தின.

இதுவரை காலமும் - போரினாலும், படைகளின் அச்சுறுத்தலாலும் - தமது சீவனோபாயத்திற்கான தேவையை நிவர்த்தி செய்யவே பெரும் தடைகளுடனும், கெடுபிடிகளுடனும் போராடியே, கடற்தொழிலை மேற்கொண்டுவந்த உள்ளூர் மீனவர்களுக்கு சமாதான காலத்திலும் தமது தொழிலைச் சீரழிக்க முனைந்த அத்துமீறலும், கொள்ளையிடலும் சினத்தையே ஏற்படுத்தின.

இதன் விளைவாகவே, பேசாலைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதன்போது ஏற்பட்ட கைகலப்புக்கள் பலரையும் படுகாயமடையவும் செய்தன.

உண்மையில் - இத்தகையதொரு நிலையை உருவாக்கிக் கொண்ட இலங்கைக் கடற்படையோ - இரு நாடுகளதும் தமிழ் மீனவர்களும் மோதிக்கொள்வதை வேடிக்கை பார்க்கவே செய்தது.

இதற்கு எவ்விதத்திலும் குறைவில்லாது, இந்தியக் கடற்படை3யும், அந்நாட்டுக் கடலோரக் காவற்படையும் நடந்துகொண்டன. அவற்றுக்கும் இந்த ஊடுருவல்களால் ஆதாயம் இருக்கலாம் என்பது வேறுகதை.

மறுபுறத்தில் - தமிழகத்தில் சில ஊடகங்களும், கிடைத்தது சந்தர்ப்பம் என - இந்திய மீனவர்கள் கடத்தப்பட்டதாகவும், அவர்கள் மீது குண்டுகள் எறியப்பட்டதாகவும் - கதைகளைக் கட்டத் தொடங்கிவிட்டனர்.

“சும்மா கிடந்த வாய்க்கு மெல்வதற்கு அவல் கிடைத்தாற்போல” அவை நடந்து கொள்ளும் விதம் - தமிழகத்தில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குவதோடு, ஈழத்தமிழர்கள் மீது விரோதத்தைத் தோற்றுவிக்கவேண்டுமென்ற அவற்றின் நோக்கத்தையே பகிரங்கமாக்குகின்றன.

இந்தவகையில் - இந்திய மீனவர்களின் ஊடுருவலின் பின்னணியிலுள்ள விடயங்கள் பற்றியும் மக்கள் விழிப்பாக இருப்பது அவசியமாகின்றது.

# 77

# ஆரோக்கியத்திற்கான விழிப்புணர்வு!

மக்களிடையே நோய்கள் பற்றிய விழிப்புணர்வும், அடிப்படைச் சுகாதாரத்திற்கான தேவைகளும் மிக அவசியமானவை என்ற கருத்து தற்போது வலுத்துவருகின்றது.

ஆரோக்கிய வாழ்வே மகிழ்ச்சியான, அமைதியான, நிம்மதியான வாழ்வாகும் என்ற அனுபவரீதியான உண்மையை ஏற்றுக்கொண்டு "வருமுன் காப்போம்" என்ற முன்னெச்சரிக்கையுடனும்,

நோய்கள் ஏற்பட்டால் கூட தகுந்த வழிமுறைகளுடனும், வைத்தியரின் வழிகாட்டலுடனும் அவற்றை நிவர்த்திக்கவும் மக்கள் விழிப்புணர்வைப் பெற்றிருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் பரவலாகவே ஏற்பட்டுள்ளது.

இந்தவகையில், எமது சமூகத்திலும் பரவலாகத் தொடரும் நோய்கள் பற்றிய விழிப்புணர்வையும், தகுந்த வழிகாட்டுதலையும் மக்களுக்குத் தரவேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தப் பெருந்திட்டத்தின் முதற்கட்டமாக நீரிழிவுநோய் பற்றிய தொடரொன்றை "நமது ஈழநாடு" பிரசுரித்திருந்தது.

35 நாட்களாகத் தொடர்ந்த இந்த விழிப்புணர்வுக்கட்டுரை, சமூகத்தின் பல தரப்பிடமிருந்தும் வரவேற்பையும், பாராட்டை யும் பெற்றுள்ளதாக எமக்குக் கிடைத்த வாசகர் கடிதங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ளமுடிந்தது. குறிப்பாக - நீரிழிவு

நோய் பற்றி நிலவிய மூடத்தனங்களைப் பெருமளவில் நீக்கிக்கொள்ள இக்கட்டுரை உதவியதாகவும், நீரிழிவைத் தடுக் கக்கூடிய அல்லது இழிவாக்கக்கூடிய வழிமுறைகள், விளக்கங்கள் என்பன இக்கட்டுரையை ஆவணப்படுத்தி வைக்க வேண்டிய அவசியத்தைத் தந்ததாகவும் வாசகர்கள் பலரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, அடிப்படைச் சுகாதாரப் பழக்கவழக்கங்களையும், பொதுச்சுகாதார வழிகாட்டுதல்களையும் மிக இலகுவான மொழிநடையில் புரிந்துகொள்ள வைத்ததற்கு வாசகர்கள் குறிப்பிட்ட கட்டுரையாசிரியருக்குத் தமது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

வாசகர்களின் இந்தக் கருத்துக்களின் வழியே - நோய்கள் பற்றிய விழிப்புணர்வில் அவர்களுக்கிருக்கும் நாட்டத்தையும், தேவைகளையும் அறிந்துகொள்ள முடிந்தது என்பது இங்கு குறிப்பிடவேண்டிய அம்சமாகின்றது.

எமது சூழலைப் பொறுத்தவரையில் - பெருமளவில் மக்களைப் பீடித்திருக்கும் ஆஸ்மா, தோல் நோய்கள் போன்றவற்றுடன்,

புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துவதால் உண்டாகும் நோய்கள் மற்றும் பாதிப்புக்கள், அவசர முதலுதவிகள் பற்றிய விளக்கங்களும், தேவையான வழிகாட்டுதல்களும் மக்களைச் சென்றடைய வேண்டிய அவசியம் நிலவுகின்றது.

தமக்கு ஏற்படக்கூடிய நோய்கள் மற்றும் பாதிப்புக்கள் பற்றி சாதாரண பொதுமக்கள் அறிந்துகொள்வதைச் சர்வதேச ரீதியாகவே மருத்துவர்களும், சுகாதாரப் பிரிவினரும் வரவேற்றும், ஊக்கப்படுத்தும் சூழ்நிலையில்,

எமது பிரதேசங்களிலும் அத்தகையதொரு உதவியைச் செய்வதில், சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்தோர் இன்னமும் முயற்சிகளைத் தீவிரப்படுத்தவேண்டும்.

நோய்வரும் காலத்தில் மட்டும் அல்லது நோயின் தாக்கம் தீவிரமடையும்போதே அந்நோய் பற்றிய விழிப்புணர்வைக்

கொடுக்க முயற்சிப்பதைவிட, அதனைத் தீவிரமான முறையில், அத்தியாவசியமான நடவடிக்கையாக முன்னெடுப்பதற்குத் தன்னார்வ நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

தனியே தொற்றுநோய்கள் என்பதில்லாமல், சாதாரணமாக மக்களுக்கு உண்டாகும் நோய்கள், பாதிப்புக்கள் பற்றி பாடசாலை மட்டங்களிலும், சமூகத்தின் பலதரப்புக்களிலும் - தகவல்களையும் விழிப்புணர்வையும் கொண்டுசெல்வதென்பது எமது மக்களை ஆரோக்கியமான, சுகாதாரம் நிறைந்த நோய்களின் பாதிப்புத் தவிர்க்கப்படக்கூடிய வாழ்நிலைக்குக் கொண்டு செல்லும் என்ற நம்பிக்கையைச் சுமந்தவர்களாக இந்த முயற்சிகள் ஏன் முன்னெடுக்கப்படக் கூடாது?

உதாரணத்திற்கு எமக்கு வாசகரொருவர் வரைந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது போல வளர்ச்சியடைந்த நாடுகளில் நீரிழிவு நோயைத் தடுப்பதற்கும், நீரிழிவு நோயாளர்களுக்கு உதவுவதற்காகவும் "நீரிழிவுநோய்த் தடுப்புச் சங்கங்கள்" அமைக்கப்பட்டுள்ள நிலையில் -

இதுபோன்ற முயற்சிகள் எமது பிரதேசத்திலும் மேற்கொள்ளப்படலாமே என்ற அவரது ஆதங்கத்தை நாம் ஏன் கருத்திற் கொள்ளக்கூடாது?

ஒரேயடியாக என்றில்லாவிட்டாலும், கட்டங் கட்டமாகவாவது இந்த விழிப்புணர்வை மேற்கொள்ள அக்கறையுடையோர் முன்வரலாமே?

# 78

# தமிழர் கல்விக்குத் தொடரும் புறக்கணிப்பும் அலட்சியமும்

நிரந்தர நியமனம் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் பந்தா டப்பட்டுவரும் - தொண்டராசிரியர்கள் - இன்று தமக்கான பதிலை, உறுதியான வகையில் சம்பந்தப்பட்டவர்கள் தரவேண்டுமென்றகோரிக்கையைமுன்வைத்துப்போராட்டத்தை நடத்துகின்றனர்.

தொண்டராசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆற்றியுள்ள, ஆற்றிவரும் பணியானது ஆசிரியர் பற்றாக்குறையினால் பாரியளவில் பாதிக்கப்பட்டிருக்கும் வட - கிழக்கு மாகாணக் கல்வித்துறைக்குக் காலத்தால் செய்த மிகப்பெரும் சேவையென்றே கொள்ளத்தக்கதாகும்.

குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், பின்தங்கிய பிரதேசங்களிலும் இருந்து ஆசிரியர்கள் பலர் பாதுகாப்பான பகுதிகளுக்கும், நகரங்களுக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றபோது தொண்டராசிரியர்களின் சேவையே கற்பித்தலில் பெருமளவு இடைவெளி ஏற்பட்டுவிடாமலும், மாணவர்களின் கற்றலில் பாதிப்புத் தோன்றாமலும் பாதுகாக்கத் துணைபுரிந்தது என்றால் - அது மிகையில்லை என்றே கூறலாம்.

இந்தவகையில் - வன்னிப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால், அங்கு தொண்டராசிரியர்களின் பணி மகத்தானதாக அமைந்திருப்பதை இன்னும் வலுவாகவே குறிப்பிடமுடியும்.

தகுந்த கற்பித்தல்சார் பயிற்சிகளின்றி இவர்களின் பணி ஆரம்பித்திருந்தாலும் - வருடக்கணக்கான அனுபவத்தின் மூலம் தொண்டராசிரியர்களின் கற்பித்தல் செயன்முறைகள் செம்மை அடைந்ததையும், சிறப்படைந்ததையும் கல்வியியலாளர்கள் மறுக்கமாட்டார்கள்.

ஆனால், மிகக் குறைந்த ஊதியத்தில் - நிறைவான சேவையைத் தந்த இவர்களுக்கான நிரந்தர நியமனம் மட்டும் - எட்டாக்கனியாகவும், வெறும் வாக்குறுதி மட்டத்திலுமே தொடர்வது, துரதிர்ஷ்டவசமானதோடு நியாயமற்றதுமாகும்.

இந்த நிரந்தர நியமன விவகாரத்தை வைத்து, தொண்டராசிரியர்களைச் சில அரசியல்சக்திகள் ஏய்த்துப் பிழைத்ததும் - வேதனைதரும் இன்னுமொரு விடமாகும். நிரந்தர நியமனம் பெற்றுத் தருகிறோம் என ஆசைவார்த்தை கூறி தொண்டராசிரியர்களைத் தேர்தல் பிரச்சாரங்களுக்கும், ஏன் வாக்குப்பதிவு நிலைய முகவர்களாகவும் வேலைசெய்யவைத்து ஏமாற்றிய கதைகளைக் குடாநாடே அறியும்.

அதுபோக, ஆசிரிய சேவைக்கான உள்ளீர்ப்பில் பட்டதாரிகள் மற்றும் கல்வியற் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களும் காத்திருக்கும்போது, அவர்களுடன் போட்டியிடக் கூடிய கல்வித் தகைமைகளோ மேலதிக சான்றுப் பத்திரங்களோ தொண்டர் ஆசிரியர்களிடம் இல்லாதபோதும் - அவர்களது அரப்பணிப்பும், சமகாலத்தின் தேவை கருதிய சேவையும் எவராலும் நிராகரிக்கப்படக்கூடியவையல்ல என்பதை நியாயமாகச் சிந்திக்கக்கூடிய எவரும் ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள்.

வட - கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை என்பது பூதாகரமான தொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையிலும் தம்மிடம் நிதியில்லை என்ற காரணம் கூறி ஆசிரிய நியமனங்களுக் குப் பின்னடித்துவரும் திறைசேரியின் போக்கினால், வட - கிழக் கின் கல்வி நிலையே பாதிக்கப்படும் சூழலில், தொண்டராசிரி யர்களுக்கு இழைக்கப்படும் இந்த அநீதி அந்தப் பாதிப்பை இன்னமும் தீவிரப்படுத்தவே செய்கின்றது.

தென்பகுதிக்கு தேவைக்கு அதிகமான ஆசிரியர் நியமனங் களை வழங்கிவிட்டு, நாடளாவிய ஆசிரிய நியனத்திற்கான ஒதுக் கீடுகள் முடிவடைந்து விட்டதாகக் கூறிவிட்டு, வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு மாற்றான் தாய் மனப்பான்மை காட்டிவரும் திறைசேரியின் செயற்பாடு படுமோசமானதும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

எனவே, அரசாங்கம் இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்கி உதவுவதுடன்,

பற்றாக்குறையுள்ள வெற்றிடங்களை நிரப்ப, வேலையற்றிருக் கும் பட்டதாரிகளுக்கும் தகுதியுடையோருக்கும் ஆசிரிய நியமனங் களை வழங்க முன்வரவேண்டியது அவசியமானதாகும்.

இல்லையேல் - தரப்படுத்தல் மூலமாகத் தமிழர்களின் கல்வி வாய்ப்புக்களை தட்டிப்பறித்த வரலாற்றுத் தவறுக்கும், துரோகத்தனத்துக்கும் எவ்விதத்திலும் குறைவில்லாததாகவே,

ஆசிரிய நியமனங்களில் காட்டப்படும் புறக்கணிப்பும் அதனூடாகத் தொடரும் தமிழர்கள் மீதான கல்விச் சிதைப்பும் கருத்திலெடுக்கப்படும்.

# 79

## மதிக்கப்படாத அர்ப்பணிப்பும் சிதைக்கப்படும் அமைதியும்!

கிழக்குக் கடற்பரப்பில், சர்வதேசக் கடற்பிராந்தியத்தில் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பல் சர்வதேச நெறிமுறைகளை மீறித் தாக்கி அழிக்கப்பட்டதும், கடற்பயணத்தில் நீண்டகால அனுபவம் பெற்ற போராளிகள் பதினொரு பேர் உயிரிழந்ததும் - அமைதி முயற்சிகளில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதோடு, தமது பொறுமையைச் சோதிப்பதாகவும் அமைந்திருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் - சமாதானச் சூழலைச் சீர்குலைக்கக் கூடியனவென்பதையும், விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டக் கூடியனவென்பதையும் - நன்றாகத் தெரிந்தநிலையில் - வேண்டுமென்றே, மிகத் திட்டமிட்டவகையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கும் நிலையில் -

விடுதலைப் புலிகள் அசாத்தியமான பொறுமை காட்டிவருவது மக்களுக்காகவே என்பதை விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், கிளிநொச்சியில் நடந்த தமிழீழ நீதிமன்ற வளாகத் திறப்புவிழாவில் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

“கப்பல் அழிக்கப்பட்ட சம்பவத்தை வைத்துக்கொண்டு யுத்தத்தை நாம் ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால், யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை, ஆரம்பிக்கப் போவதுமில்லை. ஏன்? உங்க ளுக்காக, எங்களால் முடிந்தளவு பொறுமையைக் கடைப்பிடித் துவருகிறோம்” எனத் தெரிவித்திருக்கிறார் அன்ரன் பாலசிங்கம்.

படையினரின் தொடர்ச்சியான, தீவிரமான யுத்தநிறுத்த மீறல் களால் - ஆத்திரமூட்டப்பட்டபோதும் - விடுதலைப்புலிகள் அமைதிவழியில் காட்டிநிற்கும் இந்த அர்ப்பணிப்பும் விசுவாசமும் - சர்வதேசத்திற்கும் தெளிவாகவே ஒரு செய்தியைச் சொல்கின்றது.

இதன்படியே - விடுதலைப்புலிகளது போராட்டமும் இலக்கும் நியாயபூர்வமானது, நீதியானது என்பதுடன் - தமிழ்மக்களுக்கான ஒரு கௌரவமான தீர்வைப் பெறுவதில் அவர்கள் காட்டிநிற்கும் உறுதியும் - சர்வதேசத்திற்கு விடுக்கும் அறைகூவலாகவே அமைகின்றது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், சுதந்திரமான வாழ்வுக் காகவும் அளப்பரிய தியாகங்களைப் புரிந்த போராளிகளின் பாதையில் - இன்று அமைதிக் காலத்திலும், போராளிகள் தொடர்ந்து உயிர் துறந்துவரவும் - சமாதானத்துக்காகப் புலிகள் பொறுமைகாப்பது, மக்களுக்காக அவர்கள் ஆற்றிவரும் அளவிடமுடியாத தியாகம் இன்றும் தொடர்வதையே எடுத்துக் காட்டுகின்றது.

அதேவேளை - விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பையும், உறுதியையும் - பலவீனமாக எடுத்துக் கொள்ளவேண்டா மென்பதையும், இந்த அர்ப்பணிப்பும் உரியவாறு மதிக்கப்படா விட்டால், கௌரவிக்கப்படாவிட்டால் - நிலைமை எல்லை மீறிச் சென்றுவிடுமென்பதையும், அரசியல் ஆலோசகர் எச்சரிக்கையுடன் வெளியிட்டிருக்கிறார்.

“பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு, குட்டக் குட்டக் குனிப வனுக்கு மடையன் என்று சொல்வார்கள்” என அறிவித்திருக்கும் அவரது கருத்துக்கள் - சர்வதேசமும், இலங்கை அரசாங்கமும்

தீவிரமாகக் கவனத்திற்கொள்ள வேண்டியவையாகும்.

பொறுமையை இழக்காமல், நிதானத்தை இழக்காமல், அமைதிக்காக விடுதலைப் புலிகள் செய்திருக்கும் அற்புதமான தியாகம் உரியவாறு கருத்திலெடுக்கப்படாவிட்டால் -

விடுதலைப் புலிகளைத் தொடர்ந்தும் ஆத்திரமூட்டி, நியாயந் தவறி அரசாங்கப் படைகள் நடந்துகொள்ளுமானால் -

கடந்த ஒரு வருடமாகக் கட்டியெழுப்பப்பட்டு வந்த அத்தனை நல்லெண்ண முயற்சிகளும், நம்பிக்கையும் விழலுக்கிறைத்த நீராகிவிடும் ஆபத்து வலுப்பதையே விளைவாக எதிர்நோக்க வேண்டியேற்படும்.

ஒருபுறம் - நேர்மையாக, நிதானமாக, பெரும் அர்ப்பணிப்புடன் சமாதானத்தை உறுதிப்படுத்தப் போராடும் விடுதலைப்புலிகளும், மறுபுறம் -

படையினரைக் கட்டுப்படுத்தும் அதிகாரமற்ற அரசாங்கமும், குதர்க்கமாகவும் - தான்தோன்றித்தனமாகவும் செயற்படும் ஜனாதிபதியும், அடாவடித்தனம் புரிந்து மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்தியே தீருவோமெனக் கங்கணம் கட்டிநிற்கும் படையினருமாக அமைதியை உறுதிப்படுத்தும் வாய்ப்புக்கள் சிதைக்கப்படுவதை சர்வதேசம் தொடர்ந்தும் அனுமதிக்கத்தான் போகின்றதா என்பதே பெரும் வினாவாக எழுந்துநிற்கிறது.

# 80

## இறுதி வாய்ப்பு!

சமாதான முயற்சிகளின் மீதுள்ள நம்பிக்கையையும், சர்வதேசத்தின் மீதுள்ள மதிப்பையும் - ஜப்பான் பேச்சுக்களில் கலந்து கொள்வதான தமது முடிவின் மூலம் விடுதலைப்புலிகளின் தலைமை மீண்டும் வெளிக்காட்டியிருக்கிறது, வலியுறுத்தியிருக் கிறது.

சர்வதேசக் கடற்பரப்பில், விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் அழிக்கப்பட்டதும், அதிலிருந்த பதினொரு போராளிகள் கொல்லப்பட்டதுமான சம்பவம் - பாரியதொரு யுத்தநிறுத்த மீறலாக, ஆத்திரமூட்டும் செயலாக அமைந்துவிட்டநிலையில்,

பேச்சுக்களில் தற்காலிகமாக ஒதுங்கியிருப்பதாக யோசித்து வருவதாகவும், தமது எதிர்ப்பைப் பதிவுசெய்ய இது ஒரு வழி எனவும் விடுதலைப்புலிகள் முதலில் அறிவித்திருந்தனர்.

ஆனால் - பேச்சுவார்த்தையைப் பகிஷ்கரித்து ஆட்சேபணை யைத் தெரிவிப்பதிலும் பார்க்க, பேச்சுவார்த்தையில் பங்குபற்றி நேரடியாகவே ஆட்சேபணையைத் தெரிவிப்பதுதான் புத்திசாலித்தனமான முடிவு என விடுதலைப்புலிகளின் தலைவர் முடிவு செய்திருப்பதைத் தொடர்ந்து,

விட்டுக்கொடுப்புடனும், அமைதிக்கான சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்தும் நோக்குடனும் - விடுதலைப்புலிகளின்

பேச்சுவார்த்தைக் குழுவினர் இன்று ஜப்பானுக்கான தமது பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

புலிகளின் இந்த முக்கிய முடிவுபற்றி அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிக்கும்போது,

கப்பல் அழிப்புச் சம்பவம் குறித்து புலிகள் தரப்பிலுள்ள நியாயத்தைச் சிங்களத் தரப்புக்கு எடுத்துவிளக்கி, சிங்களத் தரப்பு தவறுசெய்தது என்பதை அவர்களுக்கு எடுத்துக்கூறி, இதற்கான கடுமையான ஆட்சேபணையைத் தெரிவிக்குமாறு தலைவர் தன்னைப் பணித்திருப்பதாகவும்,

ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் நிகழ்ந்தபோதும் போர்நிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து அமைதியைப் பேணி, பேச்சுக்களைத் தொடர்வதுதான் எமது உறுதியான தீர்மானம். மக்களும் அதையே விரும்புகின்றார்கள் எனவும் குறிப்பிட்டிருப்பதுடன் -

கப்பல் அழிப்புச் சம்பவம் தலைமைப் பீடத்தையும், எமது போராளிகளையும் உலுப்பியபோதும் - நாம் மனந்தளராது, உறுதி தளராது அமைதியைப் பேணிப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடாத்தி, எம்மால் முடிந்தளவுக்குப் பேச்சுக்களை முன்னெடுப் பதுதான் நல்ல செயற்பாடு எனத் தலைவர் முடிவெடுத்துள்ளார் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் இந்த அறிவிப்பானது, அவர்களது உறுதியையும், விசுவாசத்தையும் சர்வதேசத்திற்கும் அரசாங்கத்திற்கும் எடுத்துக்காட்டுகின்ற அதேவேளை-

அமைதியைச் சீர்குலைக்கவும், விடுதலைப்புலிகளை ஆத்திரமூட்டவும் கணக்குவழக்கற்ற அழிவுவேலைகளைச் செய்துவரும் படையினருக்கும், அரசியல் தலைமைகளுக்கும் முகத்திலறைந்த நடவடிக்கையாக அமைந்திருக்கின்றது.

ஆயுதப் போராட்டத்தில் - வீரத்தோடும், துணிச்சலோடும் போராடி, போர்க்களத்தில் ஏராளம் வெற்றிகளைச் சுமந்துநிற்கும் ஒரு தேசிய விடுதலை இயக்கம் - திறன்மிகுந்த, கடற்பயணத்தில்

அனுபவம் வாய்ந்த தனது போராளிகளை இழந்தபோதும் பொறுமைகாட்டுவதும் -

அமைதி முயற்சிகளிலும், சமாதானத்தின் மீதான உறுதிப் பாட்டிலும் காட்டும் அர்ப்பணிப்பும் வியக்கவைக்கும் செயல்களென்பதைச் சர்வதேசம் குறித்துக்கொள்ளவேண்டும்.

அதேவேளை - விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் சுட்டிக்காட்டியிருப்பதுபோல, தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள், சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பம் என்பதையும் -

இப்பேச்சுக்கள் மூலம் தமிழ் மக்களுக்கு நீதியான, கௌரவமான சுயாட்சி அதிகாரம் ஒன்று கிடைக்கவேண்டும். அல்லாதுபோனால், தமிழர் பகுதியில் தனியரசு அமைவதை எவராலும் தடுக்கமுடியாது என உறுதிபடக்கூறியிருப்பதையும், அரசாங்கத் தரப்பு ஜப்பானுக்குப் புறப்படுவதற்கு முன்பே மனதிற்கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகள் ஜப்பான் பேச்சுக்களுக்கு வருவதாக இணங்கியிருப்பதன் முக்கியத்துவமும், அவர்களது தீர்மானத்தின் பெறுமதியும் - அரசாங்கத் தரப்பில் உணரப்பட்டாக வேண்டும்.

இவற்றினைக் கருத்திற்கொண்டு - இனியும் யுத்தநிறுத்த மீறல்களுக்கும், போராளிகளைத் தாக்குவதற்கும், அழுத்தத்திற் குள்ளாக்குவதற்கும் இடந்தராதவகையில் உறுதியான, தெளிவான நிலைப்பாடுகளுக்கு அரசாங்கம் சம்மதிக்கத் தவறும் பட்சத்தில்,

தமிழ் மக்களுக்கான நீதியான, கௌரவமான சுயாட்சி அதிகா ரத்தை வழங்குவதற்கான முயற்சிகளில் விசுவாசமின்றி நடக்கும் நிலையில், விடுதலைப்புலிகள் உறுதிபட அறிவித்திருப்பதன்படி - சிங்களதேசத்திற்கும், மக்களுக்கும் வழங்கப்பட்ட இறுதியான சந்தர்ப்பத்தை அவர்கள் இயலுமான விரைவில் இழந்ததாகிவிடும்.

# 81

## உழவர் துன்பம்...!

யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் வாழ்ந்துவரும் விவசாயிகளுக்கு, கடந்தகால யுத்த நடவடிக்கைகள் தொழில்சார்ரீதியில் மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

ஒவ்வொரு கட்ட விவசாய நடவடிக்கைகளிலும் - ஏராளம் பிரச்சினைகள் எதிர்கொண்டவர்களாகவே அவர்களது தொழில் முயற்சிகள் நெருக்கடிகளைச் சந்தித்துவந்தன.

தரமான விதைகள், உரங்கள் மற்றும் கிருமிநாசினிகளைப் பெறுவதற்கு விதிக்கப்பட்ட தடைகள், எரிபொருட் தட்டுப்பாடு என்பவற்றோடு விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதுவரை விவசாயிகள் பட்ட துன்பங்கள் சொல்லிமாளாதவை.

யுத்தகாலத்தில் நீடித்துவந்த இந்த நெருக்கடிகளும், தடைகளும் - தற்போதைய சூழ்நிலையில் தளர்ந்துவந்தாலும் - சந்தைப்படுத்தலைப் பொறுத்தவரையில் விவசாயிகள் சந்திக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்படாதவையாகவே தொடர்கின்றன.

போர் நிறுத்தம் அமுலாக்கப்பட்டதன் பின்னர் ஏ-9 போக்குவரத்துப் பாதை திறக்கப்பட்டாலும், அதனூடாக வன்னியையும், யாழ்ப்பாணத்தையும் நோக்கியதான பொருட்களின் வரவு அதிகரித்துள்ள அளவுக்கு - அங்கிருந்து விளைபொருட்கள் தென்பகுதிக்குச் சந்தைப்படுத்தலுக்காகச் செல்வது ஒப்பீட்டுரீதியில் மிகக்குறைந்ததாகவே இருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் நுகர்வுக்கு மிஞ்சிய விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றபோதும் - இது தொடர்பில் இதுவரை முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட தாகத் தெரியவில்லை.

அங்கொன்றும் இங்கொன்றுமாக தனியார் சிலர் மட்டுமே இந்தச் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களும் தமக்கான இலாபத்தையும், தரகுப்பணத்தையும் முதன்மைப் படுத்துவதால் - விவசாயிகள் தாம் வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டி தமது முழுமுயற்சிகளையும் ஈடுபடுத்தி உருவாக்கிய விளைபொருட்களால் இலாபத்தைப் பெறமுடியாத சூழலே காணப்படுகின்றது.

தமது உற்பத்திச் செலவிலும் - குறைவான விலைக்கே விளைபொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதால், விவசாயிகள் தம் கண்முன்னாலேயே தமது முயற்சிகள் மதிப்பிழந்து கிடப்பதைக் கண்டு வேதனைப்படுவது பரவலாகக் காணப்படுகின்றது.

ஏற்கனவே - இராணுவ நடவடிக்கைகளாலும், இடம்பெயர் வாலும் தமது சொத்துக்களை இழந்து, சீவனோபாயத்திற்கே அல்லற்படும் விவசாயிகள் - மீண்டும் தமது விவசாய முயற்சிகளில் முதலிடுவதற்கு, விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதால் கிடைக்கும் பணத்தை எதிர்பார்த்து ஏமாந்துநிற்கும் கதைகளும் ஏராளமுண்டு.

இந்த அவலத்தைப் போக்குவதற்கு அரசாங்கமோ, கூட்டுறவுச் சங்கங்களோ, வேறு அமைப்புக்களோ உதவுவதற்கு முன்வருவதில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகளின் சந்தைப்படுத்தல் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க யாழ்ப்பாணத்திலிருந்து உருளைக்கிழங்கும், வெங்காயமும் கொள்வனவு செய்யப்போவதாக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது. ஆனால் - இந்த அறிவிப்பு வெளியான சில நாட்களுக்குள்ளாகவே, இந்தியாவிலிருந்து

பெருமெடுப்பில் உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்யப்போவதான முயற்சிகளில் அந்த அமைச்சு தீவிரமாக இறங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு வழங்கப்படும் உறுதிமொழிகளும் காற்றில் பறந்துவர, இங்கு இருக்கும் விளைபொருட்களும் - விற்பனைவாய்ப்பின்றி அழுகி நாசமடைந்து வருவதாக விவசாயிகளின் துன்பம் எல்லைமீறுகின்றது.

கொழும்பிலிருந்து பொருட்களை எடுத்துவந்து யாழ்ப்பாணத் தில் கண்காட்சி வைத்துத் தமது வியாபாரம் பெருக்கும் அரச தரப்பு உள்ளூர் உற்பத்திகளுக்குக் காட்டும் இந்த அலட்சியப் போக்கை எவ்வாறு தொடர்ந்தும் அனுமதிக்கமுடியுமென விவசாயிகளிடமிருந்து ஆக்ரோஷம் பிறப்பதையும் காணமுடிகின்றது.

எனவே - இதுதொடர்பில் உறுதியான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு, விவசாயிகளின் துயர் களையப்பட சம்பந்தப் பட்டவர்கள் ஆவனசெய்யவேண்டும்.

இல்லையேல், ஏற்கனவே நெருக்கடிகளாலும், தடைகளாலும் நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கும் கடற்தொழில் போல விவசாயமும் படுமோசமான நிலையையே சந்திக்க வேண்டியதாகிவிடும்.

இது, நாம் ஒருகாலத்தில் தலைநிமிர்ந்து பேசிய எமது தன்னிறைவுப் பொருளாதாரத்தையும் ஆட்டம்காணச் செய்து விடும்.

# 82

# ஹெக்கோன் கொழும்பில் எதிரொலிக்குமா?

போர் நிறுத்தத்தைச் செம்மையாக்குவதற்கும், முரண்பாடுகள் - பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கான அதிகாரம் கூடுதலாக்கப்பட வேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு, அரசாங்கத்தரப்பு ஹெக்கோன் பேச்சுக்களில் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

இதனடிப்படையில் - கடற்பிரதேசத்தில் நடக்கக்கூடிய சம்பவங்கள், யுத்தநிறுத்த மீறல்களைக் கண்காணிப்புக் குழுவே விசாரித்து, அவர்களாகவே முடிவெடுக்கும்படி - இருதரப்புமாக இணைந்து, கண்காணிப்புக் குழுவிற்கு அதிகாரமளிப்பது என்ற இணக்கம் எட்டப்பட்டிருக்கிறது.

இந்த இணக்கமானது போர் நிறுத்தம் ஆரம்பித்தது முதலாக கடற்பிராந்தியத்தில் தன்னிச்சையாக அடாவடித்தனம் புரிந்து வரும் கடற்படையின் எல்லைமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் என்றே நம்பப்படுகிறது.

குறிப்பாக, திருகோணமலைக்குக் கிழக்கே, சர்வதேசக் கடற் பரப்பில் - விடுதலைப் புலிகளின் சர்வதேசக் கப்பலை - இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காகக் கூறிக்கொண்டு யுத்தநிறுத்தத்தை மீறியும், சர்வதேச கடல் விவகார நெறிமுறைகளை மதிக்காமலும் - கடற்படை

தாக்கியழித்த சம்பவத்திற்குப் பின்னர் - கண்காணிப்புக் குழுவின் பங்கும் பணியும் பற்றிய சந்தேகங்களுக்கும், விளக்கமின்மைக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக ஜப்பானில் ஒரு முடிவு எட்டப்பட்டுள்ளமை மகிழ்ச்சிதரக் கூடியதாகும்.

கண்காணிப்புக் குழுவின் பிரசன்னம் இல்லாமல் - வேண்டுமென்றே, புலிகளின் சரக்குக் கப்பலை வலிந்து இடைமறித்து கடற்படை நடாத்திய அட்டகாசம் போன்று, இனியும் எதிர்காலத்தில் நடக்காதவாறு பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் - விடுதலைப்புலிகளும், அரசாங்கமும், கண்காணிப்புக் குழுவும் இணைந்து, இன்னும் மூன்று வாரங்களுக்குள் நடாத்தப்படவுள்ள சந்திப்பொன்றில் இது தொடர்பாக மேலதிக விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

கடலில் என்று மட்டுமல்லாது தரையிலும் தற்போது நடைபெற்றுவரும் கைதுகள், தடுத்துவைப்புக்கள் தொடர்பாக, இரண்டு தரப்புக்களும் ஒரு இணக்கத்திற்கு வந்திருப்பதும் முக்கியமானதொரு விடயமாகின்றது.

போராளிகளைக் கைதுசெய்து, அவர்களை நீதிமன்றங்களுக் குக் கொண்டுசெல்லும் படையினரின் தற்போதைய போக்கை மாற்றி - இந்த விவகாரத்தைக் கண்காணிப்புக்குழுவே கையாள வேண்டுமென, விடுதலைப்புலிகள் முன்வைத்த வேண்டுகோளும் அரச தரப்பில் ஏற்கப்பட்டிருக்கிறது. இதைப்போல, படையினர் கைதாகும் சந்தர்ப்பங்களும் கையாளப்படவேண்டுமென, அரச தரப்பின் கோரிக்கையும் புலிகளால் ஏற்கப்பட்டது.

பேச்சுக்களின் முதற்கட்டத்திலேயே ஏற்பட்ட இந்த இணக்கப்பாடுகள் - பேச்சுக்கள் சுமூகமாகத் தொடர்வதற்கான வழியைச் சமைத்துக் கொடுத்திருப்பதோடு, அமைதிமுயற்சிகள் தொடரப்படும் நம்பிக்கையையும் தர ஆரம்பித்துள்ளன.

இந்த நம்பிக்கையைக் கட்டிக்காக்க வேண்டிய பெரும் பொறுப்பு வாக்குறுதிகளையும், உறுதிப்பாட்டையும் வழங்கி யிருக்கும் அரசாங்கத்தைச் சார்ந்திருப்பதோடு அமைதியை உறுதிப்படுத்தவும், படையினரைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்

கவும் - அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்ற எதிர்பார்ப்பையும் அனைவரிடத்திலும் தோற்றுவித்துள்ளது.

ஆனாலும், கண்காணிப்புக் குழுவுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும் - அதனை நடைமுறைச் சாத்தியமானதாக மாற்றிக்கொள்வதில் கடற்படைக்குள்ள பொறுப்பும், கண்காணிப்புக் குழுவின் விதிமுறைகளை அல்லது போர்நிறுத்த ஒழுங்குகளை கடற்படை எவ்வாறு மதிக்கப்போகின்றது என்பதும் முக்கிய வினாக்களாகவேயுள்ளன.

ஹெக்கோனில் - கடற்பிரதேசத்தில் போர்நிறுத்த விதிமுறைகள் தொடர்பாக உடன்பாடு ஒன்று எட்டப்பட்டதும் - கடற்படைத் தரப்பிலிருந்து அதற்கு எதிர்ப்புக் கிளம்பியிருப்பதான செய்தி, கடற்படையை, போர்நிறுத்தத்திற்கேற்ப வழிக்குக்கொண்டு வருவதிலுள்ள சிரமங்களையே எடுத்துக்காட்டுகின்றது.

அதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தன்னிச்சையான போக்குகளும் மாற்றம் கண்டுவிடும் என்று நினைப்பதற்கும் இல்லை.

எனவே - விடுதலைப்புலிகளும் அரசாங்கமும், கண்காணிப்புக் குழுவும் சேர்ந்து போர்நிறுத்தத்தை வலுப்படுத்துவதற்கு எடுக்கும் முடிவுகளுக்கு இசைவாகப் படையினரையும், ஜனாதிபதியையும் நடந்துகொள்ளச் செய்வதற்கு சர்வதேச ரீதியாகவும் வலுவான அழுத்தம் கொடுக்கப்படவேண்டியது அவசியமாகின்றது.

ஹெக்கோனில் தெரிந்த இணக்கம் - களத்தில் எதிரொலிக்கும் வரை, அதற்காக ஆவனவற்றை அரசாங்கம் மேற்கொள்ளும் வரை, படையினரும் அமைதி முயற்சிகளில் விசுவாசத்துடன் செயற்படும் வரை - இந்த எதிர்பார்ப்பு முழுமை பெறாது என்பதே உண்மையாகும்.

# 83

## மனித அவலத்தை நோக்கி...!

இதோ, அதோவென்று அமெரிக்காவும், பிரிட்டனும் படம் காட்டிக்கொண்டிருந்த - ஈராக் மீதான தாக்குதல் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இந்தப் போரைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும், பல்வேறு நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் மேற்கொண்ட முயற்சிகள் - விழலுக்கு இறைத்த நீராகிவிட, ஐ.நாவின் அங்கீகாரமின்றியே உலகின் பொலிஸ்காரனான அமெரிக்கா, தனது உற்ற தோழனான பிரிட்டனுடன் இணைந்து போரை ஆரம்பித்துவிட்டது.

உலகில் மிகப்பெரும் பயங்கரவாதியாகவும், பெரும் ஆபத்துக் குரியவராகவும் - ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனைச் சித்திரித்து வைத்துள்ள, அமெரிக்க அரசாங்கமும், அந்நாட்டின் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் - அந்தத் தனிப்பட்ட நபரையும், அவருடன் நெருங்கிய ஐவரையும் குறிவைத்திருப்பதாகக் கூறிக் கொண்டு பலநூறு விமானங்கள் குண்டுவீசவும், கடலிலிருந்தும், தரையிலிருந்தும் ஏவுகணைகள் செக்கன் தவறாமல் சீறிப் பாயவும் - பக்தாத் தீப்பிளம்பாக, ஒரு மனித அவலம் அரங்கேறத் தொடங்கியிருக்கிறது.

அமெரிக்காவுக்கு அல்லது அமெரிக்க ஜனாதிபதிக்கு யார் யாரெல்லாம் பிடிக்காதவர்களோ அல்லது எதிரிகளாக்கப்

படுகின்றனரோ அவர்கள் உலகிற்கே எதிரிகளாகவும், மனித குலத்துக்கே அபாயமானவர்களாகவும் இருக்கவேண்டுமென்ற, அமெரிக்கா வகுத்துவரும் புதிய உலக ஒழுங்கமைப்பின்படி - ஈராக் மீதான தாக்குதலுக்கு ஐ.நாவும் உலக நாடுகளும் அவசியம் ஆதரவு தரவேண்டுமென்றே அமெரிக்கா தீவிரமாக முயன்றது.

ஆனால் - அமெரிக்காவின் ஆதிக்க விஸ்தரிப்புக்கு என்றைக்குமே முழுமையாகச் செவிசாய்த்துவராத பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளின் ஆதரவின்மையும் - ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானின் பணிந்து போகாத நிலையும் - அமெரிக்காவைத் தனித்தே போரில் குதிப்பதற்கு வழிவகுத்துவிட்டன.

விளைவாக, அமெரிக்க ஜனாதிபதியின் 48 மணிநேரக் காலக்கெடுவிற்குள், அவர் அறிவித்ததுபோல - சதாம் ஹுசைன் "நாட்டை விட்டுத் தப்பியோடாததால்" உலகப் பொலிஸ்காரன் "தனது கடமையைச் செய்ய" ஆயத்தமாகிவிட்டார்.

உலகின் பல பாகங்களிலும் - ஈராக் மீதான தாக்குதல் ஏற்படுத்தப்போகும் பெரும் மனித அவலத்திற்கு எதிராக உரத்துக் குரல்கள் எழுந்தபோதும், அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு தனது சொற்கேளாத சதாமைத் தண்டிக்கும் நோக்குடனும், 1991 இல் வளைகுடாவில் தந்தை புஷ் நடாத்திய "பாலைவனப் புயலுக்குப்" பின்னர் அமெரிக்கா தயாரித்து வைத்திருக்கும் ஆயுதங்களையும் போர்நுட்பங்களையும் பரீட்சித்துப் பார்க்கும் இலக்குடனும் - மகன் புஷ் தனது அதிரடி நடவடிக்கையில் குதித்துவிட்டார்.

போர் ஆரம்பித்த இரண்டு நாட்களில் மட்டும் ஆயிரக் கணக்கான விமானக் குண்டுகளாலும், ஏவுகணைகளாலும் சல்லடை போடப்பட்டிருக்கும் பக்தாக் நகரில் - நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் பலியாகி யிருப்பதாகவும், பல நூறு பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை - உணவுக்கும், அத்தியாவசியத் தேவைகளுக்குமாக

மக்கள் அல்லற்படுவதோடு, தப்பிச் செல்லும் வழிகளை அயலிலுள்ள நாடுகள் அடைத்திருப்பதால் - மக்கள் ஆங்காங்கே பாலைவனங்களிலும், பாதுகாப்பானதெனத் தாம் கருதிக் கொள்ளும் இடங்களிலும் தஞ்சமடைந்துவருகின்றனர்.

இரு நாட்களிலேயே இந்த அவலம் என்றால் - இனி அமெரிக்கப் படைகள், ஈராக்கினுள் நுழையத் தீவிரங்காட்ட, நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்றே மனிதநேய நிறுவனங்கள் கவலை தெரிவிக்கின்றன.

புஷ் ஒருபுறம் இந்த அவலத்துக்குக் காரணம் என்றால் - மறுபுறம், விடாக்கண்டனாக - ஈராக்கைத் தனதும், தனது குடும்பத்தினதும் உரிமையுடையதாகக் கொண்டு அப்பாவி மக்களின் அழிவுக்கு சதாம் ஹுசைனும் முக்கிய பங்காளியாகின்றார்.

ஈராக்கைத் தொடர்ந்தும் பதற்றம்மிக்க யுத்தபூமியாகத் தக்கவைப்பதற்கும் தனது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்து வதற்கும் சதாம் ஹுசைன் மேற்கொண்ட முயற்சிகளும் நியாயமானவை என்று எவரும் கூறிவிடமுடியாது.

எது எப்படியிருந்தாலும் - ஒரு சர்வதேச அரசியலின் ஆதிக்க நகர்வுக்கு - ஈராக்கில் நடந்துவரும் அவலம் - நாகரிகமான உலகுக்கு ஏற்புடையதல்ல, மனிதநேயத்திற்கு முற்றிலும் முரணானது என்பதையே உறுதியாகக் கூறமுடியும்.

# 84

# அமைதிக்கு நடுவே ஒரு ஊடகப் போர்!

அரசாங்கம் போரை நிறுத்தி சமாதான வழிமுறைகளில் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள ஆர்வம் காட்டினாலும், கொழும்பிலிருந்து வெளிவரும் சில ஆங்கில, சிங்கள ஊடகங்கள் அமைதி முயற்சிகளைத் தவிர்த்து, ஒரு போரை நடத்துமாப் போலவே செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

செய்திகளை நடுநிலைத் தன்மையுடன் அணுகுவதைவிடுத்து பதற்றத்தையும், இனவிரோதத்தையும் தூண்டுவதாக இவை வெளியிட்டுவரும் செய்திகள் - அமைதியை விரும்பாத சக்திகளுக்கு, தீனிபோட்டாற்போல ஆகிவருவதைக் காணமுடிகின்றது.

குறிப்பாக, போர்நிறுத்தத்தைப் பாதிக்கக்கூடியதாக அல்லது சற்றே சிக்கலைத் தருவதான சம்பவங்கள் நடக்கும்போது, எவ்விதமான நியாயமுமற்று அப்பட்டமான இனவாதப் போக்கில் உண்மையான தகவல்களை இந்த ஊடகங்கள், தமக்கேற்றாற்போல திரிவுபடுத்தி வருகின்றன.

அண்மையில் - கடற்பகுதிகளில் நடைபெற்ற இரண்டு சம்பவங்களை இந்த ஊடகங்கள் தந்தவிதம் - இவற்றின் நோக்கத்தினைத் தோலுரித்துக் காட்டுவதாக அமைந்தது.

கிழக்கு ஆழ்கடற்பரப்பில், சர்வதேசக் கடலில் - விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தை ஐலண்ட், சண்டே ரைம்ஸ் போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளும், திவயின, லங்காதீப போன்ற சிங்களப் பத்திரிகைகளும் வெளியிட்ட விதத்தை நோக்கும் எவரும் -

விடுதலைப்புலிகள் அடாவடித்தனமாக போர்நிறுத்தத்தை மீறியதாகவும், கடற்படையோ இலங்கையின் இறையாண்மையை, சுயாதிபத்தியத்தை சர்வதேசக் கடல்வரை பாதுகாத்து வெற்றிவாகை சூடியதாகவும் - அந்தச் சம்பவத்தை உள்வாங்கிக் கொள்வர்.

இதுபோன்றே, முல்லைத்தீவுக்கப்பால் சீன நாட்டு மீன்பிடி ட்ரோலர்படகொன்றுநேற்றுமுன்தினம்மூழ்கடிக்கப்பட்டபோது, அப்படகிலிருந்தோராலேயே தாக்கியவர்கள் இனங்காணப்பட முடியாத நிலையிலும் - அதனைச் செய்தது புலிகளே என முத்திரைகுத்த வேண்டுமெனவும் ஐலண்ட்டும் திவயினவும் பெருமுயற்சி எடுத்திருக்கின்றன.

இவ்வாறான சம்பவங்களோடு அமைதிப் பேச்சுக்களிலும் இவற்றின் கைவரிசை எல்லைமீறியே செல்லுகின்றது.

வெளிநாட்டு நிதியுதவி பற்றியும், பேச்சுக்களில் இணக்கம் காணப்படும் விடயங்கள் தொடர்பாகவும் - உண்மைக்குமாறான செய்திகளைச் சிங்கள மக்களுக்குக் கொடுப்பதில், இவை காட்டுகின்ற தீவிரம் - ஒப்பிட்டு ஆராயும் எவருக்குமே - இந்த ஊடகங்களின் போக்குப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தவே செய்யும்.

வெளிநாட்டு உதவிகள் வடக்கு - கிழக்கிற்கு மட்டுமே பாரியளவில் கொட்டப்படுவதாகவும் - இந்த நிதியைக் கொண்டு, விடுதலைப்புலிகள் தனிநாட்டுக்கான கட்டுமானத்தை உருவாக்கி வருவதாகவும் இவை விடும் கதைகள் பொதுஜன ஐக்கிய முன்னணியினதும், ஜே.வி.பியினதும் அமைதி எதிர்ப்பு முயற்சிகளுக்குச் சளைத்தவையல்ல.

அதுபோன்று - பேச்சுக்களில் இணக்கம் காணப்படும், ஆராயப் படும் எத்தனையோ எத்தனையோ விடயங்கள் இருக்க, எங்கு தமிழர் தரப்பின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றதோ, அதனை முதன்மைப்படுத்தி பிரதான தலையங்கம் தந்து "கொடுத்தாயிற்று தமிழர்களுக்கு எல்லாமே" என்ற மறைமுகமான செய்தியைக் காவிச் செல்வதும் - இந்த ஊடகங்களின் தந்திரோபாயங்களில் குறிப்பிடத்தக்கதொன்று.

இதேவேளை, தற்போதைய அமைதி முயற்சிகளை எதிர்க்கும், விடுதலைப்புலிகளை விமர்சிக்கும் அரசியல் சக்திகளுக்கு, அவற்றின் கருத்துக்களுக்கு முதலிடம் கொடுத்து முக்கியத்துவம் கொடுப்பதும் இவற்றில் காணப்படும் ஒரு பொதுப்பண்பாக இருக்கிறது.

குறிப்பாக, பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்காகக் குரல் கொடுக்கும் அமைப்புக்கள் சில இன்றுவரை சிங்களமக்களுக்கே தெரிந்திராத புதிய அமைப்புக்களாக இருந்தாலும் - அவற்றிற்குத் தளம் அமைத்து, அவற்றின் இனவாதக் கருத்துக்கள் - சிங்கள மக்களிடம் சென்றடைய வேண்டுமென இந்த ஊடகங்கள் காட்டும் ஆர்வம் வியப்பைத் தருகின்றது.

இந்தவகையில் - தெற்கிலிருந்து ஒரு யுத்தத்தை முன்னெ டுத்துவரும் இந்த ஊடகங்கள் - அமைதிக்கு எதிரான வலுமிகுந்த அச்சுறுத்தலாக, கட்டங் கட்டமாக விஸ்வரூபம் எடுத்துவருவது கவனத்திற்குரியதாகவே மாறிவருகிறது.

# 85

## பெண்கள் மீதான கொடுஞ்செயல்

யாழ். குடாநாட்டில் கடந்த இரு வாரங்களுக்குள்ளாக நடந்திருக்கும் சில சம்பவங்கள் பெண்கள் மீதான வன்முறைகளும், கொடுமைகளும் சமூகத்தில் தீவிரம் பெற்றுவருகின்றனவோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவனவாக அமைகின்றன.

ஊர்காவற்துறையில் மனைவியின் தலையை வெட்டிப் படுகொலை செய்த கணவன், உடுப்பிட்டியில் உயிருடன் மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்கப்பட்ட இளம்பெண், தந்தையால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட மகள் என ஒருசில நாட்களில் மட்டும் யாழ்.குடாநாட்டில் நடந்திருக்கும் நிகழ்வுகள் - பெண்களுக்கேற்பட்டுவரும் ஆபத்துக்களையும் அச்சுறுத்தல் களையும் பற்றி உடனடியான, ஆழ்ந்த கவனம் செலுத்தப்பட வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் தெருக்களில் சுதந்திரமாக, அச்சமின்றிப் பெண்கள் நடமாட முடியாத அளவுக்கு இங்கு, பெண்கள் மீதான வன்முறைகள் அப்பட்டமாகவே நிகழ்ந்துவந்தன.

ஒருபுறம் படையினரால் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்ட கொடூரங்கள் அரங்கேற, மறுபுறம் - சமூகச் சீரழிவைத் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுமாப்போல காடைத்தனம் புரிந்துவந்த சில

இளைஞர் கோஷ்டிகளால் - பெண்கள் மீது பகிரங்கமாகவே வன்முறைகளும் அடாவடித்தனங்களும் எழுந்தமானத்திற்குக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்ததை எவரும் மறந்துவிடமுடியாது.

அதேவேளை, பாலியல் திரைப்படங்களும் எவ்வித கட்டுப்பாடின்றியும்-சமூகத்தில்பழக்கத்திற்குவிடப்பட்டிருந்தன.

சமூகக் கட்டுப்பாடு என்பது புறந்தள்ளப்பட்டு சீரழிவுகளை ஊக்குவிக்கும் சக்திகளும் யாழ். குடாநாட்டில் வலுவாக இயங்கியதன் பெறுபேறாக குடாநாட்டில் பெண்கள் தனித்துத் திரியவும், இரவில் நடமாடவும் - அச்சப்படும் பயங்கரமானதொரு சூழலே நிலவிவந்தது.

ஆனால் - புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் இவையாவும் கட்டுப்படுத்தப்பட்டு, நிலைமை சுமூகமடைந்தபோதும் -

இன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் சம்பவங்கள் - இவ்வாறான சம்பவங்களின் பேரில் கடுமையான நடவடிக்கைகள் இன்னமும் தேவை என்ற அவசியத்தையே வலியுறுத்தி நிற்கின்றன.

கலாசாரத்தைப் பேணுகின்ற இளைஞர்களால் - சமூகத்தில் பெண்களுக்கு எதிராக பகிரங்கமாக, வெளிப்படையாக நடந்த வன்முறைகள் கட்டுப்படுத்தப்பட்டதுபோல,

உள்ளார்ந்தவகையில் நடைபெறும் பெண்கள் மீதான கொடூரமான செயல்களும் கவனத்திற்கொள்ளப்பட்டு, இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றே மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

அதேவேளை, காதல் மற்றும் திருமண விவகாரங்களிலும் பெண்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் - வெளித்தெரியாத நிலையிலும் பரவலாகவே இடம்பெற்றுவருகின்றன.

அண்மையில் கூட, வெளிநாட்டிலுள்ள தனது மகனுக்கு மணம் முடிப்பதாகக் கூறி, பெண்ணை அனுப்பிவிட்டு அங்கு மகன் திருமணம் செய்ய மறுத்ததுடன் - அப்பெண் வீட்டாரிடமிருந்து சீதனத்தையும் பெற்று ஏமாற்றியதான செய்தி பத்திரிகைகளில் வெளியானமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதுபோன்று காதலித்துக் கைவிடுதலும், கர்ப்பமாக்கிவிட்டு ஏமாற்றுதலும், பலாதார மணமும் யாழ். குடாநாட்டில் குறிப்பிடத்தகுந்தளவில் நடைபெற்றே வருவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, குடாநாட்டிலுள்ள அகதிமுகாம்களில் நடைபெறும் திருமணங்கள் பலவும் சட்டபூர்வமான பதிவினைச் செய்யாது நடைபெறுவதாகவும், பதினெட்டு வயது பூர்த்தியாக முன்பே பெண்களுக்குத் திருமணமாகிவருவது சாதாரண விடயமாகிவிட்டது எனவும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட யுனிசெப்பின் ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

எனவே, - இதுபோன்றவை பற்றிய எச்சரிக்கையும், தெளிவான விழிப்புணர்வும், சமூகரீதியாக அவற்றை உள்வாங்க வேண்டிய தேவையும் இன்றளவில் - அவசியம் கருத்தூன்றிச் செயற்பட வேண்டியனவாக உள்ளன.

பெண்களுக்கெதிரான குற்றங்கள், வன்முறைகள், கொடுமைகள், அச்சுறுத்தல்கள் என்பன சமூகத்தின் ஒரு பகுதியினருக்கான பாதிப்பு என்பதாக இல்லாமல் - அது, முழுச்சமூகத்தையும் நாகரீகமற்ற, சிதைவை நோக்கிச் செல்லும் பாதைக்கே நகர்த்தும் என்பதை மனதிற்கொண்டு - இவ்வாறான கொடுஞ்செயல்களை, மிருகத்தனங்களை இல்லாதொழிப்பதற்கு அனைவருமே உறுதி பூண்டு செயற்படவேண்டும்.

பெண்கள் மீதான மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு உரிய தண்டனைகளோ, எதிர்ப்புக்களோ கிடைக்காதுவிடின், அது - இதுபோன்ற சம்பவங்களைத் தூண்டும், ஊக்குவிக்கும் எதிர்மறையான செயற்பாடாகவும் அமைந்துவிடும் என்ற அபாயமும் கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

# 86

## இடைவிலகுவோரிலும் கவனம் குவிப்போம்...!

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம், யாழ். மாவட்டத்தில் தொழிலற்று இருப்போரின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வீதத்தில் வளர்ச்சிப் போக்கில் காணப்படுவதாக தகவலொன்று வெளியாகியுள்ளது.

இதில் - பாடசாலைக் கல்வி, உயர்கல்வி, பல்கலைக்கழகம் என சகல கல்வித்தரங்களையும் கொண்டோர் உள்ளடங்குகின்றனர்.

இந்த ஆய்வின் பிரகாரம் - பல்கலைக்கழகக் கல்வியைப் பூர்த்திசெய்தோர் - அதிலும் குறிப்பாக, கடந்த ஐந்து, ஆறு வருடங்களில் பட்டப்படிப்பை முடித்தோர் - வேலையற்றோர் பட்டியலில் கணிசமான எண்ணிக்கையில் இருப்பது வெளித் தெரியவந்துள்ளது.

இவர்களோடு உயர்கல்வியைப் பூர்த்திசெய்தோரும், பல்கலைக் கழகக் கல்வியைப் பூர்த்திசெய்தோரும், பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதிபெறாதோருமென இன்னுமொரு கணிசமான எண்ணிக்கையினரும் உள்ளனர்.

அதேவேளை - இந்த இரண்டு தொகுதிகளையும்விட, பாடசாலைக் கல்வியைத் தமது தகுதிநிலையாகக் கொண்டுள்ள ஏராளமானோர் தொழில் வாய்ப்பின்றி இருப்பது யாழ். குடாநாட்டின் மனிதவலுவைப் பொறுத்தளவில் கவனம் ஈர்க்கும் விடயமாகவே கருதப்படுகின்றது.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்தோரும், உயர்தரத்தகுதி உடையோரும் தமக்கு இன்றில்லாவிட்டாலும் - போட்டிப் பரீட்சைகள் மூலமோ, வேறுவழிகளிலோ வேலைவாய்ப் புக்களைத் தேடிக்கொள்ளும் எதிர்காலம் இருப்பதாக நம்பிக்கை கொண்டுள்ளவேளை -

பாடசாலைக் கல்வியோடு நிறுத்திக் கொண்டவர்களின் எதிர்காலம் அல்லது அவர்களுக்கான தொழில்வாய்ப்புக்கள் குறித்து நம்பிக்கைதரவல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது மிகக் குறைவாகவே உள்ளது.

பட்டப்படிப்பையும், உயர்தரத்தையும் தகுதியாகக் கொண்ட வர்கள் - தொழில்நுட்ப அறிவுசார் பயிற்சிகளில், கணினித் துறைசார் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளபோது-

பாடசாலைக் கல்வியோடு காத்திருப்போருக்கான அறிவூட்டல்தொடர்பான பயிற்சிகளும், சுயதொழில் முயற்சிகளுக் கான ஊக்குவிப்புக்களும் மிகக்குறைந்தளவு வீதத்திலேயே வழங்கப்படுதாக சமூகவியலாளர்களும், கல்வியியலாளர்களும் கவலையுடன் குறிப்பிடுகின்றனர்.

பாடசாலைமட்டக் கல்விக்கு அப்பால் - உயர்தரத்தைத் தொடரமுடியாத பட்சத்தில் அவர்களுக்கான தொழில்நுட்ப அறிவை, துறைசார் பயிற்சிகளை வழங்குவதற்குத் தற்போதுள்ள கல்வி நிறுவனங்கள் இன்னமும் விரிவாக்கமும் வளர்ச்சியும் பெறவேண்டுமென்ற கருத்தை அவர்கள் முன்வைக்கின்றனர்.

அதேபோல, பாடசாலைக்கல்வியோடு சுயதொழில் முயற்சியை மேற்கொள்ள விரும்புவோருக்குத் தேவையான உதவிகளும், ஊக்குவிப்புக்களும் வழங்கப்படும் முறைகள் தொடர்பான குறைகளும் இன்னமும் களைந்தபாடில்லை.

சுயதொழில் முயற்சிக்கான உதவியை தென்னிலங்கையில் தேவைப்படுவோரைத் தேடிச்சென்று வழங்கும் வேகம் இருக்க, வட - கிழக்கில் யுத்தத்தின் தீவிரமும், கடனுதவி வழங்கும் நிறுவனங்களின் மந்தமான செயற்பாடுகளுமாக சுயதொழில்

ஊக்குவிப்பை இன்னமும் சமூகத்திற்குள் எடுத்துச்செல்லாத நிலையே காணப்படுகின்றது.

எனவே, வேலைவாய்ப்பற்றிருப்போர் என்ற பொதுவான பிரச்சினையில் - பாடசாலைமட்டக் கல்வியுடன் எதிர்காலத்துக்கான சரியான தளமின்றிப் போராடுபவர்களின் விவகாரம் - சிறப்புப் பிரச்சினையாகக் கருத்திற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கான உதவிகளையும், ஊக்குவிப்புக்களையும் வழங்கி அவர்களூடான மனிதவலுவையும் சமூகத்தின் பயன்பாட்டிற்குள் உள்வாங்கிக் கொள்ள கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

# 87

## உயரிய பணி!

விடுதலைப்புலிகளின் பல்வேறு துறைசார் படையணிகளின் வளர்ச்சியும், திறன் மிகுந்த செயற்பாடுகளும் - உலகளாவிய ரீதியில் பாராட்டுக்களையும், வியப்பையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் - புலிகளின் மருத்துவப் பிரிவு ஆற்றிவரும் சேவைகள், மக்களின் மிகுந்த நன்றியறிதலுக்கும் உரியவையாகின்றன.

தனியே அமைப்புசார் பணிகள் என்றில்லாது மக்களுக்காகவும் தமது சேவைகளை வழங்க முன்வந்து அரும்பணியாற்றிவரும் - விடுதலைப்புலிகள் மருத்துவப்பிரிவினரின் சேவை அடிப்படைச் சுகாதார வசதிகளின்றி வாடும் மக்களுக்கும், உடனடி மருத்துவசிகிச்சை தேவைப்படுவோருக்கும் - காலத்தால் செய்த உதவியாக அமைந்திருக்கின்றது / அமைந்துவருகின்றது.

இந்தவகையில் - வன்னிப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உயிர்காப்புச் சம்பவமொன்று மருத்துவ அணியினரின் சிறந்தசேவைக்கு எடுத்துக்காட்டாகியுள்ளது.

கொழும்பிலிருந்து முல்லைத்தீவு மாத்தளன் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண், புளியங்குளம் - நெடுங்கேணி வீதிவழியாக பஸ்ஸில் பிரயாணம் செய்தபோது நயினாமடுவுக்கும் குளவிசுட்டானுக்கும் இடையே காட்டுப் பகுதியில் அவருக்குத் திடீரென பிரசவவலி ஏற்பட்டது.

அவ்வேளை - அதே பஸ்ஸில் பயணம் செய்த தியாகதீபம் திலீபன் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவப் போராளியான தில்லைநம்பி ஒரு பிரசவச் சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் இல்லாதபோதும் - திறமையுடனும், புத்திசாதுரியத் துடனும் பணியாற்றி தனது ஒப்பற்ற உதவி மூலம் - தாயையும் சேயையும் காப்பாற்றினார்.

இந்த இளம் போராளி மேற்கொண்ட சமயோசிதமும், அவரது திறமையும் - விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவுக்கு அவர்களது அர்ப்பணிப்புமிக்க சேவைக்கு இன்னுமொரு மணிமகுடத்தைச் சூட்டியிருக்கிறது.

போர்க்காலங்களில் - படுகாயமடைந்து விழுப்புண் பெற்றுவரும் போராளிகளுக்கு தம்வசமுள்ள மிகக்குறைந்த வசதிகளைக் கொண்டும், மழையெனப் பொழியும் எறிகணை களுக்குள்ளும், ரவைகளுக்குள்ளும் துணிவுடன் நின்றும் - களத்தில் நடைபெறும் நேரடிச் சமருக்குக் குறைவில்லாது பெரும் போராட்டத்துடன், மருத்துவப் பிரிவினர் ஆற்றிய பணிகள் இராணுவ நிபுணர்களையே வியப்புக்குள்ளாக்கியிருக்கின்றன.

போர்முனை திறக்கப்பட்டு படுகாயமடையும் படையினரைச் சுமந்துசெல்வதற்கென ஹெலிகளும், விமானங்களும் பறந்து செல்ல, கொழும்பின் தேசிய வைத்தியசாலை முதல், நாட்டின் மிகப்பெரிய மருத்துவமனைகள் அனைத்தும் தயாராகிநிற்க, தேர்ச்சிபெற்ற வைத்தியநிபுணர்கள் உடனடிச் சேவைக்கு குழுமி நிற்க,

மறுபுறமோ வெட்டவெளிகளிலும், காட்டுப் புறங்களிலும். நிலக்கீழ் அறைகளிலும் - விடுதலைப்புலிகளின் மருத்துவப் போராளிகள் - உயிர்காக்கச் செய்யும் சேவையை வார்த்தைகளால் வடிக்கமுடியாது.

அதுமட்டுமல்ல - விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளெங்கும் மருத்துவப் பொருட்களுக்குத் தடைவிதித்து, இன அழிப்பு அரக்கத்தனம் கட்டவிழ்த்துவிடப்பட்டபோது போர்க்களங்களில் படுகாயமடைந்து உயிருக்குப் போராடும்

போராளிகளைக் காக்கவென எண்ணிறைந்த சிரமத்தின் மத்தியில் தமக்குக் கிடைத்த மருத்துவப் பொருட்களை மக்களுக்கும் அளித்து மருத்துவப் பிரிவு ஆற்றியசேவை பல்லாயிரம் மக்களைப் பாதுகாத்தது.

இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்குரிய அடிப்படைச் சுகாதார வசதிகளைச் செய்துகொடுத்தும், தக்க ஆலோசனைகளை வழங்கியும் - தமது நடமாடும் சேவையின் மூலம், பின்தங்கிய பகுதிகளெல்லாவற்றுக்கும் நேரடியாகச் சென்று அம்மக்களைக் காத்தும் -

கொலரா, வாந்திபேதி, டெங்கு போன்ற கொள்ளை நோய்கள் தாக்கும் ஆபத்து எழுந்த போதெல்லாம் - மிகத் தீவிரமும், கண் காணிப்புடனும், அதியுயர் எச்சரிக்கையுடனும் நிலைமையைக் கையாண்டு - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலெல்லாம் உயிர்ப்பலிகள் தினமும் நிகழ, தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளுக் குள் இந்தத் தொற்றுநோய்களுக்கு எதிராக யுத்தம் நடத்தி வெற்றி பெற்றும், மருத்துவ சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்ற போரா ளிகள் பற்றி உலகம் அறிந்தது முழுமையானதல்ல.

மருத்துவப் போராளிகளின் சேவையைப் பெற்ற ஒவ்வொருவரதும் உள்ளத்திலிருந்தும் எழும் நன்றியுணர்ச்சியே அந்தப் போராளிகளின் பெருமையைச் சொல்லத்தகுதியானவை.

இன்று, அமைதிக் காலத்தில் - தமது பணிகளை மக்களை நோக்கி இன்னமும் விஸ்தரித்து, யாழ். குடாநாட்டில் மருத்துவப் போராளிகளும், சுகாதாரப் பிரிவினரும் தமது பெறுமதிமிக்க பணிகளைத் தொடர்கின்றனர்.

மருத்துவப் போராளிகளின் தன்னலமற்ற சேவையும், திறமையும், அர்ப்பணிப்பும் - போற்றப்பட வேண்டியவை மட்டுமல்ல, என்றும் பேணப்பட வேண்டியவையுமாகும்.

# ៨៨

## தவறான நடவடிக்கை!

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாக அந்நாடுகளின் பிரதிநிதிகளையும், சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களையும் வொஷிங்ரனுக்கு அழைத்துள்ள அமெரிக்கா - இலங்கையில் மேற்கொள்ளப்படவிருக்கும் எந்தவொரு பாரிய அபிவிருத்தித் திட்டத்திற்கும் முக்கிய காரணியாகவும், வட - கிழக்குப் பகுதியில் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களின் பிரதான அதிமுக்கிய பங்கேற்பாளராகவும் விளங்கும் விடுதலைப்புலிகளை அழைக்காமல் மாநாடொன்றை நடாத்தத் தீர்மானித்திருந்தது.

இது எந்த நோக்கத்திற்காக உதவிவழங்கும் மாநாடு கூட்டப் படப் போகின்றதோ, அந்த நோக்கத்தைக் கருத்திலெடுக்காமல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகவே வெளிப்படுகின்றது.

அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையே இணக்கம் காணப்பட்டபடி - சர்வதேசமும் அதனை ஏற்றுக் கொண்டபடி - போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடகிழக்குப் பகுதியில், முன்னெடுக்கப்படும் எந்தவொரு புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களும் - விடுதலைப்புலிகளின் பங்கேற்புடன், ஆலோசனையுடனேயே செயற்படுத்தப்படும் என்ற உறுதியான தீர்மானமொன்று ஏற்கனவே நடைமுறையிலிருக்கிறது.

இதன் பிரகாரமே, சமாதானப் பேச்சுக்களில் ஆராயப்பட்டதன் படி வடகிழக்கில் உடனடி மனிதாபிமான, புனரமைப்புப் பணி களை மேற்கொள்வதற்கான உப குழுவும் (சிறான்) அமைக்கப் பட்டது.

சிறானின் ஊடாகவே - இனி எந்தவொரு பணிகளும் நடைமுறைப்படுத்தப்படும் என்ற அடிப்படையில் - சர்வதேச உதவிவழங்கும் நிறுவனங்களதும், நாடுகளதும் - அமைச்சர்கள், உயரதிகாரிகள், பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு வந்து - விடுதலைப்புலிகளுடன் கலந்துரையாடி வட - கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதில் தமது பங்களிப்புப் பற்றி விரிவாகப் பேசிச் செல்கின்றனர்.

அதேவேளை - அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமி டையிலான பேச்சுக்களிலும், நோர்வேயில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் - விடுதலைப்புலிகள் அதிகார பூர்வமாகப் பங்கேற்க அழைக்கப்பட்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் பங்கேற்பின் அடிப்படையிலேயே அவர்களது சமாதான உறுதிப்பாட்டின் பேரிலேயே இலங்கைக்கான நிதியுதவிகள் அங்கு தீர்மானிக்கப்பட்டன.

இதனை, நோர்வே அரசாங்கம் மட்டுமல்ல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் - ஏன், அண்மையில் ஜப்பானில் நடத்தப்பட்ட பேச்சுக்களில், அந்நாட்டு விசேட தூதுவர் யசூஷி அகாஷியும் கூட ஒத்துக்கொண்டிருந்தனர்.

அத்துடன் - ஜப்பானில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெற விருக்கும் உதவிவழங்கும் மாநாட்டிற்கான ஏற்பாடுகளிலும் - அங்கு ஆராயப்படவிருக்கின்ற திட்டங்கள் பற்றிய அனைத்துச் செயற்பாடுகளிலும் விடுதலைப்புலிகள் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் பங்கேற்றுவந்த நிலையில், அமெரிக்காவின் இந்நிலைப்பாடு - விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்ல, அமைதியை நாடும் சகலருக்குமே அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் அளித்திருக்கிறது.

புனரமைப்புப் - புனர்வாழ்வுப் பணிகளில் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் சமமான பங்களிப்புச் செய்வதாக உடன்பாடு காணப்பட்டிருக்கின்றபோதும், அந்த உடன்பாட்டை கௌரவிக்காத தன்மையை அமெரிக்காவின் போக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது.

வொஷிங்ரன் மாநாட்டுக்கு விடுதலைப்புலிகளை அழைக்காத அமெரிக்காவின் முடிவு புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளில் எவ்வகையிலும் முன்னேற்றத்தைத் தந்துவிடப்போவதில்லை. மாறாக, முக்கிய பங்கேற்பாளரான விடுதலைப்புலிகளின் பங்க ளிப்பின்றி மேற்கொள்ளப்படும் எந்த முடிவுகளும் - நடைமுறைச் சாத்தியமற்றதாகவே இருக்கும்.

இந்தவகையில், ஒருதலைப்பட்சமான, பாரபட்சமிக்க அமெரிக்காவின் நடவடிக்கை புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளின் முன்னேற்றத்தில் தங்கிநிற்கின்ற அமைதி முயற்சிகளினதும் - மக்களது சுமூகவாழ்விற்கும் பின்னடைவைத் தருகின்ற ஒன்றாகவே மாறிவிட்டிருக்கிறது.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் அமைதி முயற்சிகள் கட்டங்கட் டமாகக் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றபோது அதற்குப் போதிய கவனந்தராமல் - தவறுகளும், முரண்பாடுகளும் நிறைந்த தனது பழைய பார்வையை மாற்றிக் கொள்ளாமல் அமெரிக்கா செயற்பட முனையுமானால் -

தான் சார்ந்த, தனக்கு ஆதாயமான அரசியலுக்காக - இலங்கையில் நடைபெறும் அமைதி முயற்சிகளைக் கையாள அமெரிக்கா நினைக்குமானால் -

அது, இலங்கைத்தீவில் ஆக்கபூர்வமான அமைதி முயற்சிகளுக்கு எவ்விதத்திலும் பயன்தராது என்பதை அமெரிக்கா கவனத்திற் கொள்ளவேண்டும்.

# 89

## சீரழிவைக் களைவதற்கு...!

யாழ். குடாநாட்டில் - பாலியல் ரீதியான வன்முறைகளையும், விபசாரம் போன்ற சமூகச் சீர்கேடுகளையும் தடுப்பதற்கு விடுதலைப்புலிகள் தீவிர கவனம் செலுத்தப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாகவே பெண்கள் மீதான வன்முறைகளும், பாலியல் சீர்கேடுகளும் - கடந்த சில ஆண்டுகளாக இருந்த தைப்போல அதிகரிக்கும் போக்கு காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல சமூக அமைப்புக்களும், பொதுமக்களும் விடுதலைப்புலிகளின் கவனத்திற்கு அதனைக் கொண்டுவந்தனர்.

யாழ். குடாநாட்டில் அண்மைய வருடங்களாக முறையான சமூகப்பாதுகாப்புக்குரிய கட்டமைப்பு உருவாகாது போனதும் - சமூகச் சீரழிவுகளை ஊக்குவிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

பல சந்தர்ப்பங்களில், சில சமூகச் சீரழிவுகள் கண்டும் காணாமலும் விடப்பட்டு அவற்றினூடாக, தமிழ் மக்களுடைய கட்டுக்கோப்புமிக்க வாழ்வாதாரத்தையே திட்டமிட்டு அசைத்திடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

விபசாரமும், பாலியல் இச்சைகளைத் தூண்டக்கூடிய திரைப் படங்களும் இந்தவகையில் - யாழ். குடாநாட்டில் வேரூன்றுவ தற்குச் சில சக்திகளால் திட்டமிட்டவாறு இடமளிக்கப்பட்டது.

ஆனால் - புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், இத்தகைய செயற்பாடுகள் அருகத்தொடங்கின. விடுதலைப்புலிகள் மேற் கொண்ட சில நடவடிக்கைகளால் இச்சமூகச் சீரழிவுகள் தடுத்து நிறுத்தப்பட்டமையானது, மக்களிடையே நிம்மதியையும், அமைதியையும் ஏற்படுத்தியது. மக்களது மனப்பூர்வமான பாராட்டும், ஆதரவும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைக்குக் கிடைத்தது.

ஆனால் - அண்மைய நாட்களாக இந்தச் சமூகச் சீரழிவுகள் மீண்டும் துளிர்விடும் போக்கில் காணப்பட்டதை பொதுமக்கள் பலரும் விடுதலைப்புலிகளின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு வந்ததைத் தொடர்ந்து -

அவற்றினைத் தடுத்து நிறுத்துவதான, கட்டுப்படுத்துவதான தீவிரமுயற்சிகளில் சமூக அமைப்புக்களினூடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும், அவற்றினை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விடுதலைப்புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

தமிழ்ச் சமூகத்தையே அசைத்து, எமது பாரம்பரியமான சமூகக் கட்டமைப்பைச் சிதைவுக்குள்ளாக்கி, எமது இளம் சமுதாயத்தைத் திசைதிருப்பும் - இந்தச் சமூகச் சீரழிவுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் மக்களின் பங்களிப்பும் மிக அவசியமானதாகும்.

சமூகச் சீரழிவுகள் எங்கெங்கு நடைபெற்றாலும் அவற்றை அறிந்து, சம்பந்தப்பட்டவர்களிடம் அவைபற்றிய தகவல்களைச் சேர்ப்பிப்பதன் மூலமாகவும்,

அயலிலும், இன்னும் பிற இடங்களிலும், ஒவ்வொரு பொதுமகனும் தமக்குரிய சமூகப்பொறுப்புணர்வை உணர்ந்து தாமாகவே கண்காணிப்பை மேற்கொண்டு சமூகச் சீரழிவுக்கான காரணிகள் பற்றி விழிப்பாக இருப்பதனாலும் சமூகத்தைக் கட்டிக்காப்பதற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கமுடியும்.

பாலியல் வன்முறைகள், சீரழிவுகள் மட்டுமல்ல சமூகத்தைக் குட்டிச்சுவராக்கும் கசிப்பு உற்பத்தி, போதைப்பொருள் பாவனை

போன்றவற்றோடும், குடாநாட்டு இளைய சமுதாயத்தை ஒரு சில காலங்களாகவே பாதித்துவந்த குழுச்சண்டைகள், அடாவடித்தனங்கள் என்பன பற்றியும், தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மழைவிட்டும் தூவானம் நிற்கவில்லை என்பதுபோல, ஆங்காங்கே இன்னும் தலைகாட்டும் இந்தச் சமூகக் களைகளை வேரோடு அகற்றுவதற்கு மக்களும் துணைசெய்யக்கூடியவர்களாக மாறுவதன் மூலமே அமைதியும், நிம்மதியும், கட்டுக்கோப்பும், ஒழுக்கமும்மிக்க ஆரோக்கியமான சமுதாயத்தைப் பேணமுடியும்.

# 90

## உலகமொழியைத் தோழமையாக்கிக் கொள்ள...!

அண்மையில் வெளியாகிய க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் - யாழ். மாவட்டத்திலிருந்து பரவலாக சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றிருப்பது தெரியவந்திருக்கிறது.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்றுள்ளதுடன், உயர் தரம் பயிலுவதற்கான தகுதியைப் பெற்றிருப்போரும் பாராட்டத்தக்க எண்ணிக்கையில் உள்ளனர்.

ஆனால் - வெளியான பெறுபேறுகளை, பாடங்கள் ரீதியாக நோக்கின், ஆங்கிலத்தில் சித்திபெறும் மாணவர்களின் எண்ணிக்கை கவலை தருமளவுக்கு உள்ளதைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஆங்கிலப் பாடத்தில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சியானது இம்முறை மாத்திரமே எனக் கொள்ளமுடியாது.

கடந்த பல வருடங்களாகவே தமிழ் மாணவர்கள் மத்தியில், ஆங்கிலத்தில் போதிய சித்திபெறுபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சிப் போக்கிலேயே சென்றுகொண்டிருப்பதைக் கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாணவரிடையே ஆங்கிலப் பாடத்தில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சியும், பின்னடைவும் வெறுமனே ஒதுக்கிவிடக் கூடியதல்ல.

ஏனெனில் - இப்போதும் சரி, இனிவரும் காலத்திலும் சரி ஆங்கிலம், உயர்கல்வி ரீதியாக முக்கியமான இடத்தை வகிக்கும் நிலையே காணப்படுகின்றது.

உயர்கல்வி முயற்சிகள் - "குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதான" நிலையிலிருந்து உலகளாவிய தொழில்சார் தகைமைக்குரியனவாகும்தேவைஅத்தியாவசியமாகிவிட்டபோது ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சியின்மையானது உயர் கல்விக்கான வாய்ப்புக்களையும், அதனூடான எதிர்காலத்தையும் பெரிதும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.

பல்கலைக்கழகக் கல்வியிலும் சரி, அதன் பின்னராக பட்ட மேற்படிப்புக்களாயினும் சரி ஆங்கிலத்தில் போதியளவு தேர்ச்சி யின்மையால் அரிய பல வாய்ப்புக்களை இழந்தவர்கள் எம்மில் பலருளர்.

தொழில்சார் தகைமையை வளர்த்துக் கொள்வதிலும், முன்னே றிவரும் உலகார்ந்த வேகத்திற்கு ஈடுகொடுப்பதிலும் - இந்தத் தாக்கம் - எமது மண்ணிலிருந்து உருவாகும் கல்வியார்வம்மிக்க பல மாணவர்களையும் நேரடியாகவே பாதித்திருப்பதைக் கண்கூடான உதாரணங்கள் மூலம் அறியமுடியும்.

இவ்வாறானதொரு சூழலில் - ஆங்கிலக் கல்விக்கான அடித்தளத்தை க.பொ.த. சாதாரணதரக் கல்வியே வழங்கி வரும்போது அதில் போதிய தேர்ச்சிபெறாமல் விடுவது தொடர்ச்சியான, பின்னடைவான விளைவுகளையே தருமென்பதில் ஐயமில்லை.

எனவே கல்வியாளர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் - ஆங்கிலக் கல்வியில் கூடிய அக்கறை செலுத்த வேண்டிய அவசியம் எழுந்திருப்பதை உணர்ந்து, அது தொடர்பில் உரியநடவடிக்கை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

சாதாரணதர மட்டத்திலேயே ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு, அதில் திருப்தியான பெறுபேறுகள் கிடைத்திராதபோது ஆங்கிலத்தைக் கற்றல் மொழியாக ஆங்கிலமொழிக் கல்வியை அறிமுகப்படுத்துவது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியப்பாடானது, வெற்றியைத் தரக்கூடியது என்பதும் இங்கு ஆழமான ஆய்விற்குரியதாகிறது.

எனவே - கல்வித்திட்டங்களை வடிவமைப்பவர்களும், செயற்படுத்துபவர்களும் - இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும். ஆங்கிலத்தை மாணவரிடையே வளர்த்தெடுப்பதில், அவர்களைப் புலமையாளர்களாக மாற்றுவதில் - யதார்த்தமான, சாத்தியப்பாடுமிக்க, நல்ல விளைவுகளைத் தரக்கூடியதான வழிமுறைகள் காணப்பட வேண்டியது உடனடித்தேவை என்பதை அவர்கள் உணர வேண்டும்.

# 91

# பெருகிவரும் வீதி விபத்துக்கள்

யாழ். மாவட்டத்தில் போக்குவரத்து ஒழுங்குகளை மீறுவது மக்களைப் பொறுத்தவரை பாரிய இடைஞ்சல் தரக்கூடிய செயற்பாடாக மாறியிருக்கிறது.

சனநெருக்கடிமிக்க யாழ். நகரப் பகுதியாயினும் சரி, குடா நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சரி, வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதை யாழ்.வைத்தியசாலையிலுள்ள பொலிஸ் பிரிவின் புள்ளிவிபரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இந்த வீதி விபத்துக்களுக்கு முக்கியகாரணம் - வீதி ஒழுங்கு களையும், நெறிமுறைகளையும் அலட்சியப்படுத்துவதே எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதி விபத்துக்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையா னவை, ஏ-9 வீதியிலும் நடைபெற்றிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதொரு அம்சமாகும்.

ஏ-9 வீதியில், வீதிப் பாதுகாப்புப் பற்றி முகமாலைக்கு அப்பால் தமிழீழ காவல்துறையினர் மிகவும் இறுக்கமான கண் காணிப்பையும், விதிமுறைகளையும் அமுல்படுத்தியதால் - அப்பகுதிகளில் வீதி விபத்துக்களைப் பெருமளவில் குறைக்க முடிந்தது.

ஆனால், முகமாலைக்கு அப்பால் உள்வரும் வாகனங்கள் - மீண்டும் "பேயோட்டத்தை" ஆரம்பிக்க, வீதி விபத்துப் பிரதேச மாக ஏ-9 தொடர்ந்தும் ஆபத்து மையமாகியிருக்கிறது.

அதீத வேகத்தில் சீறிப்பாயும் வாகனங்கள், கொழும்பு போன்ற தொலைநகரங்களிலிருந்து நீண்டநேர வாகன ஓட்டத்தினால் களைப்புற்றிருக்கும் சாரதிகள், அவர்களில் சிலரின் "சுதியோட் டங்கள்" என வாகன விபத்துக்களுக்கான காரணிகள் நீண்டு செல்கின்றன.

அதேவேளை - வாகன ஓட்டிகளை மட்டும் தனித்துக் குறை கூறி விடவும் முடியாதளவுக்கு வீதிகளில் சைக்கிள்களில் பயணிப்போரும், பாதசாரிகளும் நடந்துகொள்வதை மறந்துவிடமுடியாது.

வீதியை அடைத்தவாறு சமாந்தரமாகச் செல்லும் சைக்கிளோட்டிகளாலும், வாகனங்கள் வருவதுதெரிந்தும் - இதோ கடந்து விடலாம் எனக் கண்மூடித்தனமாக வீதியைக் கடக்கும் பாதசா ரிகளாலும் விபத்துக்கள் பல நடந்திருப்பதை / நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை, ஏ-9 வீதியைத் தவிர்த்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் சமாந்தரமாகச் செல்லும் சைக்கிளோட்டிகளால் குச்சு ஒழுங்கைகளிலும் கூட விபத்துக்கள் ஏற்படுவதையும் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு வாகனச் சாரதிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் அதேவேளை - இத்தகைய சைக்கிளோட்டிகளும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில்மோட்டார் சைக்கிளோட்டிகளும், ஏனைய வாகனமோட்டிகளும் அலட்சியப்படுத்தும் இன்னுமொரு விடயம் - சமிக்ஞை விளக்குக்களையும், முன்விளக்குகளையும் சரிவரப் பயன் படுத்தாமையாகும்.

இரவுநேரங்களில் - வாகனங்களைச் செலுத்துபவர்கள் - எதிரே வரும் வாகனங்களுக்கு ஒளிச்செறிவு குறைந்த விளக்குகள் (டிம் லைட்) மூலம் துணைவழங்குவதைத் தவிர்த்து, அதிசெறிவான முன்விளக்குகளைத் தொடர்ந்தும் எரியவிட்டு, எதிரேவரும் வாகனங்களைத் தடுமாறவைக்கும் கைங்கரியத்தைச் செய்வது யாழ். குடாநாட்டில் இன்று சர்வசாதாரண விடயமாகிவிட்டது.

இவை ஒருபுறமிருக்க, பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகனங்களின் போக்கும் குடாநாட்டு மக்களைப் பீதிக்குள்ளாக்கி வருகிறது.

குறிப்பாக - மினிபஸ்களில் ஏகத்துக்கும் மக்களை அடைத்துக் கொண்டு, போட்டிபோட்டு ஓடும்போது பஸ்களில் பயணிப்போர் உயிர்களைத் தமது கைகளில் பிடித்துக்கொண்டு பயணிப்பதாகவே உணர்வது எல்லோருமே அனுபவிக்கும் ஒரு சாகசமாகும். இந்தப் "போட்டி ஓட்டங்கள்" பல தடவைகளில் விபத்துக்களை வலிய இழுத்துவந்திருக்கின்றன.

குடாநாட்டின் நிலை இப்படியிருக்க வீதி ஒழுங்குமுறைகளில் விரைவில் தீவிரகவனம் செலுத்தப்போவதாக பொலிஸார் அறிவித்திருக்கின்றனர். காலத்தால் பிந்தியதெனினும் - இந்த நடவடிக்கை எவ்வளவு தூரம், எவ்வளவு காலத்திற்குச் செம்மையாகப் பேணப்படும் என்ற சந்தேகம் எழுகின்றது.

எவ்வாறெனினும் - வீதி ஒழுங்குமுறை சரிவரப் பேணப் படுமாயின், அது பாராட்டுக்குரியதாக இருக்கும். அதேவேளை, தேவையற்ற உயிரிழப்புக்களையும், அங்கவீனமடைதலையும் தடுப்பதற்குத் தண்டனைகள் மட்டுமல்ல மக்கள் தாமாக உணர்ந்து செயற்படுவதும் முக்கியமானதாகும்.

# 92

# தளிர்களின் சிதைவு!

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேற்றத்திற்கும், சமூக வாழ்வுக்கும் பெருந்தடைக்கல்லாக இருந்துவரும் மிதிவெடிகளுக்கு மற்றொரு மாணவன் ஒருவனும் பலியாகியிருக்கிறான்.

மீசாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - மிதிவெடியை எடுத்து, அது வெடித்தால் ஏற்படும் பாதிப்புக்கள் தெரியாதவனவாக அதனைச் சுவரில் எறிந்து விளையாடியபோது, அம்மிதிவெடி திடீரென வெடித்ததில் படுகாயமடைந்த பதினான்கு வயதான சிறுவன் - சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் மரணமடைந்திருக்கிறான்.

மிதிவெடிகளின் ஆபத்தையும் - அது வாழ்வையே பறித்துக் கொள்ளும் கொடூரத்தையும் உணராது நடந்த, தேவையற்ற உயிரிழப்புக்களின் தொடர்ச்சியாக இந்த மாணவனின் மரணமும் இடம்பிடித்திருக்கிறது.

மக்கள் வாழ்விடங்கள் எங்கும் - வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள், வீதிகள், வயல்வெளிகள் என எங்கெங்கும் பரவலாக விதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளின் ஆபத்துப் பற்றிய விழிப் புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவந்தபோதும் - இந்த அநாவசிய உயிரிழப்புக்களைத் தடுக்கமுடியாதிருப்பது துரதிர்ஷ்டமானதாக நீடித்தே செல்கின்றது.

சர்வதேச விதிமுறைகளுக்கு முரணாக பொதுமக்கள் புழங்கும் பகுதிகளிலும் படையினரால் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளின் அச்சுறுத்தல் - கடந்த காலங்களைவிட, அண்மைக் காலத்தில் அதிகரித்துவருகின்றது.

பொதுமக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்புவதிலும், சுமூகவாழ்வினை ஆரம்பிப்பதிலும் ஆர்வம் கொண்டுள்ளவேளையில் - இந்த ஆபத்தும் மக்களுக்கு மிக அருகிலேயே வந்துவிடுகின்றது.

மக்களாக, மிதிவெடிகளில் அகப்பட்டு உயிரிழப்பதும், படுகாயமடைவதும் ஒருபுறமிருக்க கண்டெடுக்கும் மிதிவெடிகளைக் கையாளமுனைந்து, முட்டாள்த்தனமாக தமது வாழ்வையே சிதைத்துவிட முயற்சிப்பதானது தாமாகவே ஆபத்தை விலைக்கு வாங்கிக் கொள்வதாகின்றது.

சுயமாகவே அழிவைக் கட்டியணைத்துக்கொள்ளும் இந்த நடவடிக்கைகளில் - விபரமறியாத சிறார்களோடு, மிதிவெடிகளின் ஆபத்துப்பற்றி அறிந்த பெரியவர்கள்கூட ஈடுபடுவதை என்னவென்று சொல்வது?

மிதிவெடிகளைக் கண்டறிந்தால் அல்லது அதுபற்றிச் சந்தேகம் ஏற்பட்டால் - உடனடியாக அருகிலுள்ள மிதிவெடி அகற்றும் பிரிவுகளுக்கு அறிவித்து, முறையான பயிற்சிபெற்றவர்கள் மூலம் அதனை அவதானமாக அகற்றுவதைவிடுத்து, அசட்டுத் துணிச்சலில் தாமாகக் காரியத்தில் இறங்குவதை மக்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

பெரியவர்கள் - தாமும் சுதாகரிப்புடன் செயற்படுவதோடு மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வை, ஆபத்தைச் சிறார்களுக்கு அவர்கள் அவற்றைத் தெளிவாக உணரும் வகையில் எடுத்துச் சொல்லவேண்டும்.

பெரியவர்களின் கவனயீனமும். அசட்டைத்தனமும், அலட்சியமும் - சிறார்களை மிதிவெடிப் பயங்கரத்துக்குள் வலிந்து இழுத்துச் செல்லும் ஊக்குவிப்புக்களாகிவிடும் என்பது கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

தமது வயதுக்குரிய குறும்புத்தனங்களோடு உயிராபத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்களாகச் சிறார்கள் நடக்கமுனையும் போது அதனைக் கட்டுப்படுத்தும், வழிநடத்தும், அறிவூட்டும் பொறுப்பினைப் பெற்றோர்களோ, ஆசிரியர்களோ மறுத்துவிட முடியாது.

மனிதநேய அமைப்புக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் மிதிவெடி அபாயம் பற்றி எடுத்துரைக்கும் விழிப்புணர்வும், விளக்கமும் சிறார்களைச் சென்றடையத்தக்கதாக இன்னமும் வலுவூட்டப்படவேண்டும்.

சிறார்களின் அறிவுக்கு எட்டத்தக்கவகையில் - மிகவும் எளிமையான வழிகளில், அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் ஆபத்தை உணர்ந்து அதிலிருந்து விலகத்தக்கதாக தமது சகபாடிகளையும் வழிச்செலுத்தக் கூடியதாக விழிப்புணர்வுப் பிரசாரம் சிறார்களைச் சென்றடையவேண்டும்.

இந்த விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் கரிசனையோடும், கவனத்தோடும் செயற்பட்டால் மட்டுமே - இளந்தளிர்கள், மிதிவெடிகளுக்குப் பலியாவதைத் தடுக்கமுடியும், தவிர்த்துக் கொள்ளமுடியும்.

# 93

## அனுமதிமறுப்பும் அவமதிப்பும்!

உலகளவில் ஊடகவியலாளர்கள் சமூகத்தின் மிகச்சிறந்த கண்காணிப்பாளர்களாகவே போற்றப்படுகின்றனர்.

மக்களுக்குச் செய்திகளையும், தகவல்களையும் தருவதோடு மட்டுமல்லாது சமூகத்தினை வழிநடத்துவபர்களாக, கருத்துக்களை உருவாக்குபவர்களாக, உருவாக்கும் கருத்துக்கள் வழியே சமூகத்தை வழிச்செலுத்துபவர்களாக ஊடகவியலாளர்களின் பணி முக்கியத்துவம் உடையதாகின்றது.

நல்லவற்றை வெளிக்கொண்டுவருபவர்கள் என்று மட்டுமல் லாது சமூகத்தில் நடக்கும் அநீதிகளை, கொடுமைகளை, ஒடுக்குமுறைகளைச் சுட்டிக்காட்டி சமூக இயங்கியலை, அதன் பொறிமுறையை சரியானதிசையில் கொண்டுசெல்லவும் ஊடகவியலாளர்கள் அரும்பணியாற்றுகின்றனர்.

இதைவிட - நவீன உலகில் ஊடகவியலாளர்களின் சேவை அபிவிருத்தி சார்ந்தநோக்கில் முதன்மைப்படுத்தப்பட்டு அபிவிருத்திக்கான தொடர்பாடல் (Development Communication) என்ற விடயத்தை சர்வதேசம் மிக அவசியமானதாக்கிக் கொண்டுள்ளது.

வறுமை, இயற்கையழிவுகள், போர், தொற்றுநோய்கள், மூட நம்பிக்கைகள் என இன்னோரன்ன சமூகப் பாதிப்புக்களிலிருந்து

மக்களை விடுவித்து அவர்களுக்கான அபிவிருத்தியைத் திட்டமிடுவதிலும், அந்த அபிவிருத்திப் பணிகளை மக்களிடம் எடுத்துச்சொல்வதிலும், மக்களிடம் சென்றடைந்த செய்திகளுக்கான பின்னூட்டலை (Feedback) திட்ட உருவாக்குநர்களிடம் மீண்டும் எடுத்துவரவும் ஊடகவியலாளர்களின் சேவை அத்தியாவசியமானது என்பதைச் சர்வதேசமே ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகளின் புதிய நோக்கிலான அபிவிருத்திப் பணிகளுக்கு ஊடகங்களின், ஊடகவியலாளர்களின் தேவை முன்னணிக் காரணிகளில் ஒன்றாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

இப்படியான நிலையில் - யாழ். செயலகத்தில் நடைபெற்ற மக்களுக்கான அடிப்படைப் பிரச்சினைகளை ஆராயும் மாநாட்டில், அதுவும் பிரதமரின் செயலரே நேரில் வந்து கலந்தாய்வில் ஈடுபட்டபோது அங்கு பத்திரிகையாளர்களை அனுமதிக்காததும், பத்திரிகையாளர்கள் அவமதிக்கப்பட்டிருப்பதும் - உலக நடை முறையும், மக்களுக்கான அபிவிருத்திபற்றியும் தெரியாத, உணரத் தலைப்படாத மிக மோசமான நடவடிக்கையாக அமைந்துள்ளது.

பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றும் இரகசியமான கலந்துரையாடலல்ல. யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும் பங்கேற்ற - யாழ். மாவட்டத்தில் வசிக்கும் மக்களது அவசியமான பிரச்சினைகள் பற்றியும், அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கின்ற திட்டங்கள் தொடர்பானதுமான மக்கள் நலன்களைக் கருத்திற் கொள்ளத்தக்க சந்திப்பே அது.

இவ்வாறானதொரு கூட்டத்தில் - சமூகத்தின் கண்களாக விளங்கக்கூடிய பத்திரிகையாளர்களை அனுமதிக்க மறுத்தமை ஒன்றில், விஷயம் தெரியாதவர்களின் வேலையாக இருக்கக்கூடும் அல்லது வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்த பணியாகவே இருக்கமுடியும். இவற்றில் எது காரணமாக இருந்தாலும் - அது யாழ். அரச செயலகத்திற்கு அழகானதல்ல.

அதுவும் - பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் - அரச நிர்வாகங்களின் வெளிப்படைத்தன்மை பற்றியும், மக்களுக்கு அரசின் செயல்கள் தெரியவேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் விளக்கிக் கொண்டிருந்தபோது பத்திரிகையாளர்களை அவமதிக்குமாப்போல, புகைப்படம் எடுக்க விளைந்தவர்களை செயலக உயரதிகாரி ஒருவர் வெளியேறச் சொன்னமை பிரட்மன் வீரக்கோனுக்கு முன்பாகவே, அவரது கருத்துக்களைக் குறிப்பிட்ட உயரதிகாரி காலில் தூக்கிப்போட்டு மிதித்துவிட்டமைக்கு ஒப்பானதாகும்.

சர்வதேச மாநாடுகளிலேயே பத்திரிகையாளர்களுக்கும், புகைப்படப் பிடிப்பாளர்களுக்குமான உரிய கௌரவம் அளிக்கும் இருக்கைகள், புகைப்படப் பிடிப்புக்கான அனுமதி என்பன வழங்கப்பட்டுவருகின்றபோது செயலகத்தில் நடந்த கூட்டத்தில் பத்திரிகையாளர்களை அனுமதிக்காததும், அவமதித்தலும் சிறுபிள்ளைத்தனமான செய்கையாகவே படுகின்றது.

எனவே - இதுதொடர்பில் யாழ். அரசாங்க அதிபர் - கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்பாடலின் மையமான பத்திரிகையாளர்களுக்கு உரிய கௌரவத்தைப் பெற்றுத் தரவேண்டுமென்றே, அனைத்துப் பத்திரிகையாளர்களும் எதிர்பார்க்கின்றனர்.

அதிலும் - இனிவருங்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளிலும், அபிவிருத்திசார் செயற்பாடுகளிலும் - பத்திரிகைகள் வகிக்கக்கூடிய தொடர்பாடல் பங்கினை ஆரோக்கியமானதாகவும், முன்னேற்றகரமானதாகவும் பேணிக்கொள்ள யாழ். அரச அதிபர் முன்வருவாரென்றே பத்திரிகையாளர்கள் நம்புகின்றனர்.

அரசாங்கச் செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மை (Transparency) வலியுறுத்தப்படும் இன்றைய காலகட்டத்தில் - அதனை நடைமுறைச் சாத்தியமானதாக்க யாழ். அரச செயலக அதிகாரிகள் செயற்படுவார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

# 94

# சொந்த வீடும் சுமூக வாழ்வும்!

உயர் பாதுகாப்பு வலயங்களென்ற போர்வையில் - தமிழ் மக்கள் பாரம்பரியமாக வேரோடி வாழ்ந்த மண்ணிலிருந்து அவர்களை விரட்டியடித்து ஆக்கிரமித்து நிற்கும் படையினரின் எல்லைமீறிய கொடுஞ்செயலைக் கண்டித்தும்,

இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமது அவலவாழ்வைத் தொலைத்து தமது சொந்த மண்ணில், சொந்த வீடுகளில், தமக்குரிய வாழ்வமைப்புடன் - இயல்பான, சுமூகமான, நிம்மதியான வாழ்வைத் தேடிநிற்பதை சர்வதேசமெங்கும் வெளிப்படுத்தவும் - யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் மக்கள் எழுச்சி இயக்கமொன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

தமிழினம் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இன ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாக தமிழ் மக்களை, அவர்களது வாழ்விடங்களிலிருந்து துரத்தியடித்து அவற்றை இராணுவ வலயங்களாக்கி வைத்திருக்கும் பெரும் மனித உரிமை மீறலைச் செய்துகொண்டு தமது இராணுவநலன்களை முன்னிறுத்தியவாறு அடாத்தும், பிடிவாதமுமாக உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கு மறுத்துவரும் படைத்தரப்பின் மனிதநேயமற்ற செயலை உலகிற்கு எடுத்துச்சொல்ல, இந்த எழுச்சி இயக்கம் துணைசெய்யும்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று மட்டுமல்ல, யாழ். குடா நாட்டில், பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயும் இராணுவத்தினர் - மக்களது குடிமனைகள், பொதுக்கட்டடங்கள் என ஆக்கிரமித்துள்ள நிலையில் - குடாநாட்டு மக்கள் - படையினரும், படைமுகாம்களும் சூழ்ந்துகொண்டுள்ள ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையில் வாழ்வதாகவே உணர்கின்றனர்.

மக்களது வாழ்விடங்கள் மட்டுமல்ல பொது இடங்கள், மக்களது பயன்பாட்டுக்குரிய பிரதேசங்கள், வழிபாட்டிடங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள் என நீக்கமற நிறைந்திருப்பதாக படைமுகாம்களின் நாடாக, யாழ். குடாநாடு சிக்கியிருக்கின்றது.

அண்மையில் - குடாநாட்டிற்கு வந்த ஜேர்மனிய தொழிற்சங்கத் தலைவரொருவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில், இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுவிட்டதாகவும் போரின் சத்தங்கள் ஓய்ந்துவிட்டதாகவும் சர்வதேச அளவில் கூறப்பட்டாலும் - யாழ்ப்பாணத்திற்குள் நுழைவதற்கான முகமாலைப் பகுதியில் காத்துநின்றதிலிருந்து யாழ். நகரின் மூலைமுடுக்குகள் வரை இராணுவத்தினரின் தலைகளையே கண்டதாகவும், இது தமக்குக் கூறப்படும் சமாதானத்திற்கும் நிஜத்திற்குமான வேறுபாட்டையே உணர்த்தியதாகவும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவர் மட்டுமல்ல, யாழ். குடாநாட்டில் சமாதானத்தின் விளைவுகளைத் தேடும் எவரும் படைமுகாம்களின் பிரசன்னங்களையும், இராணுவக் காவலரண்களையும் சந்திக்குச்சந்தி காணுமிடத்து அமைதியின் பெறுபேறுகள் பற்றி வியப்பே கொள்வர்.

இந்தவகையில் - யாழ். குடாநாடு இன்னமும் இராணுவச் சூழலுக்குள்ளிருந்து வெளிவராதநிலையே காணப்படுமிடத்து, புதியதொரு அச்சுறுத்தலாக "முகாம்களை இடமாற்றுதல்" என்னும் பெயரில் இராணுவமுகாம்களை புதிய இடங்களிலும் ஸ்தாபித்துக் கொள்ளும் ஆபத்தையும் பரவலாகவே யாழ்.மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

கடந்த சில நாட்களில் - யாழ். நகரிலும், கொழும்புத்துறையிலும், புத்தூரிலும் இன்னும் வல்வெட்டித்துறையிலுமாக புதிய முகாம்களை அமைப்பதற்கான முயற்சிகளில் படையினர் இறங்கியிருப்பதும், அதனை எதிர்த்து மக்கள் அணிதிரண்டு போராடுவதும் நாளாந்தச் செய்திகளாகிவிட்டன.

இதேவேளை, பருத்தித்துறை தும்பளை வீதியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவருக்குச் சொந்தமான காணியில் முகாம் அமைக்க முற்பட்ட படையினர் பற்றி, அவர் கண்காணிப்புக் குழுவுக்குப் புகாரிட்டிருக்கின்றார். படையினர், தனது காணியை விட்டு வெளியேறி, அக்காணியைத் தான் பயன்படுத்த வழிசெய்யுமாறு கண்காணிப்புக்குழுவிடம் அப்பொதுமகன் கேட்டிருக்கின்றார்.

இது, தனியே அந்தப் பொதுமகனுக்கு மட்டும் நேர்ந்துவிட்ட கதியல்ல. இவரைப்போல ஆயிரமாயிரம் மக்களின் குடிமனைகள், காணிகள் யாவுமே - இன்று உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள்ளும், அதற்கு வெளியேயும் படை முகாம்களாகவும், காவலரண்களாகவும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் துயரம் - அமைதியும், சமாதானமும் கூடிவரும் வேளையில் இனியும் தொடர்கதையாகி விடக்கூடாதென்பதே தமிழ் மக்கள் அனைவரதும் உள்ளக் கிடக்கையாகும்.

எனவே - இத்துயரத்தைக் களையவும் - தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமது வீடுகளில் குடியமர்ந்து, தமது அன்றாட வாழ்வுக்குத் திரும்பி அமைதியான வாழ்வு நிலைபெறவும் ஒன்றுசேர்ந்து குரல்கொடுக்கவேண்டும். இந்தக் குரல் - சர்வதேசத்தின் கண்களைத் திறக்கவேண்டும். அதற்கு, பல்கலைக்கழக மாணவர்களின் மக்கள் எழுச்சி இயக்கம் வழிகோலட்டும்.

# 95

## எழுச்சி கொள்ளும் இளந்தமிழினம்!

நேற்று நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள் பேரணிகள் உணர்வெழுச்சியுடனும், ஆயிரக்கணக்கான மாணவர்களின் பங்கேற்புடனும் நடந்தேறியதை நோக்கும்போது சுதந்திர வேட்கையையும், இன அழிப்பிற்கு எதிரான விழிப்புணர்ச்சியும், மாணவர்களிடையே மிக உயர்ந்த நிலையிலிருப்பதை உணர முடிகின்றது.

ஒரு சமூகத்தின் மிகமுக்கிய பங்கினரும், அச்சமூகத்தின் உயிரோட்டமான வலுவுமான மாணவர்களே அச்சமூகத்தின் எதிர்காலத்தைக் கட்டியம் கூறுபவர்களாவர்.

வரலாற்றை, ஒரு சந்ததியிலிருந்து மற்றைய சந்ததிக்குக் காவிச் செல்பவர்கள் அவர்களே.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தாக்களான மாணவர்கள்தான் - இன்று தமிழினம் சுதந்திரமும், தன்னாட்சியும் வேண்டிநிற்கவும், போராட்டம் வளர்ச்சியுற்று இலங்கைத்தீவின் சமதையான ஆட்சியாளர்களாகத் தமிழினம் பெருமைபெறவும் - அச்சாணியானவர்கள் என்றால் மிகையில்லை என்றே கூறலாம்.

சிங்கள அரசாங்கங்கள், தமிழினம் மீது தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளை காலத்துக்குக் காலம் பிரயோகித்து வந்த வேளையில் - தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்களைத் தட்டிப் பறிப்பதாக

தரப்படுத்தலைக் கொண்டுவந்தபோதே - இனியும் பொறுப்பதற்கில்லை என இளைய தமிழர்கள் பொங்கி எழுந்தனர்.

தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் ஏற்பட்ட பெரும் புரட்சிகர மாற்றமாக, தமிழீழவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தோடு, போராட்டத்தை மக்கள் மயப்படுத்தி தமிழினம் கொண்டிருந்த பலத்தையும் துணிவையும் அவர்களுக்கே காட்டி விடுதலைப் போராட்டத்தை நகர்த்திச் சென்றவர்கள் மாணவர்களே,

பொன். சிவகுமாரனோடு தீப்பொறியாய் எழுந்த - அடக்குமுறைக்கு எதிராக, அடித்துச் சொல்லி ஒடுக்குமுறையாளனை ஓட ஓட விரட்டும் உத்தி,

இன்று ஆட்லறிகளும், டாங்கிகளும், பல்குழல் பீரங்கிகளும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளும், கடற்கலங்களும் கொண்டதான தமிழ்ப்படையாக விடுதலைப்புலிகளை உருவாக்கியிருக்கிறதென்றால் - இந்த வளர்ச்சியில் மாணவர்கள் ஆற்றியபங்கும் அளப்பரியதொன்றே,

தமிழீழ விடுதலைப் போராட்டம், நெருக்கடிகளைச் சந்தித்த போதெல்லாம் - மாணவர்கள் அலைஅலையெனத் திரண்டு போராட்டத்தில் பங்குதாரர்களானதும்,

போர்க்களங்களில் மட்டுமல்ல, களப் பின்னணி வேலைகளிலும் மாணவர்கள் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு, கண்துஞ்சாது ஆற்றிய அரும்பணிகளையும் தேசம் மறக்காது.

அரசியல் ரீதியாக தமிழர் தாயகம் முழுவதையும் ஒரே அணியில் திரளவைத்த பல்கலைக்கழக மாணவர்களின் "பொங்குதமிழ்" தமிழினத்தின் விடுதலை நோக்குக்குப் புத்துணர்ச்சியைத் தந்ததும்,

ஒரே குரலில் - தமிழினம் ஒன்றுபட்டுநிற்பதை உலகிற்கு உணர்த்தி, தமிழ் மக்களின் அபிலாஷைகள் இவைதான், தமிழ் மக்களின் தலைமை இதுதான் என்பதை உறுதிபடச்

சர்வதேசத்திற்கும் எடுத்துச் சொன்னதும் தமிழின வரலாற்றின் வைரவரிகளே.

இந்த வகையில், தமிழ் மாணவர்களின் சுதந்திர வேட்கையும், ஓங்கிய தெளிவும் இன்றைய சமாதான காலத்திலும் மங்கிவிடாமல், சீர்நிலையில் இருப்பதைத் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் எடுத்துக் காட்டியிருக்கின்றது.

இனிவரும் அரசியல் நகர்வுகள், சர்வதேசத்தின் பங்கு பற்றியெல்லாம் - யுத்தகாலத்தை விட கூடுதல் விழிப்புணர்வுடன் மக்கள் இருக்கவேண்டிய போது,

தமிழ் மக்கள், இந்த அமைதிக் காலத்தில் சமூக வாழ்வுக்குத் திரும்பமுடியாது தடைப்பட்டிருக்கின்ற அவலநிலை தொடர்பாகவும் - மாணவர்கள் இந்தச் சமூகத்தைச் சரியானநிலையில் வழிச் செலுத்துபவர்களாகப் பங்களிப்பார்கள் என்ற நம்பிக்கையை நேற்றைய எழுச்சிதினம் உறுதிப்படுத்தியிருக்கிறது என்றால் மிகையல்ல என்றே கூறலாம்.

# 96

## யாப்பும், யாப்பிற்குரியவரும்!

இராணுவத்தினரால் மக்கள் குடிமனைகளை வளைத்து உருவாக்கப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்கள் - இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மீள்குடியமர்வதைதத் தடுக்கும், அடிப்படை மனித உரிமை மீறல்களுக்குரியவை என்பதோடு,

இலங்கை அரசியல் யாப்பின்படியான, மக்களுக்கான சுதந்திரத்தைப் பாதிப்பதாகவும் அமைந்துள்ளன.

அதேவேளை, உயர் பாதுகாப்பு வலயங்கள் விடயத்தில், இராணுவத்தரப்பு தன்னை நியாயப்படுத்துவதன்படியான பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம், அவசரகால விதிகள் அற்றுப் போயிருப்பதால் - அதுவும் உபயோகிக்கப்பட முடியாத நிலைக்கே ஆளாகியிருக்கிறது.

அரசியல் யாப்பின் மூன்றாவது சரத்தின் 14 ஆவது பிரிவில் - பொதுமக்களின் வசிப்பிட சுதந்திரமும் வலியுறுத்தப்பட்டுள்ளது, உறுதிசெய்யப்பட்டிருக்கின்றது எனக் கூறப்படுமிடத்து உயர் பாதுகாப்பு வலயங்கள், இந்தச் சுதந்திரத்தை அப்பட்டமாகவே கட்டுப்படுத்துகின்றன.

அதேவேளை, அரசியல் யாப்பின் பதினைந்தாவது சரத்தின்படி, பாதுகாப்புக்கருதி மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள

விசேட அதிகாரங்களும் இராணுவத்தின் நிலைப்பாட்டிற்குத் துணைபோனாலும் -

அவசரகாலச் சட்டம் தற்போது நடைமுறையில் இல்லாததால், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்ந்து தக்கவைக்கப்படுவது, அரசியல் யாப்புக்கே முரணானதாக அமைந்துவிடுகின்றது.

இது இவ்வாறிருக்க, உயர் பாதுகாப்பு வலயத்தை வைத்திருப்பதற்கு, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் தமக்கு வழிசெய்வதாக, யாழ். பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறுகின்றார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு, தனக்குக் கிடைத்த 400 இற்கும் அதிகமான உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய புகார்கள் தொடர்பாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அனுப்பிய கடிதத்திற்கான பதிலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையின் அரசியல் யாப்பின் முக்கியத்துவம் தொடர்பாகவும் - சட்டவரையறை பற்றியும் வாய்பிளக்கப் பேசும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் - அரசியல் யாப்புக்கு முரணாக அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றி மூச்சும் காட்டாமலிருக்கின்றனர்.

விடுதலைப்புலிகள் அரசியலமைப்புக்கு வெளியிலான, இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை முன்வைத்தபோது - அரசியல் அமைப்புக்குள்ளேயே அவ்வாறான அமைப்பை அமைக்கலாம் எனவும், சட்டவரையறைகளை அரசாங்கம் மீறமுடியாதெனவும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதல் அமைச்சர்கள் பீரிஸ், மிலிந்த மொறகொட என அனைவருமே மறுத்திருந்தனர்: மாற்று யோசனைகளை முன்வைத்தனர்.

ஆனால், இவர்கள் இவ்விதம் போற்றும் அரசியல் யாப்பை மீறுவதாக - இடம்பெயர்ந்து வாழும் இலட்சக்கணக்கான மக்களின் மீள்குடியமர்வையும், சமூகவாழ்வையும் தடுத்துநிற்கும் உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவதற்கு - இவர்கள் தயாராக இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

கொழும்பு ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில், தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதைத் தடுப்பதற்கு அல்லது பின்னடிப்பதற்கும் அரசியல் அமைப்பைத் துணை தேடிக் கொள்ளும் நிலைதான் இருக்கின்றதேயொழிய - தமிழ் மக்களைப் பாதிக்கும் விடயங்கள், அரசியல் யாப்பு வழியே சுட்டிக்காட்டப்பட்டாலும், அவற்றை நீக்குவதற்கு அவர்களிடம் சிந்தனை எதுவும் இருக்கவில்லை என்பது இதனால் வெட்டவெளிச்சமாகிறது.

அரசியல் யாப்பின் உச்சாணிக் கொப்பில் அமர்ந்துகொண்டு, நிறைவேற்று அதிகாரம் என்னும் கிரீடத்தையும் சுமந்து, இலங்கை யின் - ஒருமைப்பாடு, சுயாதிக்கம் எனப் பேசிவரும் ஜனாதிபதி முதலாக -

பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்குள் மூழ்கித் திளைத்து ஊறிப்போயிருக்கும் ஜே.வி.பி. வரையுள்ள அனைத்துத் தரப்பினரிடமும் - இதேபோன்ற போக்கும், மனநிலையுமே ஆழ வேரூன்றி இருக்கிறது.

இவர்கள் அனைவரையும் பொறுத்தவரையில், இலங்கையின் அரசியலமைப்பு சிங்களவர்களின் நலன்களுக்கு மட்டுமானதே என்பது வலிமையான கருத்தியலாக அவர்களிடம் பதிந்திருக் கிறது.

இந்நிலையில் -

தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துநிற்கும், இலங்கையின் அரசியலமைப்பிற்குள் இடைக்கால நிர்வாகம் மட்டுமல்ல, தமிழருக்கான எந்தத் தீர்வுமே சாத்தியமாகாது என்ற விடுதலைப் புலிகளின் தீவிரமான, தெளிவான நிலைப்பாடு நூற்றுக்குநூறு வீதம் நியாயமானது என்பதும், இந்த உறுதி தமிழர்களின் அரசியல் எதிர்காலத்திற்கு மிக அவசியமானதும், அடிப்படையானதும் என்பதும் - கிஞ்சித்தும் சந்தேகத்திற்கிடமற்றதாகிறது.

# 97

## நிவாரணத்துள் வாழ்வு!

"யாழ். குடாநாட்டில் வசித்துவரும் எண்பது வீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் உலருணவு நிவாரணத்தை நம்பித்தான் வாழ்கின்றனர். எனவே, புனர்வாழ்வு அமைச்சு யாழ்ப்பாணத்திற்கு எதனையும் செய்யவில்லை எனக் குற்றஞ்சாட்ட முடியாது" - இவ்வாறு கூறியிருக்கின்றார், மீள்குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன.

குடாநாட்டில் எண்பது வீதமானோர் நிவாரணத்தை நம்பி வாழக்கூடிய சூழல் - அமைதி ஏற்பட்டு ஒரு வருடம் கழித்த பின்னும் நீடிக்கும் அவலத்தை, ஒரு சாதனையாகச் சொல்ல வேண்டிய கடப்பாடு அமைச்சருக்கு ஏற்பட்டிருக்கிறது.

உண்மையில் - இடம்பெயர்ந்தோர் நிவாரணம் என்பது யுத்த காலத்தில் போர் சிதைத்த வாழ்க்கைக்குள் உழலும் மக்களுக்கு மிக அவசியமானதொன்றே. வீடுகளை இழந்து, தொழில் வாய்ப்புக்கள் பாதிக்கப்பட்டு கையறுநிலையில் வாழ்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் ஒன்றுதான் - அவர்களின் வாழ்க்கையை நகர்த்திச் செல்வதற்கு, உயிர்வாழ்தலுக்கான மிகக் குறைந்த உதவி என்பது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது.

ஆனால், யாழ். குடாநாட்டில் இந்த நிவாரணம் - பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்போதுமே சீராகக் கிடைத்ததில்லை. உலருணவு நிவாரணம் தேவையானபோது வழங்காமல், பலமுறை, நிவாரணத்தை ஒட்டுமொத்தமாகப் பின்னொருநாளில் தள்ளிவிடும் வழக்கத்தை யாழ். குடாநாடு சந்தித்தே வருகிறது. நாட்கணக்கில், வாரக்கணக்கில் இழுபட்டு - மாதக்கணக்காகியும் உலருணவு நிவாரணம் கிடைக்காமல் அலைந்து திரிந்ததும் - போராட்டங்கள் நடாத்தியதும் அவ்வளவு விரைவில் மறந்துவிடக் கூடியதுமல்ல.

சரி, கிடைக்கும் நிவாரணப் பொருட்கள்தான் தாமதமாக வந்தாலும் - அவற்றின் தரம் பற்றிப் பல தடவைகள் மக்கள் குமுறியெழுந்து புகார்களைக் குவித்திருக்கின்றனர். வண்டுகள் நிறைந்த மாவையும், பழுதாகிய அரிசியையும் நிவாரணப் பொருட்களாய்ப் பெற்று, வயிறெரிந்த குடும்பங்கள் எத்தனை? எத்தனை??

இதுதவிர, நிவாரணத்திற்கு வந்த பொருட்களில் நிறைக் குறைவும் - ஊழலும், மோசடியும் யாழ். குடாநாட்டிற்குப் புதியதல்ல. மக்களின் அத்தியாவசியத் தேவையோடு விளையாடி, கோடிகளை, இலட்சங்களை பல மட்டங்களிலும் ஊழல் பெருச்சாளிகள் சுருட்டிக்கொண்டதை அண்மைய நாள்வரை அனைவரும் அறிந்தேயுள்ளனர்.

நிவாரணப் பொருட்களில் - மக்களுக்குத் தேவையானது ஒன்றிருக்க, தேவைக்கு அபரிதமாக அது வீணாகிப் போகுமளவுக்கு வேறு பொருட்களைச் சுமத்தியதும் -

தேவையான பொருட்களைப் பெறுவதற்காக, நிவாரணப் பொருட்களை கால்விலை, அரைவிலைக்கு மக்கள் விற்றுவந்ததும் இன்னுமொரு சோகக்கதை.

இந்தவகையில் - யாழ். குடாநாட்டு மக்களுக்கான "நிவாரண வரலாறு" பல கரும்புள்ளிகளைச் சுமந்திருக்கும் நிலையில் - இதனையே ஒரு சாதனையாகச் சொல்லுமளவிற்கு நிலைகளை வைத்திருப்பது வேதனைதரக் கூடியதன்றி, வேறென்ன கூற முடியும்?.

இதேவேளை - யாழ். குடாநாட்டிலுள்ள 80 சதவீதமான மக்கள் நிவாரணத்தை நம்பிவாழவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏன் எழுந்தது?

இந்த மக்களின் - சுபீட்சமும், வளமும் எவரால் சுரண்டப் பட்டன?

இடம்பெயர்ந்து வாழும் மக்களின் சமூக வாழ்வைத் தொலைத்தவர்கள் யார்?

போர் நிறுத்தப்பட்டு ஒரு வருடம் கடந்தும் - தமது பழைய வாழ்வுக்குத் திரும்பமுடியாமல் தடுக்கப்பட்டு, அழுத்தப்பட்டு இன்னமும் இடம்பெயர்ந்தோராகவும், அகதிகளாகவும் - நிவாரணத்தை நம்பியே வாழவேண்டிய நிலைக்கு மக்களைத் தள்ளிவைத்திருப்பதற்குத் தீர்வுதான் என்ன?

- என உள்ளங்குமுறும் கேள்விகளுக்கு "சாதனை" பற்றிப் பீற்றிக்கொள்ளும் அமைச்சரால் பதில்தர முடியுமா?

இடம்பெயர்ந்து வாழும் இலட்சக்கணக்கான மக்களை அவர்கள் சொந்த இடத்திற்குத் திரும்பவைத்து, அவர்கள் சுய தொழில் மூலங்களைத் திரும்பப் பெறவும், சமூகவாழ்வுக்குள் அவர்களைக் கொண்டுசெல்லவும் அமைச்சரால் முடியுமா?

உண்மையும், யதார்த்தமும் வேறாயிருக்க தமிழ்மக்களைச் சீரழிக்கவும், சிதைக்கவும் செய்துவிட்டு அவர்களது வாழ்வை வேரோடு பிடுங்கியெறிந்துவிட்டு அவர்கள் இழந்தது மலையளவிலிருக்க கடுகுபோல் உதவிகளைச் செய்துகொண்டு, அதனைப் பற்றி மார்தட்டிப் பெருமைப்பட்டுக்கொள்ளும் பித்தலாட்டத்தை எப்படிப் பொறுத்துக் கொள்ளமுடியும்?

தெற்கில் அண்மையில் ஒரு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டவுடன், அங்கு கோடிகோடியாய் பணத்தைக் குவித்தும், அரச இயந்திரத்தின் கவனத்தையே முனைப்பாக்கி முழு அளவிலான புனரமைப்புக்கும் வழிசெய்துவிட்டு இங்கு, ஆண்டுகள் கணக்கில், அகதிமுகாம்களில், வார்த்தைகளில் வடிக்கமுடியாத கொடிய வாழ்க்கை வாழும் மக்களுக்கு, நிவாரணத்தை

மட்டும் வழங்கி விட்டு அவர்களது வாழ்வை அதற்குள்ளேயே குறுக்கவைப்போரை என்னவென்று சொல்வது?

சமாதானம் திரும்பிய இந்தக் காலத்திற்குள் - இடம்பெயர்ந்து வாழும் மக்கள், தம் சொந்தக் கால்களில் நிற்கக்கூடியதான, தம் சொந்தமண்ணில் வாழக்கூடியதான, இனிமேல் தமது வாழ்வைத் தாமே நகர்த்திச் செல்லும் வல்லமை பெறக்கூடியதான உதவிகளை - புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சு செய்திருக்கவேண்டும்.

இதைவிடுத்து - இன்னமும் அகதிவாழ்வு தொடரவும், அவலங்கள் சூழவும் - யுத்தகாலத்திற்கு அவசியமான உடனடி உதவியான நிவாரணத்தையே எப்போதும் வழங்கி, அதனை இன்னமும் பெரிய உதவியெனச் சொல்லி, அதனையிட்டுப் பெருமைப்பட முனைந்தால் - அது, மக்களை அப்பட்டமாக ஏமாற்றும் உத்தியேயன்றி வேறல்ல என்றே சொல்லமுடியும்.

# 98

## கடனாளிகள் மட்டுமல்ல...!

ரோக்கியோவில் இலங்கைக்குக் கிடைத்திருக்கும் நிதியுதவிகள் தொடர்பாக அரசாங்கம் பெருமைப்பட்டுக் கூறிக்கொண்டாலும், இந்த நிதியுதவி - இலங்கையரை மேலும் கடனாளியாக்கவே உதவியிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தியிருக்கின்றன.

இதுவரையில், இலங்கையர் ஒவ்வொருவரும் 78 ஆயிரம் ரூபா கடனாளியாக இருந்தனர். ரோக்கியோ நிதியுதவிக்குப் பின்னர், இத்தொகை 95 ஆயிரம் ரூபாவாக உயர்ந்திருப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளரான சரத் அமுனுகம கூறியிருக்கிறார். முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும், சிஹல உறுமயவின் முக்கியஸ்தருமான நிஹால் கருணாதிலகவும் இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இவர்களது இக்கருத்துக்களில் இருக்கின்ற உண்மை நிதர்சன மானது, யதார்த்தமானது என்பதைத் தவிர - பொதுஜன ஐக்கிய முன்னணி என்னவோ இலங்கையரின் கடன்சுமையைக் குறைக்கவும், சிஹல உறுமய இலங்கையின் பொருளாதாரத்தை வளப்படுத்தவும் முயற்சித்தன என்று கூறுவதற்கில்லை.

ஆனால் - இத்தரவுகள் இலங்கையின் பொருளாதாரத்தின் எதிர்காலத்தை ஊக்கப்படுத்தும் தகவல்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுதான் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடாத்திய போரினாலும், ஊழலும், சுரண்டலும் புரையோடிப்போன அரச இயந்திரத்தாலும், அரசியல்வாதிகளின் கபளீகரங்களாலும் இலங்கையின் பொருளாதாரம் அடிமட்டத்திற்குச் சென்றுவிட்ட நிலையிலும், வங்குரோத்துநிலைக்கு ஆளாகிவிட்டபோதும் -

இலங்கையின் பொருளாதாரத்தை வெளிநாடுகளுக்கு அடகு வைத்தேனும் நாட்டைச் சராசரி நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப்பீடமேறினார்.

வெளிநாடுகளின் நிதியுதவியின்றி இலங்கையின் பொருளாதா ரத்தைச் சிக்கலுக்குள்ளிருந்து மீட்கமுடியாததென்பதைத் தெரிந்து கொண்டவராகத்தான் பிரதமர் ரணிலின் நிகழ்வுகள் இருந்தன.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம்பரியத்தின்படி யான முதலாளித்துவ நெருக்கமும், மேற்கத்தேய நாடுகளின் பாதிப்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் விட்டுவைக்க வில்லை.

வெளிநாட்டு நிதியுதவி மூலமே மீட்பு என்ற நிலையில், யுத்த நிறுத்தம் அமுலானதும், விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டதும் - இந்த வெளிநாட்டு நிதியுதவிக்கான வாய்ப்பு ரணில் அரசாங்கத்திற்கு மேலும் வழங்கப்பட்டது.

இந்த வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்காக பொருளாதார அக்கறையைக் கடந்தும் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்திலும் நிதியுதவிவழங்கும் நாடுகளின் செல்வாக்கைப் பரவவிடுவதற்கு ரணிலிடம் தளர்வு காணப்பட்டது.

இந்தவகையில் - இலங்கையின் அரசியல் - பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுமுயற்சிகளில், அந்நிய சக்திகளின் தலையீட்டை, செல்வாக்கை அனுமதிப்பவராகத்தான் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகள் இன்று விரிவடைந்திருக்கின்றன.

ஒரு நிலையில், இது - இலங்கையில் சமாதானத்தை ஆர்வத்தோடு வேண்டிநின்று ஆதரவுதரும் அனுசரணைப் பாத்திரத்தையும் மீறி ஒஸ்லோவிலும், ரோக்கியோவிலும் வெளியிடப்பட்டதுபோல ஆதிக்கமிகு மத்தியஸ்தர் நிலைக்கு நிதியுதவி தருவோரிற்கு இடமளிக்கச் செய்திருக்கிறது.

இடம் கிடைத்தால் மடம் கட்டுபவனைப்போல ஆலோசனை வழங்கியவர்கள் இன்று அறிவுரையும், அறிவுறுத்தலும் தருபவர்களாக மாறிவருவதற்கும் வழியேற்பட்டிருக்கிறது.

இது, ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஏற்றதானாலும் கூட தன்மானமும், சுயகௌரவமும் கொண்ட, தமிழினத்திற்குத் தலைமை தாங்கும் விடுதலைப் புலிகளுக்கு ஒவ்வாமையாகிவிட்டதே இன்று பிரச்சினைக்குரியதாகியிருக்கிறது.

தனது நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற் காக எவர் குட்டினாலும் தன் தலையை நீட்டிவாங்கிக்கொள்ள ரணில் தயாராக இருந்தாலும்,

தியாகத்துடனும், துணிவுடனும், நியாயத்துடனும் போராடி இன்று தனித்துவமான, பலமிக்க மக்கள் சக்தியெனத் தலை நிமிர்ந்துநிற்கும் விடுதலைப்புலிகள் - இலங்கை அரசாங்கம் போல அடங்கிச்செல்லத் தயாராக இல்லாததே இன்று உலகில் பேசப்படும் செய்தியாயிருக்கிறது.

இந்நிலையில் - இலங்கையர்கள் மேலும் மேலும் கடனாளி யாவதோ அல்லது இலங்கையின் "சுயாட்சியும்", "இறைமையும்" வெளிநாடுகளுக்குத் தாரைவார்க்கப்படுவதோ - ரணில் அரசாங்கத்திற்கு உணர்வுக்குரிய பிரச்சினையாகிவிடாது.

ஆனால் - வெளிநாடுகளின் உதவி, இப்போதைக்கு தனது அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவதற்குரிய சாதகத்தை ரணிலுக்குத் தந்தாலும்,

இந்த உதவியினூடாக இனிவரும் காலத்தில் உள்நுழையப் போகும் அதிகாரமும், அழுத்தங்களும் - ஓரளவேனும்

சுயமரியாதையுள்ள சிங்கள மக்கள்தொகுதியினரைத் தாக்கும்போதுதான், அதன் மறுபக்கத்தை ரணில் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அப்போது கடனாளிகளாக மட்டுமல்ல, தம்மை ஏகாதிபத் தியத்தின், உலகமயமாதலின் விசுவாசமிக்க அடிமைகளாகவும் தாம் விரும்பாவிட்டாலும் மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப் பந்தம், சிங்கள மக்களை அழுத்திக்கொண்டிருக்கும்.

# 99

## தரையிலும் சீண்டும் முயற்சி!

யாழ். குடாநாட்டில், போராளிகள் மீதான படையினர் சோதனைகளும், அரசியற்துறை அலுவலகங்கள் மீதான திடீர் சுற்றிவளைப்புக்களும் அதிகரித்துச் செல்வதானது, அநாவசியமான பதற்றத்தையும், அச்சுறுத்தலையும் ஏற்படுத்துவததாக அமைந்து வருகின்றது.

குறிப்பாக சுழிபுரம் பகுதியில், கடந்த ஓரிரு தினங்களாக நடைபெற்றுவந்த சம்பவங்கள் - இராணுவத்தினர் சோதனை யையும் சுற்றிவளைப்பையும் - வேண்டுமென்றும், தமது அடாவடித்தனங்களுக்கு வடிகாலாகவும் பயன்படுத்த முனைவதை எடுத்துக்காட்டுகின்றன.

சுழிபுரம் - வழக்கம்பரையில், போராளி ஒருவரை மறித்த படையினர் - அவரது அடையாள அட்டையைப் பறித்ததோடு, அவரது பையையும் சோதனையிட முயன்றுள்ளனர்.

எந்தவித முகாந்திரமும் இல்லாது படையினர் போராளியைச் சோதனையிடுவதை, பொதுமக்களும் அனுமதிக்காதநிலையில், தாம் நினைத்ததைச் சாதிக்கவேண்டுமென்ற அழுங்குப் பிடிவா தத்துடன் அங்கு படையினர் நடந்துகொண்டிருக்கின்றனர்.

நிராயுதபாணியாக நின்றிருந்த போராளியையும், அவருக்கு ஆதரவாகக் கூடிய ஆயிரக்கணக்கான மக்களையும் அச்சுறுத்த

துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், மிருகத்தனமாக மக்களைத் தாக்கியமிருக்கின்றனர் இராணுவத்தினர்.

இறுதியில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில், பொலிஸார் - குறிப்பிட்ட போராளியைச் சோதனையிட்டபோது அவரிடம் சந்தேகத்திற்குரியவை எதுவுமே இல்லையென்பது தெளிவானது.

இதையடுத்து, சம்பவம் நடந்ததற்கு மறுதினம் - நூற்றுக் கணக்கான இராணுவத்தினர், அதிகாலை முதலே சுழிபுரம் பகுதியில் திரண்டு, பெரும் சுற்றிவளைப்பொன்றை நடத்தி விடுதலைப்புலிகளின் அலுவலகமொன்றைப் பலவந்தமாகச் சோதனையிடவும் முயன்றிருக்கின்றனர்.

பழைய பாணியில், படை நடவடிக்கையொன்றை ஒத்ததாக மேற்கொள்ளப்பட்ட இச்சுற்றிவளைப்பில் - அப்பகுதியிலுள் ளோரைப் பயமுறுத்துவதாகத் துப்பாக்கிப்பிரயோகமும் நடத்தப்பட்டிருக்கிறது.

படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் - நிலவிவரும் அமைதிச் சூழலை மீறி, இராணுவ வலையமைப்புக்குள் குடாநாடு இருப்பதை எடுத்துக்காட்டுவதான வலிந்தமுயற்சியாகவும், போராளிகளை ஆத்திரமூட்டவும், பொதுமக்களைப் பதற்ற மடையச் செய்யவும், பயமுறுத்தவுமான நோக்கத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதனையே, நேற்றுமுன்தினம் கிழக்கில் மட்டக்களப்பில் நடந்த படையினருடனான சந்திப்பில், மட்டு அம்பாறை மாவட் டங்களுக்கான விடுதலைப்புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஷும் அங்கு வந்திருந்த இராணுவத் தளபதிகளிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

படையினர் - தாம் பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டிய தேவை இருப்பதாகக் கூறி சோதனைகளையும், கெடுபிடிகளையும் நியாயப்படுத்த முயன்றபோது,

அதற்குப் பதிலளித்த தளபதி ரமேஷ் - இத்தகைய நடவடிக்கைகள்,மக்கள் மத்தியில் பதற்றத்தையே ஏற்படுத்தியுள்ளதாகவும், இவை மக்களிடையே எதிர்ப்புணர்வைத்தான் மேலோங்கச் செய்யுமெனவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

இதனையொத்த கருத்தையே, குடாநாட்டுச் சூழலிலும் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது.

போர்நிறுத்தம் அமுலானதன் பின்னர் - கொழும்பிலும், தெற்கின் ஏனைய பகுதிகளிலும் சோதனைச்சாவடிகளை அகற்றியும், பாதுகாப்பைத் தளர்த்தியும் சிங்கள மக்களை யுத்தத்தின் நினைவுகளிலிருந்து விலக்கிவைக்க விரும்பிய அரசாங்கம்,

தமிழர் பகுதிகளில் அதற்கு நேர்மாறான நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுவதைத் தொடர்ந்தும் அனுமதித்துவருவதைச் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

இராணுவத்தினரின் பிரசன்னம் குறைக்கப்படாததுடன் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் அரசாங்கம் இணங் கிக்கொண்டதன் படியாக மக்கள் குடியிருப்புக்களை ஆக்கிரமித்துநிற்கும் போக்கிலும் கிஞ்சித்தும் தளர்வு ஏற்படவில்லை.

உயர் பாதுகாப்பு வலயங்கள் அப்படியேயிருக்க, அவற்றிற்கு வெளியேயும் - முன்னர் இருந்த முகாம்கள், காவலரண்களை ஒப்புக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக அகற்றிவிட்டு, பதிலாகப் புதிய முகாம்களையும், காவலரண்களையும் அமைப்பதில்தான் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை - பொதுமக்கள், போராளிகள் மீதான கெடுபிடிகளும் - போராளிகளின் அலுவலகங்களை அடாத்தாகச் சோதனையிடுவதும்தான் இப்போது சரமாரிக்கு அதிகரித்து இருக்கின்றன.

இவையெல்லாம் - யுத்தச் சூழலுக்குள் தமிழ் மக்களை இன்னமும் அழுத்திவைப்பதான முயற்சி என்பதோடு போர் நிறுத்தத்தை அப்பட்டமாக மீறுவதுமாகவே அமைகின்றன.

படைத்தரப்பின் இப்போக்கு விடுதலைப்புலிகளைச் சீண்டி, அவர்களைப் பொறுமையின் எல்லைதாண்டவைக்கும் இலக்கை நோக்கிய நகர்வுகள்தானா என்ற சந்தேகமும் இப்போது வலுத்துவருகின்றது.

ஏற்கனவே கடலில் தமது அடாவடித்தனங்களூடாக அப்பிராந்தியத்தை நெருக்கடிக்குள்ளாக்கியிருப்பதோடு வலிந்து ஆத்திர மூட்டல்களைக் கடற்படை மேற்கொள்ள, தரையிலும் இவ்வாறானதொரு நிலைக்கு இராணுவமும் சென்று கொண்டிருப்பதையே அண்மைய சம்பவங்கள் உறுதிப்படுத்துபவையாக இருக்கின்றன.

# 100 எங்கள் வீட்டிற்கு நாங்கள் செல்வோம்!

ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தடத்தைப் பதித்தது "பொங்கு தமிழ்" நிகழ்வு. தமிழர் தாயகத்தின் பல பகுதிகளும் நெருக்குவாரத்துடன் கட்டுண்டுகிடந்தபோது, மக்களின் மீது அடக்குமுறை அழுத்தியபோது சுதந்திரத்திற்கான நம்பிக்கையையும், உறுதியையும் வெளிப்படுத்திச் சொன்னது "பொங்கு தமிழ்".

யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகம் - விடுதலை வரலாற்றில் ஆற்றிவந்த அரும்பணிகளுள் "பொங்கு தமிழ்" நிகழ்வு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய முதன்மை கொண்டது என்றால் மிகையில்லை என்றே சொல்லலாம்.

தமிழ்மக்களின் விடுதலை உணர்ச்சியை, சுதந்திர வேட்கையை, ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட்டுநிற்கும் பலத்தை உலகெங்கும் அதிரச் சொன்ன "பொங்கு தமிழ்" -

இன்று, மற்றுமொரு முக்கியதருணத்தில் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட குரலை, தமிழினம் சந்தித்துநிற்கும் நெருக்கடிகளை ஓங்கியொலிக்கத் தயாராகிவருகின்றது.

சமாதான வழிமுறை தமிழ் மக்களுக்கான உரிமையை, சுயாட்சியைப் பெற்றுத்தரும் என எதிர்பார்த்து அரசாங்கத்துடனான அமைதிப்பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் பங்கேற்று வந்தபோதும் -

சர்வதேசத்தின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து ஏராளம் இடர்ப்பாடுகள், ஆத்திரமூட்டல்கள், திட்டமிடப்பட்ட தாமதங்களைக் கடந்தும் - விடுதலைப்புலிகள் இன்னமும் சமாதான முயற்சிகளில் உறுதியாக நிற்கும் நிலையிலும் -

அரசாங்கமும், அரச படைகளும் தமிழ்மக்களின் மனதில் அமைதிக்கான நம்பிக்கையை வளர்க்கக்கூடியதாக எத்தகைய நகர்வுகளையும் செய்யவில்லை.

போர்நிறுத்தம் ஆரம்பமாகி மாதங்கள் பல சென்றுவிட்ட போதும் - தமிழ்மக்கள் இன்னமும் யுத்தம் தந்த பாதிப்புக்களிலிருந்து மீண்டுவரவில்லை. அவர்களுக்கான உடனடி மனிதாபிமானப் பணி ஆமை வேகமாகி, நத்தை வேகமாகி இன்று அதுவும் காணாமற் போய்விட்டது.

சமாதானம் வந்துவிட்டது, இனி எமது சொந்த வீடுகளுக்குச் செல்லலாம் என எதிர்பார்த்து அகதிமுகாம்களிலும், நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் காத்துக் கிடந்த மக்கள் எதுவித மீட்சியுமற்று, தமது வீடுசெல்வது பற்றிய கதைகளைக் கண்ணீரோடு கேட்கின்றனர்.

ஒருபக்கம் அமைதிப் பேச்சுக்கள் என்றும், தமிழர்களுக்கான அரசியற் தீர்வு என்றும் உரக்கப் பேசிக்கொண்டு மறுபுறம் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற மனிதாபிமானமற்ற ஆக்கிரமிப்புக்களால் - மக்களது சுமூகவாழ்வு சூறையாடப்பட்டுக் கொண்டு வருகிறது.

அதுதான் போதாதென்று புதிய முகாம்களும், காவலரண்களும் அமைக்கும் வேலைகள் திடீர் வேகத்தைக் கண்டிருப்பதோடு, பல்லாண்டுகளாக மக்களை வாட்டிவதைத்த இராணுவச் சுற்றிவளைப்புக்களும், தேடுதல்களும் - மீண்டும் தொடங்கி மக்களை இன்னமும் அச்சுறுத்தவைக்கின்றன.

உண்மைநிலை இவ்வாறிருக்க, அரசாங்கமோ சர்வதேச அரங்கில் தமிழ்மக்களின் துயர்துடைப்பதாய்க் கூறிக்கொண்டு, தனக்குத் தேவையான நிதியை தமிழர்களின் வேதனையின்பேரில் திரட்டிக் கொள்ளவும் தொடங்கிவிட்டது.

இந்தநிலையில் - தமிழ்மக்களின் மீது அழுந்திக் கிடக்கும் பிரச்சினைகளை, நெருக்குவாரங்களை ஒன்றுதிரண்ட குரலில் உலகமெங்கும் எடுத்துச் சொல்ல மீண்டும் "பொங்கு தமிழ்" நிகழ்வை நடாத்துவதற்குப் பல்கலைக்கழக மாணவர்கள் களமிறங்கியிருக்கிறார்கள்.

அன்று முதலாவது "பொங்கு தமிழ்" நிகழ்வு, எந்தளவு முக்கியமான திருப்பத்தைத் தமிழர் வாழ்வில் தந்ததோ அதேபோன்று, இப்போது நடக்கவிருக்கும் பொங்கு தமிழும் புதிய திருப்பத்தைத் தருவதாக அமையவேண்டுமென்ற நம்பிக்கையுடன் - பல்கலைக்கழக மாணவர்கள் பெருமுயற்சி யெடுத்துவருகின்றனர்.

சொந்த வீடுகளுக்குத் திரும்பமுடியாது பேரவலங்களைச் சந்தித்துநிற்கும் மக்களுக்கு அவர்தம் வீடுகளுக்குத் திரும்பக்கூடிய நிலைமை வந்தால் மட்டுமே புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப் படமுடியும். அதன்மூலமே, சுமூகநிலை தோன்றும். அந்தச் சுமூகநிலையே அமைதிக்கான உறுதுணை யுமாகும் என்ற வகையில் -

"எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காய், படையினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" - என்ற நிலைப்பாட்டைத் தமிழ்மக்கள் பொங்கு தமிழராய் வலியுறுத்தவிருக்கின்றனர்.

சர்வதேசத்தின் கவனத்தைத் தொட்டுநிற்கப்போகும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு அனைத்து மக்களும் ஒத்துழைத்து, அதில் பங்கேற்பதன் மூலமாக,

தமிழ் மக்களின் ஒருமித்த குரல் வழியே மிகப்பெரும் அழுத் தத்தை அரசாங்கத்துக்கும், சர்வதேசத்துக்கும் கொடுத்து அதன் மூலம் "எங்கள் வீடுகளுக்கு நாங்கள் செல்லும்" உரிமையைப் பெறுவோமென உறுதிபூண்டு நிற்போமாக.

# 101

## தட்டிக்கழிப்பு மட்டுமல்ல துரோகத்தனமும் கூடவே!

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை எவ்வாறும் மீளஆரம்பித்துவிட வேண்டும் என அறிவிப்புக்கள் வழியாகவும், உரைகள் வழியாகவும் முனைப்புக் காட்டும் அளவுக்கு, செயல்ரீதியான நடவடிக்கைகள் எதிலும் அரசாங்கம் அக்கறை காட்டாத போக்கே மேலோங்கியிருக்கிறது.

வடக்கு - கிழக்கில், அதிகாரங்கள் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்திவரும் விடுதலைப் புலிகள் - அவ்வாறான கட்டமைப்புப் பற்றிய வரைபொன்று அரசாங்கத்தினால் முன்வைக்கப்படுமாக இருந்தால் மட்டுமே - இந்தப் பேச்சுக்களுக்குத் திரும்புவதுபற்றிக் கவனிப்போம் எனப் பல தடவைகள் கூறிவிட்டபோதும், அவ்வாறான வரைபொன்றைச் சமர்ப்பிக்காது, வார்த்தையளவில் மாத்திரம் இடைக்கால நிர்வாகத்தைத் தாம் வழங்கத் தயாராக இருப்பதாகவும், விடுதலைப்புலிகள் பேசுவதற்கு முன்வர வேண்டுமெனவும் அறிவிப்புக்களை அரசாங்கம் தொடர்ந்து விடுத்துவருகின்றது.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரதமர் ரணில் எழுதிய கடிதத்திலும், பின்னர் - ரோக்கியோவில் உதவிவழங்கும் மாநாட்டில் பிரதமர் உரையாற்றியபோதும், இறுதியாக நேற்றுமுன்தினம் தொலைக் காட்சி மூலம் நாட்டுமக்களுக்கு அவர் வழங்கிய செய்தியிலும்

அரசாங்கத்தின் அறிவிப்புக்கள் உப்புச்சப்பற்ற விதமாக, உள்ளடக்கம் எதுவுமின்றிய வார்த்தை ஜாலங்களாகவே அமைந்திருக்கின்றன.

விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாடு இதுதானெனத் தெட்டத் தெளிவாக கடிதங்கள் மூலமாகவும், அண்மையில் வன்னி சென்றிருந்த நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் வழியாகவும் தெரிவித்துவிட்ட நிலையிலும் -

அரசாங்கம், தொடர்ந்தும் இதுபோன்று ஒப்புக்குச் சப்பாணி அழைப்புக்களை விடுப்பது சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை.

மாறாக - அரசாங்கத்தின் இத்தகைய வெற்று அறிவிப்புக்கள், சமாதான முயற்சிகளின் முக்கியபங்குதாரரான விடுதலைப்புலி களை ஏகத்துக்கும் சலிப்படையச் செய்துவிடும் என்பதோடு,

அரசாங்கம் - திட்டமிட்டு ஏமாற்றும் பாதையில் செல்கின்றதா என்ற சந்தேகத்தையும் வலுப்படுத்தியதாக்கிவிடும்.

இந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துவது போலவே, பிரதமரின் நாட்டுமக்களுக்கான உரையில் இன்னுமொரு முக்கிய அம்சமும் அமைந்திருந்தது.

அதாவது தற்போதுள்ள பிரச்சினைகளிலிருந்து முன்னேறுவது மற்றும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கும் பொறுப்பு விடுதலைப்புலிகளிடமே இருப்பதாக, பிரதமர் ரணில் குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியதாகும்.

உண்மையில் - விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கான உரிய பதிலை வழங்காமல், ஏதேதோ பேசிவரும் பிரதமர் ரணில்- இப்போது, சமாதானப் பேச்சுக்களின் தேக்கநிலைக்குப் புலிகளே காரணம் என்பது போன்ற மாயையை உருவாக்க முயல்கின்றாரா என்ற வினா, அவரது பேச்சுமூலம் வெளிக்கிளம்புகின்றது.

கொழும்பிலுள்ள ஊடகங்கள் சிலவும் - ஐக்கிய தேசிய முன்னணியின் உயர் வட்டாரங்களை ஆதாரங்காட்டி வெளியிட்ட

தகவலொன்றின்படி பந்து இப்போது புலிகளின் பக்கம் என்ற மாதிரியான தோற்றம் - கொழும்பிலும், அதன் தொடர்ச்சியாக சர்வதேச மட்டங்களிலும் உருவாகுவதற்கு அரசதரப்பு முயற்சி செய்வதாகத் தெரியவருகின்றது.

இதன்மூலம் - சமாதானப் பேச்சுக்களின் தேக்கநிலைக்கான பழியை விடுதலைப்புலிகள் மீது சுமத்திவிட்டு - சர்வதேச அழுத்தத்தைப் புலிகளின் பக்கம் திருப்பிவிடவும் இனி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் எனத் தெரியவருகின்றது.

இவ்வாறான ஒரு நகர்வின் மீது அரசாங்கம் உண்மையிலேயே ஆர்வமாக இருப்பின் - அதன் விளைவுகள் எவ்விதத்திலும் சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான முன்னெடுப்பாக இராது என்பதோடு, அது பாரதூரமான பின்விளைவுகளுக்கும் காலாகிவிடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதுபோன்று - இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து வரைபொன்று முன்வைக்கப் படவேண்டுமென அரச தரப்பு இன்னுமொரு முயற்சியை மேற்கொள்ளலாமென்பதை - விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர், பிரதமர் ரணிலின் தொலைக்காட்சி உரைக்கு அளித்த பதிலூடாகச் சூசகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் - அவ்வாறான கோரிக்கை எழுமாக இருந்தால், விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்னவாயிருக்கும் என்பதும், அவரால் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு வழங்கக்கூடிய அரசியல் - நிர்வாக அதிகாரங்கள் பற்றிய தெளிவான கருத்துக்கள் எதுவும் தெரியாது அவ்வாறான கட்டமைப்பு அல்லது பொறிமுறையை விடுதலைப்புலிகள் பிரேரிப்பது புத்திசாலித்தனமல்ல, இதனால் தான் - நாம் அரசாங்கத்தையே யோசனைகளை முன்வைக்குமாறு கோருகிறோம் என அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்துகிறார்.

அதேவேளை, சமாதான முயற்சிகளில், முற்றாக அடிப்படை மாறுதல்களை வலியுறுத்துவதாகவும், புதிய மறுசீரமைக்கப்பட்ட

நிகழ்ச்சித்திட்டமே விடுதலைப்புலிகள் எதிர்பார்ப்பது எனவும் கலாநிதி பாலசிங்கம் எடுத்துக் கூறியிருக்கிறார்.

எனவே - அரசாங்கம் வெறுமனே அழைப்புக்களை விடுப்பதுடன் நின்றுவிடாது, இடைக்கால நிர்வாகம் பற்றிய நடைமுறைச் சாத்தியமான வரைபை உடனடியாக முன்வைத்தால் மட்டுமே அது, ஆக்கபூர்வமான செயற்பாடாக இருக்கும்.

அதனை விடுத்து - வாய்ப்பேச்சுக்களில் ஜாலம் காட்டவும், தனக்குரிய பொறுப்பை மறுத்து புலிகளே சமாதானப் பேச்சுக் களின் மந்தநிலைக்குக் காரணம் எனப் பொய்யான தோற்றப்பாட்டை அரசாங்கம் உருவாக்க முனையுமாயின் - அது, நம்பிக்கையீனத்தைத் தருவது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவும் அமைந்துவிடும்.

# 102

## தேசத்தைச் சுரண்டுபவர்!

யாழ். குடாநாட்டில் சற்றே ஓய்ந்திருந்த இயற்கைவளச் சுரண்டல், மீண்டும் திடீரென வேகமெடுப்பதான அறிகுறிகள் தென்படுகின்றன.

சூழல் பாதுகாப்புப் பிரிவினரின் தீவிர கண்காணிப்பையும் மீறியவாறு மண் கடத்தலும், பச்சைமரங்கள் தறிப்பதும் - குடா நாட்டின் பல பகுதிகளிலும் சட்டவிரோதமான முறையில் தொடருவதான தகவல்கள் கிடைத்துவருகின்றன.

சில இடங்களில், படையினர் ஆசீர்வாதத்துடனும், ஒத்துழைப்புடனும், கண்டும் காணாமல்விடும் போக்குடனும் மேற்கொள்ளப்படும் இத்திருட்டுக்கள் - எமது இயற்கை வளத்தைச் சிதைக்கும் துரோகத்தனம் என்பதில் சந்தேகமில்லை.

கட்டுமானத் தேவைகளுக்காக மணல் தேவைப்படுமிடத்து அதனைப் பெற்றுக்கொள்ள உரிய வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன. எங்கெங்கு மணல் அள்ளமுடியும், எவ்வளவு மணல் அள்ளினால் சூழலின் சமநிலை கெடாது என, சூழல் பாதுகாப்புப் பிரிவினரால் நன்கு ஆராய்ந்து மணல் பெறுவதற்கான ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி உரியவாறு மணல் அள்ளும் பணி சமீபகாலமாக, ஒரு சீரான நடைமுறைக்குள் கொண்டுவரப்பட்டாலும் -

கொள்ளை இலாபமடித்துப் பழக்கப்பட்ட சிலர் - சுற்றுச் சூழலின் சமநிலை பற்றியோ, அது மீறப்படுவதால் ஏற்படக்கூடிய உடனடி மற்றும் நீண்டகாலப் பாதிப்புக்கள் குறித்தோ கவலைப்படாது, சட்டவிரோத மண்அகழ்வில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வாறு திருட்டுமண் அகழ்வு நடைபெறும் சில பகுதிகளில், நியாயம் கேட்கச்சென்ற பொதுமக்கள் அச்சுறுத்தப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

ஏற்கனவே, தொடர்ந்து ஆண்டுகள் கணக்கில் நீடித்த போரினால், தமிழர் தாயகத்தின் இயற்கைவளம் சின்னாபின்னப் பட்டுச் சிதைக்கப்பட்டிருக்கும் நிலையில் - அடாத்தாக, குறுகிய நோக்கம் கொண்டு எமது வளத்தை நாமே சுரண்டநினைப்பது எமது கண்களை நாமே எமது விரல்களால் குத்திக்கொள்வதற்கு ஒப்பானதாகும்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தளவில் - கடலரிப்பு அபா யங்களும், நிலத்தடிநீர் பற்றிய அச்சுறுத்தலும் எதிர்காலத்தில் மிகமுக்கிய பிரச்சினைகளாக இருக்கும் என எதிர்வு கூறப்பட்டு வரும்போது -

கண்மூடித்தனமான மண்ணகழ்வு நடைபெற்றதால், அது எட்ட நிற்கும் ஆபத்தை, கிட்டக் கொண்டுவந்துவிடும் என்பதைக் கவனத்திற்கொள்ளாமல் - நூறுகளுக்கும், ஆயிரங்களுக்கும் ஆசைப்பட்டு, சட்டவிரோதமாக மண்ணகழ்வது சமூகத்தை, தாயகத்தை சிறுகச்சிறுக அழிக்கும் வேலையேயன்றி வேறல்ல.

நாவற்குழி, கச்சாய், அரியாலை ஆகிய பிரதேசங்களிலும், இப்போது மட்டுவில் போன்ற பகுதியிலும் கூட மண் திருட்டு அதிகளவில் நடைபெறுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க - பசும்மரங்களைக் கட்டுப்பாடின்றித் தறித்துத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவோரும், விற்பனை செய்வோரும் குடாநாட்டில், அண்மையநாட்களில்

தமது வேலை களைக் காட்டத் தொடங்கியிருக்கின்றனர். அண்மையில், காரைநகர்ப் பகுதியில் இருந்து பச்சைமரங்க ளைத் தறித்து, வெளியிடங்களுக்குக் கொண்டுசென்று வியா பாரம் செய்துவந்த சிலர் சிக்கியதைத் தொடர்ந்து, சூழல் பாதுகாப்புக் குழுவினர் - காரைநகரில் பச்சைமரங்கள் வெட்டுவதையும், வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்வதையும் தடைசெய்துள்ளனர்.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, எமது தேசத்தைப் பாதுகாப்பதற்கு ஒப்பானதாகும். இந்தவகையில் - தேசத்தின் எதிர்காலத்திற்காக, இந்தத் தாய்மண்ணின் விடுதலைக்காக ஆயிரக்கணக்கான போராளிகள் தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்திருக்க,

குறுகிய ஆதாயம் கொண்டு, எமது தேசத்தின் வளங்களைச் சுரண்டிக் கெடுக்க நினைப்பவர்களை,

தாய்மண்ணின் வளத்தைச் சூறையாடிக் கெடுப்பவர்களை நாடும் மன்னிக்காது, மக்களும் மன்னிக்கமாட்டார்கள்.

எனவே - மணல் திருட்டுக்களிலும், பசும் மரங்களை வெட்டி விற்பதிலும் ஈடுபடுபவர்கள் தாமாகத் திருந்தவேண்டும். இல்லை, மக்களாகத் திருத்தும் சந்தர்ப்பமே அவர்களுக்குக் கிடைத்து விடும்.

# 103

## கண்ணீர் வடிக்கும் பூக்கள்!

யாழ். குடாநாட்டிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பற்றியும், அவற்றில் சிலவற்றில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் மோசடிச் சம்பவங்கள் தொடர்பாகவும், வெளியாகிவரும் தகவல்கள் - மனதைப் பெரிதும் நெருட லுக்குட்படுத்தும் அதேவேளை - இத்தகைய போக்கை எவ்வாறு தடுப்பது, ஆதரவற்று வாழும் சிறார்களைக் கருவறுத்துவிடத் துடிக்கும் காமுகர்களுக்கு சமூகம் அளிக்கப்போகும் பதிலென்ன என்பது பற்றியெல்லாம் அங்கலாய்ப்புக்கள் எழுந்துள்ளன.

அதேவேளை அண்மையில் வெளியான புள்ளிவிபரமொன் றின்படி, குடாநாட்டில் - தனிநபர்களாலும், மத ஸ்தாபனங்களா லும் தொண்டர் நிறுவனங்களாலும் இயக்கப்பட்டுவரும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் 50 இற்கும் மேற்பட்டவை - இன்னமும் ஒழுங்கான பதிவுகளைச் செய்யாமல் இயங்கிவருகின்றன என்ற செய்தியும் வெளியாகியிருக்கிறது.

சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் தேவை யுத்தம் ஆரம்பித்த தன் பின்னர் அவசியமானதாக எழுந்திருக்கின்ற நிலையில்,

அத்தகைய நிலையங்கள் - மோசடித்தனமாகவும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்குரிய தளங்களாகவும் விளங்குகின்றன என்றால் - அதனை, அலட்சியப்படுத்தக்கூடிய விடயமாகவோ, மூடிமறைத்துவிடக்கூடிய விவகாரமாகவோ மாற்றிவிடமுடியாது.

போரில் தாய், தந்தையரை இழந்து, உறவுகளைத் தொலைத்து வாழும் சின்னஞ்சிறார்கள் முதலாக யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கி, அகதிகளாகவும், இடம்பெயர்ந்தும் வாழ்ந்து, வாழ்க்கைப் போராட்டத்தின் துயரச்சிலுவைகளைச் சுமந்துநிற்கும் கண்ணீர்ப் பிஞ்சுகள் வரை - இன்று ஆதரவும், அரவணைப்பும் வழங்கப் படவேண்டியவர்களாக அவர்கள் தமிழர் தாயகமெங்கும் பரந்துள்ளனர்.

இந்தச் சிறார்களுக்கான பாதுகாப்பை, கல்வியை, அடிப்படை வசதிகளை, நல்லதொரு எதிர்காலத்திற்கான வழிகாட்டலைத் தரவேண்டிய அவசியமான, மறக்கமுடியாத கடப்பாடு எமது சமூகத்திற்கு உண்டு.

அவ்வகையில் - ஆதரவற்று வாடிநிற்கும் இளஞ் சிறார்களுக்கு உரியவாறு பிரகாசமிக்கதோர் எதிர்காலத்தைத் தருவதற்காக தேசியத் தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் உருவாக்கப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இன்று வன்னியில் மிகச்சிறந்த முறையில் இயங்கிவருகின்றன.

போரின் தாக்கம் மறந்து, உடலும் உள்ளமும் புத்துணர்வுபெற சொந்தங்கள் இழந்த சோகம் காணாமற்போய் - இத்தேசமே எங்கள் சொந்தவீடு, அனைத்து மக்களும் எம் உறவுகளே என்ற வாறு ஆரோக்கியமான சூழலில் அங்கு பல சிறார்களின் எதிர்காலம், மிகுந்த கவனிப்புடனும், எல்லையற்ற அக்கறையுடனும் கட்டிவளர்க்கப்படுகிறது.

சாதாரணமாக, வெளியே பெற்றோருடன் வாழும் சிறார்களை விடவும் - மகிழ்ச்சியான, சுபீட்சமான வாழ்க்கைப் பாதையில் வன்னியிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் வாழும் சிறார்கள் - ஏராளம் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கி நிற்கின்றவகையில் -

யாழ். குடாநாட்டில் - தனியாராலும், மத ஸ்தபானங்களாலும், தொண்டர் நிறுவனங்களாலும் இயக்கப்படும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் சிலவற்றில் நடக்கின்ற செயல்கள் - சமூகத்தையே வெட்கித் தலைகுனிய வைக்கின்றவையாக உள்ளன.

உண்மையில் - சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் ஆரம்பிக் கப்பட்ட தேவையும், நோக்கமும் தளர்ந்துபோய் - கவனிப்பாரற்ற சூழலுக்குள் சின்னஞ்சிறார்களை உழலவைக்கும் போக்குக்குள் மூழ்கிக்கிடக்கும் இச்சில நிலையங்களின் நடத்தை -

சேவை மனப்பான்மையோடும், அர்ப்பணிப்போடும் யாழ். குடாநாட்டில் நடத்தப்படுகின்ற ஏனைய சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் பெயர்களையும் பாதித்துவிடுவதாயுள்ளது.

ஒழுங்கான நிர்வாகமும், முறையான கண்காணிப்பும் அற்ற நிலையில் - சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பணியாற்றும், மனிதவடிவில் உலாவும் சில மிருகங்களின் வக்கிரத்தனங்களுக்கு இளமொட்டுக்கள் ஏதுமறியாமல் பலியாகிநிற்கும் பரிதாப நிலைக்கு,

குற்றமிழைத்த கொடியவர்களுக்கு அதியுச்சபட்சத் தண்டனை வழங்குவதன் மூலமே - இதுபோன்ற சீர்கேடுகள் இனியும் நடக்காமலிருப்பதைத் தடுக்கமுடியும்.

அதேவேளை, சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களின் நிர்வாகங் களும், அவற்றின் செயற்பாடும் மீளாய்வு செய்யப்பட்டு உடனடியாகவே, உரியவழியில் செயலாற்றக் கூடியதாக மாற்றங்கள் இடம்பெற வேண்டும்.

யாழ். குடாநாட்டிலுள்ள சில சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் - நன்கொடை பெறுவதற்காகவும், பெறப்படும் நன்கொடைகளைச் சுருட்டிக்கொள்வதற்காகவும் நடத்தப்படுவதாக மக்களால் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றநிலையில் -

சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான உதவிகள் தொடர்பா கவும், இவை பயன்படுத்தப்படும் வழிமுறைகள் பற்றியும் - தகுந்த கண்காணிப்பு ஏற்படுத்தப்படவேண்டும்.

எல்லாவற்றுக்கும் முதலில் - குடாநாட்டிலுள்ள பதிவு செய்யப் படாத, குளறுபடிகளைக் கொண்டு இயங்கும் அனைத்து சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுமுள்ள சிறார்களின் தற்போதைய நிலை, மிகத்துரிதமாகக் கவனத்திலெடுக்கப்பட்டு, அவர்களது

உடல் - உளநலன்கள் தாமதமின்றிப் பேணப்படவேண்டும். உறவுகளிழந்து, உதவிகளற்று அநாதரவாய்க் கலங்கிநிற்கும் எம் பிஞ்சுகளின் வாழ்வும், எதிர்காலமும் பாதுகாக்கப்படவேண்டும்.

உரியவர்கள் இதனைக் கவனிப்பார்களா? உடனடியாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அணைத்தெடுப்பாரின்றி அவலமுற்றுநிற்கும் - எம் இளைய சகோதரர்களைக் காப்பதற்குக் காலம் கதிகொண்டு வந்துவிடாதா?

# 104

# சிங்களப் பேரினவாதத்தின் விலைமதிக்க முடியாத அடிமை!

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதம் - யார் யாரைப் பாதித்ததோ இல்லையோ ஜனாதிபதியின் நெருங்கிய ஆலோசகரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரைக் குடைந்தெடுத்திருக்கிறது.

அதிலும் - கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - அரசாங்கத்தின் செயற்திறனற்ற, தாமதமான போக்குகளையும், தமிழ்மக்களுக்குச் சமாதானத்தின் விளைவுகள் எவையும் கிடைத்துவிடவில்லை என்பதையும் குறிப்பிட்டுச் சொன்னவற்றைவிட -

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய கடிதத்திலுள்ள வார்த் தைகள் பற்றியே அதிகம் கவலைப்பட்டிருக்கிறார், குழப்பமடைந்திருக்கிறார், கோபப்பட்டிருக்கிறார் லக்ஷ்மன் கதிர்காமர்.

"அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்தின் மொழிநடை, இறைமையுள்ள ஒரு அரசாங்கத்திற்கு எழுதுவதுபோன்று அமையவில்லை. பொதுவாக, சமாதானமுயற்சிகளில் ஈடுபடுவோர் எழுதும் கடிதங்களின் வார்த்தைகளில் மென்மையும், நவீனமும் கடைப்பிடிக்கப்படுவது வழமை. ஆனால், பாலசிங்கம் எமுதிய கடிதத்தில், இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை" என்று கூறியிருக்கிறார்

கதிர்காமர்.

கதிர்காமரைப் பொறுத்தவரை, எவ்வாறு தான் சிங்கள அரசாங்கமொன்றின் அல்லது சிங்கள ஆட்சியதிகாரத்தின் விசுவாசமிக்க சேவகனாக அல்லது அடிமையாகப் பணியாற்றிக் கொள்ள முடியுமோ அந்தப் பண்பையே அனைவரிடமும் - குறிப்பாக விடுதலைப்புலிகளிடம் எதிர்பார்த்திருக்கிறார் என்பது அவரது கருத்துக்களிலிருந்து தெரியும் முதலாவது வெளிப்படையான உண்மையாகும்.

அதேவேளை - கடிதத்தின் வார்த்தைகளில் அக்கறை காட்டியிருக்கும் அவரால், அக்கடிதத்தில் உள்ளுறைந்திருக்கும் - தமிழரின் தன்மானத்தையும், கௌரவத்தையும், அடிபணியாத வீரத்தையும் புரிந்துகொள்ள முடியாமற்போனதும் துரதிர்ஷ்டவசமானதே.

பேரினவாதச் சிந்தனைகளுக்குச் சோரம்போன கதிர்காமருக்கு, மேற்குறித்த உயர் மனித விழுமியங்கள் பற்றித் தெரியாததால்தான் அவரால் அவைபற்றிக் குறிப்பிடவும் முடியாமல் போயிருக்கலாம்.

இலங்கை அரசாங்கத்தை இறைமையுள்ளதெனக் குறிப்பிடும் அவரால் - தமிழினத்தை அந்த இறைமையின் பெயரால் சிங்கள அரசாங்கங்கள் வாட்டிவதைத்து, கொடுமைப்படுத்துவதையும் - இன்று சமாதானம் தெற்கிற்குக் கிடைத்தும், வட - கிழக்கு இன்னமும் போரின் பாதிப்புக்களிலிருந்து மீட்கப்படாமலிருக்கின்ற துயரத்தையும் தட்டிக்கேட்க முடியாமற் போயிருக்கிறது.

விடுதலைப்புலிகள் அனுப்பிவைத்த கடிதத்தைப் பற்றி சிங்களத் தலைவர்களே எதிர்விதமாகச் சிந்தித்து அலட்டிக் கொள்ளாதபோது, கதிர்காமருக்கு அக்கடிதம் மீண்டும் மீண்டும் குழப்பத்தையும், கோபத்தையும் ஏற்படுத்துகின்றதெனின் - கதிர்காமரின் கொழும்பு விசுவாசத்தின் பரிணாமத்தை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்தில் குறிப்பிட்டதன்படி தமிழ்மக்கள் படும் அவலங்களும், துன்பங்களும் பற்றிக் குறிப்பிட்டு, அதனைத் தீர்த்துவைக்க

வேண்டுமானால் - அதிகாரங்கள் கொண்ட இடைக்கால நிர்வாகமொன்று ஏற்படுத்தப்படவேண்டியது அவசியம் எனக் கூறியிருப்பதை சர்வதேசமே ஏற்றுக்கொண்டுள்ளது. நோர்வே, ஜப்பான் முதலாக - அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஈறாகப் பலரும் இந்த நியாயத்தை வலியுறுத்தியிருக்கின்றனர்.

இந்நிலையில் - இடைக்கால நிர்வாகமொன்றை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதன் மூலம், தனிநாட்டுக்கான அமைப்பை அவர்களுக்குக் கொடுத்ததாகிவிடும் என லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்ப்புக் குரலெழுப்பியுள்ளார்.

ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய ஆகியன தமது எதிர்ப்பை வேறுவார்த்தைகளில் கூறுவதை தமது ராஜதந்திரப் புலமை மூலம் சற்றே ஆழமாகத் தொட்டுச்செல்லும் கதிர்காமர்,

"தனியான இராணுவம், கடற்படைப் பிரிவுகளை வைத்துக் கொண்டு - இடைக்கால நிர்வாகத்தை அமுல்படுத்தமுடியாது. அத்தகைய நிலை அரசுக்கு ஆபத்தானது" எனவும்,

"புலிகளிடம் இராணுவ, கடற்படைப் பிரிவுகள் உள்ளன என்பதை உலகம் அறியும். இந்தநிலையில் - இடைக்கால நிர்வாகம், இந்த இராணுவ கடற்படைப் பிரிவுகளைச் சட்டபூர்வமாக்கவே இடமளிக்கும்" என்றும் சொல்கின்றார்.

இடைக்கால நிர்வாகத்தின் மூலம் - தமிழ் மக்களின் போரால் சீரழிந்த வாழ்வு மேன்மையுறும், தமிழ் மக்கள் சுமூகநிலையை அடைவார்கள், அவ்வாறான சுமூகநிலை - இப்போது ஏற்பட்டுள்ள அமைதிக்கு இன்னமும் வலுச்சேர்க்கும் என்பதையெல்லாம் திட்டமிட்டே மறந்து,

உள்ளூரில் சொல்வதுபோல "குறுக்கால போவதாக" சிந்திக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் சிங்களப் பேரினவாதத்திற்குக் கிடைத்த விலைமதிக்க முடியாத சொத்து என்றே கூறமுடியும்.

# 105

## பாதுகாப்பு விளையாட்டு!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் நேரடிவிளைவுகளை அனுபவித்துவரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் - பாதுகாப்புத் துறையில் தனக்கிருக்கும் பலவீனமான நிலைமையை மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அண்மையில் கொழும்பின் பாதுகாப்பு உயர்பீடத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் - புதிய சட்டமூலமொன்றின் மூலம், ஜனாதிபதியிடமுள்ள பாதுகாப்புத் துறைசார்ந்த அதிகாரங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியிருக்கின்றன.

அரச வட்டாரங்களின் தகவல்களின்படி அண்மையில் விடுதலைப்புலிகளின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல், சர்வதேசக் கடற் பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில் - ரணில் அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் - குறிப்பிட்ட நேரம்வரை ஏதும் தெரிந்திருக்காதவர்களாக, தலையாட்டி பொம்மைகளாக கடற்படை என்ன செய்தது என்பதைத் தெரியாமலேயே,

அதனை நியாயப்படுத்த வேண்டியவர்களாக நடந்துகொண்ட வெட்கம்கெட்ட தனம் - ரணில் அரசாங்கத்தின் சுயமரியாதையை ஆழமாகச் சுட்டதன் பிரகாரமே புதிய உயர்கட்டுப்பாட்டுச்

சட்ட மூலம் (Higher Defense Control Act) பற்றிய அறிவிப்புக்கள் வெளியாகியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

உண்மையில், ரணில் அரசாங்கம் நாடாளுமன்ற ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டாலும் - பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில், இலங்கையின் முப்படை களிலும் அக்கட்சி சார்பானவர்களே உயர்பீடத்தை ஆக்கிரமித்துக் கொண்டதான நிலைமையும், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியைமீறி ஆயுதப்படைகளைக் கட்டுப்படுத்தவோ, அதிகாரம் செலுத்தவோ முடியாதநிலையும் - ரணில் அரசாங்கம் சந்திக்கும் கடும் நெருக்கடியாகவே மாறியிருக்கிறது.

விமானப்படை மற்றும் இராணுவத்தின் உயர் தளபதிகளை சற்றே விடுத்தாலும் - இராணுவத்திலுள்ள இரண்டாம் மட்டத் தளபதிகளிடமும், கடற்படையின் உயர்பீடத்திலும் - ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம், எதனையும் சாதித்துக்கொள்ளமுடியாத கையறுநிலையிலேயே காணப்படுவதை, பாதுகாப்பு ஆய்வாளர்கள் பலரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

குறிப்பாகக் கடற்படைத்தரப்பில் - ரணில் அரசாங்கத்தைப் பொருட்படுத்தாத ஒரு தன்மை மேலோங்கியிருப்பதை வெளிப்படையாகவே அவதானிக்கமுடியும்.

அண்மையில் - சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விவகாரத்தில் - பாதுகாப்பு அமைச்சரை அலட்சியப்படுத்திவிட்டு, ஜனாதிபதி யுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு, உத்தரவுபெறப்பட்டதான தகவல் - ரணில் அரசாங்கத்தைக் கூனிக்குறுக வைத்திருப்பது உண்மையே.

சம்பவம் நடந்து சில மணிநேரங்கள் கழிந்தபின்னரே அது பற்றித் தனக்குத் தெரிவிக்கப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சரே வெளிப்படையாகக் கூறுமளவுக்கு, ரணில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு எதனையும் - கடற் படைக் கட்டளைப்பீடம் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகின் றது. இந்நிலையில் - ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியிலிருக்கும் வரை, இத்தகைய நிலையே தொடருமென்பதை உறுதியாக

உணர்ந்தமாத்திரத்திற்தான் - அவரிடமிருந்தான பாதுகாப்புத் துறைசார்ந்த அதிகாரங்களைப் பாதுகாப்புச் சபைகளை உருவாக்கி அவற்றுக்குக் கையகப்படுத்திவிடுவதற்கு, அரசாங்கம் முயற்சிகளை ஆரம்பித்துள்ளது.

புதிய உயர்பாதுகாப்புக் கட்டுப்பாட்டுச் சட்டமூலத்தின்படி ஜனாதிபதி, தேசிய பாதுகாப்புச் சபையின் (National Security Council) தலைமைப் பதவிக்குப் பொறுப்பாளராக இருந்தாலும், அவரது தலையீடும், செல்வாக்கும் அங்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்கக்கூடியதாகவே பொறிமுறை வகுக்கப்பட்டி ருப்பதாகத் தெரிகின்றது.

அதேவேளை - ஜனாதிபதி இல்லாதவிடத்து தேசிய பாதுகாப்புச் சபையைக் கூட்டி, அதற்குத் தலைமைதாங்கும் அதிகாரத்தைப் பிரதமர் கொண்டிருப்பதாகப் புதிய சட்டமூலம் கூறுகின்றது. இதைவிட, பாதுகாப்புச் சபையும் (Defense Council) ரணில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் செயற்படுவதான தன்மையே புதிய சட்டமூலத்தில் காணப்படுகின்றது.

நாடாளுமன்றத்திடம் பாதுகாப்புத்துறை சார்ந்த அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்ற அறிவிப்புடன் முன்னெடுக்கப்படும் இந்தச் சட்டமூலம், நாடாளுமன்றத்தில் எவ்வகையான பிரதிபலிப்புக்களை சந்திக்கப் போகின்றது என்ற சந்தேகங்களும் இருக்கவே செய்கின்றன. நிச்சயமாகவே, இந்தச் சட்டமூலத்துக்கு ஜனாதிபதி ஒத்து ழைக்கமாட்டார் என்ற பட்சத்தில், இந்தச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதென எவரேனும் வழக்குத் தொட ருமிடத்து சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைத் தேடவேண்டிய நிலை ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஏற்பட்டுவிடும்.

இப்படியான சிக்கல்கள் பற்றி, ரணில் அரசாங்கம் அறிந்திருந்த போதும் - புதிய சட்டமூலத்தை நிறைவேற்றிச் சட்டமாக்க முடியுமோ, இல்லையோ ஜனாதிபதியையும், அவருக்கு ஆதர வான படைத்தலைமைகளையும் அச்சுறுத்திவைப்பதற்கு ஒரு நகர்வை மேற்கொள்வதான போக்கையே ரணில் அரசாங்கம் கடைப்பிடிக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

# 106

## மக்களின் வயிற்றிலடித்த வரலாற்று மோசடி!

*யாழ் - மாவட்டத்தில் கடந்த 2000 - 2002 ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட, புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளில் பாரிய நிதிமோசடி நடந்திருப்பது பற்றி ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் - இச்செய்திகளை உறுதிப்படுத்துமுகமாக, அரசாங்க அதிபர் - புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அகதிகள் விவகார அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதம், பகிரங்கமான சான்றுகளைத் தந்திருக்கிள்றது.*

*இந்தக் கருத்தின்படி குறிப்பிட்ட காலப்பகுதியில், யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அரசின் அனைத்துப் புனரமைப்புத் திட்டங்களிலும் - கோடிக்கணக்கான ரூபா பணம் - அதுவும் மக்களுக்குச் சேரவேண்டிய அபிவிருத்திக்கான பணம் - மிகத் திட்டமிடப்பட்ட வகையில், நுட்பமான முறைகளினூடே கபளீகரம் செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.*

*இத்தகைய பெருமெடுப்பிலான மோசடியில் - அப்போதிருந்த யாழ். அரசாங்க அதிபரும், புனரமைப்புப் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்த "நான்" அமைப்பின் பொறியியலாளரும், இவர்களோடு வேறுசிலரும் - அதிகார, அரசியல் பின்னணிகளுடன் ஈடுபட்டிருந்ததாக, தற்போதைய யாழ். அரச அதிபர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.*

இலங்கையின் வட - கிழக்குப் பகுதிகளில், தமிழினத்தின் வரலாற்றில் நடந்த மிகப்பெரும் சுரண்டல் இதுவென்று விபரம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

நாட்டின் நிலைமையைச் சாட்டாக வைத்துக்கொண்டு மக்களின் அபிவிருத்திக்கான பணத்தில், இவ்வாறு கையாடல் செய்தவர்கள் - மக்களின் நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் உரியவர்களாகத் தொழிற்பட வேண்டியவர்களே என்னும்போது, இதன் தாக்கம் இன்னும் பல மடங்காகவே பெருகுகின்றது.

அரசின் புனரமைப்புத் திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமானால் - அதற்குரிய வழிவகைகள், நடைமுறைகள் என அதிகபூர்வமான செயற்பாடுகள் இருக்கும்போது-

செயற்றிட்டத்தைத் தயாரித்தவரும், அதனை மதிப்பீடு செய்தவரும், ஒப்பந்தத்தை மேற்கொண்டவரும் ஒருவரே என்றவாறு “றான்” பொறியியலாளர் செயற்பட்டிருக்கிறார். அதனை, அன்றைய அரசாங்க அதிபரும் அனுமதித்திருக்கிறார். இதனையே தற்போதைய யாழ், அரசாங்க அதிபர் தனது கடிதத்தில் பிரதானமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இத் திட்டங்களுக்கான பகிரங்க கேள்வியறிவித்தல்களும் கோரப்படவில்லை என்பதோடு, எல்லாமே சம்பந்தப்பட்டவர்களுக்குள் மிகச் சுமூகமாக முடித்துக்கொள்ளப்பட்டதும் தெரியவந்திருக்கிறது.

அரசின் பேரிலான தீர்மான வேலைகளைச் செயற்படுத்தும் போதும், கொடுப்பனவுகளைச் செய்யும்போதும் என்ன வகையில் அவை செய்யப்பட வேண்டும் என்பதை வழிகாட்ட இறுக்கமான நிதியியல் விதிகளும், சுற்றறிக்கைகளும் இருக்கும்போது - அவை, எவற்றையும் மருந்துக்குக்கூட கவனத்திலெடுக்காது இந்த மோசடிகள் நடைபெற்றிருப்பதாக, தற்போதைய யாழ். அரச அதிபரின் - புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கான கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு மிக அவசியமான பணிகள் நடைபெறுவதாகப் போக்குக்காட்டி அவை, பாதிக்கிணறு

தாண்ட முன்பேயும், சிலவற்றில் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட முன்னரேயும் கைவிடப்பட்ட சம்பவங்களும் இந்த மோசடிகளுக்குள் உள்ளடங்குகின்றன.

ஆனால், இவற்றுக்கான ஒதுக்கீட்டின்வழியே முற்பணம் மட்டும் ஒழுங்காகப் பெறப்பட்டிருக்கிறது.

மக்களுக்கான சந்தைகள், முதியோர் இல்லம், மருத்துவமனைகள், பாடசாலைகள் என எவையும் இந்தச் சுரண்டல்க ளுக்குத் தப்பிவிடவில்லை.

இத்தகைய நிதிக் கையாடல்களில் - அன்றிருந்த அதிகார, அரசியல் பின்புலமும், யாழ்ப்பாணத்திலுள்ள மிக முக்கிய பிரமுகர்களின் உதவியும், ஒத்தாசையும் இருந்திருப்பது - இந்தக் கடிதத்தின் தொடராக மறைந்து நிற்கும் முக்கிய காரணிகள் என்பதும் மக்களின் கவனத்திற்குரியதாகும்.

யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய மோசடி குறித்த தகவல்களானது குற்றமிழைத்தவர்களுக்குரிய விசாரணையும், தண்டனையும் வழங்கக்கூடியதாக இருப்பதோடு,

மக்கள், தமக்கான திட்டங்கள் குறித்துக் காட்டவேண்டிய கருத்துக் குவிப்பையும், கவன ஈர்ப்பையும் வேண்டி நிற்பதையும், விழிப்புணர்வைத் தரக்கூடியதாக அமைய வேண்டியதும் பிரதானமானவையாகும்.

இத்தகைய சீர்கெட்ட தன்மைகளிலிருந்தும், மோசடி கையா டல்களுக்கான வாய்ப்புக்களிலிருந்தும் - மக்களுக்கான அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் இனியாவது சீராக முன்னெடுக்கப் படுவதை, சம்பந்தப்பட்டோர் உறுதிப்படுத்த வேண்டும்.

இதற்குத் தேவையான கண்காணிப்பும், நீதியான, நியாயமான முறையிலான திட்ட அமுலாக்கங்களும் - ஒரு தேர்ந்த கட்டமைப்பின் ஊடாகவே முன்னெடுக்கப்படவேண்டும்.

விடுதலைப்புலிகளின் தத்தவாசிரியரும், அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குறிப்பிடுவது

போல - பழுதுபட்டுப் போயிருக்கின்ற, தாமதங்கள் நிறைந்த, ஊழலும் மோசடியும் பெருகியிருக்கின்ற, திறனாய்வற்ற அரச இயந்திரத்தை இனியும் நம்பிக்கை கொள்வதைத் தவிர்த்து - உறுதியான, உடனடியான, மக்களின் தேவைநிறைவேற்றக் கூடிய, அதிகாரம் பொருந்திய நிர்வாகம் ஒன்று உருவாக்கப்படுவதே இதுபோன்ற மோசடிகளுக்கும், ஊழல்களுக்கும் நீடித்த தீர்வைப் பெற்றுத்தரக் கூடியதாக இருக்கும்.

# 107

## பாதுகாப்பான மருந்தே அவசியம்!

சட்டவிரோதமாக மற்றும் அங்கீகரிக்கப்படாத மருந்துப் பொருட்களை விற்பனைசெய்யும் மருந்தகங்கள் மீது, இறுக்கமான சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் ஏற்பாடுகளைச் செய்துவருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மருந்தகங்களில் - சட்டரீதியாக அங்கீகரிக்கப்படாததும், இறக்குமதி அங்கீகாரம் பெறப்படாததும், காலங்கடந்ததுமான மருந்துப் பொருட்கள் விற்கப்படுவதாகப் பரவலாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுவந்தன.

இத்தகைய மருந்துப் பொருட்களால், பலர் பாதிக்கப்பட்டுள் ளனர். சிலர் உயிரிழப்பைக்கூட எதிர்கொண்டுள்ளனர். இன்னும் பலர் நிரந்தரமான உடல், உளப் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பாவனைக்கு உதவாததும், பக்கவிளைவுகளை ஏற்படுத்து வதுமான மருந்துப் பொருட்கள் - சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு, விற்கப்படுவதால் இத்தகைய பாதிப்புக்கள் ஏற்படுின்றன.

இதைவிட, காலங்கடந்த மருந்துப் பொருட்களும், இதேவகையான பாதிப்புக்களை ஏற்படுத்தி, நோயாளிகளின் உயிருக்குக்கூட ஆபத்துக்களை ஏற்படுத்திவிடுகின்றன.

காலங்கடந்த மருந்துப் பொருட்களின் விற்பனை, யாழ்ப்பாணக் குடாநாட்டிலும்கூட இடம்பெறுவது ஒன்றும் புதிதான செய்தியல்ல. மருந்தகங்களில், காலங்கடந்த மருந்துப் பொருட்களை சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்ற மருந்தகங்களைச் "சீல்" வைக்க நடவடிக்கை எடுத்ததாகவும், குற்றப்பணம் அறவிட்டதாகவும் அண்மையில்கூடச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இறுக்கமான கட்டுப்பாடுகள் இல்லாதமையால், இத்தகைய மருந்தகங்கள் சில ஆயிரம் ரூபாக்களைத் தண்டப்பணமாகச் செலுத்திவிட்டு, மருந்தகத்தை மீளத்திறந்து வியாபாரத்தை நடத்தக்கூடிய நிலைதான் காணப்பட்டுவந்தது.

இத்தகைய குற்றங்களுக்கு, ஐயாயிரம் ரூபா தண்டப்பணமே இதுவரை அறவிடப்பட்டுவந்தது. இந்தத் தண்டப்பணத்தை, ஐம்பதாயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

சட்டரீதியாகத் தண்டப்பணம் அறவிடப்படுவது - இத்தகைய குற்றச் செயல்களைக் குறைக்க உதவலாம். ஆனால், இத்தகைய குற்றங்கள், சமூகத்தையே நோயாளியாக்கும் வகையைச் சார்ந்தது என்பதால் - இவற்றை முற்றாகத் தடுக்கக் கூடியவகையிலான சட்டஏற்பாடுகள் உருவாக்கப்படுவது அவசியமாகின்றது.

இதுபோன்றே, மருந்தகங்கள் - மருத்துவரின் சிபார்சின்றி தன்னிச்சையாக மருந்துப் பொருட்களை விற்பனைசெய்தல், அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர் இல்லாமல் மருந்தகங்கள் செயற்படுதல் போன்றவையும்கூட நோயாளர்களுக்குப் பெரும் ஆபத்தானதாக முடிவடையலாம்.

அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர் இல்லாமலேயே பெரும்பாலான மருந்தகங்கள் இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றினால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகள் குறித்து நீண்டகாலம் பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தபோதும் -

இதனை நடைமுறைப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்

படவில்லை. இப்போது இத்தகைய செயற்பாடுகளைத் தடுக்க, புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் கூறப்படுகின்றது.

தனியே மருந்துப் பொருட்களுக்கு மட்டும், இத்தகைய சட்டக் கட்டுப்பாடுகள் இருந்தால் போதாது, மருத்துவப் பணியில் கூட அங்கீகாரம் பெறாத பலர் ஈடுபட்டுவருகின்றனர்.

போலி மருத்துவர்கள் - நாடுமுழுவதிலும் உலாவருவது புதிதான விடயமல்ல, ஆங்கில மருத்துவம் கற்காத - நாட்டு வைத்தியர்கள் கூட, இன்று ஆங்கில மருந்துகளைச் சிபார்சுசெய்கின்ற அளவுக்கு மருத்துவநிலை இங்கு தரம்தாழ்ந்து போயிருக்கின்றது.

இந்தநிலை தொடர அனுமதிக்கப்படுவது, சமூகத்தை நோயா ளியாக்கவே வழிவகுக்கும். இதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளில் இறங்குவது அவசியம்.

சட்டரீதியான பாதுகாப்புக் கிடைக்கும்போது - இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக அதிகாரிகள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்.

அதேவேளை, வடக்கு - கிழக்குப் பகுதிகளில், அரச மருத்துவ மனைகளில் பொதுமக்களுக்குத் தேவையான வைத்திய வசதிகளைப் பெறமுடியாதிருப்பதற்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். போதிய மருத்துவர்களை வைத்தியசாலைகளில் நியமிக் காதுள்ளதால், மக்கள் - அரச மருத்துவமனைகளுக்குச் செல்வதைத் தவிர்த்துத் தாமே, ஏதோ அறிந்த மருந்துப் பொருட்களை வாங்கி உட்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இவையெல்லாம், மருந்துப் பொருட்கள் சம்பந்தமாக இறுக் கமற்ற கட்டுப்பாடுகள் மற்றும் அசமந்தப் போக்கினால்தான் வேகம் பெற்றன. இனிவரும் காலத்திலாவது இது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டால் - இத்தகைய ஆபத்தான சூழ்நிலையில் இருந்து சமூகத்தை மீட்கலாம்.

# 108

## வேண்டும், உடனடிக் கவனம்!

*கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைவோரின் எண்ணிக்கை, யாழ். மாவட்டத்தில் பெருவீழ்ச்சி கண்டிருப்பதாகவும், தீவளவில் - 30, கல்வி மாவட்டங்களிலும் 27 ஆவது இடத்திலேயே யாழ்ப்பாணம் இடம் பிடித்திருப்பதாகவும், வட - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்திருக்கும் விடயம் - தமிழ்க் கல்வியியலாளர்களிடையே பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.*

*இலங்கையின் கல்வித்துறையில் சாதனைகளும், பெருமைகளுமாக முதன்மையானதொரு இடத்திலிருந்த யாழ். மாவட்டம் இன்று இப்படியானதொரு அவலநிலைக்கு ஆளாகியிருப்பது, தமிழ்ச்சமூகம் கண்டிருக்கின்ற மிகப்பெரும் பின்னடைவு எனக் கூறினால் அது மிகையல்ல என்றே சொல்லமுடியும்.*

*கடந்த பல ஆண்டுகளாகத் தொடரும் போரினால் - தமிழர் தாயகத்தின் கல்விநிலை பாரியளவில் சிதைக்கப்பட்டிருப்பது கண்கூடு.*

*பாடசாலைகள் அழிக்கப்பட்டும், மாணவர்கள் அகதிகளாக அனைத்தும் இழந்தவர்களாக ஆக்கப்பட்டும், கொடிய இராணுவத் தாக்குதல்களால் - மாணவர் சமூகத்தில் பச்சிளம் உயிர்கள் பல பிடுங்கியெறியப்பட்டும், யுத்தம் சூழ்ந்துநிற்க அதனூடான*

உளவியல் நெருக்கடிகளாலும், உறவிழந்து உயிரிழந்த சோகங்கள் மனதை அழுத்தியதால் உண்டான உளவடுக்களாலும், பொருளாதாரத் தடை என்னும் பெயரில் அப்பியாசக் கொப்பிகளும், பேனாக்களும்கூட தடைசெய்யப்பட்ட உலகெங்கும் நிகழ்ந்திராத ஒடுக்குமுறைகளாலும் - தமிழினம் சுமந்துநின்ற அடக்குமுறைகளின் விளைவாகவே - இன்று, யாழ். மண் கண்டிருக்கும் கல்விநிலை வீழ்ச்சி அமைந்திருக்கிறது.

ஆனாலும் - ஒரு காலத்தில், யாழ்ப்பாணத்தின் மதிப்பிட முடியாத சொத்து, அதன் கல்வியார்வமே என உலகமே பாராட்டி நின்றதும், யுத்தகாலத்திலும்கூட கல்விநிலையைக் காப்பதில் மக்களும் போராளிகளுமாக தீவிரமான கவனம்கொண்டு செயற்பட்டதும் மனக்கண்களில் நிழலாட -

இன்று யாழ். மாவட்டம் சந்தித்திருக்கும் பெரும் நெருக்கடிக்கு தீர்வினைக் காண எவற்றைச் செய்யவேண்டும் என்ற உடனடிக் கேள்வி பூதாகாரமாகி நிற்கிறது.

80களிலும், பின்னர் 90களிலும் - யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் எறிகணைவீச்சுக்களும், விமானக் குண்டுத் தாக்குதல்களும் சரமாரிக்கு நடந்துகொண்டிருந்தபோதும்,

தினம் தினம் மக்கள் சந்தித்த சொல்லொணாத் துயர வாழ்க்கைக்குள்ளும் - உயர்தரப் பரீட்சைகளில் நாட்டிலேயே முதலிடங்களைக் குவித்துவந்த யாழ். குடாநாடு, இன்று உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவோர்கள் எண்ணிக்கையில் இறுதிவரிசையில் வந்துசேர்ந்திருப்பது எங்கே, பின்னடைவு ஏற்பட்டது என்பதை இனங்காணவேண்டிய அவசியத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

நீண்டகாலப் போரிற்குள்ளும் கல்வியைக் கண்ணெனப் போற்றி வந்ததற்குப் பின்னர் - கடந்த சில ஆண்டுகளாகவே யாழ். குடாநாடு தொடர்ச்சியாகச் சந்தித்துவரும் கல்வித்தர வீழ்ச்சிக்கான காரணிகளில், இனிமேலும் போரின் நேரடிப் பாதிப்புக்களை மட்டும் கூறிவிட்டு ஒதுங்கிவிட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதே இன்று யதார்த்தமான நிலையாகும்.

யாழ். குடாநாட்டில், கடந்த சில வருடங்களாக இளைய சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள், செல்வாக்குகள், பிறழ்வுகள், நடத்தைக்கோலங்கள் பற்றியெல்லாம் மிக அவதானமாக, ஆழமாக ஆராய்ந்து அறிவதும் - இவற்றைச் சீரமைக்கவும், தீர்க்கவும் ஏற்ற வழிகளைக் காணவேண்டியதும் மிகவும் முக்கியத்துவப்படுத்தப்பட்ட பணியாகின்றது.

இதற்காக, யாழ்ப்பாணத்தில் இளைய சமுதாயத்திற்குள் ஊடுருவி நிற்கின்ற - கல்விநிலையை, கல்வியார்வத்தைப் பாதிக்கின்ற காரணிகள் பற்றிய ஆய்வுகள் சம்பந்தப்பட்டோரால் துரிதகதியில் மேற்கொள்ளப்படவேண்டும்.

குறிப்பாக, யாழ். இளைய சமுதாயம் கொண்டிருக்கக்கூடிய நடத்தைப் பிறழ்வுகள், சமூகமுரண்கள் பற்றிய இன்றைய நிலைப்பாட்டிற்கும், கல்வித்தர வீழ்ச்சிக்குமான தொடர்புகள் மிக்க அவதானத்துடன் நோக்கப்படுவதும் அவசியமாகின்றது.

உயர்தரத்தில் சித்தியடையத் தவறுபவர்களின் வீதம் உயர்வான தென்பது, தனியே கல்விநிலை வீழ்ச்சிக்கான குறிகாட்டியாக மட்டுமல்லாது,

இவ்வாறு சித்தியடையத் தவறுபவர்களின் எதிர்காலம், அவர்கள் கல்விப்பாதையைத் தொடர்வதற்கான வேறு வாய்ப்புக்கள், அந்த வாய்ப்புக்கள் கிடைத்திராத பட்சத்தில் சமூகத்தின் சுமையாக மாறும் இளையோரின் தங்குநிலைத் தொடர்ச்சி, இன்னமும் இன்னலூட்டக்கூடிய பாதை தவறும் செயற்பாடுகள், தன்னளவிலும் சமூகத்தின் மீதுமான வெறுப்பைத் தரக்கூடிய உளவியல் பாதிப்புக்கள் என, இன்னோரன்ன விடயங்களும் கவனத்திலெடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

எனவே, மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பேச்சிலிருந்தான தகவல் - எமது சமூகத்தின் கல்விநிலையில் உடனடி மீளாய்வொன்றை வலியுறுத்துகின்றது என்பது கருத்திலெ டுக்கப்பட்டு, நடவடிக்கைகள் காலதாமதமின்றி முன்னெடுக் கப்படவேண்டுமென்பதே, தமிழினத்தின் கல்வி வளர்ச்சியிலும், இளையோரின் ஆரோக்கியமான முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டோரின் ஒட்டுமொத்த அபிப்பிராயமாக இருக்கமுடியும்.



9 789557 765136